# சட்டக்கதிர்

சட்ட மாத இதழ்

SATTAKADIR TAMIL MONTHLY

''உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்
அறங்கூறாயங்கள் அறமே செய்யட்டும்''

அக்டோபர் 2025 | ஐப்பசித் திங்களிதழ் | விலை ரூ.75/-

Vol - 33 | October - 2025 | Issue - 12 | Price Rs.75/-

Registration No. TN/CC(S) DN/228/2024-2026 (License to post without prepayment) WPP No. TN/PMG/CCR/WPP 636/2024-2026


SATTAKADIR

- இணையவழியில் நீதிமன்ற நடவடிக்கைகளை அனைவரும் பார்க்கும் காலம் வரவேண்டும் - தலையங்கம்
- இருதரப்பினரும் முன்னிலையாகி நிபந்தனைகளை ஏற்கையில், ஆவணப்பதிவை பதிவு அலுவலர் மறுக்கக் கூடாது - இந்திய உச்சநீதிமன்றம்
- உடைமை மற்றும் துய்ப்பு பற்றிய உண்மை கண்டறிய விசாரணை நீதிமன்றத்தில் முறையிட வேண்டும். - சென்னை உயர்நீதிமன்றம்
- அழியும் பொருட்கள் காலாவதியான பின் தீர்வாக்கலை முடிவு செய்ய வழக்குரைஞர் ஆணையர் நியமனம் அவசியமாகும் - சென்னை உயர்நீதிமன்றம்
- முந்தைய வாங்குனருக்கு விற்றவரால் வழங்கப்பட்ட புழக்கவுரிமை பின் வாங்குனரால் மறுக்கப்படவோ அல்லது மறுதலிக்கப்படவோ முடியாது - சென்னை உயர்நீதிமன்றம்
- மணமுறிவு கோரும் வழக்கு - குற்றம் சாட்டியவரை இணை எதிர்மனுதாரராக சேர்க்காமலிருக்க நீதிமன்ற அனுமதி பெற வேண்டும் - சென்னை உயர்நீதிமன்றம் - மதுரை அமர்வு
- 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவு செய்தல் சட்டம் - தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

## முக்கிய தீர்ப்புகள் - சட்ட விளக்கங்கள்


ஆசிரியர் : டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத், எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

www.sattakadir.com http://epaper.sattakadir.com


VIT
Vellore Institute of Technology
(Deemed to be University under section 3 of UGC Act, 1956)
FIND YOUR FUTURE
Education opens up the mind and allows you to improve your life in so many ways.
At VIT, we believe it is crucial to provide students with an environment that positively influences their thoughts, stimulates their interest and encourages learning in different settings. Our programmes are structured in line with the changing times. Our faculty and infrastructure are geared to be future ready. And, our students learn and imbibe lifelong values that equip them to be futuristic.
VIT
VELLORE INSTITUTE OF TECHNOLOGY
www.vit.ac.in vituniversity VIT_univ vellore-institute-of-technology vellore_vit VITUniversityVellore

# சட்டக்கதிர்

தமிழ்நாடு அரசு விருது பெற்ற இதழ்

அக்டோபர் 2025 http://epaper.sattakadir.com ஐப்பசித் திங்கள் இதழ் 2025


## பொருளடக்கம்


1. இணையவழியில் நீதிமன்ற நடவடிக்கைகளை அனைவரும் பார்க்கும் காலம் வரவேண்டும்
– தலையங்கம் 5

2. சென்னை உயர்நீதிமன்றத்தின் மாண்புமிகு நீதிபதிகள் 7

3. பொதுவர் தீர்வின் மூலமாக அடிப்படை ஒழுக்கக் கொள்கைக்கு முரணாக கையகப்படுத்துதலில் தீர்வு ஒப்பந்தம் ஏற்படுத்த முடியாது – இந்திய உச்சநீதிமன்றம் 10

4. தாமதத்தை மன்னிக்கக் கோருவதற்கு போதுமான காரணம் தெரிவிக்காததால் தாமதத்தை அனுமதித்தது தவறு. – இந்திய உச்சநீதிமன்றம் 15

5. இருதரப்பினரும் முன்னிலையாகி நிபந்தனைகளை ஏற்கையில், ஆவணப்பதிவை பதிவு அலுவலர் மறுக்கக் கூடாது. – இந்திய உச்சநீதிமன்றம் 23

6. உடைமை மற்றும் துய்ப்பு பற்றிய உண்மை கண்டறிய விசாரணை நீதிமன்றத்தில் முறையிட வேண்டும். – சென்னை உயர்நீதிமன்றம் 30

7. பிணை/முன்பிணை கோரும் மனுக்களை ஒருங்கிணைத்து அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நீதிபதி முன் பட்டியலிடப்பட வேண்டும்.
– சென்னை உயர்நீதிமன்றம் 33

8. அழியும் பொருட்கள் காலாவதியான பின் தீர்வாக்கலை முடிவு செய்ய வழக்குரைஞர் ஆணையர் நியமனம் அவசியமாகும் – சென்னை உயர்நீதிமன்றம் 38

9. பொதுவர் தீர்வை எதிர்க்கும்போது நிகழ்வு இடத்தின் அதிகார வரம்பு உள்ள நீதிமன்றத்தை தேர்வு செய்ய வேண்டும் – சென்னை உயர்நீதிமன்றம் 42

10. முந்தைய வாங்குனருக்கு விற்றவரால் வழங்கப்பட்ட புழக்கவுரிமை பின் வாங்குனரால் மறுக்கப்படவோ அல்லது மறுதலிக்கப்படவோ முடியாது
– சென்னை உயர்நீதிமன்றம் 48

11. மணமுறிவு கோரும் வழக்கு – குற்றஞ்சாட்டியவரை இணை எதிர்மனுதாரராக சேர்க்காமலிருக்க நீதிமன்ற அனுமதி பெற வேண்டும்
– சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை அமர்வு) 56

12. ஒழுங்குமுறை நடவடிக்கையும் அதற்கான நடைமுறையும்
– சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை நீதியர் ஆயம்) 60

13. ஒரு நீதிபதியின் வேறுபட்ட கருத்தை மறைப்பது நீதித்துறையின் அதிகாரத்தை சிதைக்கும் செயல் –சுகிர்த் பார்த்தசாரதி 66

14. 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவு செய்தல் சட்டம் 70
– தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

15. 2002ஆம் ஆண்டு புகைப்பிடித்தலையும் எச்சில் உமிழ்வதையும் தடை செய்யும் சட்டம் 77
– தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

# சட்டக்கதிர்

**ஆசிரியர் வெளியிடுபவர்:**
முனைவர் வே.இரா.சே.சம்பத்

**சிறப்பு ஆலோசனைக் குழு:**
**மூத்த வழக்கறிஞர்கள்:**
திரு.ஆர்.காந்தி
திரு.ஆர்.விடுதலை
திரு.ஆர். சண்முகசுந்தரம்
டாக்டர் எ. தியாகராஜன்

**சட்ட/தமிழ் வல்லுநர்கள்:**
டாக்டர் ஆர். மீனாட்சி சுந்தரம்
முனைவர் மு. முத்துவேலு

**வழக்கறிஞர்கள்:**
திரு. டி.வீரசேகரன், திரு.வி.இரவி
திரு. சரவணன் தனபால், திரு.எஸ். நாகநாதன்
திருமதி ஆதிலட்சுமி லோகமூர்த்தி
திருமதி டி. ஸ்ரீதேவி
திரு. எஸ். பாலமுருகன்

**சென்னை உயர்நீதிமன்றத் தொடர்பாளர்:**
திரு.ஏ.என்.புருஷோத்தம், வழக்கறிஞர்

**மொழி பெயர்ப்பாளர் குழு:**
திருமதி ஓ.பா.சாந்தி, மதுரை திரு.எஸ்.சம்பத்
திரு.து. முத்துசாமி, வழக்கறிஞர்
திரு.பா.ஞானசேகரன்
திரு.மா.வெற்றிவேல்

**அலுவலகப் பணிக்குழு:**
முனைவர் ச. அரவிந்தன்
முனைவர் ச. அழகிரி
திரு. டி.கே.எஸ். மணிவண்ணன்
திரு.வி.கதிரவன்

**வடிவமைப்பு:** வாசன் அச்சகம், சென்னை

| சந்தா விவரம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| தனி இதழ் | ₹ 75 | US $ 3 |
| ஆண்டுச் சந்தா | ₹ 900 | US $ 25 |
| வாழ்நாள் சந்தா | ₹ 10,000 | US $ 250 |
| காப்பாளர் சந்தா | ₹ 25,000 | US $ 500 |

சந்தாத் தொகையைச் ''சட்டக்கதிர்'' என்ற பெயருக்குக் காசோலை (Cheque), வங்கி வரைவுக் கேட்போலை (DD) மூலமாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். சந்தாத் தொகையைப் பணவிடை (Money Order) மூலமாக அனுப்ப வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

விளம்பரத்திற்கான விவரத்தையும் தொகையையும் கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொண்டு அறிந்து கொள்க.



**சட்டக்கதிர்**
3/2, சுவாதிராம் மாளிகை, ஜூபிடர் வளாகம்,
3, துர்காபாய் தேஷ்முக் சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை-600 028.
தொலைபேசி 91-44-24953915 / 24620198
தொலைநகல் 91-44-24959515
E-mail:sattakadir1992@yahoo.co.in.
website:www.sattakadir.com



# சட்டக்கதிர் வெளியீடுகள்

சட்டக்கதிர் ஆண்டுத் தொகுப்பு (12 இதழ்களைக் கொண்ட தொகுப்பு) ரூ.1200/-
நீதிமன்றங்களில் தமிழ் ரூ.500/-
தமிழ்நாட்டில் நீதிமுறைகள் (அச்சில்) ரூ.500/-
சட்டவல்லுனர் பார்வையில் அண்ணா ரூ.500/-
தமிழர் தமிழ்நாடு சமூக பொருளாதார வளர்ச்சி ரூ.500/-
சட்டமும் சமுதாயமும் (அச்சில்) ரூ.150/-
சென்னையிலிருந்து உலகை நோக்கி ரூ.200/-
உன்னுள் என்னைப் பார் ரூ.150/-
உலகெங்கும் கலைஞர் ரூ.300/-
"International Conference of Tsunami, Disaster Management and Coastal Development Report" (English) Rs.500/-

''சட்டக்கதிர்'' என்ற பெயருக்குக் காசோலை (Cheque), வங்கி வரைவுக் கேட்போலை (DD) மூலமாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி நூல்களைப் பெற்றுக் கொள்ளவும்.

**சட்டக்கதிர்**
3/2, சுவாதிராம் மாளிகை, ஜூபிடர் வளாகம்,
3, துர்காபாய் தேஷ்முக் சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை-600 028.
E-mail:sattakadir1992@yahoo.co.in.
website:www.sattakadir.com

**சட்டக்கதிர் QR CODE ஸ்கேன் செய்து சட்டக்கதிர் ஆண்டு சந்தா செலுத்தலாம். சட்டக்கதிர் ஆண்டு சந்தா செலுத்தி தடங்கலின்றி இதழ்கள் கிடைக்கப் பெறுவீர்!**

# சட்டக்கதிர்

"முன்னேற்றமே எங்கள் பேச்சு – உயர்
முத்தமிழே எங்கள் மூச்சு"

ஐப்பசித் திங்கள் இதழ்

சட்டம் – 33 அக்டோபர் 2025 கதிர் – 12


## இணையவழியில் நீதிமன்ற நடவடிக்கைகளை அனைவரும் பார்க்கும் காலம் வரவேண்டும்

கடந்த இரண்டு ஆண்டுகளாக உச்ச நீதிமன்றங்களிலும், உயர்நீதிமன்றத்திலும் பெரும்பாலும் இணையவழியில் தான் வழக்குகள் விசாரிக்கப்பட்டு தீர்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நீதிமன்றங்களில் வழக்கில் சம்பந்தப்பட்ட வழக்கறிஞர்கள் மற்றும் வழக்காடிகள் பார்க்கக் கூடிய வசதி செய்யப்பட்டிருக்கிறது. வழக்கறிஞர்கள் மட்டுமே பேசக்கூடிய வாய்ப்பும், அதுவும் அந்தந்த வழக்கறிஞர்கள் பேசக்கூடிய வாய்ப்பும், வழக்காடிகள் பார்வையிடுகிற வாய்ப்பும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது ஒரு அருமையான வாய்ப்பு. இதற்கான அனைத்து தொழில்நுட்ப வசதிகளும், அனைத்து உயர்நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் மிக சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.

தற்போது கொரானா தாக்கம் குறைந்துள்ள நிலையில்; வழக்கறிஞர்கள் நீதிமன்றத்திற்கு நேரில் சென்று வாதாடுகிறார்கள், இணைய வழியிலும் வாதாடுகிறார்கள். இது ஒரு சிறப்பான ஏற்பாடு ஆகும். அவரவர் வசதிக்கேற்ப நேரடியாகவும், இணைய வழியாகவும் நீதிபதியின் முன்பாகவும் வாதாட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனால் வெளி ஊரில் உள்ள வழக்கறிஞர்கள், சென்னைக்கு வரவேண்டிய அவசியமில்லை. அதுபோல உச்ச நீதிமன்றத்திற்கு செல்லக்கூடிய வழக்கறிஞர்களும் சென்னையில் இருந்து இணையவழியாக வாதாடலாம். தேவைப்பட்டால் வழக்கறிஞர்கள் நேரிலும் செல்லலாம் என்கிற வாய்ப்பு மிகவும் சிறப்பான ஒன்றாகும். இணைய வழியாக வாதாடினால் வழக்கறிஞர்களுக்கான போக்குவரத்து செலவு கட்டணத்தை வாதாடிகள் தர தேவையில்லை. இதனால் பணவசதி குறைவாக உள்ளவர்களும் நீதிமன்ற கதவைத் தட்ட முடியும்.

இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ள இன்டர்நெட், சாப்ட்வேர் தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்தி நிரந்தர இணையவழி வசதியாக மாற்ற, உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மூத்த நீதிபதிகள் அடங்கிய குழு, நீதிமன்ற நடவடிக்கைகள் இனி வரும் காலங்களில் தொடர்ந்து இணையவழியாக யார் வேண்டுமானாலும் பார்க்கலாம் என்பதை ஏற்படுத்தித் தரவேண்டும். இதனால் நீதிமன்றங்களின் வெளிப்படையான தன்மை மேலும் மேலும் உறுதிப்படுத்தப்படும்.

தற்போது உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்கள் இணைய வழியாக வழக்கறிஞர்கள் பயன்படுத்துவதற்கு உரிய அனைத்து வசதிகளும் செய்யப்பட்டு இருக்கிறது. ஆகவே அதற்கான செலவு எதுவும் இல்லை. நடைமுறை செலவு மட்டும்தான். ஆகவே பார்வையாளர்கள் பார்க்கலாம். சம்பந்தப்பட்ட வழக்காடிகள் பார்க்கலாம் சம்பந்தப்பட்ட வழக்கறிஞர்கள் பேசலாம் என நிரந்தரமாய் வசதிகள் செய்து தரலாம்.

இனி வரும் காலங்களில முழுக்க முழுக்க வழக்கறிஞர்கள் நேரடியாக வருகை தந்து, வழக்கு நடத்தலாம், இணைய வழியாகவும் வழக்கு நடத்தலாம். அதேநேரத்திலும் இணைய வழியில் வாதாடிகளும், பார்வையாளர்களும் பார்ப்பதற்கு வசதிகள் தரப்படவேண்டும். அப்போதுதான் வழக்கறிஞர்கள் வாதம் நீதிமன்ற செயல்பாடுகள் மற்றும் நீதிபதிகளின் மேலாண்மை என அனைத்தும் வாதாடிகளும், பார்வையாளர்களும், வழக்கறிஞர்களும், சட்டக் கல்லூரி மாணவர்களும், பொதுமக்களும் இணைய வழியாக பார்க்கிற வாய்ப்பாக அமையும். இதன் மூலம் நீதித்துறையின் மாண்பும், சட்ட அறிவும், மேலும் மேலும் உயர்தன்மை அடையும்.

இதனுடைய தொடர்ச்சியாக கீழமை நீதிமன்றங்களிலும், மேலும் மேலும் இணைய வழியில் வாய்ப்புகளை ஏற்படுத்திட வேண்டும்.

இன்றைய கூட்டாட்சி இந்தியாவில் பலமொழி பல இனங்கள் வாழும் மிகப்பெரிய துணை கண்டத்தில் அனைவரும் சேர்ந்து வாழ அந்தந்த மாநில உரிமைகளை நிலைநாட்டி கொள்ள நீதிமன்ற நிர்வாகத்தில் நீதிமன்ற நடவடிக்கையில் வெளிப்படை தன்மையை உருவாக்க இணைய வழி வசதிகளை நிரந்தரமாக்க வேண்டும். மாநில உயர் நீதிமன்றங்களில் அந்தந்த மாநில மொழியை குறிப்பாக தமிழகத்தில் தமிழை உயர்நீதிமன்ற வழக்கு மொழியாக பயன்படுத்தவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி போன்ற வளர்ந்த நாடுகளில் தொலைக்காட்சி வழியாகவும் இணைய வழியாகவும் நீதிமன்ற நடவடிக்கைகளை பார்க்கிற வெளிப்படை தன்மையை மேலும் உறுதியாக்கும் படி அமைந்துள்ளது.

இதனால் இந்தியா போன்ற பல தேசிய இனங்களை கொண்ட கூட்டாட்சி நாட்டில் நீதித்துறையின் மாண்பு மேலும் மேலும் உயர்வு பெறும். இதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திட ஆளும் அரசாங்கமும், சட்டமன்ற உறப்பினர்கள் அந்தந்த சட்டமன்றத்தில் குறித்து தீர்மானம் நிறைவேற்று மத்திய சட்ட அமைச்சகத்திற்கும், உச்ச நீதிமன்றத்திற்கும் அனுப்ப வேண்டும். அதேபோல நாடாளுமன்றத்திலும் இதற்கான சட்டம் கொண்டு வரவேண்டும். உயர்நீதிமன்றங்களின் உரிய ஆலோசனைகளையும் பெற வேண்டும். உச்ச நீதிமன்றம் வெளிப்படை தன்மையை உறுதிசெய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனை இன்றைய இளைய தலைமுறை மற்றும் பெருங்குடி மக்கள் பெரிதும் எதிர்பார்க்கிறார்கள்.

– ஆசிரியர்

## சென்னை உயர்நீதிமன்றத்தின் மாண்புமிகு நீதிபதிகள்

| | நியமன தேதி | ஓய்வு பெறும் தேதி |
|---|---|---|
| **மாண்புமிகு தலைமை நீதிபதி**<br>**திரு. நீதியரசர் மணீந்திர மோகன் ஸ்ரீவத்ஸவா**<br>(ராஜஸ்தான் உயர்நீதிமன்றம்) (21.07.2025 தேதியிலிருந்து) | **10.12.2009** | **05.03.2026** |
| **மாண்புமிகு நீதிபதிகள்** | | |
| மாண்புமிகு திரு. நீதியரசர் ஆர். சுரேஷ் குமார் | 05.10.2016 | 28.05.2026 |
| மாண்புமிகு திருமதி நீதியரசர் ஜெ. நிஷா பானு | 05.10.2016 | 17.09.2028 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் எம்.எஸ்.ரமேஷ் | 05.10.2016 | 27.12.2025 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் எஸ்.எம். சுப்பிரமணியம் | 05.10.2016 | 30.05.2027 |
| மாண்புமிகு நீதியரசர் டாக்டர் அனிதா சுமந்த் | 05.10.2016 | 14.04.2032 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் பி. வேல்முருகன் | 05.10.2016 | 08.06.2027 |
| மாண்புமிகு நீதியரசர் டாக்டர் ஜி. ஜெயச்சந்திரன் | 05.10.2016 | 31.03.2027 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் சி.வி. கார்த்திகேயன் | 05.10.2016 | 13.12.2026 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் என். சதீஷ்குமார் | 16.11.2016 | 05.05.2029 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் ஏ.டி. ஜெகதீஷ் சந்திரா | 28.06.2017 | 14.02.2028 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் ஜி.ஆர்.சுவாமிநாதன் | 28.06.2017 | 31.05.2030 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் அப்துல் குத்தூஸ் | 28.06.2017 | 07.09.2031 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் எம். தண்டபாணி | 28.06.2017 | 14.04.2030 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் பி.டி. ஆதிகேசவலு | 28.06.2017 | 29.12.2032 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் விவேக்குமார் சிங் | 22.09.2017 | 29.12.2032 |
| மாண்புமிகு திருமதி. நீதியரசர் பி.டி. ஆஷா | 04.06.2018 | 21.08.2028 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் எம். நிர்மல் குமார் | 04.06.2018 | 22.11.2027 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் என். ஆனந்த் வெங்கடேஷ் | 04.06.2018 | 03.07.2031 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் ஜி.கே. இளந்திரையன் | 04.06.2018 | 08.07.2032 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் கிருஷ்ணன் ராமசாமி | 04.06.2018 | 02.06.2030 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் சி. சரவணன் | 04.06.2018 | 30.11.2033 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் பி. புகழேந்தி | 20.11.2018 | 24.05.2029 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் செந்தில்குமார் இராமமூர்த்தி | 22.02.2019 | 01.10.2028 |

| | | |
|---|---|---|
| மாண்புமிகு திரு. நீதியரசர் ஹேமந்த் சந்தன்கவுடர் (கர்நாடகா உயர்நீதிமன்றத்திலிருந்து மாற்றப்பட்டுள்ளார்) | 11.11.2019 | 27.09.2031 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் ஷமீம் அகமத் | 12.12.2019 | 07.03.2028 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் பட்டு தேவனாந்த் | 13.01.2020 | 13.04.2028 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் மும்மு சுதிர் குமார் | 24.03.2022 | 19.05.2031 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் கே. சுரேந்தர் (தெலுங்கானா உயர்நீதிமன்றத்திலிருந்து மாற்றப்பட்டுள்ளார்) | 24.03.2022 | 10.01.2030 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் கே. முரளி சங்கர் | 03.12.2020 | 30.05.2030 |
| மாண்புமிகு டாக்டர் நீதியரசர் ஆர்.என். மஞ்சுளா | 03.12.2020 | 15.02.2026 |
| மாண்புமிகு திருமதி நீதியரசர் டி.வி. தமிழ்செல்வி | 03.12.2020 | 18.06.2030 |
| மாண்புமிகு திருமதி நீதியரசர் ஸ்ரீமதி | 12.10.2021 | 09.01.2029 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் டி. பரத சக்ரவர்த்தி | 12.10.2021 | 23.07.2033 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் ஆர். விஜயகுமார் | 12.10.2021 | 21.12.2032 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் முகமது சபீக் | 12.10.2021 | 05.03.2034 |
| மாண்புமிகு திருமதி நீதியரசர் என். மாலா | 28.03.2022 | 23.04.2029 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் எஸ். சௌந்தர் | 28.03.2022 | 28.07.2033 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் சுந்தர் மோகன் | 06.06.2022 | 01.11.2031 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் கே. குமரேஷ் பாபு | 06.06.2022 | 13.12.2031 |
| மாண்புமிகு திருமதி நீதியரசர் விக்டோரியா கௌரி | 07.02.2023 | 20.05.2035 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் பி.பி. பாலாஜி | 07.02.2023 | 11.04.2035 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் கே.கே. ராமகிருஷ்ணன் | 07.02.2023 | 26.05.2035 |
| மாண்புமிகு திருமதி நீதியரசர் ஆர். கலைமதி | 07.02.2023 | 17.04.2030 |
| மாண்புமிகு திருமதி கே. கோவிந்தராஜன் திலகவதி | 07.02.2023 | 25.04.2028 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் வி. லஷ்மிநாராயணன் | 27.02.2023 | 03.10.2032 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் பி. வடமலை | 27.03.2023 | 02.04.2028 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் ஆர். சக்திவேல் | 23.05.2023 | 30.07.2035 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் பி. தனபால் | 23.05.2023 | 04.03.2036 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் சி. குமரப்பன் | 23.05.2023 | 17.07.2034 |
| மாண்புமிகு திரு. நீதியரசர் கே. ராஜசேகர் | 23.05.2023 | 28.04.2037 |

| | | |
|---|---|---|
| மாண்புமிகு திரு. நீதியரசர் என். செந்தில்குமார் | 16.10.2023 | |
| மாண்புமிகு திரு. நீதியரசர் ஜி. அருள்முருகன் | 16.10.2023 | |
| **கூடுதல் நீதிபதிகள்** | | |
| மாண்புமிகு நீதியரசர் செல்வி ஆர். பூர்ணிமா | 23.09.2024 | |
| மாண்புமிகு திரு. நீதியரசர் எம்.ஜோதிராமன் | 23.09.2024 | |
| மாண்புமிகு நீதியரசர் டாக்டர் ஏ.டி. மரியா கிளே | 23.09.2024 | |

## தீர்ப்பாயத்தில் இருக்கும் நிர்வாக தரப்பினர் சிலர் அரசுக்கு எதிராக உத்தரவிட தயங்குகிறார்கள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பேச்சு

தீர்ப்பாயத்தில் இருக்கும் நிர்வாக தரப்பினர் சிலர் அரசுக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்க தயங்குகிறார்கள் என்று மத்திய நிர்வாக தீர்ப்பாயத்தின் அகில இந்திய மாநாட்டில் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் கூறினார்.

மத்திய நிர்வாக தீர்ப்பாயத்தின் 10-வது அகில இந்திய மாநாடு டெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் அக்டோபர் 10ஆம்தேதி நடைபெற்றது. இந்த மாநாட்டை உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஜே.கே.மகேஸ்வரி, சதீஷ் சந்திர சர்மா, பிரசன்னா பி. வரலே, விஜய் பிஸ்னோய் மற்றும் பிரதமர் கவனிக்கும் துறைகளின் இணை மந்திரி ஜிதேந்திர சிங், சட்ட மந்திரி அர்ஜுன்ராம் மெக்வால் ஆகியோர் முன்னிலையில் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் தொடங்கி வைத்து பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது.

தீர்ப்பாயங்கள் அரசு அதிகாரிகளுக்கு நீதி கிடைப்பதையும், அவர்களின் செயல் திறனை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. தீர்ப்பாயத்தின் தீர்ப்புகளில் அதிக நிலைத்தன்மையும், அதன் செயல்பாட்டில் வெளிப்படைத்தன்மையும் இருக்க வேண்டும். தீர்ப்பாயத்தை அணுகும் ஒவ்வொருவரும் அந்த முடிவு நன்கு நியாயமானது என்று உணர வேண்டும்.

தீர்ப்பாய உறுப்பினர்களில் சிலர் நிர்வாக தரப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு சட்ட பகுத்தறிவில் பயிற்சி தேவைப்படுகிறது. நிர்வாக தரப்பில் இருந்து வரும் சிலர், அரசுக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்க தயங்குகிறார்கள். இதை நான் தனிப்பட்ட முறையில் கவனித்து இருக்கிறேன். அவர்கள் இது பற்றி சிந்திக்க வேண்டும்.

உச்சநீதிமன்றத்தில் தீர்ப்பாய முடிவுகளும் மேல்முறையீடு செய்யப்படுகின்றன. ஒரு வழக்கு மேல்முறையீடு செய்ய தகுதியானதா இல்லையா என்பதை தீர்மானிக்க மத்திய அமைப்புகளை பயன்படுத்த வேண்டும். இப்படி பயன்படுத்தினால் நிலுவை வழக்குகளின் எண்ணிக்கை குறையும்.

நீதிபதிகளும், வழக்குரைஞர்களும் நீதி என்ற தங்கத் தேரின் இரு சக்கரங்களைப் போன்றவர்கள் இதனை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதில் யாரும் உயர்ந்தவர்களோ, தாழ்ந்தவர்களோ இல்லை. நாம் இணைந்து செயல்படாவிட்டால் நிதி நிர்வாகம் சரியாக செயல்பட முடியாது. இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் தலைமை நீதிபதி குறிப்பிட்ட மேல்முறையீடு தொடர்பான பிரச்சினையை சட்ட மந்திரி அர்ஜுன்ராம் மெக்வால் வேறுவிதமாக சுட்டிக் காட்டினார். அவர் பேசும்போது, தீர்ப்பாயத்தின் உத்தரவு சரியான இருந்தாலும், அதிகாரிகள் மேல்முறையீடு செய்ய வலியுறுத்துகிறார்கள் என்றார். இந்த போக்கை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் கூறினார்.

இந்த மாநாட்டில் இந்திய அட்டர்னி ஜெனரல் வெங்கடரமணி மற்றும் பல சட்ட நிபுணர்கள் கலந்து கொண்டனர்.

**நன்றி: தினத்தந்தி 21.9.2025**

# பொதுவர் தீர்வின் மூலமாக அடிப்படை ஒழுக்கக் கொள்கைக்கு முரணாக கையகப்படுத்துதலில் தீர்வு ஒப்பந்தம் ஏற்படுத்த முடியாது

**இந்திய உச்சநீதிமன்றம்**
**முன்னிலை : தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணன்**
**நீதிபதி பி.வி. சஞ்சய்குமார்**
**உ.மே. எண் 10757/2017**
**20.3.2025**
**(2025 INSC 367)**
**2025 (2) CTC 770**

**தில்லி வேளாண் வணிக வாரியம்,**
**அதன் தலைவர் மூலமாக ...மேல்முறையீட்டாளர்**
**-எதிர்-**
**பகவான்தேவி (இறப்பு அதன் சார்பாற்றுநர்கள் ...எதிர்வழக்கீட்டாளர்**

ரச்சனா - ஸ்ரீவச்ஸவா மூத்த வழக்கறிஞர்
பிரிஜ்பூஷன் அண்டு மோனிகா
மேல்முறையீட்டாளர்களின் வழக்கறிஞர்கள்

ஸ்வஸ்திக் சோலன்கி, கைய்சங்க்புயு கேங்மிய, அர்ஜுன் டி. சிங், மைத்ரேயா, நிஷா பாண்டே, யிம் யாங்கர், லாங்குமர், ஜெ.பிரசாத், அட்டுல் குமார், ஸ்வீட்டி சிங், அவ்தேஷ் கே. சிங், அஷுதோஷ் உப்தாயே, அமித் குமார், மாணிக்க திரிபாதி, அஷுடோஷ் கௌசிக், கௌதம் யாதவ் அண்ட் கன்ஹாய்யா பிரியதர்ஷினி
எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர்

உ.மே.அனுமதிக்கப்பட்டது. செலவுத் தொகையின்றி.

## தீர்ப்பு

**நீதிபதி பி.வி. சஞ்சே குமார்**

1. நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தினை மாற்றுவதில் அதிர்ச்சியூட்டும் நிகழ்வுகள் இந்த மேல்முறையீடு, கட்டாயமாக விரிவாக கூறப்பட வேண்டிய ஒன்று.

2. 33 ஏக்கர் அளவுக்கான நிலம். நாரிலா பாவனா சாலையை ஒட்டி அரசால் பெறப்பட்டது. தில்லி வேளாண் சந்தை வாரியத்தால் (பின்னர் வாரியம் எனச் சுட்டப்படுவது) அதாவது அதன் தானிய சந்தையை மாற்றி நிறுவுவதற்காக தாரியாவாவில் 1894 நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் பிரிவு 4(1)இன்படியான அறிவிக்கை (சுருக்கமாக 1894 சட்டம்) 30.10.1963 அன்று பிறப்பிக்கப்பட்டது. 1894 நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் பிரிவு 4(1)இன் படியான அறிக்கை (சுருக்கமாக 1894 சட்டம்) 30.10.1963 அன்று பிறப்பிக்கப்பட்டது. 1894 சட்டத்தின் 6ஆம் பிரிவின்படி விளம்புகை 10.1.1969இல் வெளியிடப்பட்டது மற்றும் தீர்வில் சரியீடு தீர்மானிக்கப்பட்டது. 19.9.1986 கையகப்படுத்தப்பட்ட நிலம் உள்ளடக்கியது 6 பிக்காஸ் மற்றும் 10 விஸ்வாஸ் அமைந்து உள்ளது. காஸ்ரா எண் 296, 298, 303 கிராமம் மாமூர்பூர் பகவான் தேவி இந்த சிறிய அளவிலான இடத்திற்கு உரிமை கோரினால் அதாவது பதிவு செய்யப்பட்ட விற்பனை ஆவணம் 1959, 1971. கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் உடைமை எடுக்கப்பட்டது. 22.9.1986இல் அளிக்கப் பட்டது. அதாவது, வேளாண் உற்பத்தி சந்தைப்படுத்தும் குழுவிற்கு நாரீலாவில் அதாவது வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதற்கு வெளித் தோற்றப்பட இதில் 6 பிக்ஹாஸ் மற்றும் 10 விஸ்வாஸ் உள்ளடங்கியது. அதாவது பகவான் தேவியால் உரிமை கோரப்பட்டது. அவள் நீ.பே.ம.எண் 149/1987இனை தில்லி உயர்நீதிமன்றத்தின் முன்னிட்டு அவளது நிலத்தை கையகப்படுத்தியதை எதிர்த்துள்ளான்.

3. இந்த நிலையில், இக்கதை ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. வாரியம் நீதிமன்றத்திற்கு வெளியே இந்த பொருட்பாட்டினை தீர்க்க முடிவு

செய்தது அவளால் கோரப்பட்ட அவனிடம் இருந்து கையகப்பட்ட நிலத்தின் பாதி அளவை எஞ்சிய பாதியை வாரியம் வைத்துக் கொள்வ தாக அதாவது 3 பிக்ஹாஸ் மற்றும் 5 விஸ்வாஸ் திருப்பியளிக்க இது தொடர்பான உடன்படிக்கை 30.9.1988 வாரியத்தினால் நிறைவேற்றப் பட்டது. அதன் தலைவர் மூலமாக பகவான் தேவியுடன், அந்த உடன்பாட்டில் கூறப்பட்ட தாவது 19.9.1986 தேதியிடப்பட்ட தீர்வின்படி பகவான்தேவி சரியீட்டினை கோரிப் பெறுவர். நிலம் கையகப்படுத்தப்படுத்தும் ஆட்சியரிட மிருந்து, 1894 சட்டத்தின்படி அவருக்கு கிடைக்கத்தக்க அனைத்து உரிமைகளையும் தீருதவிகளையும் அவள் பெறுவார் என்பது. அந்த உடன்படிக்கையில் மேலும் பதிவு செய்யப்பட்டதாவது, முந்திய இசைவின்படி, அதாவது நிலம் கையகப்படுத்துதல் ஆட்சியர், வாரியத்தின் முழுச் சொந்தக்காரர்கள் என்பதாக. வருவாய் பதிவேடுகளில் மாற்றம் செய்யப் பட்டன. இதில் உரிய உரிமை மாற்றளிப்பு ஆவணம் தொடர்பாக. நிலத்தின் பகுதி அவருக்கு அளிக்கப்பட்ட உத்தேசிக்கப்பட்டது. மதிப்பிற்கான மறுபயனுக்காக. பகவான் தேவியால் செலுத்தப்பட உள்ள சரியீட்டின் தொகை அதாவது நிலத்தின் பாதி அளவுக்கு 19.9.1986 தீர்வில் அவள் பெறப்பட்ட தொகை அத்துடன் 12 சதவீதம் வட்டியுடன் அதாவது சரியீடு வைப்பீடு செய்யப்பட்ட தேதியிலிருந்து உள்ளவாறு தொகை செலுத்தப்படு தேதிவரை யிலான வட்டியுடன் செலுத்தப்படுவதாக.

4. உடன்படிக்கையின் கூறு(k) வகை செய்வதாவது, தரப்பினர்களுக்கிடையே எழுகிற பூசல் எதுவும், அந்த உடன்படிக்கையின் பொருளின்படியும் அதன் செயற்பாட்டின்படியும், வாரியத்தின் தலைவருக்குச் சுட்டப்படுதல் வேண்டும். அதில் அவரது முடிபே அறுதியான தாக தரப்பினர்களைக் கட்டுப்படுத்தும். இந்த உடன்படிக்கை, வாரியம் சார்பாக, நிறைவேற்றப் பட்டிருப்பதாகும் அதன் தலைவரால், அதாவது அவரது பதவிக்காலம் முடிவுறுவதற்கு ஒரு நாள் முன்னதாக இதில் மேலும் உறுதி கூறப்பட்ட தாவது அப்போதைய தலைவரால் இது செயற் படுத்தப்பட்டது. வாரியத்தின் 29.9.1988 கூட்ட நிகழ்ச்சிக் குறிப்பேட்டின் அடிப்படையில் இது பற்றிய உடன்படிக்கையில் எதுவும் குறிப்பிடப் படவில்லை.

5. எந்த நிகழ்விலும், நீதிப்பேராணை எண் 149/1987, 5.10.1988 அன்று வகை செய்யப்பட்டது. இந்த உடன்படிக்கையின் அடிப்படையில் வாரியம், அப்போது கவனித்து உள்ளதாவது, அதன் ஆதாயத்திற்காக ஈட்டப்பட்ட நிலம் இந்த முறையில் விடுவிக்கப்படக் கூடாது என்பது மற்றும் இந்தப் பிரச்சினை 22.11.1988 வாரியக் கூட்டத்தில் மறு கருதுகை செய்யப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்பில் பதிவு செய்யப்பட்டதாவது, விசாரணையின்பேரில், அதிகாரிகள் வாரியத் திற்கு தெரிவித்ததாவது, இதில் உடைமை வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டாலும், இந்த நிலத்தின் உரிமை அரசிடம் உற்றடைந்துள்ளது என்பது. இதில் அரசால் மாற்றளிப்பு ஆவணம் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. அதாவது வாரியம் சார்பாக, வாரியம், கருதியதாவது மொத்த பொருட்பாட்டினையும் சீராய்வு செய்ய வேண்டிய அவசியம் உள்ளதாக. எனவே, நீ.பே.எண் 149/1987இல் பிறப்பிக்கப்பட்ட 5.10.1988 தேதியிடப்பட்ட ஆணையை மீளப் பெறுமாறு தில்லி உயர்நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் ஒன்று முன்னிடப்பட்டு இது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பகவான் தேவியும் 30.9.1988 தேதியிடப்பட்ட விண்ணப்பத்தினை முன்னிட்டு உடன்படிக்கை யினை செயற்படுத்தக் கோரியுள்ளார். இந்த விண்ணப்பங்கள் சேர்ந்தானையாக எடுக்கப் பட்டு 6.8.2002 அன்று தில்லி உயர் நீதிமன்றத்தினால் வகை செய்யப்பட்டது. சொல்லப்பட்ட ஆணை மூலமாக, இது பகவான் தேவிக்கு உரிய தீருதவிக்கு சட்டத்திற்கிணங்க செயற்பட சுதந்திரம் வழங்கியது மற்றும் வாரியத்தினை அனைத்து மறுப்புகளையும் எழுப்பிட அனுமதித்தது. அதாவது அந்த விண்ணப்பத்தில் கூறப்பட்ட ஒன்று உள்ளடங்க லாக.

6. நிகழ்வின் திருப்பங்கள் லூயிஸ் கரோல் ஆலிஸ் சி சொற்களில் அறியும் ஆர்வம் மிகுந்திருந்தனர். இந்தப் பொருட்பாட்டின் மீது இரண்டு ஆண்டுகள் ஆன பின்னர், 30.9.198இன் படி கோரியுள்ளனர். அவன் அப்போது பொது எண் 278/2004 விண்ணப்பத்தினை முன்னிட்டு ள்ளார். அதாவது பொதுவரை அமர்த்துவதற்காக அதுவும் தில்லி உயர்நீதிமன்றத்தினால்

17.5.2006இல் அனுமதிக்கப்பட்டது மற்றும் ஓய்வு பெற்ற தில்லி உயர்நீதிமன்ற நீதிபதி அமர்த்தப்பட்டார். வாரியம் வாதிட்டதாவது பொதுவர் முன்பு 30.9.1988ன்படி தேதியிடப் பட்ட உடன்படிக்கை தொடக்கத்திலேயே விழலானதாகும். அது செயற்படுத்தப்பட முடியாது. ஏனெனில் அதில் நிலம் கையகப் படுத்தும் அதிகாரிகள் அதில் தரப்பினர்களாக இல்லை மற்றும் அவர்கள் இசைவின்றி கையகப்படுத்தப்பட்ட நிலம் திருப்பியளிக்கப்பட முடியாது. இதில் குறிப்பிடப்பட்டதாவது, உடன்படிக்கை அவசரமாக கொண்டு வரப்பட்டது. இதில் முத்திரைத் தாள்கள் 26.9.1988 வாங்கப்பட்டிருந்தது உடன்படிக்கை 27.9.1988 ஏற்படுத்தப்பட்டது. இதில் நிகழ்ச்சிக் குறிப்பில் உறுதி செய்யாமல் சொல்லப்பட்ட கூட்டம் அப்போதைய தலைவரால் கையொப்பமிடப் பட்டது. 30.9.1988 அன்று அதாவது தலைவரின் கடைசி அலுவலக நாளில்.

7. எனினும், பொதுவர், 10.7.2007 தேதி யிடப்பட்ட தீர்வினைப் பிறப்பித்துள்ளார். இது பகவான் தேவிக்கு சார்பாக உள்ளது. அதில் வாரியம் உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்ள தகுதி வாய்ந்ததாக கூறப்பட்டது. அது 30.9.1988 தேதியிடப்பட்டது மற்றும் 3 பிகாஸ் மற்றும் 5 பிஸ்வாஸ் இடங்களை திருப்பியளிக்க அவர் அவ்வாறே, வாரியத்தை சொல்லப்பட்ட உடன்படிக்கைக்கு இணங்கி நடக்க பணித்து ள்ளார். அதாவது வாரியம் அதன் கடமைப் பொறுப்பை நிறைவேற்றுமாறு மற்றும் அது உரிமை மாற்று ஆவணத்தை பகவான் தேவி சார்பாக நிறைவேற்ற கூறப்பட்டது. பகவான் தேவிக்கும் அவளது உடன்படிக்கையின் பங்கினை நிறைவேற்ற கூறப்பட்டது.

8. 10.7.2007 தீர்வினால் குறையுற்றதால் வாரியம் மனு ஒன்றை முன்னிட்டது.அது விரிவு D.M.P. எண் 561/2007. 1996 பொதுவர் தீர்வு மற்றும் இணக்கத் தீர்வுச் சட்டத்தின் 34ஆம் பிரிவின்படி இது தில்லி உயர்நீதிமன்றத்தின் முன்பானது. இதில் வாரியத்தினால் கூறப்பட்ட காரணம் தீர்வு பொதுக் கொள்கைக்கு எதிரானது என்பது. எனினும் 1.7.2013 தேதியிடப்பட்ட ஆணை வாயிலாக தில்லி உயர்நீதிமன்ற நீதிபதி மனுவினைத் தள்ளுபடி செய்துள்ளார். அந்தத் தீர்வு முழுவதையும் ஏற்றுள்ளார். இதனால் குறையுற்றவர் வாரியமானது மேல்முறையீடு செய்துள்ளது. 1996 சட்டத்தின் 37ஆம் பிரிவின்படி (F.A.O.(O.S.) எண் 436/2013/ மேல்முறையீடும் தவறியுள்ளது. 27.9.2013 அன்று தில்லி உயர்நீதிமன்ற நீதியர் ஆயம் அதை தள்ளுபடி செய்துள்ளது.

9. மேற்சொல்லப்பட்ட மேல்முறையீட்டுடன் சி.அ.ம.(சி) எண் 9491/2014இனை வாரியம் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்த்து முன்னிடப்பட்டது. இதிலிருந்து தற்போதைய மேல்முறையீடு எழுகிறது. 28.3.2014 தேதியிடப்பட்ட ஆணை மூலம், இந்த நீதிமன்றம் பழைய நிலை தொடர் பணித்தது. பகவான் தேவி 13.1.2015 அன்று இறந்தார் மற்றும் அவளது மகள் பதிவேட்டில் சட்ட சார்பாற்றுநராகக் கொண்டு வரப்பட்டார். ஒரு இடைநிலை விண்ணப்பம் இ.வி.எண் 36403/ 2021 முன்னிடப்பட்டது. மீனா ஷெராவத் இனால் அவளது மகள்களுடன் பங்கச் மற்றும் குணால் இவர்கள் எதிர் உரிமை மூல ஆவணம் கோரினர். அதாவது நிலத்திற்காக சட்ட வாரிசுகளாக சஞ்சய் சராவத்தின் பேரன்களாக பகவான் தேவியின் கணவரின் இறந்த கிருபா ராம் முதல் மனைவி மூலமான வர்கள் இது இவ்வாறு இருந்தது.

10. முதலில் பம்பாய் வேளாண் பொருட்கள் சந்தை சட்டம் 1939, தில்லியில் செயற்பாட்டில் இருந்தது. 16ஆம் பிரிவின்படி அரசாங்கம், அந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக நிலம் எதுவும் தேவைப்படுவதாகக் கருத்துக் கொள்ளு மானால் அது 1894 சட்டத்தின் வகைமுறை களின்படி அதனை ஈட்ட நடவடிக்கை எடுக்கும் மற்றும் அத்தகைய நிலம் அரசிடம் உற்றடையும் போது, அது அரசால் அந்தக் குழுவினர் உரிமை மாற்றம் செய்யப்படும். சொல்லப்பட்ட சந்தைக் குழுவினால் தீர்வு செய்யப்பட்ட இழப்பீட்டுத் தொகை செலுத்தப்படுவதன் பேரில் மற்றும் நிலம் கையகப்படுத்தப்படுத்துவதற்காக ஏற்பட்ட பிற அனைத்து கட்டணங்களும் மற்றும் அத்தகைய மாற்றத்தின் பேரில் நிலமானது சந்தைக் குழுவினரிடம் உற்றடையும். குறிப்பிட வேண்டியதாவது சட்டப்படி அதனை வைத்தி ருப்பவர் முறையே 1963இல் அறிவிக்கை செய்யப்பட்டு விளம்புகை செய்யப்பட்டபோதும், 1969இலும் 33 ஏக்கர் நிலங்களை கையகப்

படுத்துவதாக 6 பிக்ஹாஸ் மற்றும் 10 பிஸ்வாஸ் நிலமும் உள்ளடங்கும்.

11. எனினும், 30.9.1988 தேதியிடப்பட்ட உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டபோது, தில்லி வேளாண் பொருட்கள் சந்தைப்படுத்துதல் முறைப்படுத்துதல் சட்டம் 1976-1939 சட்டத்தின் நீட்டிப்பே அது இதன் மூலம் நீக்கப் பட்டது. வாரியமானது. 1976 சட்டம் 5ஆம் பிரிவின்படி அமைக்கப்பட்டது மற்றும் 5(3)இன் வரையுறைகளின்படி அதன் அதிகாரங்கள் 1976 சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு நிலம் ஈட்டுதல் மற்றும் வைத்திருத்தல்.

12. அதன் பின்னர், தற்போதைய தில்லி வேளாண் விளைபொருள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டம், 1998-1976 சட்டத்தினை இட மாற்றியது. இதே போன்ற வகைமுறைகள் பிரிவு 6இல் உள்ளன. அதில் கூறப்பட்டதாவது வாரியம், 5ஆம் பிரிவின்படி அமைக்கப்பட்டது. ஒரு பதிவு செய்யப்பட்ட குழும மாகும் மற்றும் ஒரு வட்டார அதிகார அமைப்பாகும். நிலையான விதிமுறையுரிமையையும், அதிகாரத்தையும் கொண்டிருக்கும். சொல்லப் பட்ட சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, சொத்துக்களை கொண்டிருக்கும் மற்றும் அவற்றிற்கு வகை செய்யும். பிரிவு 24(1) நிலம் கையகப்படுத்துதல் தொடர்பாக கூறப்படுவ தாகாது 1998 சட்டத்தின் நோக்கங்களுக்காக நிலம் தேவைப்படுவது மற்றும் இதனை வாரியம் உடன்படிக்கை மூலமாக ஈட்டப்பட முடியாத போது, இத்தகைய நிலமானது வாரியத்தின் கோரிக்கையின்பேரில் 1894 சட்டத்தின் வகை முறைகளின்படி கையகப் படுத்தப்படும் மற்றும் 1894 சட்டத்தின்படி அளிக்கப்பட்ட தீர்வின் வழியான சரியீடு செலுத்தப்படுவதற்பேரில் வாரியத்தினால் மற்றும் பிற கட்டணங்கள் அத்தகைய கையகப்படுத்துதல் தொடர்பாக ஏற்பட்ட அனைத்து பிற கட்டணங்களும் செலுத்தப்பட்டு வாரியத்திடம் நிலம் உற்றடைதல் வேண்டும். பிரிவு 24(1)இன் வரம்புரை கூறுவதாவது வாரியத்தினால் இது கூறப்பட்ட பின்னர், அதனால் அது மீளப் பெறப்படுதல் ஆகாது. அதாவது அதனால் பதிவு செய்யப்பட்ட காரணங்கள் நீங்கலாக மற்றும் இது ஆளுநரால் 1998 சட்டத்தின் 24(2) பிரிவின் படி தொடர்புற்றதாகும் மற்றும் இது பின் வருமாறு படிக்கப்படுகிறது.

"(2) வாரியமானது ஆளுநரின் முன் ஒப்பளிப்பு இன்றி, (1)ஆம் உட்பிரிவின்படி வாரியத்துக்காக அல்லது சந்தைக் குழுவிற்காக கையகப்படுத்தப்பட்ட நிலம் எதுவும், உரிமை மாற்றம் செய்யப்படுதல் அல்லது அத்தகைய நிலம் எதுவும் உற்றடைதல் அதாவது அது கையகப்படுத்தப்பட்ட நோக்கத்திற்கல்லாது வேறு எந்த நோக்கத்திற்காகவும் நேர்வுக்கேற்ப பயன்படுத்தப்படுதல் ஆகாது"

செயற்பாட்டில் வாரியத்தின் அதிகாரம் அதாவது சொத்தினை ஈட்டுவதற்கானது இது தனியார் பேச்சின்படி அல்லது கட்டாய கையகப் படுத்துதலின்படி அல்லது அரசு முகவாண்மை மூலமாக செய்யப்படுவதை எப்போதும் பாதுகாக்கப்படும். அவ்வாறு கையகப்படுத்தப் பட்ட சொத்து, எப்போது சட்டத்திற்கு இணங்க செய்யப்படுதல் வேண்டும். அதாவது ஆவணம் கை மாற்றப்படும் முறை மேலும் பொருட்பாடு உள்ளவாறு உரிமை மூல ஆவணம் மாற்றப் படுதல் அல்லது வேறுபட்ட பயன்பாடு வாரியத்தி னால் கட்டாயமாக கையகப்படுத்தப்பட்ட சொத்து, அதன் உளத்தேர்வின்படி தனிப்பட்ட முறையில் செய்யப்படாது.

13. கையில் உள்ள வழக்கில், ஏற்கப்பட்ட பொருண்மையாவது, சரியீட்டை, தீர்மானிக்கிற தீர்வமானது 19.9.1986இல் பிறப்பிக்கப்பட்டது மற்றும் நிலத்தின் கையுடைமை, எடுக்கப்பட்டு வாரியத்திடம் 22.9.1986 அன்று அளிக்கப் பட்டது. 1894 சட்டத்தின் 16ஆம் பிரிவு இதனை ஐயமின்றி கூறுவதாவது, 22.9.1986 அன்று உடைமை எடுக்கப்பட்டதன்பேரில் கையகப் படுத்தப்பட்ட நிலம் அரசிடம் முழுமையாக உற்றடைந்துள்ளது அனைத்து வில்லங்களும் நீங்கலாக, நன்கு அறியப்பட்டவாறு, கையகப் படுத்தப்பட்டது. 1894 சட்டத்தின் 48அம் பிரிவின்படியான திலிருந்து மீளப் பெறுவது தொடர்பான அதிகாரம், அரசால் மட்டுமே செயற் படுத்தப்பட முடியும். அதுவும் கையகப்படுத்தப் படாத போதும். எனவே, அரசாங்கம் கூட கையகப் படுத்தப்பட்டதிலிருந்து மீளப்பெறுதல் என்பது அதுவும் கையுடைக்குப் பின்னர் அது எடுத்துக் கொள்ளப்பட்டது. 22.9.1986 அன்று, இது உரிய பதிவாவணங்கள் மூலம் சான்றாக்கப்பட்டது.

14. இத்தகைய சூழ்நிலைகளில், எழுப்பப் படுகிற கேள்வியாவது, வாரியமானது, எவரது நலப்பயனுக்காக, நிலம் கையகப்படுத்தப் பட்டதோ அவர் அத்தகைய மீளப்பெறுதலுக்கு இணையான நலப்பயனை பகவான் தேவியுடன் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்வதில் பெறும்போது, மேலும் எழுப்பப்படும் கேள்வி யாவது, வாரியமானது, அத்தகைய அதிகாரத்தை செலுத்த முடியுமா என்பது அதுவும் இல்லாத போது சட்டப்படியான திட்டம், அதாவது வாரியத்திற்கு பொருந்தக் கூடிய சட்டங்கள் வெவ்வேறு காலங்களில் கூறப்பட்டுள்ளது. அதாவது வாரியத்திற்கு கையகப்படுத்தப்படுதல் தொடர்பாக. ஆவணம் ஒன்று இருத்தல் வேண்டும். அதாவது கையகப்படுத்தப்பட்டு வைத்திருப்பது தொடர்பாக ஏற்கப்பட்டவாறு, அத்தகைய ஆவணம் எதுவும், அரசால் அளிக்கப் படவில்லை. அதாவது உள்ளபடியே வாரியத்தின் உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக, இதன் மூலம் மட்டுமே அது இதன் மீது முழு உரிமை கோர முடியும்.

15. வாரியமானது, பொதுவர் முன்பு, இந்தப் பிரச்சினைகளை எழுப்பியுள்ளது. அதாவது கூறுவது அன்றி 10.7.2007 தேதியிடப்பட்ட தீர்வு பிறப்பிக்கப்பட்டது. இது வாரியத்திற் எதிரானது. 34ஆம் பிரிவின்படி அதிகாரம் செலுத்துகிற நீதிமன்றத்தினாலோ அல்லது 37ஆம் பிரிவின்படி மேல்முறையீட்டு அதிகார வரம்பு செலுத்துகிற நீதிமன்றத்தினாலோ இந்த பிரச்சினைகள் பற்றி வகை செய்யவில்லை. 1996 சட்டத்தின் பிரிவு 34(2)(ஆ) உறுதியாக, கூறுவதாவது, ஒரு பொதுவர் தீர்வு, அது இந்தியாவின் பொதுக் கொள்கைக்கு மாறான தாக இருக்குமானாலும் அது இந்தியாவின் அடிப்படைக் கொள்கைக்கு மாறானதாக இருக்குமானாலும் அல்லது அடிப்படை ஒழுக்கக் கொள்கைகளுக்கு அல்லது நீதிக்கு மாறாக இருக்குமானால், அது பொதுக் கொள்கைக்கு மாறானதாகும்.

16. மாநிலம் அதன் இறையாண்மை அதிகாரத்தை பயன்படுத்தி பொது நலனுக்காக நிலத்தை ஈட்டுதல் அதாவது கையில் சட்ட வாரியத்தின் கட்டுப்பாட்டின் மீது அமைப்பது இதனை அந்த கையகப்படுத்துதலில் பயன் பெறத் தக்கவாரால் அது, அலட்சியப்படுத்தப் பட்டு அதனால் சட்ட வாரியம் ஒரு தனி உடன்படிக்கையை ஏற்படுத்துவது, அதுவும் நிலம் கையகப்படுத்தப்பட்ட சிறிது காலத்திலேயே என்பது, மாநிலம் அதன் இறையாண்மை அதிகாரத்தை பயன்படுத்தியதை எதிராக்கும் நிலையாகும். இதன் மூலம் சட்டப்படி நலன் பெறுபவர். கட்டாய கையகப்படுத்துதலில் இது ஒரு மோசடியாக அமையும். இதற்கான இறையாண்மை அதிகாரத்தை மாநிலம் பயன் படுத்தியதாக காணப்படும். இவ்வாறு பார்க்கப் படும்போது, 30.9.1988 தேதியிடப்பட்ட உடன்படிக்கை தெளிவாக இந்தியச் சட்டத்தின் அடிப்படைக் கொள்கைக்கு மீறுகையாக இது அமையும் மற்றும் 10.7.2007 தேதியிடப்பட்ட பொதுவர் தீர்ப்பு சொல்லப்பட்ட உடன்பாட்டை ஏற்படும் இவ்வாறே மோசடியானதாகும்.

17. மேலும், 30.9.1988 தேதியிடப்பட்ட உடன்படிக்கை தயாரிக்கப்பட்டது. பொருண்மை இதற்காக முத்திரைத் தாள்கள் வாங்கப்பட்டது மற்றும் சமரச உடன்பாட்டுச் சட்டத்தின் 34, 37ஆம் பிரிவுகளின்படி நீதிமன்றங்கள் அதிகார வரம்பைச் செலுத்துவதில், பொறுத்த தவறு 10.7.2007 தேதியிடப்பட்ட பொதுவர் தீர்வை தள்ளுபடி செய்யாது. 30.7.1988 தேதியிட்ட உடன்படிக்கையை ஏற்பது தவறே.

19.இதில் மேல்முறையீடு அவ்வாறே அனுமதிக்கப்படுகிறது. 27.9.2013 தேதியிடப் பட்ட தீர்ப்பு F.A.O. மு.வ. எண் 436/2013 தில்லி உயர்நீதிமன்றம் நீதியர் ஆயத்தினு டையது அத்துடன் 1.7.2013 தேதியிட்ட தீர்ப்பு O.M.P. எண் 561/2007 வழக்கானது மற்றும் பொதுவர் தீர்ப்பு 10.7.2007 தேதியிடப்பட்டது. இவை தள்ளுபடி செய்யப்பட்டன.

இந்த ஆணையின்படி நடப்பில் உள்ள விண்ணப்பங்கள் முடிக்கப்படும். தரப்பினர்கள் தங்களது செலவினங்களை ஏற்பர்.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

# தாமதத்தை மன்னிக்கக் கோருவதற்கு போதுமான காரணம் தெரிவிக்காததால் தாமதத்தை அனுமதித்தது தவறு

**இந்திய உச்ச நீதிமன்றம்**
**முன்னிலை: நீதிபதி திருமதி பி.வி.நாகரத்னா**
**நீதிபதி திரு.சதீஷ் சந்திர ஷர்மா**
**உ.மே.மு.எண் 6843/2025**
**சிறப்பு அ.கோ.மனு (உ) 17575/2023**
**தீர்ப்பு நாள் 13/05/2025**
**(2025 (4) CTC 159)**

**திருநாகலிங்கம்** ...மேல்முறையீட்டாளர்

-எதிர்-

**லிங்கேஸ்வரன் மற்றும் சிலர்** ...எதிர்மனுதாரர்கள்

**ஆணை:**

**நீதிபதி சதீஷ் சந்திர ஷர்மா**

1. சிறப்பு அனுமதி கோருவது அனுமதிக்கப் படுகிறது.

2. இந்த தற்போதைய மேல்முறையீடு, சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையால் 25.04.2023 அன்று C.R.P.(MD) Gs. 1113/2023 மற்றும் CMP (MD) எண் 5363/2023 இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் (இனி 'தாக்கீடான உத்தரவு' என அழைக்கப்படுகிறது) இருந்து உருவாகிறது.

3. மேற்கண்ட உத்தரவு, இராமநாதபுரம் மாவட்ட முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதியால் (இனி 'விசாரணை நீதிபதி' என அழைக்கப்படுகிறது) 08.02.2023 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவிலிருந்து உருவானது. அந்த உத்தரவில், விசாரணை நீதிபதி, நீதிமன்ற கோப்பில் உள்ள எண்ணிடப்படாத அ.கு. எண். ________/2022-ல் உள்ள ஐ.அ. எண் 1/2022-ஐ தள்ளுபடி செய்தார்.

4. இந்த வழக்கின் பொருண்மைகள் என்னவென்றால், நயினார்கோயில் @ நாகநாத சமுத்திரம் கிராமத்தில் அமைந்துள்ள வழக்கு சொத்து தொடர்பாக, வாதி (இனி 'மேல்முறையீட்டாளர்' என அழைக்கப்படுகிறது) மற்றும் பிரதிவாதி (இனி 'எதிர்வாதி எண் 1' என அழைக்கப் படுகிறது) இடையே 17.08.2015 அன்று ரூ. 3 லட்சம் மதிப்பில் ஒரு விற்பனை ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த வழக்கில் எதிர்வாதி எண் 1, 17.08.2015 தேதியிட்ட விற்பனை ஒப்பந்தத்தின் படி விற்பனை பத்திரத்தை நிறைவேற்றத் தவறினார். அத்தகைய சூழ்நிலையில், மேல் முறையீட்டாளர் 21.09.2015 அன்று பரமக்குடி துணை நீதிமன்றத்தில் O.S.எண் 110/2015 என்ற சிவில் வழக்கை தாக்கல் செய்தார். 17.08.2015 தேதியிட்ட விற்பனை ஒப்பந்தத்தின் குறிப்பிட்ட நிறைவேற்ற நிவாரணத்தை கோரினார். மேற்கண்ட வழக்கு நிலுவையில் இருந்தபோது, எதிர்வாதி எண் 1, பிரதிவாதி எண். 2 (இனி 'எதிர்வாதி எண் 2' என அழைக்கப் படுகிறது)க்கு ஆதரவாக 26.11.2015 அன்று ஒரு விற்பனை பத்திரத்தை நிறைவேற்றினார். O.S. எண். 110/2015 என்ற சிவில் வழக்கில், இரு பிரதிவாதிகளும் தங்கள் எழுத்துப்பூர்வ அறிக்கையை தாக்கல் செய்தனர்; இருப்பினும், பின்னர், அவர்கள் வழக்கில் ஆஜராகுவதை நிறுத்தி விட்டனர். அத்தகைய சூழ்நிலையில், பிரதிவாதிகள் 07.02.2017 அன்று இல்லா நிலையில் ஒருதலைப்பட்சமாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணை நீதிமன்றம் இறுதியாக 07.02.2017 அன்று பிரதிவாதிகள் இல்லாநிலை தீர்ப்பை பிறப்பித்தது. அதன் பின்னர் மேல்முறையீட்டாளர் ஒரு நிறைவேற்று மனுவை அதாவது உ.க. எண். 10/2017-ஐ தாக்கல் செய்தார். நிறைவேற்று நடவடிக்கை களின் காரணமாக, விற்பனை பத்திரமும்

மேல்முறையீட்டாளருக்கு ஆதரவாக நிறைவேற்றப் பட்டது.

5. எதிர்வாதி எண். 1 மற்றும் எதிர்வாதி எண். 2, உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு IX, விதி 13-இன் கீழ் இரண்டு தனித்தனி மனுக் களை, அதாவது I.A. எண். 119/2015 மற்றும் I.A. எண். 462/2018-ஐ தாக்கல் செய்தனர். அத்துடன், முறையே 712 மற்றும் 467 நாட்கள் தாமதத்தை மன்னிப்பதற்கான மனுக்களை யும் தாக்கல் செய்தனர். விசாரணை நீதிமன்றம் 19.08.2019 தேதியிட்ட உத்தரவின் மூலம் I.A. எண். 462/2018 மற்றும் I.A.எண் 119/ 2018 ஆகிய இரு மனுக்களையும் ஏற்றுக் கொண்டது. ஒருதலைப்பட்ச தீர்ப்பு உத்தரவை ரத்து செய்தது மற்றும் தாமதத்தை மன்னித்து விட்டது.

6. மேல்முறையீட்டாளர், CRP(MD) எண் 1688 மற்றும் 1689/2019-ஐ தாக்கல் செய்து உயர்நீதிமன்றத்தில் ஒரு திருத்த மனுவை தாக்கல் செய்தார். அது 09.11.2021 தேதியிட்ட உத்தரவின் மூலம் உயர்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. உயர்நீதிமன்றத்தின் 09.11.2021 தேதியிட்ட உத்தரவால் பாதிக்கப் பட்ட எதிர்வாதிகள், சிறப்பு விடுப்பு மனு (இ) எண். 2054-55/2022-ஐ தாக்கல் செய்தனர். இந்த நீதிமன்றம் 25.02.2022 தேதியிட்ட உத்தரவின் மூலம் அந்த சிறப்பு விடுப்பு மனுக்களை தள்ளுபடி செய்தது. இதன் பொருள் என்ன வென்றால், பிரதிவாதி இல்லா நிலை தீர்ப்பு மற்றும் ஆணை இந்த நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டது.

7. 25.02.2022 தேதியிட்ட உத்தரவின் மூலம் சிறப்பு அனுமதி கோரிய மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டதன் காரணமாக, வழக்கில் இறுதி முடிவு எட்டிய பின்னர், எதிர் வாதிகள் ஒருதலைப்பட்ச தீர்ப்பு மற்றும் ஆணைக்கு எதிராக மேல்முறையீடு செய்து இரண்டாவது கட்ட வழக்கை தொடங்கினர். அந்த மேல்முறையீடு காலவரையறையை மீறியதால், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் சி.பி.சி-இன் பிரிவு XLI விதி 3A மற்றும் பிரிவு 151-இன் கீழ் மேல்முறையீடு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 1116 நாட்கள் தாமதத்தை மன்னிக்குமாறு கோரி ஒரு மனுவும் தாக்கல் செய்யப்பட்டது. முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் 08.02.2023 தேதியிட்ட உத்தரவின் மூலம் எண்ணிடப்படாத அ.கு. எண்_______/ 2022-ல் உள்ள I.A. எண் 1/2022-ஐ தள்ளுபடி செய்தது. அந்த மனு 1116 நாட்கள் தாமதத்தை மன்னிப்பதற்கானது. முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் 08.02.2023 அன்று பிறப்பித்த உத்தரவால் பாதிக்கப்பட்ட எதிர்வாதிகள், C.R.P.(MD) எண் 1113/2023 என்ற திருத்த மனுவை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். உயர்நீதிமன்றம், இரு தரப்பினரின் வாதங்களையும் கேட்ட பிறகு, 25.04.2023 தேதியிட்ட தாக்கீடான உத்தரவின் மூலம் 08.02.2023 தேதியிட்ட உத்தரவை ஒரு லட்சம் ரூபாய் செலவுத் தொகையை செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் ரத்து செய்தது. இதன் பொருள், 1116 நாட்கள் தாமதம் உயர்நீதிமன்றத்தால் மன்னிக்கப் பட்டது. உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் செயல்பாட்டுப் பகுதி பின்வருமாறு:

‘19. மனுதாரர்களால் எதிர்வாதிக்கு ஏற்பட்ட சிரமங்கள் மற்றும் எதிர்வாதி மீதமுள்ள விற்பனைத் தொகையை செலுத்தியதுடன், முத்திரைத் தாள் கட்டணத்துடன் மீதமுள்ள தொகையையும் முதலீடு செய்துள்ளதைக் கருத்தில் கொண்டு, மனுதாரர்கள் எதிர்வாதிக்கு ஒரு லட்சம் ரூபாய் தொகையை செலுத்த உத்தர விடுவதன் மூலம் மனுதாரர்களுக்கு ஆதரவாக தலையிட நான் விரும்புகிறேன். இந்தத் தொகை 07.06.2023 அன்று அல்லது அதற்கு முன் நேரடியாக எதிர்வாதிக்கு செலுத்தப்பட வேண்டும். இந்த பணம் செலுத்தப்பட்டால், இராமநாதபுரம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் தாமதத்தை மன்னிக்க கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட I.A. எண் 1/2022 ஏற்றுக் கொள்ளப்படும். மரியாதைக்குரிய இராமநாத புரம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, மேல்முறையீட்டுக்கு எண் அளித்து, சட்டத்தின் படி, முடிந்தவரை விரைவாக, முன்னுரிமையாக ஒன்பது மாதங்களுக்குள் தகுதியின் அடிப்படை யில் அதைத் தீர்த்து வைக்க வேண்டும்.

மனுதாரர்கள் இராமநாதபுரம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி முன் ஒரு பொருத்தமான குறிப்பாணையை தாக்கல் செய்து, உத்தரவு நிறைவேற்றப்பட்டதை தெரிவிக்க வேண்டும்.'

8. உயர்நீதிமன்றத்தால் 25.04.2023 அன்று சிவில் திருத்த மனுவை அனுமதித்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர்/வாதி இந்த தற்போதைய மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

மேல்முறையீட்டாளர்/வாதியின் சமர்ப்பிப்புகள்

9. மேல்முறையீட்டாளர் தரப்பு வழக்கறிஞர், சி.பி.சி–இன் பிரிவு IX விதி 13–இன் கீழ் தாமதத்தை மன்னிக்க கோரி, 1963–ஆம் ஆண்டு காலவரையறைச் சட்டத்தின் பிரிவு 5–இன் கீழ் மனு தாக்கல் செய்தபோது ஏற்பட்ட தாமதத்திற்கு தெளிவான விளக்கம் இல்லை என்று வாதிட்டார். மேலும், சி.பி.சி–இன் பிரிவு 96(2) மற்றும் பிரிவு XLI விதி 1–இன் கீழ் மேல்முறையீடு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட தாமதம் மட்டுமே 1963–ஆம் ஆண்டு கால வரையறைச் சட்டத்தின் பிரிவு 14–இன் கோட்பாட்டின்படி விலக்கப்பட முடியும் என்பதை உயர்நீதிமன்றம் உணரத் தவறிவிட்டது. ஏற்கனவே ஒருதலைப்பட்சமாக அறிவிக்கப்பட்ட பிறகு ஏற்பட்ட 467 மற்றும் 712 நாட்கள் தாமதம் திருப்தியற்றது என்று உயர்நீதிமன்றம் அதன் முந்தைய C.R.P (MD) எண் 1688 மற்றும் 1689/2019இல், 09.11.2021 தேதியிட்ட உத்தரவின் மூலம் தீர்ப்பளித்தது. இது எதிர் வாதிகள்/பிரதிவாதிகளின் சிறப்பு அனுமதி கோரும் மனு எண் 2054 மற்றும் 2055/ 2022–ஐ இந்த மாண்புமிகு நீதிமன்றம் தள்ளுபடி செய்தபோது உறுதி செய்யப்பட்டது. ஏற்கனவே உள்ள நடவடிக்கைகளில் இறுதி முடிவு எட்டிய அதே கேள்வியை எதிர்வாதிகள் மீண்டும் எழுப்ப முடியாது என்றும் வாதிடப் பட்டது.

10. மேலும், இந்த வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் என்.மோகன் –எ– ஆர்.மது (2020) 20 குஇஇ 302 என்ற தீர்ப்பை உயர் நீதிமன்றம் தவறாகப் பயன்படுத்தியதாக வாதிடப் பட்டது. அந்த வழக்கில், எதிர்வாதிகளுக்கு வழக்கு அழைப்பாணை ஒருபோதும் வழங்கப்பட வில்லை. ஆனால் இந்த வழக்கில், எதிர் வாதிகள்/பிரதிவாதிகளுக்கு முறையாக வழக்கு அழைப்பாணை வழங்கப்பட்டது. அவர்கள் ஆஜராகி வழக்கறிஞர் நியமனப் பத்திரத்தையும், தங்கள் எழுத்துப்பூர்வ அறிக்கையையும் தாக்கல் செய்தனர். மேலும், என்.மோகன் வழக்கில் (மேற்கூறியது), சி.பி.சி–இன் பிரிவு 96(2)–இன் கீழ் ஒருதலைப்பட்ச தீர்ப்புக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டின் செல்லுபடித் தன்மை குறித்த பிரச்சனை விவாதிக்கப்பட்டது. ஒருதலைப்பட்ச தீர்ப்புக்கு எதிராக சி.பி.சி–இன் பிரிவு 96(2)–இன் கீழ் மேல்முறையீடு செய்ய முடியும் என்பதால், அது இந்த மேல்முறை யீட்டாளர்/வாதியால் மறுக்கப்படவில்லை. எந்த ஒரு சரியான விளக்கமும் இல்லாமல் 1116 நாட்கள் என்ற மிகப்பெரிய தாமதத்தை மன்னிக்க முடியுமா என்பதே கேள்வி.

11. அதைத் தவிர, மேற்கூறிய வழக்கில் நீதிமன்றம் பின்பற்றப்பட வேண்டிய எந்த ஒரு நியதியையும் வகுக்கவில்லை என்று வாதிடப் பட்டது. மேலும், நீதிமன்றம் கட்சிகளின் நேர்மை யான நடத்தையை (அதில் உள்ள பிரதிவாதிகள்) கருத்தில் கொண்டு தாமதத்தை மன்னித்துள்ளது. மேலும் அந்த உத்தரவு எந்த சட்டக் கோட்பாட்டின் அடிப்படையிலும் இல்லை என்றும் வாதிடப் பட்டது. மேலும், எதிர்வாதிகள்/பிரதிவாதிகள் சரியான நேரத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யாமல் அலட்சியமாக இருந்ததாலும், தாமதம் சரியாக விளக்கப்படாததாலும், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவில் உயர் நீதிமன்றம் தலையிட்டிருக்கக் கூடாது என்றும் வாதிடப்பட்டது.

12. மேலும், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவு நன்கு நியாயப்படுத்தப் பட்டுள்ளது என்றும், அதில் தலையிடத் தேவை யில்லை என்றும் வாதிடப்பட்டது. மேலும், தாமதத்தை மன்னிக்குமாறு கோரி சி.பி.சி–இன் பிரிவு IX, விதி 13–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு, 7.2.2017 தேதியிட்ட ஒருதலைப்பட்ச தீர்ப்புக்கு எதிராக சி.பி.சி–இன் பிரிவு 96(2)–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு செல்லுபடியாகும்

என்றாலும், அந்த மேல்முறையீட்டை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 1116 நாட்கள் என்ற மிகப்பெரிய தாமதத்தை சரியான விளக்கங்கள் இல்லாமல் மன்னிக்க முடியாது.

13. மேலும், எதிர்வாதிகள்/பிரதிவாதிகளின் நடத்தையை உயர் நீதிமன்றம் உணரத் தவறிவிட்டது என்றும் வாதிடப்பட்டது. தாமதத்தை மன்னிக்குமாறு கோரி சி.பி.சி–இன் பிரிவு ஐஙீ, விதி 13–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவை தொடர்ந்து, ஒருதலைப்பட்ச தீர்ப்புக்கு எதிராக சி.பி.சி–இன் பிரிவு 96(2)–இன் கீழ் மேல்முறையீடு தாக்கல் செய்ய அவர்களுக்கு எந்த தடையும் இல்லை. எனவே, எந்த வகையிலும், தாக்கீடான தீர்ப்பு தவறானது, கோணலானது மற்றும் தலையீட்டை கோருகிறது; இந்த மாண்புமிகு நீதிமன்றத்தால் அது ரத்து செய்யப்பட வேண்டும்.

எதிர்வாதிகள்/பிரதிவாதிகளால் சமர்ப்பிக்கப் பட்ட வாதங்கள்.

14. எதிர்வாதிகள்/பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர், எதிர்வாதி எண். 1/பிரதிவாதி எண். 1 மற்றும் எதிர்வாதி எண். 2/பிரதிவாதி எண். 2 ஆகியோர் விசாரணை நீதிமன்றத்தில் ஆஜராகாதது வேண்டுமென்றே அல்லது நியாயமற்ற முறையில் செய்யப்படவில்லை என்று உறுதியாக வாதிட்டார்.

15. அந்த மனுவை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட தாமதத்திற்கு எதிர்வாதிகள் ஒரு ஏற்கத்தக்க விளக்கத்தை அளித்துள்ளனர் என்றும், அந்த விளக்கத்தை உயர்நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது என்றும், அதன்பிறகு 25.04.2023 தேதியிட்ட தாக்கீடான உத்தரவை எதிர்வாதிகளுக்கு ஆதரவாக பிறப்பித்தது என்றும் வாதிடப்பட்டது.

16. மேலும், 25.04.2023 தேதியிட்ட தாக்கீடான உத்தரவை பிறப்பிக்கும்போது, உயர் நீதிமன்றம் என்.மோகன் (மேற்கூறியது) தீர்ப்பை சரியாக நம்பியுள்ளது என்றும், அது இந்த வழக்கிற்கு முற்றிலும் பொருந்தும் என்றும் வாதிடப்பட்டது. உயர்நீதிமன்றம், அதன் நீதித்துறை ஞானத்தில், இந்த வழக்கில் உள்ள உண்மைகளும் சூழ்நிலைகளும் மேற்கண்ட தீர்ப்பிற்கு ஒத்தவை என்ற கருதப்பட்ட கருத்தை கொண்டிருந்தது.

17. மேலும், எதிர்வாதிகள் தரப்பு வழக்கறிஞர், சி.பி.சி–இன் பிரிவு IX, விதி 13–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவும், சி.பி.சி–இன் பிரிவு 41, விதி 3(அ)–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவும் வெவ்வேறு அடிப்படைகளில் நிற்கின்றன என்பது சாதாரணமாக அறிந்த சட்டம் என்று வாதிட்டார். மேலும், இதே போன்ற ஒரு வழக்கில், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பானு குமார் ஜெயின் –எ– அர்ச்சனா குமார் (2005) 1 SCC 787–ல் பின்வருமாறு ஒரு தீர்ப்பை அளித்துள்ளது:

‘இந்த முரண்பாடு பின்வருமாறு தீர்க்கப் படலாம் என நாங்கள் கருதுகிறோம்: ஒருபுறம், ஒரு பிரதிவாதி, விசாரணை நீதிமன்றத்தால் வழக்கு ஆஜராகாத நிலை விசாரணைக்கு பட்டியலிடப்பட்ட உத்தரவின் சரியான தன்மை அல்லது அதன் காரணம் குறித்து மற்றும்/அல்லது அவனுக்கு ஆஜராகாததற்கு போதுமான காரணம் உள்ளதா என்பது குறித்து ஒரு வாதத்தை எழுப்ப அனுமதிக்கப்பட மாட்டார்; மறுபுறம், அவர் தாக்கல் செய்த முதல் மேல்முறையீட்டில், அதாவது சட்டத்தின் பிரிவு 96(2)–இன் கீழ், வழக்கின் தகுதிகள் குறித்து வாதிட அவருக்கு வாய்ப்பு உண்டு, இதனால் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அவனுக்கு ஆதரவாக ஒரு ஆணை பிறப்பிக்க போதுமானதாக இல்லை அல்லது வழக்கு வேறு வகையில் பராமரிக்கத்தக்கது அல்ல என்று வாதிடலாம். நீதிமன்றத்தின் அதிகார வரம்பின்மை என்பதும் அத்தகைய மேல்முறையீட்டில் ஒரு சாத்தியமான வாதமாக இருக்கலாம். இருப்பினும், திரு. சௌதரியுடன் நாங்கள் உடன்படுகிறோம், அதாவது, ராணி சௌத்ரி [(1982) 2 SCC 596], பி. கிரண் குமார் [(2002) 5 SCC 161] மற்றும் ஷ்யாம் சுந்தர் சர்மா –எ– பன்னலால் ஜெய்ஸ்வால் [(2005) 1 SCC 436 : (2004) 9 Scale 270] ஆகிய வழக்குகளில் இந்த நீதிமன்றம் கூறியபடி, சட்டத்தின் பிரிவு 9,

விதி 13-இன் இணைப்பில் உள்ள ''விளக்கம்'' கண்டிப்பான முறையில் விளக்கப்பட வேண்டும்.

எனவே, மேற்கண்ட தீர்ப்பில் வகுக்கப்பட்ட நியதியின் வெளிச்சத்தில், எதிர்வாதிகள் மாண்புமிகு இராமநாதபுரம் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி முன் முதல் மேல்முறையீட்டை தாக்கல் செய்ய உரிமை உண்டு என்றும், சி.பி.சி-இன் பிரிவு IX, விதி 13-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட அவர்களின் முந்தைய மனு தள்ளுபடி செய்யப்பட்டதால் எந்த தடையும் இல்லை என்பதும் தெளிவாகிறது.

18. மேலும், தாமதத்தை மன்னிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவில் ஏற்பட்ட 1116 நாட்கள் தாமதம் குறித்து, வழக்கறிஞர் காலவரையறைச் சட்டத்தின் பிரிவு 14-ஐ குறிப்பிட்டு வாதிட்டார். இந்த வழக்கில், எதிர் வாதிகள் சி.பி.சி-இன் பிரிவு IX, விதி 13-இன் கீழ் தங்கள் சட்ட உரிமைகளை தீர்ந்துவிட்ட பிறகு, வழக்கறிஞரின் ஆலோசனைப்படி, விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இறுதி ஆணை மற்றும் தீர்ப்புக்கு எதிராக முதல் மேல்முறையீட்டை தாக்கல் செய்ய தங்கள் சட்ட உரிமையை பயன்படுத்த முடிவு செய்தனர். சி.பி.சி-இன் பிரிவு IX, விதி 13-இன் கீழ் மனு நிலுவையில் இருந்த காலத்தில் மற்றும் பல்வேறு நீதித்துறை மன்றங்களில் திருத்த மனுக்கள் நிலுவையில் இருந்த காலத்தில் செலவிடப்பட்ட நேரத்தை கண்டிப்பாக விலக்க வேண்டும். காலவரையறைச் சட்டத்தின் பிரிவு 14-ஐ வெறுமனே படித்தாலே, சி.பி.சி-இன் பிரிவு IX, விதி 13-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு நிலுவையில் இருந்த காலத்தில் செலவிடப் பட்ட நேரத்தை, முதல் மேல்முறையீட்டை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட தாமதத்தை மன்னிப்பதற்காக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தீர்ப்பளிக்கும் அதிகாரிகளுக்கு கட்டளையிடுகிறது. எனவே, உயர்நீதிமன்றம் அந்த விதியை சரியாக குறிப்பிட்டு விவாதித்து, 25.04.2023 தேதியிட்ட தாக்கீடான உத்தரவை எதிர்வாதிகளுக்கு ஆதரவாக பிறப்பித்தது.

19. மேலும், உயர் நீதிமன்றம் தாக்கீடான உத்தரவின் மூலம் எதிர்வாதிகள் மேல்முறை யீட்டாளருக்கு ரூ.1 லட்சம் தொகையை செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டது. அதன்படி, எதிர்வாதிகள் மேல்முறையீட்டாளருக்கு ரூ. 1 லட்சம் தொகையை செலுத்தினர், ஆனால் அவர் அதை பெற மறுத்துவிட்டார். எனவே, எதிர்வாதிகள் அந்த தொகையை 05.06.2023 அன்று நீதிமன்றத்தில் வைப்பீடு செய்தனர், இதன் மூலம் உயர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு இணங்கினர். எதிர்வாதிகளின் இந்த நடத்தை அவர்களின் நேர்மையான நற்பண்புகளை நிரூபிக்கிறது.

20. பிரதிவாதி எண். 2, துணைப் பதிவாளர் அலுவலகத்தில் பிரதிவாதி எண். 1-ஆல் பிரதிவாதி எண் 2-க்கு ஆதரவாக 26.11.2015 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட விற்பனை பத்திரத்தின் மூலம் வழக்கு அட்டவணைச் சொத்து தொடர்பாக ஒரு நேர்மையான வாங்கு பவராக செல்லுபடியாகும் உரிமை வைத்தி ருப்பதாக வாதிடப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை, பிரதிவாதி எண் 2 சர்ச்சைக்குரிய சொத்தின் சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் உள்ளார்.

21. மேலும், எதிர்வாதிகள் செல்லுபடியாகும் உரிமை வைத்திருப்பதாலும், வழக்கு அட்டவணைச் சொத்தின் சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் இருப்பதாலும், சமநிலை அவர் களின் பக்கமே உள்ளது என்று வாதிடப்பட்டது.

22. மேலும், இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டால், எதிர்வாதிகளுக்கு ஈடு செய்ய முடியாத சேதம், இழப்பு மற்றும் இன்னல்கள் ஏற்படும் என்று வழக்கறிஞர் வாதிட்டார். அதேநேரத்தில், இந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டால், மேல்முறையீட்டாளருக்கு எந்த இழப்பும் அல்லது இன்னல்களும் ஏற்படாது.

**விவாதம் மற்றும் பகுப்பாய்வு**

23. நாங்கள் சமர்ப்பிப்புகளை கவனமாக பரிசீலித்து, தாக்கீடான தீர்ப்பு மற்றும் பதிவில் உள்ள ஆவணங்களை ஆய்வு செய்தோம். பரிசீலனைக்குரிய முக்கிய புள்ளி, தாமதத்தை மன்னிக்க வேண்டுமா இல்லையா என்பது தான், மேலும் தாமதம் நியாயப்படுத்தக்கூடிய தாக இருந்தால், வழக்கு தகுதியின் அடிப்படை யில் தொடர அனுமதிக்கப்பட வேண்டுமா

அல்லது நடைமுறை காரணங்களுக்காக தள்ளுபடி செய்யப்பட வேண்டுமா என்பதுதான்.

24. இந்த வழக்கில் உள்ள உண்மைகள் சர்ச்சைக்குரியவை அல்ல. முதல் கட்ட வழக்கில், எதிர்வாதிகள் மேற்கண்ட வழக்கில் விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச ஆணையை ரத்து செய்ய முடியவில்லை, எனவே அவர்கள் 1116 நாட்கள் தாமதத்தை மன்னிக்குமாறு கோரி மனுவுடன் மேல்முறையீடு தாக்கல் செய்தனர். 1116 நாட்கள் தாமதத்தை மன்னிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட அந்த மனு 08.02.2023 தேதியிட்ட உத்தரவின் மூலம் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. இருப்பினும், உயர் நீதிமன்றம், 25.04.2023 தேதியிட்ட தாக்கீடான உத்தரவை பிறப்பிக்கும்போது, இந்த நீதிமன்றம் என்.மோகன் (மேற்கூறியது) வழக்கில் அளித்த தீர்ப்பை நம்பி, 1116 நாட்கள் தாமதத்தை மன்னிக்குமாறு கோரிய மனுவை அனுமதித்தது. மேலும் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் மேல்முறையீட்டு வழக்கை தகுதியின் அடிப்படை யில் தொடர வேண்டும் என்று உத்தரவிட்டது.

25. இந்த வழக்கில், பதிவை ஆய்வு செய்த தில், முதல் கட்ட வழக்கில், மேற்கண்ட வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு எதிர்வாதிகளுக்கு அழைப்பாணை முறையாக வழங்கப்பட்டது என்று அறியலாம். அதற்கு பதிலளித்து, அவர்கள் ஆஜராகி தங்கள் எழுத்துப்பூர்வ அறிக்கையை தாக்கல் செய்தனர், இதன் மூலம் விசாரணை நீதிமன்றத்தின் அதிகார வரம்புக்கு தங்களை உட்படுத்திக் கொண்டனர். இருப்பினும், நடவடிக்கைகளின் ஆரம்ப கட்டத்தில் ஆஜராக இருந்தபோதிலும், எதிர்வாதிகள் விசாரணை நீதிமன்றத்தில் தொடர்ந்து ஆஜராக வேண்டாம் என்று முடிவு செய்தனர். இதன் விளைவாக, விசாரணை நீதிமன்றம் அவர்களுக்கு எதிராக ஆஜராகாத நிலையில் விசாரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மேலும், தாக்கீடான உத்தரவை பிறப்பிக்கும்போது உயர் நீதிமன்றம் என்.மோகன் (மேற்கூறியது) வழக்கை நம்பி யுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் ஒப்பிடும்போது, அந்த வழக்கின் உண்மைகள் இந்த வழக்கிலிருந்து வேறுபட்டவை. அந்த வழக்கில், எதிர்வாதிகளுக்கு அழைப்பாணை அவர்களின் பழைய முகவரிக்கு அனுப்பப் பட்டது. அது வழங்கப்படாமல் திரும்பியது, அதன் பிறகு ஒருதலைப்பட்ச ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதற்கு முற்றிலும் மாறாக, இந்த வழக்கில் அழைப்பாணை முறையாக வழங்கப்பட்டது. மேலும் எதிர்வாதிகள்/பிரதிவாதிகள் ஆஜராகியது மட்டுமல்லாமல், தங்கள் எழுத்துப் பூர்வ அறிக்கையை தாக்கல் செய்து தீவிரமாக பங்கேற்றனர் என்பதால் இந்த வழக்கு வேறுபட்டது.

26. எனவே, என்.மோகன் (மேற்கூறியது) வழக்கில் உள்ள தீர்ப்பு இந்த வழக்கிற்கு பொருந்தாது. ஆனால் உயர்நீதிமன்றம் மேற் கூறிய தீர்ப்பை நம்பி உண்மைகளை தவறாக மதிப்பிட்டது. இதன் விளைவாக, உயர் நீதிமன்றத்தால் 25.04.2023 அன்று பிறப்பிக்கப்பட்ட தாக்கீடான உத்தரவு தவறானது மற்றும் சட்டக் கோட்பாடுகளுக்கு இணங்க வில்லை. அதன்படி, 25.04.2023 தேதியிட்ட தாக்கீடான உத்தரவு இதன் மூலம் ரத்து செய்யப்படுகிறது.

27. மேல்முறையீட்டு வழக்கை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 1116 நாட்கள் தாமதத்தை மன்னிப்பது குறித்த விஷயத்தில் மேலும் தொடர்வதன் மூலம், நாங்கள் முதல் மேல் முறையீட்டு நீதிமன்றம் 08.02.2023 தேதியிட்ட உத்தரவில் கண்டறிந்த முடிவுகளுடன் உடன்படுகிறோம். அதாவது, எதிர்வாதிகள் இந்த 1116 நாட்கள் தாமதத்தை மன்னிக்குமாறு கோரிய மனுவில், முந்தைய கட்ட வழக்கில் சி.பி.சி–இன் பிரிவு IX, விதி 13–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களில் (I.A. எண். 462/ 2018 மற்றும் 119/2019) எழுப்பப்பட்ட அதே காரணங்களையே மீண்டும் எழுப்பியுள்ளனர்; அதாவது, தாமதம் வேண்டுமென்றே அல்லது நியாயமற்ற முறையில் செய்யப்படவில்லை என்பதுதான். அந்த மனுக்கள் (I.A. எண். 462/ 2018 மற்றும் 119/2019) விசாரணை நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது, ஆனால் சிவில் திருத்த மனுக்கள் (C.R.P. (MD) Gs. 1688 மற்றும் 1689/2019) மூலம் உயர்நீதிமன்றத்தில் சவால் செய்யப்பட்டு, உயர்நீதிமன்றம் விசாரணை

நீதிமன்றத்தின் உத்தரவை ரத்து செய்தது என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. அதன் பிறகு, உயர்நீதிமன்றத்தின் உத்தரவு இந்த நீதிமன்றத்தால் சு.ஃ.க. (இ) எண். 2054 –2055/2022இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது, இதன் மூலம் எதிர்வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட தாமதத்தை மன்னிக்குமாறு கோரிய மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன என்பதும் சர்ச்சைக்குரியது அல்ல.

28. எதிர்வாதிகள், இந்த நீதிமன்றத்தால் S.L.P. (C) எண். 2054 – 2055/2022–இல் ஏற்கனவே தள்ளுபடி செய்யப்பட்ட I.A. எண். 462/2018 மற்றும் 119/2019இல் எழுப்பப் பட்ட அதே காரணங்களையே எண்ணிடப்படாத அ.கு. எண் ______/2022–ல் உள்ள I.A. எண் 1/ 2022–இலும் கூறியதால், 1116 நாட்கள் தாமதத்தை மன்னிக்குமாறு கோரிய மனு நீடிக்க முடியாது. S.L.P. (C) எண். 2054 – 2055/ 2022–இல், இந்த நீதிமன்றம், பதிவில் உள்ள ஆதாரங்களை ஆராய்ந்த பிறகு, தாமதம் சரியாக விளக்கப்படவில்லை என்று சரியாக கூறியுள்ளது. உத்தரவின் பொருத்தமான பகுதி இங்கே மீண்டும் வெளியிடப்படுகிறது:

‘5. உயர்நீதிமன்றம் எடுத்த முடிவை நாங்கள் முழுமையாக ஏற்றுக்கொள்கிறோம். ஒருமுறை விசாரணை நீதிமன்றமே தாமதம் சரியாக விளக்கப்படவில்லை என்றும், தாமதத்தை மன்னிக்குமாறு கோரிய மனுவில் எந்த தகுதியும் இல்லை என்றும் கண்டறிந்த பிறகு, அந்த விஷயத்தை அத்துடன் முடித்து, தாமதத்தை மன்னிக்குமாறு கோரிய மனு தள்ளுபடி செய்யப் பட்டிருக்க வேண்டும். தாமதம் விளக்கப்பட வில்லை. எந்த ஆதாரமும் இல்லை, மனுவில் தகுதியற்றது என்று கண்டறிந்த பின்னரும், தாமதத்தை மன்னிப்பது, தாமதத்தை விளக்கத் தவறிய மற்றும் தாமதத்திற்கு குற்றவாளியான ஒருவருக்கு சலுகை வழங்குவதாகும். இந்த கட்டத்தில், பொபட் பாஹிரு கோவர்த்தனே –எ– நிலம் கையகப்படுத்தும் அலுவலர் (2013) 10 SCC 765 என்ற வழக்கில் இந்த நீதிமன்றத்தின் முடிவை குறிப்பிட வேண்டியது அவசியம். அந்த முடிவில், காலவரையறைச் சட்டம் ஒரு குறிப்பிட்ட தரப்பினருக்கு கடுமையாக பாதிக்க லாம். ஆனால் சட்டம் அவ்வாறு பரிந்துரைக்கும் போது அதன் அனைத்து கண்டிப்புகளுடனும் அது பயன்படுத்தப்பட வேண்டும் என்று கூறப் பட்டுள்ளது. நீதிமன்றத்திற்கு சமநீதி அடிப்படை யில் காலவரையறை காலத்தை நீட்டிக்க அதிகாரம் இல்லை. சட்டரீதியான விதிமுறை ஒரு குறிப்பிட்ட தரப்பினருக்கு சிரமத்தை அல்லது அசௌகரியத்தை ஏற்படுத்தலாம். ஆனால் அதை முழுமையாக நடைமுறைப்படுத்த நீதிமன்றத்திற்கு வேறு வழியில்லை.

5.1 மணிபென் தேவராஜ் ஷா –எ– பிரிஹன் மும்பை மாநகராட்சி (2012) 5 SCC 157 என்ற வழக்கில், பத்தி 14–இல் பின்வருமாறு கூறப் பட்டுள்ளது:

‘காலவரையறை சட்டம் பொதுக் கொள்கை யின் அடிப்படையில் அமைந்துள்ளது. கால வரையறைச் சட்டம், 1963, தரப்பினரின் உரிமைகளை அழிக்கும் நோக்கத்துடன் இயற்றப் படவில்லை, மாறாக அவர்கள் தங்கள் உரிமை களை நியாயமற்ற தாமதம் இல்லாமல் நீதிமன்றத்தை அணுகி நிலைநிறுத்துவதை உறுதி செய்வதற்காக இயற்றப்பட்டது. கால வரையறை என்ற கருத்துக்கு பின்னால் உள்ள நோக்கம் என்னவென்றால், ஒவ்வொரு நிவாரணமும் சட்டமியற்றுபவரால் நிர்ணயிக்கப் பட்ட காலம் முடியும் வரை மட்டுமே உயிர்ப்புடன் இருக்க வேண்டும். அதேநேரத்தில், விண்ணப்ப தாரர் பரிந்துரைக்கப்பட்ட காலவரையறைக்குள் நிவாரணத்தைப் பெறாததற்கு போதுமான காரணத்தை காட்டினால், தாமதத்தை மன்னிக்க நீதிமன்றங்களுக்கு அதிகாரம் உண்டு.’

மேலே உள்ளவற்றின் அடிப்படையில் மற்றும் மேற்கண்ட காரணங்களுக்காக, உயர் நீதிமன்றம் எடுத்த முடிவை நாங்கள் முழுமை யாக ஏற்றுக்கொள்கிறோம். சிறப்பு விடுப்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. நிலுவையில் உள்ள மனுக்கள் ஏதேனும் இருந்தால், அவையும் முடித்து வைக்கப்படு கின்றன.’

29. எனவே, இந்த நீதிமன்றம் I.A. எண். 462/2018 மற்றும் 119/2019 இல் தாக்கல் செய்யப்பட்ட தாமதத்தை மன்னிக்குமாறு கோரிய மனுவை ஏற்கனவே விசாரித்து,

பதிவில் உள்ள ஆதாரங்கள் மற்றும் ஆவணங்களை முழுமையாக ஆய்வு செய்த பின்னர், S.L.P. (C) எண். 2054 - 2055/2022இல் நியாயமான உத்தரவை பிறப்பித்துள்ளது. அதில், முன்வைக்கப்பட்ட காரணங்கள், 1963ஆம் ஆண்டு காலவரையறைச் சட்டத்தின் பிரிவு 5-இன் கீழ் போதுமான காரணம்' என்பதை நிரூபிக்க போதுமானதாக இல்லை என்று தீர்ப்பளித்தது. நீதித்துறை பரிசீலனையின் பேரில் ஒரு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு, பொருத்தமான மேல்முறையீட்டு அல்லது மறுஆய்வு வழிமுறைகள் மூலம் ரத்து செய்யப்படாவிட்டால், இறுதி நிலையை அடைகிறது.

30. இந்த மேல்முறையீட்டில், எதிர்வாதிகள், ஏற்கனவே விவாதிக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்ட காரணங்களிலிருந்து தற்போதைய காரணத்தை வேறுபடுத்திக் காட்ட எந்த புதிய அல்லது கூடுதல் ஆவணங்களையும் வைக்காமல், ஏற்கனவே முன்வைக்கப்பட்ட அதே காரணங்களையே தாமதத்தை மன்னிக்க கோரி மீண்டும் எழுப்ப முயல்கின்றனர். ஏற்கனவே ஆராயப்பட்டு ஏற்கத்தக்கதல்ல என்று கருதப்பட்ட காரணங்களை மீண்டும் கூறுவது சட்ட நடைமுறையை தவறாகப் பயன்படுத்துவதற்கு சமம் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. தாமதத்தை மன்னிக்குமாறு கோரிய மனுக்கள் சட்டத்தின் வெவ்வேறு விதிகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்டாலும், அந்த விதிகள் வெவ்வேறு வழிமுறைகள் மூலம் இணக்கமான நிவாரணங்களை வழங்குகின்றன. ஒரு விதியின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஒரு தகுதி வாய்ந்த நீதிமன்றம், அதன் நீதித்துறை மனதை பயன்படுத்தி, தாமதத்திற்கான காரணங்கள் போதுமானதாக இல்லை என்று கூறி ஏற்கனவே தள்ளுபடி செய்திருந்தால், அதே வாதங்கள் அல்லது தாமதத்திற்கான காரணங்களை மீண்டும் வலியுறுத்தி, மற்றொரு விதியின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட ஒரு அடுத்தடுத்த மனுவை ஏற்க முடியாது.

31. தாமதத்தை மன்னிக்குமாறு கோரும் வாதத்தை பரிசீலிக்கும்போது, நீதிமன்றத்தின் முதல் மற்றும் தலையாய கடமை, முக்கிய விஷயத்தின் தகுதிகளை ஆராய்வதற்கு பதிலாக, தாமதத்தை கோரும் தரப்பினரால் வழங்கப்பட்ட விளக்கத்தின் நேர்மையை முதலில் உறுதிப்படுத்துவது என்பது நன்கு நிலைநிறுத்தப்பட்ட சட்டம். தாமதத்திற்கான போதுமான காரணம் அல்லது காரணங்கள் வழக்கு தொடுப்பவரால் கொடுக்கப்பட்டு, மற்ற தரப்பினரின் எதிர்ப்பு சமமாக அல்லது சம நிலையில் இருக்கும்போது மட்டுமே, நீதிமன்றம் தாமதத்தை மன்னிக்கும் நோக்கத்திற்காக முக்கிய விஷயத்தின் தகுதிகளை பரிசீலிக்கலாம்.

32. மேலும், தாமதம் ஒரு தாராள மனப்பான்மையின் செயலாக மட்டுமே மன்னிக்கப்படக்கூடாது என்று இந்த நீதிமன்றம் பல வழக்குகளில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி யுள்ளது. உண்மையான நீதியை நாடும் செயல், எதிர் தரப்பினருக்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்கு ஈடாக இருக்கக்கூடாது. இந்த வழக்கில், எதிர்வாதிகள்/பிரதிவாதிகள், இந்த விஷயத்தை தொடர்ந்து நடத்துவதில் தாமதத்திற்கான நியாயமான காரணங்களை நிரூபிக்கத் தவறிவிட்டனர், மேலும் தாமதத்தை மன்னிப்பதற்கான இந்த முக்கியமான தேவை பூர்த்தி செய்யப்படவில்லை.

33. எனவே, இந்த வழக்கில், தாமதத்தை மன்னிப்பதற்காக தாக்கல் செய்யப்பட்ட மனுவில் வழங்கப்பட்ட காரணங்கள் போதுமானதாக இல்லை என்பது நிறுவப்பட்டதால், 1963-ஆம் ஆண்டு காலவரையறைச் சட்டத்தின் பிரிவு 14 தொடர்பாக எதிர்வாதிகள் தரப்பு வழக்கறிஞர் எழுப்பிய வாதங்களின் தகுதிகளுக்குள் செல்ல நாங்கள் விரும்பவில்லை.

34. மேற்கண்ட உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின் அடிப்படையில், உயர்நீதிமன்றத்தால் 25.04.2023 அன்று பிறப்பிக்கப்பட்ட தாக்கீடான உத்தரவு ரத்து செய்யப்பட வேண்டும் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது, அதன்படி அது ரத்து செய்யப் படுகிறது.

35. இந்த மேல்முறையீடு அனுமதிக்கப் படுகிறது.

36. நிலுவையில் உள்ள மனுக்கள் ஏதேனும் இருந்தால், அவை முடித்து வைக்கப்படுகின்றன.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

# இருதரப்பினரும் முன்னிலையாகி நிபந்தனைகளை ஏற்கையில், ஆவணப்பதிவை பதிவு அலுவலர் மறுக்கக் கூடாது

**இந்திய உச்சநீதிமன்றம்**
**முன்னிலை : நீதிபதி அப்பே எஸ்.ஒகா**
**நீதிபதி உசால் புயான்**
**உ.மே. எண் 3954/2025**
**(2025 INSC 462)**
**7.4.2025**

**கே.கோபி, ...மேல்முறையீட்டாளர்**

**-எதிர்-**

**துணைப் பதிவாளர் மற்றும் பிறர் ...எதிர்வழக்கீட்டாளர்கள்**

குவாராதுவேயின்
மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர்

பி.எஸ்.ராமன், அரசு வழக்குரைஞர் தலைவர், சபரீஷ் சுப்பிரமணி
எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர்

உ.மே.அனுமதிக்கப்பட்டது.

## தீர்ப்பு

**நீதிபதி அப்போ எஸ்.ஓகா**

**பொருண்மை பற்றியவை**

1. இதில் மேல்முறையீடு, எதிர்க்கப்பட்ட தீர்ப்பு 20 மார்ச் 2024 தேதியிடப்பட்டது. சென்னை உயர்நீதிமன்ற நீதியர் ஆயத்தினால் பிறப்பிக்கப்பட்டது. இது ஒரு விதிவிலக்காக உள்ளது. 2022 செப்டம்பர் 2 அன்று, ஒரு விற்பனை ஆவணம், நிறைவேற்றப்பட்டது. ஜெயராம் முதலியார் என்பவரால் மேல் முறையீட்டாளர் சார்பாக இதில் குறிப்பிடப்பட்ட ஒரு சொத்து தொடர்பாக துணைப் பதிவாளர், அந்த விற்பனை ஆவணத்தைப் பதிவு செய்ய மறுத்துள்ளார். மேல்முறையீட்டாளர் ஒரு நீதிப்பேராணை மனுவினை முன்னிட்டுள்ளார். அதாவது பதிவு செய்ய மறுத்ததை எதிர்த்து, எனினும், நீதிப்பேராணை மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் பின்னர் மேல்முறை யீட்டாளர் மேல்முறையீடு ஒன்றினை மாவட்டப் பதிவாளருக்கு செய்துள்ளார். அதாவது துணைப் பதிவாளர், விற்பனை ஆவணத்தை பதிவு செய்ய மறுத்த ஆணைக்கெதிராக 2023 செப்டம்பர் 4 தேதியிட்ட ஆணைமூலமாக, மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது மற்றும் மாவட்டப் பதிவாளர் துணைப் பதிவாளரை தனது முடிவை மறு கருதுகை செய்யுமாறு பணித்து ள்ளார். 2023 செப்டம்பர் தேதியிடப்பட்ட கடிதம் மூலம் துணைப் பதிவாளர், மேல்முறையீட்டாளரை ஆவணத்தை மீண்டும் பணிந்த ளிக்க பணித்துள்ளார். அத்துடன் விற்பவரின் சொத்தின் உரிமை மூல ஆவணத்துடன் 2023 அக்டோபர் 3 அன்று மேல்முறையீட்டாளர், விற்பனை ஆவணத்தை பதிவு செய்வதற்காக பணிந்தளித்துள்ளார். எனினும், அதே நாளில் பிறப்பிக்கப்பட்ட ஆணை மூலம் பதிவு செய்ய மறுக்கப்பட்டது. மறுப்பு ஆணைக்கெதிராக நீதிப்பேராணை மனு முன்னிடப்பட்டது. நீதிப் பேராணை மனு மறுக்கப்பட்டது. மீண்டும் மறுப்பு ஆணைக்கெதிராக நீதிப்பேராணை மேல்முறையீடு முன்னிடப்பட்டது. அதாவது நீதிப்பேராணை மனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து, அது, தனி நீதிபதியினால் எதிர்ப்புக்கு ள்ளாக்கப்பட்ட ஆணை மூலம் தள்ளுபடி செய்யப்பட்டது.

2. நீதிப்பேராணை மேல்முறையீடு, தள்ளுபடி செய்யப்பட்டது. அதாவது எதிர்ப்புக்கு உள்ளாக்கப் பட்ட தீர்ப்பின் மூலம் 1908 பதிவு செய்தல் சட்டத்தின் பதிவு செய்தல் விதி 55(ஆ)இன்படி இது தமிழ்நாடு அரசால் வனையப் பட்டது. துணைப் பதிவாளர், மேல்முறையீட்டாள ரான

விற்பவர் அவரது உரிமை மூல பாத்தியதை யினை மெய்ப்பிக்காதபோது, அவர் பதிவு என்பது இதன் தொடர்புற்ற பகுதி அதாவது எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட தீர்ப்பு பின்வருமாறு படிக்கப்படுகிறது.

2. மனுதாரர் விற்பனை ஆவணத்தை பதிவு செய்வதற்காக 1908 பதிவு செய்தல் சட்டத்தின் படி அதனை முன்னிட்டுள்ளார். இதில் துணைப் பதிவாளர் மனுதாரர் தனது உரிமை மூல பாத்தியதையினையும் தனக்கு சொந்த மானது அது என்பதையும் மெய்ப்பிக்காத காரணத்தி னால் அந்த ஆவணத்தை பதிவு செய்ய மறுத்துள்ளார். அதாவது பதிவு செய்தல் விதிகளில் 55(அ) விதியின்படி முந்திய காலக் கட்டத்திலும் மனுதாரரால் முன்னிடப்பட்ட மனுவானது நிராகரிக்கப்பட்டுள்ளது. அதற்கான காரணம் அவர் சட்ட வாரிசாக இதனை கோர வேண்டியது. ஏனெனில் மனுதாரர் இதனை பதிவு செய்யப்படாத உரிமை மூலம் உரிமை மூல பாத்தியதையினைக் கோருகிறார். உரிமை மூல பாத்தியதை தொடர்பாக உள்ள ஐயம் எதுவும், தொடர்பாக பதிவு செய்யும் அதிகாரம் அந்த ஆவணத்தை பதிவு செய்ய மறுத்து திருப்பியளிக்க அதிகாரம்பெற்றுள்ளார். அதாவது சட்டத்தின் வகைமுறைகளின்படி, தற்போதைய வழக்கில், மனுதாரர், தனது உய்தியைப் பெற சுதந்திரம் பெற்றுள்ளார். அதாவது சட்டத்தினால் அறியப்பட முறையில் இதில் ஐயம் எழும்போது மற்றும் சட்ட வாரிசுகளாக கோரப்படாதபோது தரப்பினர்கள் உரிமையியல் நீதிமன்றத்தினை அணுக கோரப்படுவர். அதாவது தற்போதைய வழக்கிலும், நீதிப்பேராணை நீதிமன்றம், சரியாகவே அவ்வாறு செய்துள்ளது. எனவே, எதிர்க்கப்பட்ட ஆணை தொடர்பாக எந்தக் குறையும் காணப்படவில்லை.

3. 2024 நவம்பர் 14 தேதியிடப்பட்ட ஆணை மூலம் இந்த நீதிமன்றம், மேல்முறை யீட்டாளரை தற்போதைய மனுவினை திருத்த அனுமதித்துள்ளது. அதாவது மேல்முறையீடு செய்ய சிறப்பு அனுமதிக் கோரி அதாவது விதி 55(B)(i)இன் செல்லுந்தன்மைக்கு எதிராகப் பதிவு செய்யப் படும். மேல்முறையீடு அதன் சிறப்பு அனுமதி தொடர்பாக. அவ்வாறே சிறப்பு அனுமதி மனு திருத்தப்பட்டது. முதல் எதிர் வழக்கீட்டாளர் துணைப் பதிவாளர் எதிர் உறுதி யுரையினை முன்னிட்டுள்ளார். அதாவது மாநில அரசு தொடர்பாக மனுவினைத் திருத்துவதற்கு.

**பணிந்தனுப்புதல்கள்:**

4. மேல்முறையீட்டாளருக்காக முன்னிலை யாகிற வழக்கறிஞர் பணிந்தளிப்பதாவது, துணைப் பதிவாளர், 1908 சட்டத்தின்டி ஆவணம் ஒன்றினைப் பதிவு செய்ய அதிகாரம் கொண்டுள்ளார். அவர் ஒருவரின் உரிமை மூல பாத்தியதை தொடர்பான கேள்விக்கு செய்ய அதிகாரம் கொண்டிருக்க மாட்டார் என்பது. அதாவது ஆவணம் அளிப்பவர்களை நிறை வேற்றுவது தொடர்பாகவும் சொத்து உரிமை மாற்றம் தொடர்பாகவும் கேள்வி கேட்க அதிகாரம் இல்லை. வழக்கறிஞர் பணிந்த னுப்பியது. பதிவு செய்தல் விதிகள், 1908 சட்டத்தின் 69ஆம் பிரிவின்படியான அதிகாரங்களுக்கிணங்க, வனையப்பட்டவை. முதலாவதாக, பிரிவு 69, ஆய்வாளர் தலைவருக்கு விதிகள் வனையும் அதிகாரத்தை வழங்கவில்லை. அதுவும் ஒரு விற்பனை ஆவணத்தை அல்லது உரிமை மாற்று ஆவணத்தை அவர் அவரது உரிமை மூல பாத்தியதையை மெய்ப்பிக்க தவறும் போது, அதனை பதிவு செய்ய மறுக்கும் அதிகாரம் இல்லை. மேலும் இந்தச் சட்டத்திற்கு ஒத்த/இணையான விதிகளை வனையலாம். 1908 சட்டத்தில் எந்த வகைமுறையும் பதிவு செய்ய மறுப்பது பற்றி இல்லை. அதுவும் விற்பவர் அவரது உரிமை மூல பாத்தியதை யினை மெய்ப்பிக்கவில்லை என்பதாக. எனவே விதி 55(அ)(i) 1908 சட்டத்தின் வகைமுறை களுக்கு அப்பாற்பட்டதாக உள்ளது. எனவே விதி 55(B)(i) செல்லத் தக்கதாகாது.

5. தமிழ்நாடு மாநிலத்தின் வழக்குநர் தலைவர், எதிர்வழக்கீட்டாளருக்காக, முன்னிலை யாகி பணிந்தளித்தது. சட்டப்படியான முரண்பாடு பற்றிய கேட்டறியாது மாநிலமானது, விற்பனை ஆவணத்தை பதிவு அவர் பணிந்தளித்தது. செல்லுந்தன்மை பற்றிய எதிர்ப்பு தொடர்பாக விதி 55(அ)(i) உயர்நீதிமன்றத்தின் முன்பு நடப்பில் உள்ளது. எனவே, இந்த சி.அ.ம.வில் முதன்முறையாக, செல்லுந்தன்மை பற்றிய

எதிர்ப்பு தொடர்பாக விதி 55(அ)(i) உயர் நீதிமன்றத்தின் முன்பு நடப்பில் உள்ளது. எனவே, இந்த சி.அ.ம.வில் முதன்முறயாக செல்லுந்தன்மை பற்றிய வழக்கு ஏற்கப்பட முடியாது. அவர் பணிந்தளிப்பது, இந்த வழக்கில், செல்லுந்தன்மை பற்றிய கேள்வி நிர்வாகத்தன்மையது மேலும் விதி 55(அ)(i) வனையப்பட்டதே. மோசடியான நடவடிக்கை களை பதிவு செய்வதைத் தடுப்பதற்கானதே. அதன் நோக்கம் அவர் கூறியது 1908 சட்டத்தின்படியான பிரிவு 69இன்படி வழங்கப் பட்ட அதிகாரத்தினால் இது வனையப்பட்டது. விதி 55-A இயற்றப்பட்டதே. 1908 சட்டத்தின் பிரிவு 22-A, 22-B இவை மாநில திருத்தத்தினால் சேர்க்கப்பட்டவை. இவற்றிற்கு செயற்படும் அதிகாரம் அளிக்கவே இது செய்யப்பட்டது. எனவே, எந்த இடையீடும் கோரப்படவில்லை.

**பணிந்தனுப்புதல்களின் கருதுகை**

6. விதி 55(A) பதிவு செய்தல் விதிகள் பின்வருமாறு படிக்கப்படுகிறது.

“55(A)(i) பதிவு செய்யும் அலுவலர் முன்பு அசையாச் சொத்து தொடர்பான ஓர் ஆவணம் பதிவு செய்வதற்காக முன்னிடப்படும்போது அது முன்னிடுபவர், முந்திய மூல கவனத்தை முன்னிட்டு அதன் மூலம் அவருக்கு உரிமை எவ்வாறு பெறப்பட்டது என்பதை எடுத்துக் கூறி ஒரு வில்லங்க சான்றை அந்தச் சொத்து தொடர்பாக அது முன்னிடப்படுவதற்கு 10 நாட்களுக்குள் பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும். இவற்றை முன்னிட்டாலன்றி, அதனை பதிவு செய்தல் ஆகாது.

**வரம்புரையாக**: அடையாளம் ஆணைகள் சொத்தினைப் பற்றுகை நேர்வில், விற்பனை உடன்படிக்கை அல்லது குத்தகை உடன்படிக்கை சொத்தின்பேரில் இருந்து வருகிறபோது பதிவு செய்யும் அலுவலர், அத்தகைய ஆவணம் ஒன்றை பதிவு செய்தலாகாது. வழக்கினை முன்னிடுதல் தொடர்பாக, அது கால வரம்புக்குட் பட்டு இருந்தபோதிலும் அல்லது மறுப்பின்மை சான்றிதழ் உரிய அதிகாரியால், வழங்கப்படாத போது, அல்லது நேர்வுக்கேற்ப, பற்றுகை செய்யப்படாதபோது.

மேலும் வரம்புரையாக, சொத்தானது, மூதாதையர் சொத்தாக உள்ளபோது, முந்திய மூல ஆவணம், கிடைக்கத்தக்கதாக இல்லாத நேர்வில், பதிவு செய்யும் அலுவலர், அத்தகைய ஆவணத்தை பதிவு செய்தல் ஆகாது. இதில் முன்னிடுபவர், ஏதேனும் வருவாய் பதிவுகளை சான்றாக அளித்து நிறைவேற்றுபவரின் உரிமையை சொத்தின் மீதுள்ளதை மெய்ப்பித்து இருந்தாலன்றி, அதாவது பட்டா நகல் வருவாய்த் துறையால் அளிக்கப்பட்டது அல்லது வரி செலுத்து சீட்டு முதலியன.

மேலும் வரம்புரையாக : முந்திய முதன்மை ஆவணம் தொலைக்கப்பட்டிருக்குமானால், பதிவு செய்யும் அலுவலர், அத்தகைய ஆவணத்தை பதிவு செய்வதற்கு, அது கிடைக்க வில்லை என்பதற்கான சான்றிதழ் காவல் துறையினரால் அளிக்கப்பட்டது. அத்துடன் முந்திய மூல ஆவணம் தொலைந்ததாக அளிக்கப்பட்ட அறிவிப்பு வட்டார செய்தித்தாளில் விளம்பரம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுடன் முன்னிடப்பட்ட பதிவு செய்தல் வேண்டும்.

மேலும் வரம்புரையாக முந்திய முதன்மை ஆவணம் முன்னிடப்பட வேண்டிய தேவை யிராது. அதாவது அரசு அல்லது சட்டப்படியான குழு ஆவணத்தை நிறைவேற்றுபவராக இருக்குமானால், அல்லது பதிவுத் துறையின் ஆய்வாளர் தலைவரால் அவ்வப்போது, அறிவிக்கை செய்யப்படும். வகையான ஆவணங்கள்.

(ii) பதிவு செய்யும் அலுவலர், அந்த ஆவணத்தில் காணப்படும். சொத்தின் விவரிப்பும், அதாவது பதிவு செய்வதற்கானதும், முந்திய மூல ஆவணத்தில் காணப்படும் சொத்தின் விவரிப்பும் ஒத்துள்ளதாக, உறுதி செய்வதாக உள்ளதாக மனநிறைவு கொள்வதன் பேரில் இந்த விதிகளில் வகை செய்யப்பட்டுள்ளவாறு, அந்த உரிமை மூலஆவணத்தில் அவர் சரிபார்க்கப்பட்டது என்னும் சொற்களை முதல் பக்கத்தில் நன்கு தெரியுமாறு எழுதி வைத்து, அந்த உரிமை மூல ஆவணத்தில் தனது கையொப்பத்தினை தேதியுடன் இடுதல் வேண்டும். அந்தப் பக்கங்கள் ஒளிவருடல் செய்யப்பட்டு, ஒரு சுட்டுகை ஆவணமாக்கப் படும்.

(ii) இந்த விதியின்படி வருவாய் ஆவணங்கள் முன்னிடப்படும் தேர்வில், அது முக்கிய ஆவணமாக ஒளி வருடல் செய்யப்படும் மற்றும் சான்றிதழ் கண்டுபிடிக்கப்பட முடியவில்லை என்பது. வட்டார செய்தித் தாளில் வெளியிடப்பட்ட விளம்பரம் முன்னிடுபவரால் முன்னிடப்பட்டு அவையும் ஒளிவருடல் செய்யப்பட்டு சுட்டுகை ஆவணமாக்கப்படும்.

வரம்புரையாக : இத்தகைய சரிபார்த்தல் மற்றும் ஒளிவருடல் அதாவது முந்தைய, மூல ஆவணம் அல்லது பரிவை இந்த விதிகளின் படி வகை செய்யப்பட்டவாறு, இது அந்த ஆவணத்தின் செல்லுந்தன்மையை அறிவதற்காக செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் ஆகாது. அதாவது பதிவு செய்வதற்காக மற்றும் இது 1908 பதிவு செய்தல் சட்டத்தின் மையச் சட்டம் XVI/1908 பகுதிகள் XIV and XVஇல் அடங்கியுள்ள, வகைமுறைகளிலிருந்து எவரையும் விலக்களிக்காது அல்லது நீக்காது"

7. மொத்தத்தில் விதி 55-Aஇன் கூறு (i) வலியுறுத்துவது, அசையாச் சொத்து தொடர்பான ஓர் ஆவணம், பதிவு செய்யப்படுவதற்காக பதிவு செய்யும் அலுவலர் (முன்பு) முன்னிடப்படும்போது, அது தொடர்பாக அதனை முன்னிடுபவர், முந்திய மூல ஆவணத்தை முன்னிட்டு அதன் மூலம் அவருக்கு உரிமை எவ்வாறு பெறப்பட்டது என்பதை அதாவது சொத்து தொடர்பாக எடுத்துக் கூறி மற்றும் ஒரு வில்லங்க சான்றிதழை, பத்து நாட்களுக்குள் பெறப்பட்ட ஒன்றை, அளித்திருந்தாலன்றி, அது பதிவு செய்யப்படுதல் ஆகாது. மேலும் இதில் வகை செய்யப்படுவதாவது, ஒரு அடைமானம், பற்றுகை, விற்பனை உடன்படிக்கை அல்லது குத்தகை உடன்படிக்கை போன்ற வில்லங்கங்கள் உள்ள நேர்வில் பதிவு செய்யும் அலுவலர் அத்தகைய ஆவணத்தை பதிவு செய்தல் ஆகாது. அதுவும் அதில் அந்த வழக்குத் தொடர்பாக குறித்த வகைநிறைவேற்றல் பற்றிய கால வரம்பு காலம் முடிவடையாதிருக்குமானால் அல்லது உரிய அதிகாரி மறுப்பின்மை சான்றிதழ் வழங்காதபோது.

8. இந்த நிலையில், நாம் 1908 தமிழ்நாடு மாநிலச் சட்டத்தினால் பதிவு செய்யப்பட்ட பிரிவுகள் 22A, 22Bஇனை நாம் சுட்டுதல் வேண்டும். பிரிவுகள் 22A, 22B 2008 பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் இவ்வாறு படிக்கப்படுகிறது.

**"22A சில ஆவணங்களை பதிவு செய்ய மறுத்தல்:** இந்தச் சட்டத்தல் அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும், பதிவு செய்யும் அலுவலர், பின்வரும் ஆவணங்கள் எதனையும் பதிவு செய்ய மறுத்தல் வேண்டும் அவையாவன

(1) அசையாச் சொத்தினை உரிமை மாற்றம் செய்வது தொடர்பான முறையாவணம், விற்பனை தொடர்பாக, நன்கொடை, அடைமானம், மாற்றீடு அல்லது குத்தகை தொடர்பாக.

(i) 1971 தமிழ்நாடு, நகர மற்றும் நாட்டு திட்டங்கள் சட்டத்தின் பிரிவு 9(அ)இன்படி நிறுவப்பட்ட சென்னை மாநகர மேம்பாட்டு அதிகாரி அல்லது வட்டார அதிகாரி அல்லது மாநில அரசுக்குச் சொந்தமான,

(ii) எம் 59 தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறக்கொடைகள் சட்டம் பொருந்துகிற மத நிறுவனம் எதன் நோக்கத்திற்கான அதற்கு சொந்தமான அல்லது அறிவிக்கப்பட அல்லது கொடையாக்கப்பட்ட

(iii) பூதான் யாக்னாவிற்கான கொடை மற்றும் தமிழ்நாடு மாநில பூதான் யாக்னா வாரிய தமிழ்நாடு பூதான் யாக்னா சட்டம், 1958இன் 3ஆம் பிரிவின்படி அமைக்கப்பட்டது. அல்லது

(iv) 1995வஃப் சட்டத்தின்படி நிறுவப்பட்ட தமிழ்நாடு வஃப் வாரிய மேற்பார்வையில் உள்ள வஃபுகள்.

இவற்றில் ஒப்பளிப்பானது, இது தொடர்பாக தகுதி வாய்ந்த அதிகாரியால் அளிக்கப்பட்டிருந்தாலன்றி, அதாவது தொடர்புற்ற சட்டத்தில் வகை செய்யப்பட்டவாறு அல்லது அத்தகைய அதிகாரி எவரும் இல்லாதபோது, இந்த நோக்கத்திற்காக, மாநில அரசால் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரால் அளிக்கப்பட்டிருந்தாலன்றி அது பதிவு செய்யும் அலுவலரிடம் முன்னிடப்பட்டாலன்றி பதிவு செய்யப்படுதலாகாது.

(2) நிலங்கள் உரிமை மாற்றம் செய்வது தொடர்பான முறையாவணம், அவை மனை யிடங்கலாக மாற்றப்படும்போது அத்தகையதும் தொடர்புடைய திட்டமிடும், அதிகாரியிடமிருந்து அதனை மேம்படுத்துவ தற்கான அனுமதியைப் பெறாத மனையிட மாற்றம்.

**வரம்புரையாக**: இந்த மனையிடங்கள் அத்தகைய அனுமதியின்றி, பதிவு செய்யப் படலாம். அதாவது அதே வீட்டுமனை முன்பு பதிவு செய்யப்பட்டதாக காட்டப்படுமானால்''

22(ஆ) மோசடியான ஆவணங்கள் பதிவு செய்ய மறுப்பது மற்றும் சட்டத்தால் தடை செய்யப்பட்ட பிற ஆவணங்கள் பதிவு செய்ய மறுப்பது மற்றும் சட்டத்தால் தடை செய்யப்பட்ட பிற ஆவணங்கள் இந்தச் சட்டத்தின் அடங்கி யுள்ள எது எவ்வாறிருப்பினும், பதிவு செய்யும் அலுவலர், பின்வரும் ஆவணங் களைப் பதிவு செய்ய மறுத்தல் வேண்டும். அவை யாவன.

(1) போலி/மோசடியான ஆவணம்.

(2) நடவடிக்கை தொடர்பான ஆவணம், அவ்வப்போது செயற்பாட்டில் உள்ள மையச் சட்டம் அல்லது மாநிலச் சட்டம் எதனாலும் தடை செய்யப்பட்டது.

(3) மத்தியச் சட்டம் அல்லது மாநிலச் சட்டம் எதுவும் அப்போதைக்கு செயற்பாட்டில் உள்ள சட்டம் அல்லது நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயம் எதன்படியும் நிலையாக அல்லது தற்காலிகமாக, பற்றுகை செய்யப்பட்ட அசையாச் சொத்து தொடர்பான விற்பனை கொடை, குத்தகை அல்லது பிற ஆவணம் எதனையும்,

(4) மாநில அரசால் அறிவிக்கை வாயிலாக குறிப்பிடப்படலாகிற பிற ஆவணம் எதுவும்''

9. தற்போதைய வழக்கில், பதிவு செய்ய மறுக்கப்பட்டது. அதாவது விற்பவர் மற்றும் மேல்முறையீட்டாளரின் உரிமை மூல பாத்தியதை நிரூபிக்கப்படவில்லை என்னும் காரணத்தின் பேரில், பிரிவு 22(அ), 22(ஆ)லினை சாதாரண மாகக் படிப்பதில், ஆவணங்களை முன்னிடத் தவறுவது, அதில் விற்பவரின் உரிமை மூல தொடர்பான ஆவணம் முன்னிடப்படாததால் பதிவு செய்தல் மறுக்கப்பட்டிருக்கக் கூடாது என்பது.

10. இப்போது நாம் 1908ஆம் ஆண்டு சட்டத்தின் விதிகள் செய்வதற்கான அதிகாரம் பற்றிப் பார்ப்போம்.

''**69. ஆய்வாளர் தலைவர், பதிவு அலுவலகங்களை மேற்பார்வையிடவும் விதிகள் இயற்றுவதற்குமான அதிகாரம்:** (1) ஆய்வாளர் தலைவர், மாநில அரசின் கீழ் உள்ள மண்டல ஆட்சி எல்லைக்குள் உள்ள அனைத்து பதிவு செய்யும் அலுவலகங்களையும் பொதுவாக மேற்பார்வையிடுதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்திற்கு ஒத்த விதிகளை அவ்வப்போது செய்ய அதிகாரம் கொண்டிருத்தல்

(அ) புத்தகங்கள், தாள்கள் மற்றும் ஆவணங்கள் பாதுகாப்புக்கு வகை செய்தல்

(ஆ) பாதுகாக்கப்படுவது எவ்வாறு எதற்கு உட்பட்டு எந்த முறையில் என்பதை வகை செய்தல் புத்தகங்கள் கணினியில் ஏற்றப்பட்டு அல்லது பதிவு செய்யப்பட்டு அல்லது பிற மின்சாதன முறையில் பாதுகாக்கப்பட வேண்டும். பிரிவு 16(அ)இன் (1)ஆம் உட்பிரிவின்படி.

(ஆ) ஒவ்வொரு மாவட்டத்திலும் பொதுவாக எந்த மொழிகள் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை விளம்புகை செய்தல்

(இ) பிரிவு 21இன்படி எந்த ஆட்சி மண்டலப் பிரிவுகள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதை விளம்புதல்.

(ஈ) பிரிவுகள் 25, 34இன்படி முறையே விதிக்கப்பட்டுள்ள அபராதத் தொகையை ஒழுங்குமுறைப்படுத்துதல்.

(உ) 63ஆவது பிரிவின் மூலம், பதிவு செய்யும் அலுவலக இடம் மீண்டும் அளிக்கப் பட்டது. அவரது உளத்தேர்வை செயற்படுத்து வதை முறைப்படுத்துதல்.

(ஊ) பதிவு செய்யும் அலுவலர்கள் ஆவணங்களின் குறிப்பாணையை அளிக்கிற படிவத்தை முறைப்படுத்துதல்

(எ) 5ஆம் பிரிவின்படி முறையே பதிவாளர்கள் மற்றும் துணைப் பதிவாளர்களினால் வைத்து வரப்படுகிற புத்தகங்களின் பதிவுகளை முறைப் படுத்துதல்.

(ஏ) பதிவு செய்வதற்காக பிரிவு 88(2)இல் சுட்டப்பட்ட, முன்னிடப்பட்ட முறையாவணங் களை ஒழுங்குமுறைப்படுத்துதல் முறை

(ஐ) பதிவு செய்யும் அலுவலகங்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய விடுமுறைகளாக விளம்பப்படுபவை மற்றும்

(ஒ) பொதுவாக, பதிவாளர்கள் மற்றும் உதவிப் பதிவாளர்களின் நடவடிக்கைகளை ஒழுங்குமுறைப்படுத்துதல்

(2) அவ்வாறு செய்யப்பட்ட விதிகள் மாநில அரசிடம் ஒப்புதலுக்காக பணிந்தனுப்பப்படுதல் வேண்டும் மற்றும் அவர்கள் ஒப்பளிப்பு செய்த பின்னர், அவை அரசு அரசிதழில் வெளியிடப் படுதல் வேண்டும் மற்றும் வெளியிடப்பட்டதன் பேரில், இது சட்டத்தில் உள்ளது போன்றே செயற்பாட்டைக் கொண்டிருக்கும்.

11. கூறுகள் (அ) முதல் (ஒ) வரையிலான வற்றில் ஒன்றிலும், விதிகள் செய்வதற்காக பதிவு செய்யும் அதிகாரிகளுக்கு உரிமை மாற்றம் செய்யும் ஆவணம் ஒன்றை பதிவு செய்ய மறுப்பதற்கு அதிகாரம் வழங்குவதாக இல்லை. 1908 சட்டத்தின்படியான எந்த வகைமுறையும், அதிகாரி எவருக்கும் அதிகாரம் வழங்குவதாக, அதுவும் பதிவு செய்ய மறுப்பதற் கான அதிகாரம் உரிமை மாற்ற ஆவணம், வாங்குபவரின் உரிமை மூல ஆவணம் தொடர்பாக, ஆவணங்களை அவர் முன்னிட வில்லை என்பதாக, அல்லது அவரது உரிமை மூல ஆவணம், மெய்ப்பிக்கப்படவில்லை யானால், மாநில திருத்தங்களாக, சேர்க்கப்பட்ட பிரிவுகள் 22(A), 22(B)ஆம் கூட அத்தகைய வகைமுறையைக் கொண்டிருக்கவில்லை.

12. பிரிவு 22(A), குறிப்பிட்ட வழக்குகளுக்கு பொருந்துவதாகும். உட்பிரிவு (1) பதிவு செய்யும் அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்குவத கூறுகள் (i) முதல் (iv) வரையில் குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக, பதிவு செய்ய மறுப்பது, பிரிவு 22(A),வில் (2)ஆம் உட்பிரிவு பதிவு செய்யும் அலுவலரை திட்டமிடுதல் அதிகாரி யினால் மேம்பாட்டிற்கு அனுமதி வழங்கப்படாத நிலங்களின் உடைமையில் உரிமை மாற்றம் தொடர்பாக முறையாவணங்களை பதிவு செய்ய தடுக்க இயல்விக்கிறது. பிரிவு 22(B) பதிவு செய்யும் அலுவலரை, போலி 1 மோசடியான ஆவணத்தை பதிவு செய்ய மறுக்க, இயல்விக்கிறது. மத்திய அல்லது மாநில அரசின் சட்டங்களின்படி தடை செய்யப்பட்ட நடவடிக்கை தொடர்பாக பதிவு செய்தலை மறுப்பதற்கு பதிவு செய்யம் அலுவலருக்கு அதிகாரம் அளிக்கிறது. சொத்து எதுவும் நிலையாக அல்லது உடன் பாட்டின்படி மத்திய அல்லது மாநில சட்டங்களின் படியான தகுதி வாய்ந்த அலுவலரால் பற்றுகை செய்யப்பட்டிருக்குமானால், பிரிவு 22(B) பதிவு செய்யும் அலுவலருக்கு, பதிவு செய்ய மறுப்பதற் கானது சொத்தினை உரிமை மாற்றம் செய்யும் ஆவணம் தொடர்பாக பிரிவுகள் 22(A), 22(B) வகை செய்வது. ஒரு குறிப்பிடப்பட்ட வகை ஆவணங்கள் பதிவு செய்ய மறுக்கப்படுவது கட்டாயமாகிறது.

13. மாறாக, விதி 55(A) பதிவு செய்யும் அலுவலருக்கு, பதிவு செய்ய மறுக்கும் அதிகாரத்தை அளிக்கிறது. அதாவது முன்னிலை யாகிறவர், மூல ஆவணத்தை முன்னிட்டு, எவ்வாறு இதனை நிறைவேற்றுபவர் உரிமை களைப் பெற்றுள்ளார். அந்த சொத்தின் மீது என்பதையும் வில்லங்க சான்றிதழ் அதாவது ஆவணம் முன்னிடப்படுவதற்கு 10 நாட்கள் முந்தியதாக இருத்தல் வேண்டும். இவற்றை முன்னிட்டாலன்றி பதிவு செய்யும் அலுவலர் பதிவு செய்ய மறுக்கலாம். இதில் மூல ஆவணம் கிடைக்காதபோது, அதாவது அதன் காலங் காரணமாக அந்த ஆவணம் பதிவு செய்யப்பட மறுக்கப்படும் இதில் முன்னிடுபவர் ஒரு வருவாய் பதிவேட்டின் மூலம் அதை சான்றாக நிறைவேற்றுபவரின் உரிமையை மெய்ப்பித் தாலன்றி. இதில் மூல ஆவணம் தொலைக்கப் படுமானால், ஆவணம் பதிவு செய்யப்பட முடியாது. இது கிடைக்கப்படவில்லை என்ப தற்கான உறுதிச் சான்றிதழ் காவல் துறையின ரால் அளிக்கப்பட்டு அத்துடன் வட்டார செய்தித் தாள் ஒன்றின் இது பற்றி விளம்பரப்

படுத்தப்பட்டதும் தொலைந்தது பற்றிய அறிக்கையும் முன்னிடப்படுதல் வேண்டும்.

14. சுருக்கமாக, விதி 55(B) வகை செய்வதாவது, நிறைவேற்றுநருக்கு உரிமையுள்ளதாக மெய்ப்பிக்கப்பட்டாலன்றி ஆவணங்கள் முன்னிடப்பட்டால் சொத்து தொடர்பான முறையாவணங்கள் அது பதிவு செய்ய மறுக்கப்படும். எனவே, ஒரு விற்பனை ஆவணம் பதிவு செய்வதற்காக முன்னிடப்படுமானால், நிறைவேற்றுநர் உரிமைகளை பெற்றது பற்றி ஆவணம் முன்னிடப்படுதல் வேண்டும். அதாவது பதிவு செய்யும் அலுவலருக்கு நிறைவேற்றுபவரின் உரிமை மூல ஆவணத்தை சரிபார்க்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது விதி 55(A)(i)இன்படியான உரிமை மூல ஆவணச் சான்று முன்னிடப்பட்டிருந்தாலன்றி விற்பனை ஆவணம் பதிவு செய்தல் மறுக்கப்படும்.

15. பதிவு செய்யும் அலுவலர், நிறைவேற்றுநரால் வைத்து வரப்படும் உரிமை மூல ஆவணம் பற்றி அறிய முற்படமாட்டார். அவருக்கு விசாரணை செய்யும் அதிகாரமோ, நிறைவேற்றநருக்கு உரிமை மூல ஆவணம் உள்ளதா என்பதை தீர்மானிக்கும் அதிகாரமே கிடையாது. நிறைவேற்றுநர் ஒரு விற்பனை ஆவணத்தை அல்லது குத்தகையை, ஒரு நிலம் தொடர்பாக, அவருக்கு, உரிமை மூல பாத்தியதை, இல்லாதபோது, பதிவு செய்யும் அலுவலர், அந்த ஆவணத்தைப் பதிவு செய்ய, மறுக்க முடியாது. அனைத்து நடைமுறை செயற்பாடுகளும் செய்யப்பட்ட பின்னர் மற்றும் தேவையான வில்லைத் தீர்வை மற்றும் பதிவு செய்தல், கட்டணம் செலுத்தப்பட்ட பின்னர், நாம் இங்கு குறிப்பிட பதிவு செய்யும் அதிகாரியின் ஒருவரி உரிமை மாற்றம் செய்யக் கருதுகிற சொத்தில் விற்பவருக்கு உரிமை மூல பாத்தியதை உள்ளதா எனக் கண்டறிந்து உறுதி செய்வது, கடமைப் பொறுப்பாகாது. இதில் பதிவு செய்யும் அதிகாரி, ஆவணத்தின் தரப்பினர்கள் அவர் முன்பு முன்னிலையாகியுள்ளனர் என்பதில் மனநிறைவு கொள்வாரானால், அவர் முன்பு அதனை நிறைவேற்ற தரப்பினர்கள் ஏற்றுக் கொள்ளும்போது மேற்சொல்லப்பட்டவாறு நடைமுறைச் செயற்பாடுகளுக்கு உட்பட்டு, ஆவணமானது, பதிவு செய்யப்பட வேண்டும். ஆவணம் ஒன்று, நிறைவேற்றுதல் மற்றும் பதிவு செய்தல் அந்த உரிமைகளை எவையேனுமிருப்பின் அதனை உரிமை மாற்றம் செய்வதாகும். அதாவது அதனை கொண்டிருக்கும் நிறைவேற்றுநர், இதில் நிறைவேற்றுநருக்கு உரிமை உரிமை மூல ஆவணம் அல்லது உரித்தம் எதுவும் அந்தச் சொத்தில் இல்லாதிருப்பாரானால், பதிவு செய்யப்பட்ட ஆவணத்தால் எந்த உரிமையும் செயற்பாட்டுக்கு வர முடியாது.

16. எனவே, 1908ஆம் ஆண்டு சட்டத்தின் 69ஆம் பிரிவின்படி விதிகள் செய்வதற்கு அதிகாரம் உள்ளதாக துணிபு கொண்டாலும் பிரிவு 55(A)(i) 1908 சட்டத்திற்கு வரம்பு உகந்ததாக உள்ளதாக விளம்பப்பட வேண்டியது. 69ஆம் பிரிவின்படியான விதி செய்யும் அதிகாரம், 1908 சட்டத்தின் வகைமுறைகளுக்கு ஒவ்வாததாக, இருத்தல் ஆகாது. விதி 55(A)(i) அவ்வாறே, 1908 சட்டத்திற்கு வரம்பிகந்ததாக உள்ளதாக விளம்பப்பட்டுள்ளது.

17. மேல்முறையீட்டாளரால் முன்னிடப்பட்ட நீதிப்பேராணை மனு, உயர்நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது. விதி 55(A)(i)இன்படி மற்றும் விதி 55(A)(i) செய்யத்தக்கதல்ல என்று கூறப்பட்டுள்ள எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட தீர்ப்பு நசுக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது அவ்வாறே ஆணையிடப்பட்டது.

18. நாங்கள் இதன் மூலம் மேல்முறையீட்டாளரை விற்பனை ஆவணத்தை, இன்றிலிருந்து ஒருமாத காலத்திற்குள் பதிவு செய்ய அனுமதிக்கிறோம். நடைமுறை செயற்பாடுகள் இணங்கி நடத்தப்பட்டு தொடர்புடைய பதிவு செய்யும் அலுவலர், இந்த விற்பனை ஆவணத்தை பதிவு செய்ய முற்படுவார்.

19. மேல்முறையீடு அவ்வாறே மேற்சொல்லப்பட்ட வரையுரைகளின்படி அனுமதிக்கப்படுகிறது.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

# உடைமை மற்றும் துய்ப்பு பற்றிய உண்மை கண்டறிய விசாரணை நீதிமன்றத்தில் முறையிட வேண்டும்.

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை : நீதிபதி திரு வி.லக்சுமி நாராயணா**
**உசீம பிடி) எண் 4938/2024**
**13.12.2024**
2025 (1) CTC 381

ஸ்ரீமத் ராமலிங்க சுவாமிகள் மடாலாயம் என்ற பெருமாள் சுவாமிகள் ட்ரஸ்ட், சார்பாற்றம் அதன் தலைவர், திரு எஸ்.மாரிமுத்து, த/பெ சிவன்பாண்டியன்
புது எண் 11, பழைய எண் 4, பட்டினத்தார் கோயில் தெரு,
திருவொற்றியூர், சென்னை-6000019. ...மனுதாரர்

-எதிர்-

கே.ஜெயபிரகாஷ், த/பெ. கந்தசாமி
2, திரு. லம்பா எம்.ஆறுமுகம்
3. திரு. எஸ்.பி.பி.வடிவேலு த/பெ எம்.பெரியசாமி
4. திரு. வி.பாலராஜ், த/பெ. எம்.பேச்சிமுத்து
4. பேங்க் ஆப் இந்தியா சார் அதன் கிளை மேலாளர்,
தேவராஜ முதலி தெரு, சௌகார்பேட்டை,
சென்னை-600003 ...எதிர்மனுதாரர்கள்

**பி.வேணுகோபால்,**
மனுதாரரது வழக்குரைஞர்

உசீம ஏற்கப்பட்டது. செலவு தொகையில்லை

**கோருகை:** திருவொற்றியூர் மாவட்ட உரிமையியல் நீதிபதி கோப்பிலான எண்ணிடப் படாத எஸ்.ஆர்.எண் 105/2023இல் உண்டான 2.9.2023 தேதிய ஆணைக்கும் தீர்ப்பாணை உத்தரவுக்கும் எதிராக இந்திய அரசமைப்பு சட்ட உறுப்பு 227 கீழ் உரிமையியல் சீராய்வு மனு தாக்கலானது.

## தீர்ப்புரை

திருவொற்றியூர் மாவட்ட உரிமையியல் நீதிபதி கோப்பிலான எண்ணிடப்படாத மு.வ. எஸ்.ஆர்.எண் 105/2023இல் உண்டான ஆணையை இந்த உரிமையியல் சீராய்வு மனு எதிர்க்கிறது.

2. திரு பெருமாள்சாமியால் நிறைவேற்ற லான உயில்படி சென்னை, திருவொற்றியூர் பட்டினத்தார் கோயில் தெரு, புது 11 எண் பழைய எண் 4இல் அமைந்துள்ள ஸ்ரீராமலிங்க சுவாமிகள் என்ற பெருமாள் சுவாமிகள் பொறுப்புக் கழகம் திரு. பெருமாள்சாமி அல்லது பொறுப்பாட்சியர்கள் மூலமான உடைமையிலும் அனுபோகத்திலும் 1-4வது எதிர்வாதிகள் தலையிடுதலை தடுத்துநிறுத்தும் நிரந்தப் உறுத்துக்கட்டளை பரிகாரத்துக்காக வழக்கு முன்னிடப்பட்டிருந்தது. முன்சொன்ன பொறுப்புக் கழகம் பெயரில் வைப்பீடான தொகைகளை வினியோக செய்யக்கூட்டாது என 5வது எதிர் வாதியை பணிக்கும் வலியுறுத்து உறுத்துக் கட்டளையும் இதர பரிகாரங்களை வழக்கு கோருகிறது.

3. மாபெரும் புனிதர் ராமலிங்க வள்ள லாரின் தீவிர பக்தராக நாராயண கோனாரது மகன் திரு பெருமாள்சாமி என்பவர் இருந்தார் என வழக்குக்கான வழக்கு மூலம் வாது ரைக்கிறது. ஸ்ரீமத் ராமலிங்க சுவாமிகள் மடாலயம் பெயரிலும் பாணியிலும் 26.1.1937 அன்று அவர் பொறுப்புக் கழகத்தை உருவாக்கினார். அவரால் நிறைவேற்றப்பட்ட உயில் முவ எண் 287/1958 இல் 19.2.1959 தேதிய ஆணை

மூலமாக இந்த நீதிமன்றத்திலிருந்துவிருப்புறுதி மெய்ப்பிதழை பெற்றுள்ளது. உயில் விதிமுறைகள் படி அந்த பொறுப்பாட்சியர்கள் நியமிக்கப்பட்டு 11.12.2012 அன்று பொறுப்புகழகத்தை பதிவு செய்திட புதிய பொறுப்பாட்சியர்கள் முடிவெடுத்து உள்ளார்கள்.பொறுப்புக் கழகம் துவக்கப்பட்டு ஐந்தாவது எதிர்மனுதாரர் வங்கியிடம் கணக்கு துவக்கப்பட்டது. அதன் பின்பு பெரும்குழப்பம் நிலவி பொறுப்புக்கழகம் வழக்காடலில் உழன்றுள்ளது.

4.இந்த பொருண்மை காரணமாக வங்கி பாதுகாப்பான அணுகுமுறையை மேற்கொள்ள தீர்மானித்து கணக்கை முடக்கியது. இது மேலாண் இயக்குனார் கூறிக்கொள்ளும் திரு கே.ஜெயபிரகாஷ் நீபேம எண் 27765/2022 தாக்கலிடுவதை நிர்ப்பந்தித்தது. நீதிப்பேராணை மனு 5.1.2023 அன்று தீர்வாக்கப்பட்டது. உத்தரவு பத்தி 21இல் பதிவை அலுவல் குறித்த வழக்கு அவர்களுக்குள் இருக்குமானால் தரப்பினர்கள் உரிமையியல் நீதிமன்றத்தை அணுக வேண்டியதாகும் என பணிக்கப்பட்டது. பொறுப்புக் கழகத்தை பரிபாலனம் செய்தலுக் காக பொறுப்புக் கழகம் கையாடால் தவறா நிர்வாகம் பிற செயல்பாடுகளில் ஈடுபட்டித்தி ருந்தால் உரிமையியல் நீதிமன்றம் அணுக்கப் பட வேண்டியதாகும் என உத்தரவில் சேர்க்கப் பட்டது. திரு.ஜெயரபிரகாஷ் மற்றும் திரு பால்ராஜ் விடுத்து மூன்றாவது தரப்பினர் எவருக்கும் கோருரிமை இருக்குமானால் அவர்களது கோரிக்கைக்கு தீர்வளித்தலுக்கு அவர்கள் உரிமையியல் நீதிமன்றத்தை அணுக வேண்டிய தாகும் என நீதிபதி பணித்தார்.

5.ஸ்ரீமத் ராமலிங்க மடாலயம் என்ற பெருமாள் சுவாமிகள் பொறுப்பு கழகம் எனும் பொறுப்பு கழகத்தின் தலைவராக தன்னை கூறிக்கொள்ளும் வாதி, பொறுப்பு கழகத்தின் செயல்பாடுகளில் தலையிட 1-4வது எதிர் வாதிகள் முயன்று கொண்டிருக்கிறார்கள் என கூறிக் கொண்டு வழக்கை தாக்கலிட்டார். 1908 இன் உரிமையியல் விசாரணைமுறை தொகுப்புச் சட்டப் பிரிவு 92 கீழான வழக்கை தாக்கலிடுமாறு வாதியை பணித்துக்கொண்டு திருவொற்றியூர் மாவட்ட உரிமையியல் நீதிபதி வழக்குரையை நிராகரித்தார். எனவே இந்த உரிமையியல் சீராய்வு மனு ஏற்படுகிறது.

6.உரிமையியல் சீராய்வு மனுதாரர் சார்பில் திரு பி.வேணுகோபாலை நான் கேட்டறிநேன்.

7.அவர் ஸ்ரீமத் ராமலிங்க சுவாமிகள் மடாலயத்தின் தலைவர் ஆவார் எனவும் இந்த நீதிமன்றத்தால் இயற்றப்பட்ட ஆணைப்படி வழக்கை நிலையுறுத்திட அவருக்கு பாத்தியதை யுண்டு எனவும் திரு.பி.வேணுகோபால் கூறுகிறார். பொறுப்புகழகத்தை பதியும் ஆவணத்துக்கு எதிராக சவாலிட்ட நீமே எண் 17340/2022இல் இந்த நீதிமன்றத்தால் இயற்றப்பட்ட ஆணைக்கு எனது கவனத்தை வழக்குரைஞர் ஈர்க்கிறார். உரிமையியல் நீதிமன்றத்தை அணுகுமாறு தரப்பினர்களை பணித்துக் கொண்டு நீதிப்பேராணை மனுவை இந்த நீதிமன்றம் தள்ளுபடி செய்திருந்தது. எனவே மாவட்ட உரிமையியல் நீதிபதியின் ஆணை திருத்தப்பட அவசியமாகிறது என அவர் கூறுகிறார்.

8. திரு.பி.வேணுகோபாலின் பணிந்துரைகளை நான் கவனமாக பரிசீலித்து பதிவெண்களையும் ஆய்ந்துள்ளேன்.

9. பொறுப்புகழகச் சொத்து பற்றி தாவா சம்பந்தமான அனைத்து நேர்வுகளிலும் 1908இன் உரிமையியல் விசாரணைமுறை தொகுப்புச் சட்டப் பிரிவு 92 கீழ் வழக்கு முன்னிடப் பட வேண்டும் என்பது தேவையற்றதாகும். உவிதொச பிரிவு 92 1(ஏ)-கீழ் தீர்ப்பாணைக்கு தேவைப்பாடு உண்டு என வழக்குரை வாது ரைக்கும்போது சிறப்பு வழக்குகளில் வகை பிரிவு 92 ஏற்படுகிறது. அவர் பொறுப்புகழகத்து மேலாண் பொறுப்பாட்சி யராக உள்ளார் என வாதி வாதுரைக்கும் வழக்கு இதுவாகும். பொறுப்பு கழகத்தின் தலைவராக அல்லது மூன்றாவது வரிசை தரப்பினராக வாதி உள்ளாரா என்பது வழக்கு விசாரணை சமயத்தில் மட்டுமே ஆராயப்பட வேண்டியதாகின்றன.

10.வழக்கில் கோரப்படும் பரிகாரம் தனிப் பட்ட இயல்பிலானதாகும். கோரப்படுள்ள பரிகாரம் பிரிவு 92 கீழ் அடங்கவில்லை. பிந்தைய பிரிவு கீழ் வழக்கு ஏற்பட்டால் மட்டுமே வழக்கு உவிதொச பிரிவு 92 கீழ் முன்னிடப்பட வேண்டியதாகும். மடாலயத் தலைவராக உடைமை அவர் வசம் உள்ளது என வாதி கூறுகிறார். பரிகாரம் திட்ட வனைதல் பிற எதனை யும் அவர் கோரிக் கொண்டிருக்கவில்லை. கேள்வி அதுவாக உள்ள நிலையில் வழக்கு உவிதொசபிரிவு 92 கீழுள்ள ஒன்றாக பாவிக்கப் பட முடியாது.

11.இந்த பொருண்மை நீங்கலாக ஒரு வழக்கு முன்னிடப்படும் போது எதிர்வாதியினது பங்கை நீதிமன்றம் தன்மீது வைத்திட தேவை யில்லை. இல் அறிவிப்பான 2014 4 CTC 539 இந்த நிலைமை செல்வராஜ் மற்றும் பிறர் எதிர் கூடங்குளம் நியூக்லியர் பவர் கார்ப்பரேசன் மற்றும் பிறர் வழக்கில் இந்த நீதிமன்றத்தின் (என்.சேஷசாயீ, நீதிபதி) தீர்ப்புரையால் அறுதி யாக்கப்பட்டுள்ளது.

12.அவரது வழக்கில் வாதுரைகள் முடிக்கப் பட்டு சாட்சியம் பதிவாவணமான பின்பு உசிதமாக கையாளப்பட வேண்டிய எழுவினாக்கள் பற்றி விசாரணை நீதிபதி பேசியிருக்கிறார். வழக்கில் பிரிவு 92 கீழ் கோரப்பட்டுள்ள பரிகாரம் எதனையும் வழக்குரையை வாசித்தல் காட்டவில்லை.

13. ஆகையால் இந்த உரிமையியல் சீராய்வு மனு ஏற்றுக் கொள்ளப்பட்டு முவ எஸ் ஆர் எண் 105/2023இல் திருவொற்றியூர் மாவட்ட உரிமையியல் நீதிபதியின் 2.9.2023 தேதிய ஆணை நீக்கறவாக்கப்படுகிறது. அது வேறாக முறையாக இருக்குமானால் வழக்குரையை நீதிபதி எண்ணிட வேண்டும். செலவு தொகை பற்றி உத்தரவு ஏதும் இராது.

**மொழியாக்கம்:பா.ஞானசேகரன்**

## பெற்றோர்கள் விவாகரத்து பெற்று இருந்தாலும் மகளின் திருமணச் செலவுக்கு, தந்தை ரூ.10 லட்சம் வழங்க வேண்டும்

பெற்றோர்கள் விவாகரத்து பெற்று இருந்தாலும் மகளின் திருமணச் செலவுக்கு, தந்தை ரூ.10 லட்சம் வழங்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

டெல்லியைச் சேர்ந்த ஒரு ஜோடி கடந்த 1996-ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டனர். 1997ஆம் ஆண்டு ஒரு மகளும், 1999ஆம் ஆண்டு ஒரு மகனும் பிறந்தனர். ஆனால் கணவர் 2009ஆம் ஆண்டில் மனைவி யால் தனக்கு மன உளைச்சல் ஏற்படுகிறது என்று கூறி விவாகரத்துக்கான மனுவைத் தாக்கல் செய்தார். அதன் பின்னர் மனைவியும், கணவர் மீது வன்முறை தடுப்புச் சட்டத்தின் கீழ் புகார் அளித்தார். இது தொடர்பான வழக்குகள் பல ஆண்டுகளாக நடந்து, இறுதியாக கடந்த 2019ஆம் ஆண்டு குடும்ப நீதிமன்றம் இந்த தம்பதியினருக்கு விவாகரத்து வழங்கி உத்தர விட்டது.

இதற்கிடையில், தனது மகளின் திருமணச் செலவுக்காக தந்தை நிதி உதவி செய்ய வேண்டும் என மனைவி உச்சநீதிமன்றம் மனு செய்தார். ஆனால், தந்தை, தனக்கு எந்த வருமானமும் இல்லை. அதோடு விவாகரத்து ஆகி விட்டதால் நான் ஏன் நிதி தர வேண்டும் என்று வாதிட்டார். ஆனால் தந்தைக்கு மீன் வளர்ப்பு மற்றும் இதர வருமானங்கள் மூலம் வருவாய் கிடைக்கிறது என்று அந்த பெண் தரப்பில் வாதிடப்பட்டது.

இந்த வழக்கில் நீதிபதி விக்ரம் நாத் தீர்ப்பளித்தார். அவர், ''ஒரு தந்தையின் முதன்மை பொறுப்பு குழந்தைகளின் தேவைகளை பூர்த்தி செய்வதாகும். அதில் மகளின் திருமணச் செலவு களும் அடங்கும். தந்தை-தாய் இடையே விவாகரத்து நடந்திருந்தாலும், குழந்தைகளுக் கான கடமையில் இருந்து தந்தை விலக முடியாது. எனவே, மகளின் திருமணத்திற்காக 10 லட்சம் ரூபாய் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டார். அதோடு, இந்த தொகையை அடுத்த மாதம் 15-ம் தேதி வழங்க வேண்டும்'' என்றும், தவறினால் வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் நீதிபதி எச்சரித்தார்.

**நன்றி: தினத்தந்தி 20.9.2025**

# பிணை/முன்பிணை கோரும் மனுக்களை ஒருங்கிணைத்து அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நீதிபதி முன் பட்டியலிடப்பட வேண்டும்

சென்னை உயர்நீதிமன்றம்
முன்னிலை: நீதிபதி திரு எஸ்.எம்.சுப்பிரமணியம்
நீதிபதி திரு கே.ராஜசேகர்
கு.அ.மனு எண் 31787/2024 மற்றும்
கு.இவ.மனு. எண் 113/2025
தீர்ப்பு நாள் 04/03/2025
**(2025 (3) CTC 113)**

ஒய்.பாபு .. மனுதாரர்

-எதிர்-

காவல் ஆய்வாளர், சூலூர் காவல் நிலையம்,
கோவை மாவட்டம் (குற்ற எண் 39/2024) .. எதிர்மனுதாரர்

''மாண்புமிகு உச்ச நீதிமன்றம், ஷேகர் பிரசாத் மஹ்தோ ஷேகர் குஷ்வாஹா -எதிர்- பதிவாளர் ஜெனரல், ஜார்க்கண்ட் உயர் நீதிமன்றம் (W.P.(Crl) எண்.55, 2025-02-07 -ல் முடிவு செய்யப்பட்டது), என்கிற வழக்குத் தீர்வில் வழங்கிய விளக்கம், ஒரு குறிப்பிட்ட வழக்கில் (முதல் தகவல் அறிக்கை) ஒரு குற்றம் சாட்டப்பட்டவர் தாக்கல் செய்த மனுவை பட்டியலிடுவது குறித்து மட்டுமா அல்லது, பிணை/முன் பிணை மனுவை விசாரித்த நீதிபதி இருக்கிறபோது, குற்றம் சாட்டப்பட்டவர் தாக்கல் செய்த அடுத்தடுத்த பிணை மனுக்களை அந்த பணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நீதிபதி முன்பு பட்டியலிடுவது தொடர்பானதுமா?'' என்ற கேள்விக்கு பதிலளிக்குமாறு இந்த அமர்வு கேட்டுக் கொள்ளப்பட்டது:

மனுதாரருக்காக: திரு ஏ.மனோஜ் குமார், திரு டி.பாலச்சந்திரனுக்காக, வழக்கறிஞர்

எதிர்மனுதாரருக்காக: திரு ஹாசன் முகமது ஜின்னா, மாநில அரசு வழக்கறிஞர், உதவி திரு ஏ.தாமோதரன், கூடுதல் அரசு வழக்கறிஞர் மற்றும் திரு இ.ராஜ் திலக், கூடுதல் வழக்கறிஞர் மற்றும் திரு எம்.முகமது ரியாஸ், வழக்கறிஞர்.

**ஆணை:**

**(திரு எஸ்.எம்.சுப்பிரமணியம், நீதிபதி)**

பார்வைக் குறிப்பின் அறிமுகம்: மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் கற்றறிந்த தனி நீதிபதி கு.அ.மனு எண் 31787/2024ல் வெளியிட்ட ஆணை தொடர்பாக பின்வரும் கேள்விக்கு விடையளிக்க இந்த அமர்வு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

''மாண்புமிகு உச்ச நீதிமன்றம், ஷேகர் பிரசாத் மஹ்தோ ஷேகர் குஷ்வாஹா -எதிர்- பதிவாளர் ஜெனரல், ஜார்க்கண்ட் உயர் நீதிமன்றம் (W.P.(Crl) எண்.55, 2025-02-07 -ல் முடிவு செய்யப்பட்டது) என்கிற வழக்குத் தீர்வில் வழங்கிய விளக்கம், ஒரு குறிப்பிட்ட வழக்கில் (முதல் தகவல் அறிக்கை) ஒரு குற்றம் சாட்டப்பட்டவர் தாக்கல் செய்த மனுவை பட்டியலிடுவது குறித்து மட்டுமா அல்லது, பிணை/முன் பிணை மனுவை விசாரித்த நீதிபதி இருக்கிறபோது, குற்றம் சாட்டப்பட்டவர் தாக்கல் செய்த அடுத்தடுத்த பிணை மனுக்களை அந்த பணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நீதிபதி முன்பு பட்டியலிடுவது தொடர்பானதுமா?''

**பின்னணியில் உள்ள மேற்கோள்கள்**

2. இந்தியாவின் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புகள் மற்றும் உச்சநீதிமன்றத்தின்

அவதானிப்புகளின் அடிப்படையில் இந்த குறிப்பு உருவாக்கப்பட்டது. பிணை/முன் பிணை மனுக்களை விசாரிப்பதில் உள்ள முரண்பாடு களைத் தவிர்ப்பதற்காக, இந்த குறிப்பை நீதிமன்றம் ஆராய்வது அவசியமாகிறது. பல் வேறு உயர்நீதிமன்றங்கள் பிணை/முன் பிணைமனுக்களைப் பட்டியலிடுவதற்கு வெவ்வேறு நடைமுறைகளைப் பின்பற்றுகின்றன. எனவே, ஒரு உயர்நீதிமன்றத்தால் பின்பற்றப்படும் நடை முறைகள் மற்ற உயர்நீதிமன்றங்களுக்குப் பயன்படுத்தப்படும்போது, அது ஒரு அசாதாரண சூழ்நிலையையும் பிணை மனுக்களைத் தீர்மானிப்பதில் முரண்பாட்டையும் ஏற்படுத்து கிறது. எனவே, பிணை/முன் பிணை மனுக் களைப் பட்டியலிடுவது தொடர்பான சட்டம் சார்ந்த நிகழ்வுகளை ஆய்வு செய்வது அவசிய மாகிறது.

**சம்பந்தப்பட்ட முன்னுதாரணங்கள்:**

3. ஆரம்பத்தில், மாண்புமிகு உச்ச நீதிமன்றம், ஷாஜாத் ஹசன் கான் –எதிர்– இஷ்தியாக் ஹசன் கான் மற்றும் மற்றொருவர் (1987 (2) SCC 684) என்ற வழக்கில், தீர்ப்பின் பத்தி எண். 5–ல் பின்வரும் அவதானிப்பைச் செய்தது: ''ஒரே விஷயத்தில் அடுத்தடுத்து பிணை மனுக்கள் வெவ்வேறு நீதிபதிகளால் தீர்க்க அனுமதிக்கப் பட்டால், முரண்பட்ட உத்தரவுகள் பிறப்பிக்கப் படும், மேலும் ஒரு மனுதாரர் தனக்குச் சாதக மான உத்தரவு கிடைக்கும் வரை ஒவ்வொரு நீதிபதியையும் தொந்தரவு செய்வார். இதன் விளைவாக நீதிமன்றத்தின் நம்பகத்தன்மை மற்றும் எதிர்தரப்பினரின் நம்பிக்கை கேள்விக் குள்ளாக்கப்படும். மேலும் நீதிமன்றத்தின் நேரமும் வீணடிக்கப்படும். நீதித்துறை ஒழுக்கம், அத்தகைய விஷயங்கள், அதே நீதிபதி அமவின் போது அவரிடம் உத்தரவுகளுக்காக வைக்கப்பட வேண்டும் என்று கோருகிறது.'

4. மேற்கண்ட வழக்கில் உள்ள உண்மை களைப் பார்த்தால், குற்றவியல் வழக்கு ஒரு ஒற்றை முதல் தகவல் அறிக்கையிலிருந்து எழுந்தது என்பது தெளிவாகிறது. பிணை / முன் பிணை மனுக்களை அனுமதிப்பதில் முரண்பாடு களைத் தவிர்க்க உச்சநீதிமன்றம் இந்த அவதானிப்பைச் செய்தது. இந்த அவதானிப்பு அந்த வழக்கின் உண்மைகளின் பின்னணியில் மேற்கொள்ளப்பட்டது, மேலும் இது நாடு முழுவதும் உள்ள அனைத்து உயர்நீதிமன்றங்களாலும் பின்பற்றப்பட வேண்டிய ஒரு உத்தரவாகக் கருதப்படக்கூடாது.

5. மகாராஷ்டிரா மாநிலம் –எதிர்– கேப்டன் புத்திகோட்டா சுப்பா ராவ் (1989 Supp (2) SCC 605) என்ற வழக்கில், பிணை/முன் பிணை மனுக் களை விசாரிப்பதில் முரண்பாடுகளைத் தவிர்ப்ப தற்காக உச்ச நீதிமன்றம் சில அவதானிப்பு களைச் செய்தது. அந்த வழக்கிலும், தனிப்பட்ட சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் அதே வேளையில், உச்ச நீதிமன்றம் நாடு முழுவதும் உள்ள அனைத்து உயர் நீதிமன்றங் களுக்கும் எந்த ஒரு உத்தரவையும் பிறப்பிக்க வில்லை.

6. எம். ஜெகன் மோகன் ராவ் –எதிர்– பி.வி. மோகன் ராவ் மற்றும் மற்றொருவர் (2010 (15) SCC 491) என்ற வழக்கில், மாண்புமிகு உச்ச நீதிமன்றம், ஷாஜாத் ஹசன் கான் வழக்கை மேற்கோள் காட்டி, ''முதல் முறையாக பிணை மனுவை மறுத்த நீதிபதி அமரும்போது, அந்த வழக்கு அவரிடமே ஒப்படைக்கப்பட வேண்டும். தொடர்ச்சியான பிணை மனுக்கள், முதல் முறை யாக பிணையை மறுத்த அதே நீதிபதியிடம், அவர் அமர்வு இருக்கிறபோது முன் வைக்கப்பட வேண்டும் என்று இந்த நீதிமன்றம் சுட்டிக் காட்டியுள்ளது. இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பை உயர்நீதிமன்றம் கவனத்தில் கொள்ளும் என்று நம்புகிறோம்'' என்று ஒரு கருத்தைத் தெரிவித்தது.

7. ஜக்மோகன் பஹல் மற்றும் மற்றொருவர் –எதிர்– மாநில அரசு (தேசிய தலைநகர், டெல்லி) மற்றும் மற்றொருவர் (2014 (16) SCC 501) என்ற வழக்கில், உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பின் பத்தி எண். 13–ல் மீண்டும் வலியுறுத்தியது: ''பிணை வழங்குவதற்கான கோரிக்கையை நிராகரித்த நீதிபதி, அவர் அமர்வு இருப்பின், இரண்டாவது பிணை மனு அல்லது அடுத்த அடுத்த பிணை மனுக்களை அவரே விசாரிக்க வேண்டும். இது நீதித்துறை கண்ணியம், ஒழுக்கம் மற்றும் முறையின்மை ஆகிய கொள்கை களுக்கு இணங்க உள்ளது. அத்தகைய கொள்கை கடைப்பிடிக்கப்படாவிட்டால், சட்டத்தில் அனுமதி இல்லாத மற்றும் நிச்சயமாக புனிதத்

தன்மை இல்லாத ‘ஃபாரம் ஷாப்பிங்’ (ஒரு வழக்கை ஒரு நீதிபதியிடம் இருந்து மற்றொரு நீதிபதியிடம் மாற்ற முயற்சிப்பது) போன்ற ஒரு பெரிய சாத்தியக்கூறு உண்டு. இது அனுமதிக்கப் பட்டால், அது ஒழுங்கற்ற தன்மை, தன்னிச்சை யான போக்கு மற்றும் முடிவில் நீதி வழங்கும் அமைப்பின் மீதான நம்பிக்கையை தகர்க்கக் கூடும்.’’

8. சாஜித் –எதிர்– உத்திரப் பிரதேசம் மாநிலம் (2003 SCC Online SC 1816) என்ற வழக்கில் இந்த பிரச்சினையைத் தீர்க்க மாண்புமிகு உச்ச நீதிமன்றத்திற்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. சாஜித் வழக்கில், மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு, ‘‘அலகா பாத் உயர்நீதிமன்றத்திலிருந்து வரும் பல வழக்குகளை நாங்கள் கண்டறிந்துள்ளோம், அதில் ஒரே முதல் தகவல் அறிக்கையிலிருந்து எழும் வழக்குகள் வெவ்வேறு நீதிபதிகளிடம் வைக்கப்படுகின்றன. இது ஒரு விசித்திரமான சூழ்நிலைக்கு வழிவகுக்கிறது. ஏனெனில் சில நீதிபதிகள் பிணை வழங்குகின்றனர், விண்ணப்ப தாரர்களின் பங்கு கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருக்கும்போதுகூட, மற்ற சில நீதிபதிகள் பிணை வழங்க மறுக்கின்றனர். உச்ச நீதிமன்றம் மேலும் கூறியது: ‘‘ஒரே முதல் தகவல் அறிக்கை யுடன் தொடர்புடைய அனைத்து வழக்குகளும் ஒரே நீதிபதி முன் பட்டியலிடப் படுவது பொருத்த மானது என்று நாங்கள் கருதுகிறோம். இதனால் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளில் நிலைத்தன்மை இருக்கும்.’’

9. உச்சநீதிமன்றத்தின் மேற்கண்ட அவதானிப்புகள் /கண்டுபிடிப்புகள் அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் உள்ள பிணை/முன் பிணை மனுக்கள் தொடர்பானவை. மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் பதிவாளர் ஜெனரலுக்கு உத்தரவிட்டது, ஆனால் நாடு முழுவதும் உள்ள மற்ற அனைத்து உயர் நீதிமன்றங்களுக்கும் எந்த உத்தரவையும் பிறப்பிக்கவில்லை.

10. ராஜ்பால் –எதிர்– ராஜஸ்தான் மாநிலம் வழக்கில், மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு மீண்டும் ஒரு கருத்தைத் தெரிவித்தது: ‘‘ஒரே முதல் தகவல் அறிக்கையுடன் தொடர்புடைய அனைத்து வழக்குகளும் ஒரே நீதிபதி முன் பட்டியலிடப் படுவது பொருத்தமானது என்று நாங்கள் கருதுகிறோம். இதனால் பிறப்பிக்கப்படும் உத்தரவு களில் நிலைத்தன்மை இருக்கும். இந்த உத்தரவுகள் அனைத்து உயர் நீதிமன்றங்களின் பதிவாளர் (நீதித்துறை)க்குத் தெரிவிக்கப்பட வேண்டும், மேலும் அவர்கள் அதை உயர் நீதிமன்றத்தின் மாண்புமிகு தலைமை நீதிபதி யின் பரிசீலனைக்கு வைக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.’’ சாஜித் மற்றும் ராஜ்பால் வழக்குகளில் உள்ள அவதானிப்புகள், ஒரே முதல் தகவல் அறிக்கை/குற்ற எண் ஆகிய வற்றிலிருந்து எழும் பிணை/முன் பிணை மனுக்களுடன் முக்கியமாக தொடர்புடையவை.

11. குஷா துரூகா –எதிர்– ஒடிசா மாநிலம் (2024 (3) MWN (Cr.) 467 SC: 2024 (4) SCC 422) என்ற வழக்கில், மாண்புமிகு உச்ச நீதிமன்றம், ‘‘பிரதானி ஜானி –எதிர்– ஒடிசா மாநிலம் ( 2024 (3) MWN (Cr.) 430 SC: 2024 (4) SCC 451) என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் மூலம் இந்த நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவிட்டுள்ளது. ஒரே முதல் தகவல் அறிக்கையில் உள்ள வெவ்வேறு குற்றம் சாட்டப்பட்டவர்களால் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து பிணை மனுக்களும், நீதிபதி ஓய்வு பெற்றாலோ, மாற்றப்பட்டாலோ அல்லது வழக்கை விசாரிக்க இயலாவிட்டாலோ தவிர, அதே நீதிபதி முன்னர் தான் பட்டியலிடப்பட வேண்டும். உத்தரவுகளில் ஏதேனும் முரண்பாடு களைத் தவிர்க்க இந்த முறை உன்னிப்பாகப் பின்பற்றப்பட வேண்டும்’’ என்று கூறியது.

**உச்ச நீதிமன்றத்தின் தெளிவுரை:**

12. ஷேகர் பிரசாத் மஹ்தோ ே ஷேகர் குஷ்வாஹா –எதிர்– பதிவாளர் ஜெனரல், ஜார்கண்ட் உயர்நீதிமன்றம் மற்றும் மற்றொருவர் (W.P.(Crl.) 55/2025) என்ற வழக்கில், உச்ச நீதிமன்றம், முன்னர் குறிப்பிட்ட வழக்குகளில் கொடுக்கப்பட்ட கருத்துக்கள் நாடு முழுவதும் உள்ள பல்வேறு உயர்நீதிமன்றங்களில் பிணை / முன் பிணை மனுக்களைப் பட்டியலிடுவதில் சிரமத்தை ஏற்படுத்துகின்றன என்பதைக் கவனித்து, இந்த சிக்கல்களைத் தீர்க்க பின் வருமாறு தெளிவு படுத்தியது.

உச்ச நீதிமன்றத்தின் தெளிவுரையின் பகுப்பாய்வு:

13. மேலே குறிப்பிடப்பட்ட தீர்ப்புகளைப் படிக்கும்போது, சில தீர்ப்புகளில் கருத்துக்கள் மட்டுமே கூறப்பட்டுள்ளன. சில தீர்ப்புகளில் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்பது தெரியவருகிறது. சில தீர்ப்புகளில், ஒரே முதல் தகவல் அறிக்கை/குற்ற எண் தொடர்பான பிணை/முன் பிணை மனுக்களை அதே நீதிபதி முன் பட்டியலிடுமாறு உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன. மற்ற சில தீர்ப்புகளில், தொடர்ச்சி யான பிணை/முன் பிணை மனுக்கள், முதலில் அந்த மனுக்களை விசாரித்த அதே நீதிபதி முன் பட்டியலிடப்பட வேண்டும் என்று கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. எனவே, மாண்புமிகு உச்ச நீதிமன்றம் ஷேகர் பிரசாத் மஹ்தோ வழக்கில் இந்த நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியது.

14. அந்த வழக்கில், உச்ச நீதிமன்றம் சாஜித் மற்றும் ராஜ்பால் வழக்குகளில் குறிப்பிடப்பட்ட சட்டக் கோட்பாடுகளை பத்தி எண் 4 மற்றும் 5-ல் பரிசீலனை செய்தது, அவை பின்வருமாறு:

''4. இந்த நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு (SLP (Crl.) எண்.7203/ 2023)-ல் இவ்வாறு கருத்து தெரிவித்தது:

''7. அலகாபாத் உயர்நீதிமன்றத்திலிருந்து வரும் பல்வேறு வழக்குகளை நாங்கள் கண்டறிந்துள்ளோம். அதில் ஒரே முதல் தகவல் அறிக்கையிலிருந்து எழும் வழக்குகள் வெவ்வேறு நீதிபதிகளிடம் வைக்கப்படுகின்றன. இது ஒரு விசித்திரமான சூழ்நிலைக்கு வழிவகுக்கிறது. ஏனெனில், விண்ணப்பதாரர்களின் பங்கு கிட்டத் தட்ட ஒரே மாதிரியாக இருக்கும்போதும், சில நீதிபதிகள் பிணை வழங்குகின்றனர், மற்ற சில நீதிபதிகள் பிணை வழங்க மறுக்கின்றனர்.''

15. முந்தைய தீர்ப்புகளில் குறிப்பிடப்பட்ட சட்டக் கோட்பாடுகளைப் பரிசீலித்து, பத்தி எண். 10 முதல் 14 வரை பின்வருமாறு தெளிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன:

''10. எனவே, ஒரு குறிப்பிட்ட உயர் நீதிமன்றத்தில் பிணை மனுக்கள் வெவ்வேறு தனி நீதிபதி/அமர்வு நீதிபதிகளுக்கு ஒதுக்கப் பட்டால், ஒரே முதல் தகவல் அறிக்கையிலிருந்து எழும் அனைத்து மனுக்களும் ஒரே நீதிபதி முன் வைக்கப்பட வேண்டும் என்று நாங்கள் தெளிவுபடுத்துகிறோம்.

11. இது, ஒரே முதல் தகவல் அறிக்கை யிலிருந்து எழும் வெவ்வேறு பிணை மனுக் களில் நீதிபதி எடுக்கும் முடிவுகளில் ஒரு நிலைத் தன்மையை உறுதி செய்யும்.

12. இருப்பினும், ரோஸ்டர் மாற்றம் காரண மாக, முன்பு பிணை வழக்குகளை விசாரித்த நீதிபதி பிணை வழக்குகளை விசாரிக்கவில்லை என்றால், மேற்கண்ட உத்தரவுகள் பொருந்தாது.

13. மேலும், நீதிமன்றம் எடுக்கும் முடிவு களில் நிலைத்தன்மையை பராமரிக்க, பிணைக் காக தாக்கல் செய்யப்படும் அடுத்தடுத்த மனுக் களை விசாரிக்கும் நீதிபதி, அதே முதல் தகவல் அறிக்கையிலிருந்து எழும் பிணை மனுக்களை விசாரித்த முந்தைய நீதிபதியின் கருத்துக் களுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கலாம் என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.

14. இது பின்பற்றப்படாவிட்டால், பிரிவு அமர்வில் அமர்ந்துள்ள நீதிபதிகள் அல்லது அதற்குப் பிறகு வெவ்வேறு பணிகளை எடுக்கும் நீதிபதிகள், ஒரே முதல் தகவல் அறிக்கை யிலிருந்து எழும் மனுக்களை எடுக்க வேண்டி யிருந்தால், அது பிணை வழக்குகளில் முடிவு களை மேலும் தாமதப்படுத்தக்கூடும்.''

**சட்ட நிலை குறித்த முடிவு:**

16. பிணை/முன் பிணை மனுக்களைப் பட்டியலிடுவது தொடர்பான சட்ட நிலை இப்போது உச்ச நீதிமன்றத்தால், மேலே குறிப்பிடப்பட்ட ஷேகர் பிரசாத் மஹ்தோ ே ஷேகர் குஷ்வாஹா வழக்கில் தெளிவுபடுத்தப் பட்டுள்ளது. இந்த தெளிவுரைகள், ஒரே முதல் தகவல் அறிக்கை/ குற்ற எண்ணிலிருந்து எழும் அனைத்து பிணை /முன் பிணை மனுக்களும் ஒரே நீதிபதி முன் வைக்கப்பட வேண்டும் என்பதைத் தெளிவாக மீண்டும் வலியுறுத்து கின்றன. இது, ஒரே முதல் தகவல் அறிக்கை யிலிருந்து எழும் வெவ்வேறு பிணை/முன் பிணை மனுக்களில் நீதிபதி எடுக்கும் முடிவுகளில் ஒரு நிலைத்தன்மையை உறுதி செய்யும். இருப்பினும், பணி ஒதுக்கீடு மாற்றம் காரண மாக, முன்பு பிணை/முன் பிணை வழக்குகளை விசாரித்த நீதிபதி இப்போது அந்த வழக்குகளை விசாரிக்கவில்லை என்றால், மேற்கண்ட உத்தரவுகள் பொருந்தாது.

உச்ச நீதிமன்றத்தின் தெளிவுரையின் தாக்கம்:

17. பத்தி எண். 12-ல் உள்ள மேற்கண்ட தெளிவுரைகளின்படி, பணி ஒதுக்கீட்டில் மாற்றம் ஏற்பட்டால், பிணை/முன் பிணை மனுக்கள், முன்பு அந்த மனுக்களைத் தீர்மானித்த நீதிபதி முன் மீண்டும் வைக்கப்பட வேண்டியதில்லை, மாறாக குறிப்பிட்ட பணி ஒதுக்கீடு உள்ள நீதிபதி முன் அவை பட்டியலிடப்பட வேண்டும். பத்தி எண். 13-ல், அடுத்தடுத்த பிணை/முன் பிணை மனுக்களை விசாரிக்கும் ரோஸ்டர் நீதிபதி, முந்தைய நீதிபதியின் கருத்துக்களுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கலாம் என்றும் மேலும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

பிணை மனுக்களை உரிய நேரத்தில் முடிப்பதன் முக்கியத்துவம்:

18. நீதிபதி கிருஷ்ணய்யர் கூறியது போல, 'நமது சமூக-அரசியல் அமைப்பில் சுதந்திரம் ஒரு பெருமைக்குரிய இடத்தைப் பெறுகிறது'. காலனித்துவ ஆட்சியாளர்களால் கடுமையான சட்டங்களின் கீழ் மீண்டும் மீண்டும் சுதந்திரம் பறிக்கப்பட்ட நமது அரசியலமைப்பை உருவாக்கிய வர்களுக்கு சுதந்திரத்தின் மதிப்பு நன்கு தெரியும். அதனால்தான், இந்திய அரசியல மைப்பின் 21-வது பிரிவில், சட்டத்தால் நிறுவப் பட்ட நடைமுறையின்படி தவிர வேறு எந்த நபரின் வாழ்க்கையும் அல்லது தனிப்பட்ட சுதந்திரமும் பறிக்கப்படக்கூடாது என்று அவர்கள் வழங்கினார்கள். எனவே, பிணை/முன் பிணை மனுக்களை உரிய நேரத்தில் முடிப்பது, ஒரு குற்றம் சாட்டப்பட்டவருக்கு அரசியலமைப்பின் கீழ் உறுதி செய்யப்பட்ட ஒரு உரிமை ஆகும், இது பிணை/முன் பிணை மனுக்களைப் பட்டிய லிடுவதில் உள்ள சில நடைமுறைச் சிக்கல் களால் மறுக்கப்படக்கூடாது.

**குறிப்புரை கேள்விக்கான பதில்:**

19. இந்த நீதிமன்றத்தின் கருத்துப்படி, மேற்கண்ட தெளிவுரைகள் முரண்பாடுகளை நீக்கி, நிலைத்தன்மையை ஒரு குறிப்பிடத்தக்க அளவிற்குப் பராமரிக்கும். எனவே, இந்த நீதிமன்றம் இந்த குறிப்பிற்குப் பின்வருமாறு பதிலளிக்க விரும்புகிறது:

ஒரே முதல் தகவல் அறிக்கை/குற்ற எண்ணி லிருந்து எழும் அனைத்து பிணை/முன் பிணை மனுக்களும் ரோஸ்டர் உள்ள அதே நீதிபதி முன் பட்டியலிடப்பட வேண்டும். தற்போது, சென்னை உயர் நீதிமன்றத்தில் தலைமை அமர்வில் ஒரு நீதிபதியும், மதுரை அமர்வில் மற்றொரு நீதிபதி யும் பிணை/முன் பிணை மனுக்களை விசாரிக்கும் ரோஸ்டரை வைத்திருப்பதால், அத்தகைய சிரமம் எதுவும் இல்லை.

பணி ஒதுக்கீட்டில் மாற்றம் ஏற்பட்டால், அடுத்தடுத்த பிணை/முன் பிணை மனுக்கள், மற்றும் அது தொடர்பான மற்ற மனுக்களும், குறிப்பிட்ட பணி ஒதுக்கப்பட்டுள்ள நீதிபதி முன் பட்டியலிடப்பட வேண்டும்.

அடுத்தடுத்த பிணை/முன் பிணை மனுக் களை விசாரிக்கும் பட்டியலுக்கான நீதிபதி, ஒரே முதல் தகவல் அறிக்கை/குற்ற எண்ணி லிருந்து எழும் பிணை/முன் பிணை மனுவை விசாரித்த முந்தைய நீதிபதி தெரிவித்த கருத்துக் களுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கலாம். இருப்பினும், வேறுபட்ட கருத்துக்கள் எடுக்கப்பட்டால், அதற் கான காரணங்கள் பதிவு செய்யப்படலாம்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் பதிவகம், தாக்கல் செய்யப்படும் அனைத்து பிணை/முன் பிணை மனுக்களிலும் பின்வரும் தகவல்கள் இடம் பெறுவதை உறுதி செய்ய வேண்டும்:

- ஏதேனும் முந்தைய பிணை/முன் பிணை மனுக்களின் எண்ணிக்கை;
- அத்தகைய மனுக்களின் விவரங்கள்;
- பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளின் நகல்கள்;
- எந்த நீதிமன்றத்திலும் ஏதேனும் மனுக்கள் நிலுவையில் உள்ளதா என்பது குறித்த ஒரு அறிக்கை.

**முடிவு:**

20. அதன்படி, இந்தக் குறிப்பிற்குப் பதில் அளிக்கப்பட்டுள்ளது. சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை அமர்வு மற்றும் மதுரை அமர்வின் பதிவகம், அனைத்து பிணை /முன் பிணை மனுக்கள், மற்றும் அது தொடர் பான மனுக்கள் அனைத்தையும், குறிப்பிட்ட பணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நீதிபதி முன் பட்டியலிட்டு, முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

# அழியும் பொருட்கள் காலாவதியான பின் தீர்வாக்கலை முடிவு செய்ய வழக்குரைஞர் ஆணையர் நியமனம் அவசியமாகும்

**சென்னை உயர்நீதிமன்றம்**

**முன்னிலை: நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன்**

**உசீம (எம்டி) எண் 1888/2024 மற்றும் உபம (எம்டி) எண் 10709/2024**

4.9.2024

**2025(1)CTC 425**

ஜெகதீசன் ...மனுதாரர்

**–எதிர்–**

1.கே.ஆர். நிவேதன் 2. ராகுல் ...எதிர்மனுதாரர்கள்

ஜே.மது, மனுதாரரது வழக்குரைஞர்

பி. நாகலக்சுமி 1வது எதிர் வழக்குரைஞர் 2வது எதிர்மனுதாரர்கள் அறிவிற்றலின்றி அகன்றார்.

உசீம ஏற்கப்பட்டது.

**கோருகை:** குளித்தலை சார்பு நீதிபதியின் கோப்பிலான வமுவ எண் 7/2023இல் வவி எண் 2/2024இல் உண்டா தீர்ப்பாணை உத்தரவை நீக்கறவாக்க இந்திய அரசமைப்பு சட்ட உறுப்பு 2267 கீழ் உரிமையியல் சீராய்வு மனு தாக்க லானது.

குளித்தலை சார்பு நீதிபதியின் கோப்பிலான முவ எண் வமுவ எண் 7/2023இன் வாதி இங்குள்ள சீராய்வு மனுதாரர் ஆவார். வழக்கில் வவி எண் 2/2024இல் உள்ள ஆணைக்கு எதிராக இந்த சீராய்வு மனு வைக்கப்படுகிறது.

சீராய்வு மனுதாரரது/வாதியினது வழக்கு வருமாறு:

குளித்தலையில் உரிமையுற்ற குடிநீர் சுத்திகரிப்பு அலகை இயக்கும் நிறுமத்தின் மேலாண் கூட்டாளியாக சீராய்வு மனுதாரர் உள்ளார். எதிர்வாதிகள் வாதியை அணுகி அவரது விநியோகஸ்தர் அவர்களது ஆர்வத்தை தெரிவித்தார்கள். எனினும் அவர்களது வணிகக் குறியான ஒசன் வேவ்சை பயன்படுத்தலை அவர்கள் வற்புறுத்தினார்கள். 19.10.2019 அன்று எதிர்வாதிகளுடன் ஒரு விநியோக ஒப்பந்தத்தை வாதி செய்து கொண்டார். 14.11.2019இலிருந்து ஒப்பந்தம் அமலுக்கு வரவிருந்து மூன்றாண்டு கால அளவுக்கு செல்லுபடியானது. அது புதுப்பிக்கப்பட்டது. தொடர்ச்சியாக வியாபார உறவுமுறையில் விரிசல் வந்தது. எதிர்வாதிகள் ரூ.7,07,332 வாதிக்கு கடன்பட்டார்கள். எதிர்வாதிகளது ஸ்பெசி விவரக் குறிப்பீடுகள்படி சுத்திகரிப்பான குடிநீர் புட்டிகளை வாதி தயாராக வைத்திருந்தார். ஆனால் எதிர்வாதிகளை அவற்றை எடுத்துக் கொள்ளவில்லை. அடைக்கப்பட்ட குப்பிகள் வாதின் வளாகத்தில் இருந்து கொண்டிருக்கின்றன. எதிர்வாதிகல் எதிர்வினை ஆற்றாது இருந்ததால் குளித்தலை சார்பு நீதிபதியின் கோப்பில் வழக்கு வமுவ எண் 7/2023/7.8.2023 அன்று தொடுக்கப்பட்டது.

3. சரக்குகள் அழியும் இயல்பில் உள்ளதால் அவற்றை விற்பதற்கு வழக்குரைஞர் ஆணையர் நியமனத்துக்காக வவி எண் 2/2023ஐ வாதி தாக்கலிட்டார். எதிர்வாதிகளது விவர குறிப்பீடுகள் படி சரக்கை ஏற்கெனவே அடைத்திருந்து விளக்கச் சீட்டை ஒட்டியிருந்தார் என்பதும் சந்தையில் உடனடியாக அவை விற்கப்பட வேண்டியதாகும் எனவும் வாதியின் வழக்கு அமைந்தது. இல்லை யெனில் அவை நுகர்வுக்கு தகுதியற்றதாகும். தரப்பினர்கள் இடையில் ஒப்பந்தம் செய்யப் பட்டது எனக் காட்டிட பொருட்கூறு ஏதும் வாதி தரப்பில் குறியீடாகவில்லை என கீழமை

முடிவெடுத்தது. மனுவுக்கு ஆதரவாக தாக்க லான உறுதிமொழி ஆவணத்தில் புட்டிகள் எப்போது நிரப்பப்பட்டன என்பதும் சரக்குகள் எப்போது காலாவதியாகும் என்பதும் சொல்லப் படவில்லை என் மேலும் கருத்துரைக்கப்பட்டது. கீழமை நீதிமன்றம் வவியை தள்ளுபடி யாக்கியது. சொன்ன உத்தரவை எதிர்த்துக் கொண்டு இப்போதைய சீராய்வு மனு தாக்கலாகி யுள்ளது.

4. 19.10.2019 தேதிய வினியோக ஒப்பந்தத்தை இணைத்துக் கொண்டு கூடுதல் தட்டச்சு தாள் கோப்பை வாதி சமர்ப்பித்தார். கால ஓட்டத்தின் காரணமாக மட்டுமே சரக்குகள் காலாவதி தாண்டியுள்ளன என்பதை கூடிய மனுதாரரது வழக்குரைஞர் அவை விற்கப் படலுக்கு ஆணையிடப்படலாம் எனவும் மனு தாரரது வழக்குரைஞர் சுட்டிக் காட்டினார்.

5. எதிர்மனுதாரர்களது வழக்குரைஞர் முதல் நிலை எதிர்ப்பை எழுப்பினார். அவரது கூற்றுப் படி 2015இன் வணிக நீதிமன்றங்கள் சட்ட பிரிவு 8இன் பரிசீலனையில் இந்த சீராய்வு நிலையுறுத்ததக்கதல்ல. கீழமை நீதிமன்றத்தால் இயற்றப்பட்ட குறையுறு ஆணையில் கீழமை நீதிமன்றத்தால் உருவமைப்பான காரணங் களை அவர் மறுவலியுறுத்திக் கொண்டு இந்த சீராய்வு மனு தள்ளுபடியாதலை வேண்டினார்.

6.எதிரெதிர் வாதங்களை நான் கவனமாக்க பரிசீலித்து பதிவாவாணத்திலுள்ள பொருள் கூறுகளை ஆய்வு செய்தேன். இந்த சீராய்வின் செல்லுமை பற்றி முதலாவதாக நான் ஆராயலாம். 2015இன் வணிக நீதிமன்றங்கள் சட்டப் பிரிவு 15 கீழ்வருமாறு உள்ளது.

8.வழக்கிடை/இன்லாக்கு ஆணைக்கு எதிரான சீராய்வு விண்ணப்பத்துக்கு அல்லது மனுவுக்கு தடை: தற்போது அமலாகும் வேறெந்த சட்டத்தில் உள்ளது எதுவாகினும். ஆள்வரை குறித்த ஆணை உட்பட வணிக நீதிமன்ற உத்தரவு எதனுக்கும் எதிராக சீராய்வு விண்ணப்பம் அல்லது மனு ஏதும் விசாரிக்கப்படக் கூடாது. அத்தகைய உத்தரவு ஏதும் பிரிவு 13இன் வகையங்களுக்கு உட்பட்டு வணிக நீதிமன்ற தீர்ப்பாணைக்கு எதிரான மேல்முறையீட்டில் மட்டுமே எழுப்பப்பட வேண்டும்.''

இந்த வகையத்தின் குறியெல்லையும் வீச்சும் குஜராத் மாநிலம் –எதிர்– இந்திய ஒன்றியம் வழக்கில் (2018 SCC Online Guj.1515) குஜராத் உயர்நீதிமன்றத்தால் பரிசீலிக்கப்பட்டது. அதில் தீர்ப்பானது வருகாறு:

''34.தற்போது அமலாகும் வேறெந்த சட்டம் கீழான உரிமையியல் விண்ணப்பம் அல்லது மனு பரிசீலிப்புக்கு எதிராக வணிக நீதிமன்றங்கள் சட்டப் பிரிவு 8இல் உள்ளடங்கும் தடை "இந்திய அரசமைப்பு சட்ட உறுப்பு 227 கீழான மனுக்கள் தொடர்பில் பொருந்துகையாக கூடாது. இந்திய அரசமைப்பு சட்டப் பிரிவு 337 கீழான ஆள்வையை துயருற்ற தரப்பினர் பிரயோகித்த லுக்கான உரிமைகளை அது பாதிக்காது.''

இந்த முடிவு ரமணன் கங்காதரன் எதிர் ரைச் ஈஸ்ட் என்டர்டெயின்மென்ட் பிரைவேட் லிட் (2022 SCC Online Mad 1300) வழக்கில் சென்னை உயர்நீதிமன்றத்தால் பின்பற்றப்பட்டது. இந்திய அரசமைப்புச் சட்ட உறுப்பு 227 கீழான மேற்பார்வை ஆள்வரைக்கு 2015இன் வணிக நீதிமன்றங்கள் சட்டப் பிரிவு 8இல் வைக்கப்பட்ட தடை பொருந்தாது என்பது இந்தியாவிலுள்ள் உயர்நீதிமன்றங்களால் எடுக்கப்படும் ஒருமித்த கருத்தாகும். இந்த ஆள்வையை செலுத்தலுக் கான குறியெல்லை மிகவும் குறுகலானது எனவும் அது சிக்கனமாக பிரயோகிக்கப்பட வேண்டியதாகும் எனவும் அழுத்தமாக சொல்லப் பட்டிருந்தது. [அசோக் குமார் பூரி –எதிர்– எஸ்,சங்கன் ரியல்டர்ஸ் பிரைவேட் லிட் 2021 SCC Online Del 5220].

7. வழக்கிடை ஆணை தொடர்பாக சீராய்வு ஆள்வை செலுத்தலுக்கு தடை விதிப்பது உரிமையியல் சட்ட நெறிக்கு தனித்துவமானது அல்ல. போல தடையை 2023இன் பாரதிய நியாய சங்கீதா பிரிவு 438(2)இக்கு ஒத்திசை யும்) குற்ற விதொச பிரிவு 397(2)இம் உட்கொள்கிறது. பிரிவு 397இன் உட்பிரிவு 1 ஆல் வழங்குப்படும் சீராய்வு ஆள்வைகள் மேல்மறையீடு, விசாரணை, வழக்கு விசாரணை

அல்லது பிற செயல்முறைகள் எதனிலும் இயற்றப்பட்ட பொறுத்தளவில் செலுத்தப்படக் கூடாது என அது கூறுகிறது. உச்ச நீதிமன்றத்தில் ஒன்றுக்கு கூடுதலான தீர்ப்புகளில் குவிதொச பிரிவு 397(2)இல் உள்ள வழக்கிடை என்ற சொல்லாக்கம் விரிவாக பரிசீலிக்கப்பட்டுள்ளது. [மதுலி மாயீ –எதிர்– மகாராஷ்டிரா மாநிலம் (1977) 4 SCC; 551 அமர்நாத் –எதிர்– ஹரியானா மாநிலம் (1977 4 SCC 137) மற்றும் வி.சி.சுகலா –எதிர்– அரசு AIR 1980 SC 192] அமர்நாத் வழக்கில் தரப்பினர்களின் முக்கிய உரிமை களை அல்லது பொறுப்படைவுகளை தீர்மானிக்காது அல்லது தொடாது முற்றிலும் இடைக்கால அல்லது தற்காலிக இயல்பு ஆணைகளை குறிப்பிட 'வழக்கிடை ஆணை' என்ற சொல்ல மைப்பு குற்ற விதொச பிரிவு 3972இல் பயன் படுத்தாகியுள்ளது என தீர்ப்பானது. குற்றஞ் சாட்டப்பட்டவரது உரிமைகளை நிலையாக பாதிக்காத அல்லது தரப்பினர்களது முக்கிய உரிமைகளை தீர்மானிக்காத உத்தரவு ஏதும் அந்த உத்தரவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் சீராய்வுக்கு தடையாக இருக்கிறது என சொல்லப் பட முடியாது.

8. 2015இன் வணிக நீதிமன்றங்கள் சட்ட பிரிவு 8இல் அத்தகைய தடையை உள்ளாக்கு தலின் நோக்கத்தை காணுதல் கடினமல்ல குறிப்பிட்ட மதிப்புற்ற வணிக தாவாக்கலுக்கு விரைவு தீர்வளித்தலே 2016இன் நடுவண் சட்டம் சட்டமியற்றின் குறிக்கோளானது. வழக்கிடைக் கட்டத்தில் எதிர்ப்புகள் உயர்நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு வழக்கு விசாரணைகளுக்கு தடையாணை விதிக்கப்பட்டால் சட்டமுறையான குறியிலக்கு தோற்கடிக்கப்படும்.

9. ஆள்வை பற்றிய கேள்வி குறித்த ஆணை உட்பட வணிக நீதிமன்றத்தின் வழக்கிடை ஆணை தொடர்பில் மட்டுமே தடை செயலாற்றும் என்ற தவிர்க்கவியலா முடிவுக்கு சட்டமுறை வகையத்தை கவனமாகப் பிரித்தல் ஒருவரை இட்டுச் செல்கிறது. உத்தரவு முன் சொன்ன பிரிவுக்கு வெளியில் இருக்குமானால் அப்போது தடை செயலாற்றாது. வழக்கிடை விண்ணப்பத்தில் இயற்றப்பட்ட ஆணை வழக்கிடை ஆணையை தேவையாக உருவமைக்கவில்லை. பெயர ழைப்பை வைத்து ஒருவர் சொல்லக் கூடாது. உத்தரவின் சாரமும் தாக்கமும் பார்க்கப்பட வேண்டியதாகும். இறுதியாதலின் குணாங்கத்தை யும் பொறிகளையும் கொண்டிருந்தும் தரப்பினரின் மதிப்புறு உரிமையை பாதிக்கும் அல்லது வழக்கு விசாரணையின் முக்கிய கூறை தீர்மானிக்கும் ஆணை முற்றிலும் வழக்கிடை ஆணையாக இருக்காது என ஷா பாபுலால் கிம்ஜி –எதிர்– ஜெயாபென் டி.கனியா 1981 4 SCC 8 உச்ச நீதிமன்றத்தால் தீர்ப்பானது

10. பொருண்மை மற்றும் சட்ட நெறி பேரில் அது குடும்ப நீதிமன்றத்தின் வழக்கிடை ஆணை யாக இல்லாநிலையில் ஒவ்வொரு தீர்ப்புரையி லிருந்து அல்லது ஆணையிலிருந்து மேல் முறையீடு செல்லுவதாக வேண்டும் என கும்ப நீதிமன்றங்கள் சட்டப் பிரிவு 19 கூறுகிறது. குழந்தைகள் கையடைவு தொடர்பாக இடைக் கால இயற்றலுக்கு 1955இன் இந்து திருமண சட்டப் பிரிவு 26 வகைசெய்கிறது. அமர்நாத், மதுலிமாயீ மற்றும் வி.சி.சுக்லா வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்புகளில் குறிப்பாடு வைத்த பின்பாக, 1984இன் குடும்ப நீதிமன்றங்கள் சட்டப் பிரிவு 19(1) கீழான தீர்வழியை மறுத்தல் நோக்கத்தில் அந்த சொல்லின் அர்த்தத்துக்குள் தாயிடம் குழந்தையின் கையடைவை ஒப்புக்கும் ஆணை வழக்கிடை ஆணையாக பரிசீலிக்கப்பட முடியாது என ரோகித் தண்டேகர் –எதிர்– ராஜ் கவிதா (AIR 2003 Kant 511) வழக்கில் தீர்ப்பானது.

11 2015இன் வணிக நீதிமன்றங்கள் சட்ட பிரிவு 8 பரிசீலனையில் பிரிவு 115 கீழ் தாக்க லான உரிமையியல் சீராய்வு மனுவினது செல்லுமை பற்றிய கேள்வியை ஸ்பான் ஹெல்த்கேர் பிரைவேட் லிட் –எதிர்– விஷால் சர்மா (CRP N0.31/2021 dated 16.4.2021) வழக்கில் டில்லி உயர்நீதிமன்றம் பரிசீலித்தது. வழக்கிடை ஆணையை 2015இன் வணிக நீதிமன்றங்கள் சட்ட வரையறுத்திருக்கவில்லை எனவும் ஆகையால் சா பாபுலால் கிம்ஜி –எதிர்– ஜெயாபன் டி.கனிகா வழக்கு (1981 4 SCC 8) தீர்ப்பில் ஒருவர் கைகொள்ள வேண்டியுள்ளது எனவும் நீதிபதி

தீர்ப்பிட்டார். தரப்பினர் மீதான எதிரிடை தாக்கத்தை நிர்ணயித்தலும் மறைமுக அல்லது ஒதுக்கமானதை விட தாக்கம் உடனடியாகவும் நேரடியாகவும் உள்ளதா என்பதை காணலும் சோதனையாகும்.

12. ஏ.முன்சொன்ன முன்னுதாரணங்களை ஆழ்ந்து வாசித்தல் இரு முடிவுகளுக்கு இட்டு செல்கிறது.

ஏ.குறையுறு வழக்கிடை ஆணையாக இருக்குமானால் மட்டுமே 205இன் வணிக நீதிமன்றங்கள் சட்டப் பிரிவு 8இல் உள்ளடங்கும் தடை செயலாற்றும். வழக்கிடை ஆணையாக அழைக்கப்பட்டுள்ள ஆணை சாரத்தில் அவ்வாறு அல்ல. ஆனால் தரப்பினர்களின் நிலைமுறை யான உரிமைகளை பாதிக்கவில்லை என காட்டப் படுமானால் தடை செயலாற்றாது. உவிதொச பிரிவு 115 கீழான சீராய்வு செல்லுவதாகும். வேறு சொற்களில் உவிதொச பிரிவு 115 கீழான சீராய்வு செல்லுமா அல்லது செல்லாதா என்பது கிம்ஜி சோதையை பொருத்திக் கொண்டு தீர்மானிக்கப்பட வேண்டியதாகும்.

பி. சட்டப் பிரிவு 8இல் வகுக்கப்பட்ட தடை உள்ளதானாலும் மேற்சொன்ன குஜராத் மா நிலம் –எதிர்– இந்திய ஒன்றியம் வழக்கில் வகுக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு இந்திய அரசமைப்பு சட்டப் பிரிவு 227 கீழ் உயர் நீதிமன்றத்தின் மேற்பார்வை ஆள்வையை பிரயோகிக்கும் மனு நிலையுறுத்தத்தக்கது.

13.கையிலிலுள்ள பொருண்மைகளுக்கு வருகையில், தரப்பினர்களுக்குள் பதிவான 19.10.2019 தேதிய வியாபார ஒப்பந்தம் வழக்குரையுடன் இணைக்கப்பட்டுள்ளது என்பது காணப்படுகிறது. வவி எண் 2/2023இல் தாக்க லான எதிருரையிலும்கூட, வாதியின் அறிவுறுத்தல் பேரில் கணிசமானத் தொகையை அவர்கள் முதலீடு செய்திருந்தார்கள் என்பதை எதிர்மனு தாரர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். தரப்பினர்கள் இடையிலான ஒரு வணிக பரிவர்த்தனையை இது தெளிவாக கட்டுகிறது. தரப்பினர்கள் இடையில் வணிக உறவிருந்தது என்பதை காட்டிட ஆதாரம் கிடையாது எனும், முடிவை எட்டியதில் கீழமை நீதிமன்றம் தெளிவாக பிழையிழைத்தது. கேள்வியிலுள்ள சரக்குகள் அழியும் இயல்பான்வையாகும். சுத்திகரிப்பான குடிநீரும்கூட குறிப்பிட்ட காலவரையறைக்குள் நுகரப்பட வேண்டியதாகும். அதன் காலாவதி தேதிக்கு அப்பால் அது விற்கப்பட முடியாது. அதன் காரணமாகவே சரக்குகளை விற்க வழக்குரைஞர் ஆணையர் நியமிக்கப்பட வாதி விரும்பினார். கொள்பொருள்களின் அழியும் இயல்பு வவி எண் கோருகையிலேயே சொல்லப் பட்டுள்ளது. வவி ஏற்கப்படாதிருக்குமானால் நிதி இழப்பு ஏற்படுத்திக் கொண்டு பொருட்கள் பயனற்றதாகும் என்பதை கீழமை நீதிமன்றம் கவனித்திருக்க வேண்டும். உண்மையில் இது இந்த வழக்கில் நிகழ்ந்துள்ளது. சரக்குகளும் இப்போது காலாவதி தேதியை கடந்ததாக உள்ளன. காலாவதியான சரக்குகளை அவர் களது வணிக வளாகங்களில் வைத்திருத்தல் அவர்களது ஒப்பந்தம் ரத்தாதலுக்கு இட்டு செல்லலாம் என சீராய்வு மனுதாரரது வழக்குரைஞர் பணிந்திட்டார். அத்தகைய சரக்குகள் விற்கப்பட வேண்டியதாகும். மனுதாரரின் உரிமைகள் மீது மிகுந்த தாக்கத்தை இந்த பிரச்சனை கொண்டு உள்ளது என நான் கருதுகிறேன். மனுதாரர் மீதான தாக்கம் நேரடியாகவும் எதிரிடையாகவும் உள்ளது. ஆகையால் குறையுறு ஆணை வழக்கிடை ஆணை ஆகாது. எனவே இந்த சீராய்வு மனுவின் செல்லுமை குறித்த எதிர்ப்பு நிராகரிக்கப்படுகிறது.

14. விஷயத்தின் பரிசீலனையில் குறையுறு ஆணை நீக்கறவாக்கப்படுகிறது. இந்த உரிமை யியல் சீராய்வு மனு ஏற்று கொள்ளப்படுகிறது. மனுவில் சொல்லப்பட்ட காலாவதியான பொருள் களின் சரக்குபட்டியலை எடுத்து அவற்றுக்கு தீர்வளிப்பதை உறுதியாக்கும் வலியுறுத்துடன் வழக்குரைஞர் ஆணையரை நியமிக்குமாறு கீழமை நீதிமன்றம் பணிக்கப்படுகிறது. வழக்குரைஞர் ஆணையருக்கு வழங்கப்பட வுள்ள ஆணையில் பொருத்தமான பதங்களை கீழமை நீதிமன்றம் உட்படுத்த வேண்டும்.

**மொழியாக்கம்: பா.ஞானசேகரன்**

# பொதுவர் தீர்வை எதிர்க்கும்போது நிகழ்வு இடத்தின் அதிகார வரம்பு உள்ள நீதிமன்றத்தை தேர்வு செய்ய வேண்டும்

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை : நீதிபதி பி.பி. பாலாஜி**
**பொது.தீ.மு.ம. (பொது பிரிவு) எண்கள் 383/2024**
**17.2.2025**
**2025 (2) CTC 690**

**டாக்டர் விஸ்வநாதன் விஸ்வபாஸ்கரன் ...மனுதாரர்**

**–எதிர்–**

**ரீசர்ஜன் இன்னவேஷன்ஸ் பி.லிட். சார்பாற்றம் அதன் இயக்குரினால்,**
**லிக்லாப் ஜாய்சர், 73, ஆஸ்வாமெக் தொழில்துறை எஸ்டேட்**
**சர்கேஸ்பால்லா ரோடு, என்.ஹெச். 8ஏ, சங்கோடார்,**
**குஜராத் – 382213.**
**எண் 1256, தாஜ்பூர்–காசிந்திரா ரோடு,**
**காசிந்தா மாவட்டம், அகமதாபாத்,**
**குஜராத், இந்தியா ...எதிர்வழக்கீட்டாளர்கள்**

வி.ராமமூர்த்தி – எம்.அன்பழகனுக்காக
மனுதாரருக்கான வழக்கறிஞர்

ஆர். புஷ்கார்
எதிர்வழக்கீட்டாளருக்கான வழக்கறிஞர்

பொது. மு.ம. தள்ளுபடி செலவுத் தொகையின்றி.

**கோரிக்கை**: பொதுவர் முதன்மை மனு 1996 பொதுவர் தீர்ப்பு மற்றும் இணைக்க உடன்படிக்கைச் சட்டத்தின் பிரிவு 11(6)இன்படி முன்னிடப்பட்டு தனிபொதுவரை அமர்த்த கோரப்பட்டது. 19.4.2022 தேதியிடப்பட்ட உ.ஒ.கு. தொடர்பாக மனுதாரருக்கு எதிர்வழக்கீட்டாளருக்கும் இடையேயான பூசலை தீர்க்கக் கோரப்பட்டது. இதன் கூட்டா தன்மை ஆவணம் 19.4.2022 தேதியிடப்பட்டது.

## தீர்ப்பு

1. முதன்மை மனு1966 பொதுவர் தீர்ப்பு மற்றும் இணக்க உடன்படிக்கை சட்டத்தின் பிரிவு 11(6)இன் கூட்டாண்மை ஆவணத்தின் 19.4.2022 தேதியிடப்பட்ட உடன்பாட்டு ஒப்பந்தக் குறிப்பு 19.4.2022 தொடர்பான மனுதாரருக்கும் எதிர்வழக்கீட்டாளருக்கும் இடையேயான பூசலை தீர்க்க கோரப்பட்டது.

2. திரு. வி.ராமமூர்த்தி, திரு.எம்.அன்பழகனுக்காக வழக்கறிஞர். மனுதாரருக்காக மற்றும் ஆர். புஷ்கர் எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர் என்னால் கேட்டறியப்பட்டனர்.

3. மனுதாரரின் வழக்கறிஞர் பணிந்தளிப்பது தரப்பினர்கள் உடன்பாட்டு ஒப்பந்தக் குறிப்பிலான ஏற்படுத்தியுள்ளனர் மற்றும் கூட்டாண்மை ஆவணம் அதேநாளில் 19.4.2022 ஏற்படுத்தப்பட்டது. உ.ஒ.கு. மற்றும் கூட்டாண்மை ஆவணத்தில் தனித்தனி செல்லத்தக்க பொதுவர் தீர்ப்புகள் கூறுகளைக் கொண்டுள்ளது. மனுதாரர் சொல்லப்பட்ட பொதுவர் கூறினைச் செயற்படுத்தியுள்ளார் மற்றும் தனிப்பொதுவர்களாக அமர்த்தப்பட வேண்டியவர்களின் பெயரைக் குறிப்பிட்டுள்ளார். அதாவது 5.8.2024 தேதியிட்ட அறிக்கையில் 1996 பொதுவர் தீர்ப்பு மற்றும் இணக்க உடன்படிக்கை சட்டத்தின் 21ஆம் பிரிவின்படி. எனினும், எதிர்வழக்கீட்டாளர் அறிவிக்கை மூலமாக 7.8.2024 தேதியிட்டதில் பொதுவர் தீர்ப்புக் கூறு உ.ஒ.மு. கூறினைச் செயற்படுத்தியுள்ளார் மற்றும் கூட்டாண்மை ஆவணம் 19.4.2022 தேதியிடப்பட்டது. மூன்று பெயர்கள் கூறப்பட்டுள்ளன. அதாவது எதிர் வழக்கீட்டாளரின் தேர்விற்கு இவற்றில் இருந்து தேர்ந்தெடுப்பதற்கு.

4. அறிவிப்பு பெறப்பட்டதன்பேரில் அதாவது மனுதாரரின் 7.8.2024 தேதியிட்ட அறிவிப்பு எதிர்வழக்கீட்டாளர் 13.8.2024 தேதியிடப்பட்ட பதில் அறிக்கையினை அனுப்பியுள்ளார். அதில்

மனுதாரரால் கூறப்பட்ட பெயர்களை ஏற்க மறுத்துள்ளனர் மற்றும் கூறியுள்ளதாவது அகமதாபாத் குஜராத் மாநிலத்தில் உள்ள நீதிமன்றங்களுக்கு மட்டுமே அதிகார வரம்பு உள்ளதாகவும் சென்னை நீதிமன்றங்களுக்கு அல்ல என்றும் கூறப்பட்டுள்ளது. இதில் மேலும் குறிப்பிடப்பட்டதாவது அதாவது எதிர்வழக்கீட்டாள ரால், சொல்லப்பட்ட பதில் அறிக்கையில் சட்டத்தின் பிரிவு மனுதாரர் சட்டத்தின் பிரிவு 11(6)இனைச் செயற்படுத்தியது. சரியல்ல என்பது. அதன் பின்னர், மனுதாரர் சட்டத்தின் பிரிவு 11(6)இனைச் செயற்படுத்தி மூல மனுவின் பொதுவர் தீர்ப்பை ஏற்க முன் வந்துள்ளார்.

5. மனுதாரரின் வழக்கறிஞர் பணிந்த ளிப்பது இதில் புரிந்துணர்வு குறிப்பாணை மற்றும் கூட்டாண்மை ஆவணம் குஜராத்தில் ஏற்படுத்தப்பட்டது மற்றும் எதிர்வழக்கீட்டாளர் குஜராத்தில் அலுவல் நடத்தி வருகிறார். செயற்படுபொருளின் பகுதி சென்னையில் எழுந்துள்ளது. இதில் மனுதாரருக்கு இணங்க, ஏற்பாட்டு/தயாரிப்பு பிரிவு மனுதாரருடையது அமைந்துள்ள இடம். எனவே மனுதாரரின் வழக்கறிஞர் பணிந்தளிப்பது, மறு செய்யத் தக்கதே அதுவும் இந்த நீதிமன்றத்தின் முன்பு என்பது. சட்டத்தில் பிரிவு 11(6) இனைச் செயற்படுத்துவதில் மனுதாரரின் வழக்கறிஞர் பணிந்தளிப்பது இதில் உள்ள தொழில்நுட்ப பூசலுக்கு தீர்வுகளைச் செய்ய வேண்டியுள்ளது. தவறான சட்ட வகைமுறையை செயற்படுத்துவது மனுதாரருக்கு எதிராக செயற்படக் கூடாது. எனவே அதனை அனுமதிக்குமாறு அவர் கோருகிறார்.

6. மாறாக, எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர் பணிந்தளிப்பது வழக்கின் செயற்படுபொருள் முழுவதும் குஜராத் மாநிலத்தில் அமைந்தது மற்றும் எந்தப்பகுதியும் இதில் செயற்பாடு தமிழ்நாடு மாநிலத்தில் எழவில்லை. அதுவும் குறிப்பாக சென்னை நகரில் அதாவது மனு தாரரால் கோரப்பட்டவாறு எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர் பணிந்தளிப்பது சட்டத்தின் பிரிவு 11(5) மற்றும் 11(6)இனைச் செயற்படுத்து வதில் பெருத்த வேறுபாடு உள்ளது மற்றும் முதல் நிலையில் எழுப்பப்பட்ட மறுப்பு மூல மனுவினை செல்லத்தக்கதாக்குதல் சட்டத்தின் பிரிவு 11(6)இன்படி என்பது. எதிர்வழக் கீட்டாளரின் வழக்கறிஞர் கோருவது, மூல மனுவினை தள்ளுபடி செய்யக் கோருகிறார்.

7. இது தொடர்பாக உச்சநீதிமன்ற வழக்கு ஆதாரமாகக் காட்டப்பட்டுள்ளது. சுவதேஷ்குமார் அகர்வால் –எதிர்– தினேஷ்குமார் அகர்வால் மற்றும் பிறர் 2022 (10) உச்.நீ.வ. 235, அவர் கேரளா உயர்நீதிமன்ற முடிபினை ஆதாரமாகக் காட்டியுள்ளார். துல்சி டெவலப்பர்ஸ் தனியார் இந்தியா பி.லிட். –எதிர்– டாக்டர் அப்பூ பென்னி தாமஸ் 2021 கேரளா 24896.

8. சட்டத்தின் பிரிவுகள் 11(5), 11(6) களும் இடையேயான வேறுபாட்டை கொண்டு வருவதில் அவர் உச்சநீதிமன்ற முடிவினை ஆதாரமாக்கியுள்ளார். பாரத் சஞ்சார் நிகாம் வரையறுக்கப்பட்டது மற்றும் பிறர் –எதிர்– நார்டெல் நெட்வொர்க்ஸ் பி.லிட்., 2021 (3) சிடிசி 792 (உச்.நீ.): 2021 (5) உச்.நீ.வ. 738, மேலும் உச்சநீதி மற்றும் சட்டத்தின் பிரிவுகள் 11(5), 11(6) பற்றி விரிவாக கலந்தாய்வு நடத்தியுள்ளது. அவர் அடுத்து ஆதாரமாக்குவது கிங்ஸ் சாரியாட் –எதிர்– தருண் வாத்வா, பொ.நீ. எண் 421/2024. டெல்லி உயர்நீதிமன்றம் முடிபு 21.5.2024 தேதியிடப்பட்டது. இதன் செயற்படுபொருள் தொடர்பாகவும் அதிகார வரம்புக் கூறுகள் தொடர்பாக. அதாவது பொதுவர் நடவடிக்கைகளைப் பொறுத்தவரை அதே சொற்றொடர்களின்படி அவர் ஆதாரமாகக் கொண்ட முடிவுகள் தில்லி உயர்நீதிமன்ற ஆர்கா ஸ்போர்ட்ஸ் மேனேஜ்மெண்ட் பி.லிட். –எதிர்– கல்சி பில்ட்கான் பி.லிட் 2020 டிஎச்சி 2233.

9. உச்சநீதிமன்றம் விதிக்கப்பட்ட நெறி முறை பின்பற்றி எனது கவனத்தை ஈர்ப்பதன்றி கேரளா மற்றும் தில்லி உயர்நீதிமன்ற முடிவுகள் மேலே கூறப்பட்டவை. எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர் என்னை அந்த ஆவணங்களை காட்டி அவரது வாரங்களை நிலை நிறுத்துவார். அதில் மொத்த செயற்படு பொருள் குஜராத் மாநிலத்தில் தான் எழுந்தது என்பது. இதில் இவர் வாதமாவது ஏற்கப்பட்ட உடன்படிக்கையும் கூட்டாண்மை ஆவணமும் அகமதாபாத்தில்

மட்டுமே ஏற்படுத்தப்பட்டது. அந்த நிறுவனம் சீராவின் ஆய்வகம் அகமதாபாத்தில் உள்ளது. இதில் இவர்களது வியாபாரப் பொருட்கள் தயாரிக்கப்பட்டு சந்தைப்படுத்தப்படுகிறது. ஸ்பெசாலிடி செராமிக் டைல்ஸ் அகமதாபாத்தில் இந்த அலுவலக பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அகமதாபாத்தில் உள்ளது. அலுவல் இடம், அனைத்து பதிவேட்டு புத்தகங்களும் அகமதா பாத்தில் உள்ளது. இவர்களுக்கிடையே சமரச பேச்சு பொதுவர் குழு பூசல்களை தீர்ப்பான தொடர்பான இடம் அகமதாபாத்தில் உள்ளது. இத்தகைய பொருண்மையின் சூழ்நிலைகளைச் சுட்டிக்காட்டி, எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர் பணிந்தளிப்பது அருகாமையில் உள்ள சோதனைக் கூடம் வசதிக்காக பொதுவர் தீர்ப்பாயம் அகமதாபாத் ஆக இருத்தல் அவசியம் என்பது. இதுவே பூசல்களுக்கு தொடர்புடைய இடம் மற்றும் இடம் சென்னையாக அமைய இயலாது என்பதே. மனுதாரரின் வழக்கறிஞரின் வாதமும்.

10. மேலும், எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர் பணிந்தளிப்பது எதிர்வழக்கீட்டாளர் நிறுவனத்தின் முதலீட்டிற்காக பெரும் பங்களித்துள்ளார் என்பது. அவருக்கான செலவுத் தொகை ஏற்பட்டது. அந்த பணியிடத்தை ஏற்படுத்துவதில் அது சங்கோடரில் உள்ளது. அகமதாபாத் இதில் வாரம் மனுவில் குறிப்பிட்டது. உற்பத்திப் பிரிவு சென்னையில் உள்ளதாக இதனை மெய்ப்பிக்க முடியாது. ஏனெனில் வழக்கின் காரணம் எழும் இடம் எனவே மனுவை 11(6) பிரிவை செயற்படுத்துவது (மீண்டும் தவறாகவே அமையும்) மற்றும் தனிப் பொதுவாக அமர்த்தக் கோருவது.

11. இந்தப் பணிந்தனுப்புதல்களை நான் கவனமாக கருதுகை செய்துள்ளேன். அதாவது இரு தரப்பிலும் அளிக்கப்பட்டவற்றை நான் பதிவேடுகளைப் பார்த்துள்ளேன் மற்றும் தரப்பினர்களின் வழக்கறிஞர்களால் ஆதாரமாக்கப் பட்ட முடிவுகள் உள்ளடங்கலாக.

12. முதலில் தரப்பினர்களுக்கிடையேயான பொதுவர் உடன்படிக்கையை கவனிப்போம். தரப்பினர்கள் 19-4-2022 தேதியிடப்பட்ட ஒரு பு.ஒ.கு. நிறைவேற்றப்பட்டதை பூசலாக்க வில்லை மற்றும் 19.4.2022 தேதியிட்ட கூட்டாண்மை ஆவணம் அகமதாபாத்தில் ஏற்படுத்தப்பட்டது. பொதுவர் கூறு இரு ஆவணங் களில் உள்ளவை. இவை ஒன்றானவை. இதில் சுட்டுகை வசதிக்காக இரண்டும் குறிப்பிடப் பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்த குறிப்பாணை 19.4.2022 தேதியிடப்பட்டது.

19. பொதுவர் தீர்ப்பு : இரு தரப்பினர்களும் எந்தப் பிரச்சினையையும் அனைத்து முயற்சி களையும் செயற்படுத்தி தீர்க்க உடன்படு கின்றனர். அதாவது பிரச்சினை செயற்படுத்தி தீர்க்க உடன்படுகின்றனர். அதாவது பிரச்சினை எதிர்காலத்தில் எழுமானால், எந்த நேரத்தில் புரிந்துணர்வுடன் சமரசமாக தீர்வுகாண ஏற்பாடு இதற்குப் பின்னரும் பிரச்சினை தீர்வு காண முடியாவிட்டால் இரு தரப்பினர்களும் ஒரு பொதுவரை அமர்த்த உடன்படுவர். உடன்படிக்கை மூலமாக இந்த பிரச்சினைகளை தீர்க்கவும் சட்ட நடவடிக்கைகளை தவிர்க்கவும் உடன்படு கின்றனர்.

கூட்டாண்மை ஆவணம் 19.4.2022 தேதி யிடப்பட்டது. 53 தரப்பினர்களுக்கிடையே அல்லது கூட்டாண்மையர்களுக்கிடையேயான பூசல்கள் அனைத்தையும் மற்றும் கூட்டாண்மை தொடர்பாகவும் இந்த உடன்படிக்கையின் வரையறைகளின்படி தீர்வு காண முடிவாகாத போது அவை பொதுவரிடம் சுட்டப்படும். அதாவது 1996 பொதுவர் தீர்ப்பு மற்றும் இணக்கத் தீர்வு உடன்பாட்டின் வகைமுறை களின்படி.

13. பு.ஒ.கு.யில் உள்ள பொதுவர் தீர்ப்புக் கூறினைப் படிப்பதிலும், கூட்டாண்மை ஆவணத்தில் உள்ளதும் கூறுவது தரப்பினர்கள் இதன் நடைமுறை தொடர்பாக ஓர் உடன்பாடு செய்து கொள்ளவில்லை. அதாவது தீர்ப்பாயத்தி னால் ஏற்கப்பட்ட நடைமுறை அதாவது பூசல் களை பொதுவர் தீர்ப்புக்கு பணிந்தனுப்புதல் தொடர்பான உடன்பாடு.

14. 1996 பொதுவர் தீர்ப்பும் மற்றும் இணக்க உடன்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 11 பின் வருமாறு.

11. பொதுவர்களை அமர்த்துதல், (1) எந்த நாட்டவராக இருந்தாலும், ஒருவர் பொதுவராக லாம். அதாவது தரப்பினர்களால் வேறு வகை யாக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தாலன்றி.

(2)(6)ஆம் உட்பிரிவிற்கு உட்பட்டு தரப்பினர்கள் பொதுவர் அல்லது தயாரான வர்களே.

(3) உடன்படிக்கை எதுவும் தவறுகிறபோது அதாவது (2)ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்டவை. ஒரு பொதுவர் தீர்ப்பில் மூன்று பொதுவர்கள். ஒவ்வொரு தரப்பினரும் ஒவ்வொருவர் அமர்த்துவர். இரண்டு அமர்த்தப்பட்ட பொதுவர்கள் ஒரு பொதுவரை அமர்த்துவர். அவர் தலைமை தாங்குபவராகச் செயற்படுவார்.

(4) (3)ஆம் உட்பிரிவின் நடைமுறை அமர்த்துவது தொடர்பாக செயற்படுமானால் மற்றும்

(அ) ஒரு தரப்பினர், மற்றொரு தரப்பினர் பொதுவரை அமர்த்தக் கோரப்பட்ட முப்பது நாட்களுக்குள் அவரை அமர்த்த மற்றொரு தரப்பினர் தவறுகிறபோது அல்லது

(அ)ஒரு தரப்பினர் மற்றொரு தரப்பினர் பொதுவரை தவறுகிறபோது அல்லது

(ஆ) இரண்டு அமர்த்தப்பட்ட பொதுவர்களும் மூன்றாவது பொதுவரை அமர்த்துவதில் உடன்பாடு எட்டாதபோது அதாவது அவர்கள் அமர்த்தப்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள்

பொதுவரை அமர்த்துவது தரப்பினரின் கோரிக்கையின்பேரில், உச்சநீதிமன்றம் அல்லது நேர்வுக்கேற்ப உயர்நீதிமன்றம் அல்லது ஆள் எவரும் அல்லது நீதிமன்றத்தால் பெயர் குறிக்கப்பட்ட அமைப்பு அமர்த்துதலை செய்யும்.

5(2)ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட உடன் படிக்கை எதுவும் தவறுகிறபோது, தனிப் பொதுவரின் தீர்ப்பில் ஒரு தரப்பினரின் கோரிக்கையை மற்றொரு தரப்பினர் உடன் படாதபோது தரப்பினரின் கோரிக்கையின் பேரில், உச்சநீதிமன்றம் அல்லது நேர்வுக்கேற்ப உயர்நீதிமன்றம் அல்லது ஆள் எவரும் அல்லது நீதிமன்றத்தால் பெயர் குறிக்கப்பட்ட அமைப்பு, அமர்த்துதலைச் செய்யும்.

6. அமர்த்துவதற்கான நடைமுறை தொடர் பாக, தரப்பினர்களால் உடன்படிக்கை ஏற்படுகிற விடத்து.

(அ) அந்த நடைமுறையின்படி செயற்பட ஒரு தரப்பினர் தவறுகிறவிடத்து அல்லது

(ஆ) தரப்பினர்கள் அல்லது அமர்த்தப்பட்ட இரு பொதுவர்கள் அவர்களிடையே எதிர்பார்க்கப் பட்ட ஓர் உடன்படிக்கை எட்டப்படத் தவறுகிற விடத்து அல்லது

(இ) ஒருவர், ஓர் அமைப்பு உள்ளடங்கலாக, அதற்கு அல்லது அவருக்கு ஒப்படைக்கப்பட்ட அலுவல் பணி எதனையும் அல்லது அதற்கான நடைமுறையினை செய்யத் தவறுகிறவிடத்து.

ஒரு தரப்பினர் உச்சநீதிமன்றத்தை அல்லது நேர்வுக்கேற்ப உயர்நீதிமன்றத்தை அல்லது ஆள்எவரும் அல்லது நீதிமன்றத்தால் பெயர் குறிக்கப்பட்ட அமைப்பு. தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளும். அந்த அமர்த்து தலை செய்யும் வேறு வகையான வகை செய்யப் பட்டிருந்தாலன்றி.

6(அ) உச்சநீதிமன்றம் அல்லது நேர்வுக் கேற்ப உயர்நீதிமன்றம், உட்பிரிவு (4) அல்லது உட்பிரிவு (5) அல்லது உட்பிரிவு (6)இன் படிவான விண்ணப்பம் எதனையும் கருதுகை செய்யும்போது, தரப்பு தீர்ப்பாணை அல்லது நீதிமன்றம் ஏதொன்றின் ஆணை அதன் விசாரணைக்கு உட்பட்டு செயற்படும்.

6(ஆ) உச்சநீதிமன்றத்தால் அல்லது நேர்வுக்கேற்ப உயர்நீதிமன்றத்தினால், ஆள் எவரையும் அல்லது அமைப்பு எதனையும் பெயர் குறித்து அமர்த்தும்போது அதாவது இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக அது உச்ச நீதிமன்றத்தினால் அல்லது உயர்நீதிமன்றத் தினால் நீதித்துறை அதிகாரம் ஒப்படைவு செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

15. பிரிவு 11(5)இனைப் படிப்பதிலிருந்து, அறியப்படுவது, ஒரு பொதுவரை அல்லது பொதுவர்களை அமர்த்துவதற்கான நடைமுறை யின்பேரில் உடன்பாடு ஏற்படத் தவறுகிறபோது மற்றும் தரப்பினர்கள், மற்றொரு தரப்பினரின் கோரிக்கையைப் பெற்றதிலிருந்து 30 நாட் களுக்குள் தரப்பினர் உடன்படத் தவறுகிறபோது

5ஆம் உட்பிரிவின் வரையறைகளின்பேரில் 11ஆம் பிரிவின் (4)ஆம் உட்பிரிவின் வகை முறைகளுக்கிணங்க, அமர்த்தப்படும். எனினும் அமர்த்துதல் நடவடிக்கை தொடர்பாக தரப்பினர் கள் ஏற்கனவே உடன்படுகிறவிடத்தும் மற்றும் அதன் பின்னரும், தரப்பினர்களில் ஒருவர் நடைமுறையின்படி நடக்கத் தவறுகிறபோது, சட்டத்தின் 11(6)இன்படி மனுவானது செயற் படுத்தப்பட வேண்டும்.

16. தற்போதைய வழக்கில், ஏற்கனவே காணப்பட்டவாறு அதாவது பொதுவர் கூறி லிருந்து மேற்கூறப்பட்டவாறு, பொதுவரை அமர்த்துவதில், ஏற்கப்படும் நடைமுறை தொடர்பாக எந்த உடன்படிக்கையும் இல்லை. எனவே, கையில் உள்ள வழக்கில், தெளிவாக அது, பிரிவு 11(5)இன் வீச்சுக்குள் உள்ளதாகத் தெரிகிறது. ஆனால் 11(6)இன்படி அன்று. இதில் இப்போது, காணப்படுவதாவது மனுதாரர் சட்டத்தின் பிரிவு 11(5)இன்படி மு.ம. வினை நிரப்புவதற்கு முன்னர் சட்டத்தின் பிரிவு 11(6)இனைச் செயற்படுத்துவது செல்லத்தக்க தாகவே உள்ளது.

17. உச்சநீதிமன்றம், சுவதேஷ்குமார் அகர்வால் வழக்கில் (மேலே சுட்டப்பட்டது) கூறப்பட்டதாவது, சட்டத்தின் பிரிவுகள் 11(5), 11(6)களும் இடையே உள்ள வேறுபாடு தெளிவாக்கப்படுகிறது மற்றும் தரப்பினர் களிடையே எழுத்து மூல உடன்படிக்கை எதுவும் இல்லாதவிடத்து, அதாவது பொதுவர் ஒருவரை அமர்த்துவது தொடர்பான, நடைமுறை, அப்போது, தரப்பினர்கள் நடைமுறை பற்றி உடன்படிக்கை செய்து கொள்ள சுதந்திரம் பெற்றவர்கள். இவர்களுக்கிடையேயான இசைவுடன் மற்றும் அல்லது உடன்படிக்கை மூலம் பூசலானது தனிபொதுவர்/பொதுவர் அமர்த்தப்பட்டு பூசல் சுட்டப்படும். எனினும், அத்தகைய உடன்படிக்கை மூலம் பூசலானது தனிப்பொதுவர்/பொதுவர்கள் அமர்த்தப்பட்டு பூசல் சுட்டப்படும். எனினும், அத்தகைய உடன்படிக்கை எதுவும், தவறுகிறபோது, சட்டத்தின் பிரிவு 11(5) ஈர்க்கப்படும். எந்த நிலையற்ற வரைக்கட்டுகளும் இன்றி உச்ச நீதிமன்றம் கூறியவதாவது, இத்தகைய சூழ்நிலைகளில், பொதுவரை அல்லது பொதுவர் களை அமர்த்துவதற்கான சட்டத்தின் பிரிவு 11(5)இன்படி செய்யத்தக்கதாகும் மற்றும் பிரிவு 11(6)இன்படி அன்று மற்றும் பொருண்மையின்படி பத்தி எண் 72இல் கூறப் பட்டதாவது பிரிவு 11(6)இன்படி செய்யப் பட்ட விண்ணப்பம் செய்யத்தக்கதாகாது பிரிவு 11(6)இன்படி செய்யப்பட்ட விண்ணப்பம் செல்லத்தக்கதாகாது. எனவே, உச்ச நீதிமன்றத்தின் விகிதாச்சாரத்தை, பயன்படுத்தி, மனுவானது முன்னிடப்பட்டது. பிரிவு 11(6)இனை செயற் படுத்தி, அளிக்கப்பட்ட வழக்கின் சூழ்நிலைகள் மற்றும் பொருண்மை களின்படி வழக்கு, தெளிவாக செய்யத்தக்கதல்ல. சட்டத்தில் கருத்தில், மேல்நிலை நீதிமன்றம் கருத்தாவது, மனுதாரர் இதனை ஒரு தொழில்நுட்ப எதிர்ப்பாக வாதிட முடியாது. பொருண்மையின்படி, பதில் அறிக்கையிலும் கூட, எதிர்வழக்கீட்டாளர், தெளிவாக கூறியுள்ள தாவது மனுதாரரின் அறிவிப்பில் பிரிவு 11(5) பொருந்தாது என்று கூறப்ப்ட்டுள்ளது. எனினும், மனுதாரர் திருத்தங்கள் எதனையும் செய்ய முன் வர வில்லை.

18. வேறுவகையிலும் கூட இந்த நீதிமன்றத்தின் அதிகார வரம்பு தொடர்பான எதிர்ப்பு, இந்த நீதிமன்றம் பிரிவு 11இன்படியான மனுவை ஏற்கும். அதுவும் அதன் பதிவேடுகளை படித்த அறிந்ததனால் மற்றும் இது ஏற்றுள்ளதாவது பு.உ.ஒ.கு. நிலை மற்றும் கூட்டாண்மை ஆவணம். இவை அகமதாபாத்தில் மட்டுமே ஏற்படுத்தப்பட்டுள்ளது. கூட்டாண்மை நிறுவனம் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அகமதாபாத்தில் உள்ளது மற்றும் திறக்க கருதப்பட்ட பிரிவும் கங்கோத்திரில் குஜராத்தில். எனவே, என்னால் எதிராக வாதிட முடியாத பணிந்தனுப்புதல் அதாவது மனுதாரர் வாதமான பகுதி காரண காரியம் தமிழ்நாடு மாநிலத்தில் எழுவதாகக் கூறப்படுவது அதுவும் சென்னை நகரில், பொருண்மையின்படி குறிப்பிட்ட வாதம்

மனுவில் இருந்தபோதிலும் பிரிவு 11(6)இன்படி எதிர்வழக்கீட்டாளர் அவரது எதிர்வாதத்தில் வலியுறுத்தி மறுத்துள்ளதாவது மனுதாரரின் கோரிக்கையை அதாவது சென்னையில் பகுதி செயற்படும் காரணம் உள்ளதாக, மனுதாரரால் இது தொடர்பாக எந்த ஆவணங்களும் முன்னிடப்படவில்லை. அதாவது இந்த விவர உரைக்கு ஆதரவாக அதாவது பிரிவு 11(6இன் படியான மனுவின்படி பகுதி செயற்படுபொருள் சென்னையில் ஏற்பட்டதாக அதாவது உற்பத்தி பிரிவு மனுதாரரின் வீட்டில் இந்தக் கோணத்தி லிருந்து பார்க்கும்போதும் என்னால் மனு தாரரின் விதத்தினை ஏற்க இயலவில்லை. அதாவது பகுதி செயற்படு காரணம் சென்னை யில் எழுந்ததாக. எனவே, பிரிவு 11இன் மறு செல்லத்தக்கதல்ல. அதாவது இந்த நீதிமன்றத்தில், இது தொடர்பாக, தில்லி உயர்நீதிமன்ற முடிவுகள் கிங்ஸ் சாரியட் வழக்கில் என்பது பார்க்கப்பட வேண்டியது.

19. தில்லி உயர்நீதிமன்றம் இரண்டு முடிவு களிலும், உச்சநீதிமன்ற வழக்கை ஆதாரமாகக் கொண்டுள்ளது. இன்டஸ் மொபைல் விநியோகிப்பவர்கள் தனியார் வரம்பிடப்பட்டது மற்றும் பிறர். 2017 (4) த.த.வ. 213, (உச்.நீ.) 2017 (7) உச்.நீ.வ. 678 கூறியதாவது பிரிவு 20 தரப்பினர்களின் தன்னுரிமையை ஏற்கிறது. அதன்படி பொதுவர் இடம் பொதுவானதாக தேர்ந்தெடுக்கும், எங்கு எந்த செயற்படு காரண காரியமும் எழாத இடமாக. ஆனால், ஒரு முறை இந்த இடம் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அந்த இடத்து நீதிமன்றம் தனிப்பட்ட அதிகார வரம்பைப் பெறும் அதாவது இந்த பொதுவர் தீர்ப்பினை முறைப்படுத்த நடவடிக்கைகள் இவை தரப்பினர்களுக்கிடையேயான உடன் படிக்கை யின்படி எழும்.

ஆ) தில்லி உயர்நீதிமன்றம் மேலும் கூறிய தாவது, தரப்பினர்கள் அவரவருக்கான ஆனது இடங்களை தீர்மானிக்காதபோது 1996 பொதுவர் தீர்ப்பு மற்றும் சமரச உடன்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 2012இன்படி பொதுவர் தீர்ப்பாயத்தினால் இடம் தெரிவு செய்யப்படும் மற்றும் தகுதி வாய்ந்த நீதிமன்றம் சட்டத்தின் 11ஆம் பிரிவின்படி விண்ணப்பம் ஒன்றினை ஏற்கும். இது சட்டத்தின் 2(1)(ஆர்)யுடன் சேர்த்து வாசிக்கப்படுகிற விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவுகள் 16 முதல் 20 வரையிலான வற்றின் பொருள் வரையறை செய்யப்பட்ட வாறானது. சொல்லப்பட்ட வழக்கில், பொதுவர் உடன்படிக்கையின்படி தரப்பினர்கள் பொதுவர் தீர்ப்பின் இடம் தொடர்பாக உடன்படவில்லை. எனவே சட்டத்தின் பிரிவு 20(2)இன்படி பொது தீர்ப்பாயத்தினால் இது தீர்மானிக்கப்படும். இதன் விளைவாக பிரிவு 2(1)(சி) உடன் சே./ ம.உ.வி.தொ.ச.இன் பிரிவுகள் 16.20இன் பொருளின்படி ஒரு தகுதி வாய்ந்த நீதிமன்றம் சட்டத்தின் 11ஆம் பிரிவின்படியான ஒரு விண்ணப்பத்தினை ஏற்கும். இந்த நீதிமன்றம் ஆட்சி மண்டல அதிகார வரம்பு கொண்டிருக்க வில்லை. இது பொதுவர் தீர்ப்பாய இடமும் இல்லை. இந்த இடத்தில் செயற்படு காரணம் எழுந்த இடத்தி லான நீதிமன்றமும் இல்லை. மேலும் எதிர்வழக்கீட்டாளரும் ஏற்கப்பட்டவாறு இவர்களது வியாபார இடம் அகமதாபாத்தில் உள்ளது. குஜராத் இங்கு தான் உடன்படிக்கை மற்றும் பகுதி காரணம் எழுந்ததாக கூறப்படும் நகரம் தொடர்பாக ஆதாரமாக எந்த ஆவணமும் இல்லை. அதாவது சென்னை நகர். எனவே நான் மனுதாரரின் வழக்கறிஞர் பணிந்த னுப்புதல்களை ஏற்க தயாராக இல்லை.

21. மேற்சொல்லப்பட்ட பிரிவு 11 மனுவினை ஏற்கும் அதிகார வரம்பு கொண்டிருக்கவில்லை பிரிவுகள் 1620 உ.வி.தொ.ச. எனவே, முதன்மை மனுவில் எந்த குறிப்பும் இல்லை. இதன் விளைவாக, இந்தக் காரணத்தின்பேரில் பொதுவர் முதன்மை மனு தள்ளுபடி செய்யப் படத்தக்கதாகும்.

22. அறுதியாக, இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது, செலவுத் தொகை பற்றி எந்த ஆணையும் இல்லை.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

# முந்தைய வாங்குனருக்கு விற்றவரால் வழங்கப்பட்ட புழக்கவுரிமை பின் வாங்குனரால் மறுக்கப்படவோ அல்லது மறுதலிக்கப்படவோ முடியாது

**சென்னை உயர்நீதிமன்றம்**
**முன்னிலை: நீதிபதி கே.ராஜசேகர்**
**இரண்டாவது மேல்முறையீடு எண் 1275/2012 மற்றும்**
**பல்வகை மனு எண் 1/2012**
**2025(1) CTC 363**

**பத்மா** **...மேல்முறையீட்டாளர்**

**-எதிர்-**

**மாணிக்கம்** **...எதிர்மேல்முறையீட்டாளர்**

ஆர்.எழிலரசன், மேல்முறையீட்டாளரது வழக்குரைஞர்

வி.நிக்கோலஸ், எதிர் மேல்முறையீட்டாளரது வழக்குரைஞர்

இ.மே.பகுதியாக ஏற்கப்பட்டது. செலவு தொகையில்லை.பவம தீர்வானது

கோருகை: ஹரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் கோப்பிலான முவ எண் 278/ 2004இல் இயற்றப்பட்ட 30.1.2012 தேதிய தீர்ப்புரையையும் தீர்ப்பாணையையும் உறுதி படுத்திக் கொண்டு, ஹரூர் சார்பு நீதிமன்ற கோப்பிலான மேவ எண் 21/2012இல் இயற்றப்பட்ட 13.9.2012 தேதிய தீர்ப்புரைக்கும் தீர்ப்பாணைக்கும் எதிராக இரண்டாவது மேல் முறையீடு உரிமையியல் விசாரணைமுறை தொகுப்புச் சட்டப் பிரிவு 100 கீழ் தாக்கலானது.

## தீர்ப்புரை

இங்குள்ள மேமுஆல் விளம்புகை மற்றும் உறுத்துக் கட்டளை பரிகாரத்துக்கான வழக்கை நிராகரித்துக் கொண்டு விசாரணை நீதிமன்றத் தாலும் கீழமை மேல்முறையீடு நீதிமன்றத் தாலும் இயற்றலான ஒருங்கியல் வான தீர்ப்புரையையும் தீர்ப்பாணையையும் எதிர்த்து இந்த இரண்டாவது மேல்முறையீடு வாதியால் தாக்கலிடப்பட்டுள்ளது.

2. வசதியின் பொருட்டு விசாரணை நீதிமன்றத்திலுள்ள வரிசைப்படி தரப்பினர்கள் குறிப்பிடப்படுகிறார்கள்.

318,2.1987 தேதிய கிரைய பத்திரப்படி எதிர்வாதிகளுக்கு விற்றவரிடமிருந்து எதிர்வாதி களின் நிலத்துக்கு தென்பகுதியில் அமைந்துள்ள நிலத்தை வாதி வாங்கியிருந்தார். கிரைய ஆவணத்தில் வரைவு வரைபடத்தில் ஏபிசிடி ஆக காட்டப்பட்ட நிலத்தை அடைதலுக்கு, எதிர்வாதி களின் நிலத்தின் மேல்புறத்தில் அமைந்துள்ள வண்டி தடத்தை பயன்படுத்த வாதிகளுக்கு விற்றவர் அனுமதி அளித்திருந்தார். இந்த வண்டித் தடம் 40 வருடங்களுக்கு மேலாக வாதி யால் பயன்படுத்தப்பட்டது. ஒரு கிரைய ஒப்பந்தத்தை இரண்டாவது எதிர்வாதியுடன் முதலாவது எதிர்வாதி ஏற்படுத்தினார். முன்பகை காரணமாக 2வது எதிர்வாதியின் தூண்டுதலில் வண்டித்தடத்தை வாதி பயன்படுத்துவதை 1வது எதிர்வாதி தடுக்கத் துவங்கினார். இன்றியமையா தேவைப்பாடு மற்றும் நீளுடைமை உரிமை அடிப்படையில் வாதி பாத்தியதை கொண்டிருக் கிறார் என அவரது வழக்குரைஞரையில் கூறினார். அதன் வழியாக எதிர்வாதிகளின் நிலத்தை பயன்படுத்தலுக்கு அவருக்கு பாத்தியதையுண்டு என அறிவித்தலுக்கும் விளைவுறு உறுத்துக் கட்டளையாகும் ஆன வழக்கை அவர் தாக்க லிட்டார்.

4.எதிர்வாதிகள் எழுத்திலான கூற்றுரை தாக்கலிட்டு அதில் வாதிக்கு நிறைவேற்றப்பட்ட 18.2.1987 தேதிய கிரைய பத்திரத்தில் சொன்ன வண்டிப்பாதை கிடையாது என வாதிட்டார்கள். வாதியின் நிலத்துக்கு வடக்கு பக்கத்தில்

அமைந்துள்ள நிலத்தை 26.4.2004 தேதிய பத்திரம் கீழ் எதிர்வாதிகள் வாங்கியுள்ளார்கள். முழு நிலமும் வேளாண் நோக்கத்துக்காக பயன் படுத்தப்பட்டது. வண்டிப்பாதை எனவாக சொல்லப் படும் நிலப்பகுதி பாறைகளும் முட்புதர்களும் கற்களும் நிறைந்துள்ள தாகும். சொல்லப்படும் வண்டிப்பாதை எதிர்வாதி களின் நிலத்தில் சென்று கொண்டிருக்கிறது என்ற பொருண்மையை மறைத்துக்கொண்டு கோரிக்கை வைக்கப் படுகிறது. இடைக்கால ஆணை பெற்றுக் கொண்டு வாதியின் நிலத்தில் வண்டிப் பாதை போட வாதி முயன்று கொண்டிருந்தார்.

5.இரு தரப்பினர்களாலும் வைக்கப்பட்ட பணிந்துரைகள் அடிப்படையில் கீழ்வரும் எழுவினாக்களை விசாரணை நீதிமன்றம் வனைந்துள்ளது.

1.வழக்கில் கோரப்பட்டவாறுள்ள பரிகாரத்துக்கு வாதி பாத்திய்தையுள்ளவர் ஆவாரா?

2.வழக்கில் வேண்டப்பட்டவாறுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளைக்கு வாதி பாத்தியதையுண்டா?

3.வாதிக்கு பாத்தியதையாகும் இதர பரிகாரங்கள் என்ன?

6.இரு தரப்பு சாட்சியங்களை பதிவிட்ட பின்பு விசாரணை நீதிமன்றம் வழக்கை நிராகரித்தது. மேல்முறையீடை தள்ளுபடியாக்கிக் கொண்டு அதை முதலாவது மேல்முறையீடு நீதிமன்றம் உறுதியாக்கியுள்ளது. அதனால் துயருற்று இப்போதைய இரண்டாவது மேல்முறஒய்யீடு வாதியால் தாக்கலாகியுள்ளது.

7.விசாரணைக்கு ஏற்கும் கட்டத்தில் இந்த நீதிமன்றம் கீழ்வரும் சட்ட வலிவு குறித்த எழுவினாக்களை வனைந்துள்ளது.

1வது எதிர்வாதிக்குள்ள கிரையத்துக்கு முந்தியதாக வண்டிப்பாதை உரிமையை அவர் சா.ஏ1 கீழ் வழங்கியிருந்தபோது பொது விற்பனை யாளராலான பிந்தைய கிரையம் ஏற்கப்படுத லுக்கு கட்டுறுத்தப்படுகிறதா?

2.சாஏ1 கிரைய பத்திரத்தில் அவரது நிலத்தி லுள்ள வண்டிப்பாதை உரிமையை பொது விற்பனையாளர் வழங்கியுள்ளபோது, வண்டிப் பாதை உரிமை வழங்கிட விற்றவருக்கு உரிமை இருந்த்தில்லை என தீர்ப்பிட்டதில் கீழமை நீதிமன்றங்கள் கடுமையான பிழையை இழைத்திருக்கவில்லையா?

3.சா.ஏ1படி வாதிக்கு வழங்கும் வண்டிப் பாதை உரிமையை வழங்காமையில் கீழமை நீதிமன்றங்கள் பிழை இழைத்திருக்கவில்லையா?

4. அவரது நிலத்தில் பொது விற்பனையாளர் வண்டிப்பாதை உரிமையை வாதிக்கு அளித்தி ருக்கும் போது, அவரது நிலத்தை அடைதலுக்கு தாவா வண்டிப்பாதை தவிர வேறேதும் வண்டிப் பாதையை வாதி நிரூபித்திருக்கவில்லை என் கீழமை நீதிமன்றங்கள் தீர்ப்பிடுதல் சட்டப்படி சரியானதா?

8.கீழமை நீதிமன்றத்தின் ஒருங்கியல்வான தீர்ப்புகளில் தலையிடுதலின் குறியெல்லை அறுதியானதாகும். ஹீரோ வினோத்(மைனர்) –எதிர்– சேஷம்மாள் வழக்கில் (AIR 2006 SC 2234) கீழமை நீதிமன்றங்களின் ஒருங்கியல்வான தீர்ப்புரைகளில் தலையிடலுக்கு உயர்நீதிமன்றத்தின் ஆள்வையை மறுவலியுரைத்திருக்கும் உச்ச நீதிமன்றம் பத்திகள் 12–16இல் தீர்ப்பிட்டுள்ள தாவது.

''12. கீழமை நீதிமன்றங்களின் ஒருங்கியல் வான பொருண்மை தீர்ப்புகளில் தலையிடலுக்கு உயர் நீதிமன்றங்களின் உரிமை பற்றி நாங்கள் முதலாவதாக பேச வேண்டும். சந்திரா பான் எதிர் பாம்மா பாய் மற்றும் ஒருவர் (2002 9 SCC 565), சகாஹரி பர்வத்ராவ் கரஹேல் மற்றும் ஒருவர் –எதிர்– பீமா சங்கர் கேஹலே (2002 9 SCC 608) வழக்குகளில் மேல்முறையீட்டாளரது வழக்குரைஞ ரால் குறிப்பாடு வைக்கப்பட்டது. முதலாவது தீர்ப்பு பொறுத்தவரையில் கீழமை நீதிமன்றத் தாலும் முதலாவது மேல்முறையீடு நீதிமன்றத் தாலும் பதிவான பொருண்மை தீர்ப்புகளின் பரிசீலனையில், ஒருங்கியில்வான தீர்ப்புகளில் தலையிடுதல் நியாயப்படுத்தப்பட முடியாது என தீர்ப்பானது. கேள்வி உடைமை தொடர்புற்றதாகி இருநீதிமன்றங்களும் முதன்மையாக பொருண்மை நிலைமையை பரிசீலித்து உடைமை பற்றிய கேள்வியை தீர்மானித்திருந்தன. அந்த பின் புலத்தில் உவிதொச பிரிவு 100 கீழான ஆள்வை செலுத்தப்படப்பட்டிருக்கக் கூடாது என

இந்த நீதிமன்றம் கருத்துரைத்தது. இரண்டாவது தீர்ப்பு பொறுத்தமட்டில் நிலைமை கிட்டத்தட்ட ஒத்திருந்தது. கீழமை நீதிமன்றங்களுக்கு எதிராக வும் வாதுரைகளிலும் வனையப்பட்ட எழு வினாக்களிலும் அல்லது கீழமை நீதிமன்றங்கள் எதனாலும் மெய்யாக தீர்வுறுதியான கேள்வி களில் அடிப்படையற்றுள்ள கீழமை நீதிமன்ற தீர்ப்புகள் நிலையுறுத்தப்பட முடியாது. இப்போதைய வழக்கில் பொருண்மை சூழ்நிலை முற்றிலும் வேறாக உள்ளதால் அந்த தீர்ப்பும் மேல்முறை யீட்டாளருக்கு எவ்விதத்திலும் உதவவில்லை.

13. மேல்முறையீட்டாளரது வழக்குரைஞரால் சரியாக சுட்டிக்காட்டப்பட்டவாறு உவிதொச பிரிவு 100 கீழ் ஆள்வை செலுத்துகையில் ஒருங்கி யல்வான பொருண்மை தீர்ப்புகளில் தலை யீடியின் குறியெல்லைக்கு வரம்பிடப்பட்டது எனவும் சட்ட வலிவு குறித்த கேள்வியை சீர் தூக்கலில் விசாரணை நீதிமன்றம்/மேல்முறையீடு நீதிமன்றம் தவறான வழியுரை அளித்தது அல்லது தவறான தரப்பினர் மீது பொறுப்பை ஏற்றியது எனும் நிலையில் சாட்சியத்தை மறு சீர்தூக்குதல் அனுமதிக்கதக்கதல்ல எனவும் உள்ளபோதிலும், சட்ட வலிவு குறித்த கேள்வியை வனைந்த பின்பாக உவிதொசபிரிவு 100 கீழான தலையீடுக்கு நிச்சயமாக குறையெல்லை உண்டு.

14.யதாராவ் தஜிபா ஷ்ரவனெ (இறந்தவர்) எதிர் நானிலால் ஹார்சாண்ட் ஷா (இறந்தவர்) வழக்கில் (2002 6 SCC 404) கவனிக்கப்பட்டவாறு விசாரணை நீதிமன்றத்தின் முதலாவது மேல் முறையீடு நீதிமன்றத்தின் தீர்ப்புரைகள் சாட்சிய ஆவணம் பற்றிய தவறான பொருள் விளக்கம் அல்லது ஏற்க தகாத சாட்சியத்தை பரிசீலித்தல் அல்லது ஆதாரா சாட்சிய புறக்கணிப்பு அடிப்படை யில் அல்லது பொருண்மை கண்டறிதலின் பேரில் சாட்சிகளால் அல்லது தரப்பினர்களால் வைக்கப்படும் ஒத்தேற்புகளை அல்லது சலுகையை புறக்கணித்திருந்தால் மேல்முறையீடில் உயர் நீதிமன்றம் தலையிடவியலும்.

15. பதிவாவணத்தில் கிட்டும் சட்டபூர்வ சாட்சியத்தின் அடித்தளம் இல்லாத அல்லது சாட்சியத்தை பிழையாக வாசித்தல் அடிப்படை யில் அல்லது தரப்பினர்களில் ஒருவரது வழக்குக்கு குந்தகமாகும் சட்டபூர்வ பலவீனத்தால் பாதிப்பாகும் தீர்ப்பு உள்ளபோது பதிவாவண பொருண்மை தீர்ப்பு நீக்கறவாக்கப்பட வேண்டும் என நீலகண்டன் மற்றும் பிறர் எதிர் மல்லிகா பேகம் வழக்கில் (2002 2 SCC 440) தீர்ப்பிடப்பட்டது. [காண்க: கிருஷ்ண மோகன் கூல் என்ற நானி சரண் கூல் மற்றும் ஒருவர் –எதிர்– பிரதிமா மைத்தி மற்றும் பிறர் லால் 2004 9 SCC 468 ]

16. ஆவணத்திலிருந்து பொருண்மை பற்றிய அனுமானம் பொருண்மை கேள்வியாகும் என்பது நன்கு அறுதியான சட்டநெறியாகும். ஆனால் ஓர் ஆவணத்தின் விதிமுறைகளில் அல்லது விதிமுறையின் சட்டப்படியான தாக்கம் சட்டநெறி பற்றிய கேள்வியாகும். சட்டநெறி கோட்பாடு பொருத்துகையை உள்ளடக்கும் ஆவணத்தை கட்டமைப்பது சட்டநெறி பற்றிய கேள்வியாகும். ஆகையால் ஓர் ஆவணத்தை புரிந்தறிகையில் அவ்வாவணத்தின் பிழையான பொருள்கொள்ளல் அல்லது தவறான சட்டநெறி கோட்பாடு பொருந்துகையாக உள்ளபோது அது உவிதொச பிரிவு 100 கீழான தலையீடுக்கு திறந்ததாக உள்ளது. அதன் வழக்கை ஸ்தூலமாக பாதிக்கும் இன்றியமையா தேவைப்பாடாக வழங்கல்வியான புழக்கவுரிமையை உருவாக்கும் ஆவணம் பொருள் கொள்ளப்படுமானால் அது நிச்சயமாக சட்ட வலிவு குறித்த கேள்விக்கு வழியமைக்கிறது.

9 இந்த வழக்கில், அவரது நிலத்தை அடை தலுக்கு எதிர்வாதிகளுக்கு விற்றவரது நிலத்தை பயன்படுத்தலுக்கு வாதிக்கு பாத்தியதையுண்டு எ வாசிப்பாகும் 18.2.1987 தேதிய சா.ஏ1 கிரைய ஆவணத்தின் வாசகங்களை தீர்மானித்து ஏற்றுக் கொண்ட பின் அவற்றின் ஒருங்கியல் வான தீர்ப்புகளை இருநீதிமன்றங்களும் அளித்துள்ளன. தர்மபுரி மாவட்டம் ஹரூர் பதிவு அலுவலகம் பொய்யப்பட்டி கிராமத்தில் உள்ள பு. எண் 189/1ஏஇல் 7.29 ஏக்கர் மொத்த பரப்பில் அவர்களது மூதாதையர் சொத்து 2.46 ஏக்கர் பரப்பில் உடைமையும் அனுபோகமும் வாதிக்கு விற்றவர்களான மாரியப்பன் மற்றும் இலவர் வேரியப்பன் வசம் இருந்தது எனவும் பி.மாரியப்பனின் நிலத்தால் வடபுறமும்

மாரனின் நிலத்தால் கீழ் புறமும் கண்ணு என்ற பெருமாளின் நிலத்தால் தென்புறமும் பி.பாரியப்பனி நிலத்தால் மேற்கு புறமாகும் வரையறையாகும் 1.20 ஏக்கர் சொத்தை விற்க அவர்கள் முன் வந்துள்ளார்கள் எனவும் சா.ஏ1 18.2.1987 தேதிய பத்திரத்தில் உள்ள வாசகங்கள் வாசிப்பா கின்றன. சொத்தின் அட்டவணையில், வாதியால் வாங்கப்பட்ட சொத்தை அடைதலுக்கு, விற்ற வரது நிலத்திலிருந்த வடபுறத்தில் உள்ள வடக்கு தெற்கு வழக்கிலுள்ள வண்டிப்பாதையை அவர் பயன்படுத்த முடியும் என மேலும் அதில் கூறப் படுகிறது.

10. கடந்த 40 ஆண்டுகளாக அவள் வண்டி பாதையை பயன்படுத்திக் கொண்டிருந்து அதன் மூலமாக நீளுடைமைவழி புழக்கவுரிமையை அவள் கொண்டிருந்தாள் என்பது வாதியின் வழக்காகும். வாதிகளுக்கும் எதிர்வாதிகளுக்கும் விற்றவர்களால் தரப்பட்ட 18.2.1987 தேதிய கிரயப் பத்திரம் கீழ் வழங்கப்பட்ட உரிமையையும் இரு நீதிமன்றம் ஏரு கொண்டுள்ளபோதிலும், 18.2.1987 தேதிய பத்திரம் கீழ் தரப்பட்ட வண்டிப்பாதை பயன்படுத்தலுக்கான உரிமையை எதிர்வாதிகள் ஏற்றுக் கொண்ட பின்பாக, வண்டிப் பாதை உளதாதல் பற்றிய பதிவா வணத்தில் வைக்கப்பட்ட சாட்சியத்தை இரு நீதிமன்றங் களும் பரிசீலித்துள்ளன. தரப்பினர்களால் கோரப்பட்டவாறு ஸ்தூல குணங்கங்களை இன்னும் குறிப்பாக வண்டிப்பாதை அம்சங் களை குறித்துக் கொள்ளுதலுக்காக ஆதியில் இரு வழக்குரைஞர் பணிப்பாணைகள் பிறப்பிக்கப் பட்ட என பதிவாகியுள்ளது. வடக்கிலிருந்து தெற்கில் செல்லும் வண்டிப்பாதை உள்ளது எனவும் எனவே வாதியின் நிலம் தெளிவாக பாடக்கக்குடியதாக உள்ளது எனவும் கூறிக் கொண்டு முதலாவது வழக்குரைஞர் ஆணையர் அவரது அறிக்கையை தாக்கலிட்டுள்ளார். பின்னராக, இரண்டாவது ஆணையர் அவரது அறிக்கையை தாக்கலிட்டிருந்து அதில் அப்போது உளதான வண்டிப்பாதை 15அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்டிருந்தது எனவும் வாதியின் நிலத்தின் வடபுறத்திலிருந்தும் வாதி யின் நிலத்திலிருந்தும் துவங்குகிறது என பதிவாகியுள்ளது.

11.வழக்குரைஞர்கள் ஆணையர் அறிக்கை களில் சொல்லப்பட்ட எல்லைகளில் நம்புகை வைத்துக் கொண்டு, தாவா வண்டிப்பாதையின் நான்கெல்லைகளை வர்ணிக்கையில் அறிக்கை களில் ஒத்திசைவு கிடையாது என தீர்ப்பாகி யுள்ளது. கூடுதலாக இன்றியமை தேவைப்பாடு மற்றும் நீளுடைமை அடிப்படையிலான வழியுரிமையை வாதி கோரொயிருக்கிறாள் என இரு நீதிமன்றங்களும் தீர்ப்பிட்டுள்ளன. அப்படி யிருக்கையில் கூற்றுக்கு ஆதரவாக சாட்சியம் ஏதும் தரப்படவில்லை.

12. வாதுரைகளையும் வழக்குரையுடன் சேர்க்கப்பட்ட வரைவு வரைபடத்தையும் கவன மாக ஆழ்ந்து வாசித்தலில் அவளது வழக்குரை யில் வண்டிப்பாதையை வாதி விவரித்திருக்க வில்லை என்பதை அது காட்டுகிறது. ஆயினும். 18.2.1987 தேதிய சா.ஏ1 கிரைய பத்திரத்தில் வாதிக்கு ஆணித்தரமாக வழங்கலாகியுள்ள வண்டி பாதையை பயனுறுத்த அவளுக்கு உரிமையளிக்கிறது. வாதியால் மட்டுமின்றி வாதிக்கு விற்றவராலும் வண்டிப்பாதை பயன் படுத்தப்படுகிறது என்பதையும் அது காட்டுகிறது. அது வழக்கமான வண்டிப்பாதையாகும் எனவும் சொல்லப்பட்டது. அது பல சகாப்தங்களாக புழக்கத்தில் உள்ளதாகும் என அர்த்தமளிக்கிறது.

13. பொறுப்பேற்பு விதிக்கப்படவுள்ள மரபு வழி சொத்தில் அவருக்குள்ள பரப்பிலும் அளவிலும் சந்தர்ப்பங்களில் எவருக்கும் வசதி யுரிமை எவராலும் விதிக்கப்படலாம் என் வசதி யுரிமை சட்டப் பிரிவு 8 கூறுகிறது. வசதி யளிக்கும் மரபுவழி சொத்து மீது வழக்குரிமை எதனையும் வைத்திட அதிகாரமுற்ற வசதி யளிக்கும் சொத்துரிமை பற்றி பிரிவு 8 பேசுகிறது, ஆனால் அந்த விதிப்பு தோற்றத்தில் உளதாகும் புழக்கவுரிமை பயன்பாட்டை குறைத்திடக் கூடாது. அதிசிறந்த சீர்தூக்கலுக்காக வசதி யுரிமை சட்டப் பிரிவுகள் கீழே தரப்படுகின்றன்.

பிரிவு 8: பொறுப்பேற்பு விதிக்கப்படவுள்ள மரபுவழி சொத்தில் அவருக்குள்ள பரப்பிலும் அளவிலும் சந்தர்ப்பங்களில் எவருக்கும் வசதி யுரிமை எவராலும் விதிக்கப்படலாம்.

பிரிவு 8 வசதியளிக்கும் சொத்துரிமையர்: பிரிவு 8இன் வகையங்களுக்கு உட்பட்டு உளதாகும் புழக்கவுரிமையின் பயன்பாடை குறைத்திடாத வசதியுரிமை எதனையும் வசதி யளிக்கும் மரபுவழி சொத்து மீது வசதி தரும் சொத்துரிமையர் விதிக்கலாம். ஆனால் அத்தகைய பயன்பாட்டை குறைத்திடும் புழக்க வுரிமையை வசதியளிக்கும் சொத்தில் அவர் ஓங்கு சொத்துரிமையரின் சம்மதமின்றி விதிக்க வியலாது.

14. அவளது வாதுரைகளில் வசதியுரிமை வழங்கல் பற்றி வாதுரைத்திருக்கும் இங்குள்ள வாதி இந்த வழங்கல்பேரில் வண்டித் தடத்தை ஏறத்தாழ 40 வடங்கலக்க அவள் பயன் படுத்திடக் கொண்டிருக்கிறாள் எனவும் கூறி யுள்ளார். வாதி மீது முதலாவது எதிர்வாதிக்கு விற்றவரால் வழங்கப்பட்டு ஏற்கனவே உள தாகும் வசதியுரிமையை வாதிக்குப் பின் நிலத்தை வாங்கியுள்ள எதிர்வாதிகள் மறுக்க முடியாது. ஓங்கு சொத்துரிமையருக்கு வசதி யுரிமை வழங்குகை உருவாக்கப்படும் போது, ஓங்கு சொத்துரிமையரின் சம்மதமின்றி அதை திருப்பிறலுக்கு வசதிதரும் சொத்துரிமையருக்கு பாத்தியதை கிடையாது என புழக்கவுரிமைகள் சட்ட பிரிவு 9 விளம்புகிறது.

15. பதிவாவணத்தில் கிட்டும் சட்டபூர்வ சாட்சியத்தின் அடித்தளம் இல்லாத அல்லது சாட்சியத்தை பிழையாக வாசித்தல் அடிப்படை யில் அல்லது தரப்பினர்களில் ஒருவரது வழக்குக்கு குந்தகமாகும் சட்டபூர்வ பலவீனத்தால் பாதிப்பாகும் தீர்ப்பு உள்ளபோது பதிவாவண பொருண்மை தீர்ப்பு நீக்கறவாக்கப்பட வேண்டும் என நீலகண்டன் மற்றும் பிறர் –எதிர்– மல்லிகா பேகம் வழக்கில் 2002 2 SCC 440 தீர்ப்பிடப்பட்டது. [காண்க: கிருஷ்ண மோகன் கூல் என்ற நானி சரண் கூல் மற்றும் ஒருவர் –எதிர்– பிரதிமா மைத்தி மற்றும் பிறர் லால் 2004 9 SCC 468]

வேற்றலான சா கிரைய பத்திரத்தின் வாசகங்கள் காட்டுகின்றன. போலமையான சந்தர்ப்பங்களை பரிசீலிக்கையில், வழங்கல் வழி புழக்கவுரிமை வெளிப்படையாக அல்லது தேவையான குறிப்புரைகளாலும் தெரிவிக்கப்பட வியலும் என மேல்சொன்ன ஹீரோ வினோத் எடிர் சேஷம்மாள் வழக்கில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பிட்டுள்ளது. எந்த ஒரு நேர்விலும் 1882இன் இந்திய புழக்கவுரிமை சட்டப் பிரிவு 13 கீழான இன்றியமையா தேவைப்பாடு வழி புழக்கவுரிமையாக அது ஏற்படாது. அது போலவே பிரிவு 13 அல்லது 14இன் சட்டப்படி யான உட்கிடைகள் வழங்கல் வழி வசதி யுரிமைக்கு பொருந்துகை ஆகாது. பத்திகள் 28இலும் 29இலும் கீழ்வருமாறு கருத்துரைப்பாகி யுள்ளது.

28. வழங்கல்வழியாக பெற்றடையப்பட்ட ஒரு புழக்கவுரிமையாக (இன்றியமையா புழக்குவுரிமையுடன் ஓப்பீடில்) புழக்கவுரிமை உள்ளதா என்ற கேள்வி அதன் முழுமையான தேவைப்பாடை சார்ந்ததில்லை. தொடர்புற்றதாக உள்ளது பெற்றடைவு இயல்பு மட்டுமே ஆகும். வழங்கல்வழியாக அடையப்பட்ட பல புழக்க வுரிமைகள் அதுவன்றி அது துய்க்கப்பட வியலாததாகும் என்ற புலனில் ஓங்கு சொத்து துய்த்தலுக்கு முழுமையாக தேவையாகக் கூடியதாகலாம். இது வழங்குகைக்கான காரண மாகவும் இருக்கலாம். ஆனால் வழங்கல்வழி புழக்கவுரிமை தரப்பினர்கள் இடையிலான ஒப்பந்த விஷயமாக உள்ளது. வழங்குகை விஷயத்தில் வழங்கலின் விதிமுறைகளுக்கு தரப்பினர்கள் ஆட்பட்டவர்கள் ஆவார்கள். வேறெதனாலும் அல்ல. இன்றியமையா புழக்கு வுரிமையும் போலமைந்த புழக்க்வுரிமையும் சட்ட பிரிவு 13இன் கீழ் மீளாகின்றன. வழங்குகை தெளிவாக இருக்கலாம் அல்லது பூடகத்தால் கூட இருக்கலாம். எந்த ஒரு நேர்விலும் வழங்கல் அளிப்பாகும் நபருக்கு இது இன்றியமையா புழக்வுரிமையாக இருக்கக்கூடியதானாலும் அது சட்டப் பிரிவு 13 கீழான இன்றியமையாத புழக்கவுரிமை ஆகாது. வழங்கலால் பெற்றடை வாதியுள்ள பழக்கவுரிமையின் வரம்பு ஒப்பந்தத்தின் விதிமுறைகளால் மட்டுமே கட்டுறுத்தாகின்றன. நிபந்தனை எதனுக்கும் அதை பயன்படுத்து பவரை வழங்கலின் விதிமுறைகள் வரையறைப் படுத்துமானால் அந்த நிபந்தனைகளால்

தரப்பினர்கள் கட்டுறுத்தப்படுவார்கள். எதுவாகினும் தரப்பினர்களுக்கான வழங்கலில் விதிமுறை களால் மட்டுமே வழங்கலின் குறியெல்லை தீர்மானிக்கப்பட முடியும். தேவைப்பாடு முழுமை யாக இருந்த காலகட்டம் வரையில் மட்டுமே அது தொடரவிருந்தது என் இந்த விஷயத்தில் கிராண்டு ஏதுமில்லை எனும்போது அது வழங்கப்பட்ட சமயத்திலும்கூட அது தேவைப்பாடின் ஒன்றாக இருந்ததில்லை. அது நிபந்தனை எதனாலும் கட்டுப்படுத்தப்படாத நிரந்தர ஏற்பாடாக இருக்குமானால் பயன்படுத்துவரிடம் உள்ள அந்த நிரந்தரமுடைமை அங்கீகரிக்கப்பட்ட வேண்டியதாகும். வசதியளிக்கும் சொத்து அங்கீகரிப்பாகும் அந்த இயலாமையுடன் வசதியளிக்கும் சொத்து மீது நிரந்தரமாக சுமை யுருவாகும். அத்தகைய உரிமை பிரிவு 13இன் சட்டப்படியான உட்கிடை கீழ் எழவில்லை. பிரிவு 13 கீழ் உருவாகும் இன்றியமையா வசதி யுரிமைக்கு மட்டுமே பொருந்தும் பிரிவு 41 கீழான சட்டமுறை வகையத்தாலும் அது அழிக்கப்படவில்லை.

29. வழங்கல் வழியான வசதியுரிமை இன்றி யமையா வசதியுரிமைக்கு தொடர்புற்ற சட்ட பிரிவு 41கீ அழிக்கப்படவில்லை. ஓங்கு சொத்தின் நியாயமான துய்ப்புக்கு மட்டுமின்றி, வசதியுரிமையின்றி பயன்படுத்தபடவியலாத தாக உள்ள ஓங்கு சொத்தாகவும் இன்றியமையா புழக்கவுரிமை உள்ளது. அத்தகைய நேர்வில் வசதியளிக்கும் சொத்துரிமையரின் பொறுப்பு மறுபயனுக்காக அல்லது வேறுக்கு அவரால் வைக்கப்பட்ட சலுகை அல்லது வழங்குகை அடிப்படையிலானது அல்ல. ஆனால் அது அவரது சொத்தை ஓங்கு சொத்துரிமையர் பயன்படுத்துவதன் சட்டப்படியான கடப்பாடு மூலமானதாகும். அதி சிறந்த அணுகுவழி வசதியளிக்கும் சொத்துரிமையரால் வழங்கப்பட வுயலுமா அல்லது இயலாதா என்ற கேள்வியில் உள்ளதாகினும் அது அதி சிறந்த குறைந்தபட்ட தேவைப்பாட்டுடன் வரம்பிடப்படுகிறது. மாற்று முறை அணுகுவழி கிட்டாத்தாகும்போது வசதி யளிக்கும் சொத்துரிமையர்களால் பொறுப்பளித்த லுக்கான தேவைப்பாடு அற்று போகிறது சட்ட நெறி குறிப்புரையான இன்றுயமையா வசதி யுரிமை பிரிவு 41 சட்டமுறையில் அங்கீகரிக்கப் பட்டவாறு சட்டப்படியாக திருப்பிப்பெறப்படுகிறது அல்லது நிறைவேற்றலாகிறது. அத்தகைய வசதியுரிமை முழுமையான தேவைப்பாடாக உளதாகும் வரையில் மட்டுமே நீடிக்கும். இத்தகைய சட்டபூர்வ அழிவு வழங்கல் வழியான உரிமையிறக்கத்துக்கு பொருந்தவியலாது. அத்தகைய நேர்வில் பிரிவு 41 பொருத்ததக்கத் தக்கது ஆகாது.

16. கோஷே –எதிர்– ஏ.நடராஜன் வழக்கில் [2011 MWN 374] கிராண்ட் மூலமான வஸ்ட்கியிமை நேர்வையும் இந்த நீதிமன்றம் பரிசீலித்திருந்து ஹீரோ வினோத் –எதிர்– சேஷம்மாள் வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புரையையும் இந்த நீதிமன்றத்தின் இரு பிற தீர்ப்புரைகளையும் பின்பற்றிக் கொண்டிருந்து தரப்பினர்கள் இடையிலான வழங்குகையின் விதிமுறைகளால் மட்டுமே வழங்கல்வழி வசதி யுரிமையின் குறியெல்லை தீர்மானிக்கப்பட வேண்டும் என தீர்ப்பிட்டுள்ளது. இங்கு மரபுவழி சொத்து துய்த்தலுக்குள்ள முழுமையான தேவைப்பாடையும் இந்த வழங்குகை சாரலாம் என மேலும் தீர்ப்பிடப்படுகிறது. தரப்பினர்கள் இடையிலான ஒப்பந்த விஷயமாக வழங்கல் வழி வசதியுரிமையுள்ளது. அது வழங்கலின் விதிமுறைகளால் மட்டுமே ஆளப்படுகிறது வேறெதனாலும் அல்ல.

12. 1999 3 LW 526இல் அறிவிப்பான (எம்.சங்கம ரெட்டியுஆர் –எதிர்– எச்.ரமல்லு கவுண்டர்) வழக்கிலும் இதே கோட்பாடு மறுவலியுறுத்தானது, 2006 5 CTC 573இல் அறிவிப்பான பொன்னான் மற்றும் பிறர் –எதிர்– பவர்மாப்ன் மற்றும் ஒருவர் வழக்கில் இந்த நீதிமன்றம் தீர்ப்பிட்டதாவது.

வழங்கல் வழியாக பெற்றடையப்பட ஒரு புழக்கவுரிமையாக (இன்றியமையா புழக்க வுரிமையுடன் ஒப்பீட்டில்) புழக்கவுரிமை உள்ளதா என்ற கேள்வி அதன் முழுமையான தேவைப்பாடை சார்ந்ததில்லை என்பது சுட்டிக் காட்டலாகியுள்ளது. தொடர்புற்றதாக உள்ளது

பெற்றடைவான இயல்பு மட்டுமே ஆகும். வழங்கல் வழியாக அடையப்பட்ட பல புழக்க வுரிமைகள் அதுவன்றி அது துய்க்கப்பட வியலாததாகும் என்ற புலனில் ஓங்கு சொத்து துய்த்த்தலுக்கு முழுமையில் தேவையாக கூடிய தாக இருக்கலாம். இது வழங்கலுக்கான காரண மாகவும் இருக்கலாம். ஆனால் வழங்கல்வழி புழக்கவுரிமை தரப்பினர்கள் இடையிலான ஒப்பந்த விஷயமாக உள்ளது. வழங்குகை விஷயத்தில் வழங்குதலின் விதிமுறைகளுக்கு தரப்பினர்கள் ஆட்பட்டவர்கள் ஆவார்கள். வேறெதனாலும் அல்ல. இன்றியமையா புழக்க வுரிமையும் போலமைந்த வசதியுரிமையும் சட்ட பிரிவு 13இன் கீழ் மீளாகின்றன. வழங்குகை தெளிவாக இருக்கலாம் அல்லது பூடகத்தால் கூட இருக்கலாம். எந்த ஒரு நேர்விலும் வழங்கல் அளிப்பாகும் நபருக்கு இது இன்றியமையா புழக்கவுரிமையாக இருக்கக் கூடியதானாலும் அது சட்டப் பிரிவு 13 கீழான இன்றியமையாக புழக்கவுரிமை ஆகாது. வழங்கல்லா பெற்றடப் பட்டக்குள்ள பழக்கவுரிமையின் வரம்பு ஒப்பந்தத்தின் விதிமுறைகளால் மட்டுமே கட்டுறுத்தாகின்றன. நிபந்தனை எதனுக்கும் அதை பயன்படுத்துபவரை வாங்கலின் விதி முறைகள் வரையறையாக்குமானால் அந்த நிபந்தனைகளால் தரப்பினர்கள் கட்டுறுத்தப் படுவார்கள். எதுவாகினும் தரப்பினர்களுக் குள்ளான வழங்கலின் விதிமுறைகளால் மட்டுமே வழங்குகையின் குறியெல்லை தீர்மானிக்கப்பட முடியும்

17. இந்த வழக்கில் அவருக்கு விற்றவர் களிடமிருந்து வழங்கல்வழி வசதியுரிமையை அடைந்திருக்கும் நிலையில் வாதி 40 வருடங் களுக்கு மேலாக நிலத்தை பயன்படுத்தி இருக்கிறார்கள். வண்டி பாதை ஏதும் கிடையாது என்பதை எதிர்வாதிகளால் வைக்கப்படும் ஒரே மறுப்புரையாக உள்ளது. எனினும் சா.ஏ1 கிரைய பத்திரம் கீழ் அளிக்கப்பட்ட வண்டித்தடம் மட்டுமே வாதியின் நிலத்தை. அடைதலுக்கு ஒரே வழியாகும் என்பதை நிரூபிக்கப்பட்ட பொருண்மைகள் காட்டுகின்றன. அதுவும் இரு அறிக்கைகளில் இரு வழக்குரைஞர் ஆணையர் களாலும் உறுதிபடுத்தப்படுகிறது. வண்டித் தடத்தின் துல்லிய அமைவிடத்தை காட்டிட வழக்குரையுடன் இணைக்கப்பட்ட வரவு வரை படத்தில் சரியாக வாதி விவரித்திருக்கவில்லை எனவானாலும் வண்டித்தடம் உள்ளதை வழக்குரைஞர் ஆணையர்களின் அறிக்கைகள் வழியாக நிலைநாட்டலில் அவள் வெற்றி பெற்றிருக்கிறாள். பாறைகளும் கற்களும் நிறைந்துள்ள அது சரியான வண்டித்தடம் ஆகாதபோதிலும் வண்டித்தடம் இருத்தலை ஏற்றிருக்கும் நிலையில் கீழமை நீதிமன்றங் களின் தீர்ப்புகள் பிழையாக கருதப்படவை யாகும். கிராமத்தில் பல ஸ்தலங்கள் பாறை பூமி தளங்களை கொண்டிருக்கின்றன. அத்தகைய பாறை தளத்தில் மக்கள் பயன்படுத்துவது பயிரிட பகுதியாகவும் வண்டித்தடமாகவும் பயன்படுத்தப்படுகிறது. வழக்குரைஞர்கள் அறிக்கைகளை இரு நீதிமன்றங்களும் பிணையாக பொருள் கண்டிருந்து வாயால் தாக்கலான வரைவு வரைபடத்தில் வண்டித்தடம் பற்றிய சரியில்லா வர்ணனையை அடித்தள மாக கொண்டுள்ளன.

18. சா.ஏ1இல் ஆணித்தரமான புழக்க வுரிமை உள்ளதாலும் வாதியின் நிலத்துக்கு செல்லும் வடபுற சாலையிலிருந்து வடக்கு தெற்கில் ஓடும் அப்போது விற்கப்படாத பகுதி யில் பழமையான வண்டிப்பாதைக்குள்ள புழக்கவுரிமை முதலாவது எதிர்வாதிக்கு விற்ப தற்கு முன்கூட்டியே முதலாவது எதிர்வாதிக்கு விற்றவர்கள் வழங்கியிருந்தார்கள் என்ற பொருண்மை பற்றி மறுப்பில்லாததாலும் பரிகாரத்தை இரு கீழமை நீதிமன்றங்களும் வார்த்திருக்க வேண்டும் என்பது இந்த நீதிமன்றத்தின் கருத்தாகும். அதை வாதி பயன் படுத்துவதை தடுக்கும் நோக்குடன் உளதான வண்டிப்பாதை எதிர்வாதிகளால் சேதப்படுத்தப் பட்டது என் முதலாவது வழக்குரைஞர் ஆணையர் தெளிவாக சுட்டிக் காட்டியுள்ளார். அவருக்கு எதிராக அவமதிப்பு நடவடிக்கைகள் துவக்கப் பட்டன என்பதும் முதலாவது எதிர்வாதியினது நிலத்தின் மேல் மூலையில் வண்டிப்பாதை வாதியின் நிலத்தில் வடக்கு தென் திசையில்

சென்று கொண்டிருக்கிறது என்ற ஆணித்தர மான சாட்சியமும் உண்டு என்பதும் ஏற்கப்பட்ட விஷயமாகும். அது அவ்வாறிருக்கையில் உளதாகும் பழமையான வண்டித்தடத்தை அழித்தல் தொடர்பான ஆதார சாட்சியத்தை பரிசீலிக்க இருநீதிமன்றங்களும் தவறி யுள்ளன. மேலும் சா.ஏ1 ஆவணத்தை தவறாக பொருள்கொள்ளுதலிலும் இரண்டாவது எதிர் வாதியின் ஏறுபுகையையும் புறக்கணித்தும் பாதிப்புகிறது. எனவே கோரப்படும் பரிகாரத்தை சா.சி1 மற்றும் சா.சி2 என குறியிடப்பட்ட முதலாவது வழக்குரைஞர் ஆணையரது அறிக்கையிலும் வரைபடத்தில் விவரிக்கப்பட்ட அளவுக்கு திருத்த இந்த நீதிமன்றம் விரும்பு கிறது.

19. அது வண்டிப்பாதைக் அள்வீடுகளை உட்கொள்கிறது என் அடிப்படையில் 2வது ஆணையரது அறிக்கையை கீழமை மேல் முறையீடு நீதிமன்றம் நிராகரித்திருந்தது. எனினும் வண்டித்தடம் இருப்பது பற்றிய வழக்குரைஞர் ஆணையரின் அறிக்கையை நீதிமன்றம் நிராகரித்திருக்கவில்லை. மேலுள்ள கலந்தாய்வுகள் பரிசீலனையில் சா. சி1 இலும் சா.சி2 ஆணையர் அறிக்கையில் கூறப்படும் வண்டிப்பாதையை பயன்படுத்த வாதிக்கு பாத்தியதைய்ண்டு எனவிளம்புக்கைக்கு வாதி பாத்தியதையுற்றவர் ஆவார். அறிக்கை தீர்ப்புரையினது தீர்ப்பாணையின் பகுதியாக இருத்தல் வேண்டும். அதற்கிணங்க சட்ட வலிவு குறித்த கேள்விகளுக்கு வாதிக்கு ஆதரவாக விடையளிக்கப்படுகின்றன. தீர்ப்புரையினது தீர்ப்பாணையினது பகுதியாக சா.சி1 மற்றும் சா.சி2 சா இருந்தமைய வேண்டும்.

20. முடிவாக, இந்த இரண்டாவது மேல் முறையீடு பகுதியாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஹரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற கோப்பிலான முவ எண் 278/2004இல் உண்டான 30.1.2012 தேதிய தீர்ப்புரையை யும் தீர்ப்பாணையையும் உறுதியாக்கிக் கொண்டு ஹரூர் சார்பு நீதிமன்றத்தில் மேவ எண்21/2012 இல் இயற்றப்பட்ட 13.9.2012 தேதிய தீர்ப்புரையும் தீர்ப்பாணையும் இதன் மூலம் நீக்கறவக்கப்படுகின்றன.சா.சி1 மற்றும் சா.சி2 என குறியீடான வழக்குரைஞர் ஆணையர் அறிக்கையிலும் வரைவு வரைபடத்திலும் விவரிப்பாகும் வண்டிப்பாதையை பயன்படுத்த வாதிக்கு பாத்தியதையுண்டு என்ற விளம்புகைக்கு வாதி பாத்தியதை உள்ளவர் ஆவார் எனும் அளவுக்கு வாதியால் கோரப்படும் பரிகாரம் வழங்கப்படுகிறது. விளைவாக சாசி1 மற்றும் சா.சி2 என குறியீடான வழக்குரைஞர் ஆணையர் அறிக்கையில் விவரிக்கப்படும் தாவா வண்டிப் பாதைக்கான வழக்கில் கோரப்பட்டவாறு நிரந்தர உறுத்துக்கட்டளைக்கு வாதி பாத்தியதையுள்ளவர் ஆவார்.

மொழியாக்கம்:பா.ஞானசேகரன்

## அமெரிக்காவில் மனைவியை சுட்டுக் கொன்ற நீதிபதிக்கு 35 ஆண்டு சிறை

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தைச் சேர்ந்தவர் ஜெப்ரி பெர்குசன் (வயது 74) ஆரஞ்சு கவுண்டி நீதிபதியான இவர் தனது மனைவி ஷெரிலுடன் வசித்து வந்தார். கடந்த 2023-ஆம் ஆண்டு குடும்ப நிதியை கையாள்வது தொடர்பாக இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் ஆத்திரம் அடைந்த பொகுசன் வீட்டில் இருந்த துப்பாக்கியை எடுத்து மனைவியை சரமாரியாக சுட்டார்.

இதில் படுகாயம் அடைந்த ஷெரில் சம்பவ இடத்திலிலேயே உயிரிழந்தார். இதனையடுத்து பெர்குசனை போலீசார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினார். மேலும் அவரது வீட்டில் இருந்து சுமார் 50 துப்பாக்கிகள், வெடிமருந்துகள் போன்றவை கைப்பற்றப்பட்டன. இந்த வழக்கு விசாரணையில் மனைவியை துப்பாக்கியால் சுட்டதை பெர்குசன் ஒப்புக் கொண்டார். எனவே அவருக்கு 35 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து லாஸ் ஏஞ்சல்ஸ் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

நன்றி: தினத்தந்தி 19.9.2025

# மணமுறிவு கோரும் வழக்கு - குற்றஞ்சாட்டியவரை இணை எதிர்மனுதாரராக சேர்க்காமலிருக்க நீதிமன்ற அனுமதி பெற வேண்டும்

**சென்னை உயர்நீதிமன்றம் – மதுரை அமர்வு**
**முன்னிலை: நீதிபதி திரு ஜி.ஆர்.சுவாமிநாதன்**
**நீதிபதி திருமதி ஆர்.பூர்ணிமா**
C.M.A.(MD) No. 434/2019
**தீர்ப்பு நாள் 28/01/2025**
(2025 (4) CTC 141)

**மீனாட்சி** ...**மேல்முறையீட்டாளர்**

**–எதிர்–**

**கண்ணன்** ...**எதிர்மனுதாரர்**

**வேண்டுகை:** குடும்ப நலச்சட்டம் பிரிவு 19ன் கீழ் உரிமையியல் இதரவகை மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு, சிவகங்கை, குடும்ப நீதிமன்றம் H.M.O.P.No.165/2017ன் மீது 11/08/2018 தேதியிட்டு பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய வேண்டுகை செய்யப்பட்டது.

மேல்முறையீட்டாளருக்காக – திரு பி.அஜ் தாகூர், வழக்கறிஞர்

எதிர்மனுதாரருக்காக – திரு எஸ்.பாரதி கண்ணன், வழக்கறிஞர்

**தீர்ப்பு:**

**நீதிபதி திரு ஜி.ஆர்.சுவாமிநாதன்**

1. இந்து திருமணச் சட்டம், 1955–ன் கீழ் விபச்சாரம் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் தொடரப்பட்ட விவாகரத்து மனுவில், குற்றம் சாட்டப்பட்ட துணையை இணை–எதிர்மனுதாரராக சேர்க்க வேண்டுமா என்ற கேள்வி இவ் வழக்கில் பரிசீலனைக்காக முன்வைக்கப் பட்டுள்ளது.

2. டெல்லி உயர் நீதிமன்றம் ஷிவி பன்சால் –எதிர்– கௌரவ் பன்சால் (2024 SCC OnLine Del 5078) என்ற வழக்குத் தீர்வில் குற்றம் சாட்டப் பட்டவர் ஒரு அவசியமான தரப்பு அல்ல, ஏனெனில் அவர் இல்லாத நிலையிலும் தீர்ப்பு வழங்க முடியும். அவர் ஒரு சரியான தரப்பினரும் அல்ல, ஏனெனில் அவரைச் சேர்க்காமல் விபச்சாரம் தொடர்பான வழக்கை விசாரிக்க முடியும் என்று தீர்ப்பளித்தது. மத்தியப் பிரதேச உயர்நீதிமன்றமும் (2024 Livelaw (MP) 240) என்ற வழக்குத் தீர்வில் இந்த முடிவை ஆதரித்தது. கர்நாடக உயர்நீதிமன்றம் அருண் குமார் அகர்வால் –எதிர்– ராதா அருண் (AIR 2003 Karnataka 508) என்ற வழக்குத் தீர்வில் குற்றம் சாட்டப்பட்டவர் ஒரு அவசியமான தரப்பு இல்லை, ஆனால் அவர் ஒரு சரியான தரப்பு என்று கருத்து தெரிவித்தது. எனினும், ஆந்திரப் பிரதேச உயர்நீதிமன்றம் மிரபாலா வெங்கட ரமணா –எதிர்– மிரபாலா பெத்திராஜு (AIR 2000 Andhra Pradesh 328) என்ற வழக்கில் குற்றம் சாட்டப் பட்டவர் ஒரு அவசியமான தரப்பு என்றும், அவரைச் சேர்க்கத் தவறினால் மனுதாரர் வழக்கை இழக்க நேரிடும் என்றும் தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பை அலகாபாத் உயர் நீதிமன்றமும் உதய் நாராயண் பாஜ்பாய் –எதிர்– ஸ்ரீமதி குசும் பாஜ்பாய் (AIR 1975 All 94) என்ற வழக்குத் தீர்வில் ஆதரித்துள்ளது. தெலங்கானா உயர் நீதிமன்றத்தின் சமீபத்திய பாணி ராகவலு மேதுரி –எதிர்– லட்சுமி மேதுரி (CRP No.2192/2023/08.04.2024) வழக்கின் தீர்ப்பும் இதே கருத்தை வலியுறுத்துகிறது.

3. சென்னை உயர்நீதிமன்றத்தின் மூன்று தனி நீதிபதிகள் அமர்வுகள், (ஈஸ்வரன் –எ– மணி (2001 (1) MLJ 318), எம்.மல்லிகா –எ– எம்.ராஜ் (2005 (2) CTC 28), கலா –எ– இ.என்.ரமேஷ் (C.M.S.A.No.16/2023/08.02.2021) ஆகிய வழக்குத் தீர்வுகளில் விபசாரம் என குற்றம் சாட்டப்பட்ட நபரை இணை மனுதாரராக சேர்க்கவில்லை என்றால் வழக்கு நிலைக்கத் தக்கதல்ல என தெரிவிக்கப்பட்டிருந்தது.

4. இந்த வழக்கில் ஒரு நுணுக்கமான நிலைப்பாட்டை எடுக்க நாங்கள் விழைகிறோம். இந்தச் சட்டத்தின் கீழ் நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்துவதற்காக, சென்னை உயர்நீதிமன்றம் 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 21 இன் கீழ் விதிகளை வகுத்துள்ளது. விதி 4(vi)(1) பின்வருமாறு கூறுகிறது:

4. மனுவின் உள்ளடக்கங்கள்: (அ) ஒவ்வொரு மனுவும்

(i) முதல் (v) xxxxxxxx

(vi) விவாகரத்து அல்லது நீதித்துறை பிரிவினைக்கான மனுவாக இருந்தால், திருமண வாழ்நிலை சார்ந்த குற்றச்சாட்டு அல்லது நிவாரணம் கோரப்பட்ட பிற காரணங்கள், அதன் முழு விவரங்களுடன், அத்தகைய விவரங்கள் மனுதாரருக்குத் தெரிந்திருக்கும் வரை யிலானவை, எ.கா:

(1) விபச்சார வழக்கில், விபச்சாரத்தின் குறிப்பிட்ட செயல்கள் மற்றும் அத்தகைய செயல்கள் செய்யப்பட்ட சந்தர்ப்பம் மற்றும் இடங்கள், அத்தகைய விபச்சாரம் செய்யப்பட்ட நபரின் பெயர் மற்றும் முகவரியுடன்.?

குற்றஞ்சாட்டப்பட்ட விபச்சாரக்காரரையும் இணை பிரதிவாதியாக சேர்க்க வேண்டும் என்று விதி கட்டாயப்படுத்தவில்லை.

5. இத்தொடர்பாக மணமுறிவுச் சட்டம், 1869ஐ பார்ப்பது பயனுள்ளதாக இருக்கும். அந்தச் சட்டத்தின் பிரிவு 11 பின்வருமாறு உள்ளது :

''11. விபச்சாரத்தில் ஈடுபட்ட ஆண் அல்லது பெண் இணை–எதிர்வாதியாக சேர்த்தல்: கணவன் அல்லது மனைவி விபச்சாரம் செய்ததன் அடிப்படையில் திருமணத்தை ரத்து செய்ய மனு தாக்கல் செய்யும்போது, மனுதாரர் குற்றஞ்சாட்டப்பட்ட விபச்சாரியை (ஆண் அல்லது பெண்) இணை–எதிர்வாதியாக சேர்க்க வேண்டும். ஆனால், நீதிமன்றம் பின்வரும் காரணங்களில் எதனாலும் மனுதாரருக்கு அதிலிருந்து விலக்கு அளிக்கலாம்.

a) மனைவி எதிர்மனுதாரராக இருப்பின், அவள் பலருடன் உறவான வாழ்க்கை நடத்துவதோ, அல்லது கணவன் பதிலளிப்பவராக இருப்பின், அவன் ஒழுக்கக்கேடான வாழ்க்கை நடத்துவதோ, மேலும் மனுதாரர் விபச்சாரம் எவருடன் நிகழ்ந்தது என்பது அறியாத நிலை இருப்பின்;

b) குற்றஞ்சாட்டப்பட்ட விபச்சாரியின் பெயர் மனுதாரருக்கு தெரியாதது. ஆனால் அதைத் தெரியவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டி ருந்தாலும் தெரியாத நிலை இருப்பின்;

c) குற்றஞ்சாட்டப்பட்ட விபச்சாரி இறந்து விட்டார் எனில்.

ஆந்திரப் பிரதேச உயர்நீதிமன்றமும் கர்நாடக உயர்நீதிமன்றமும் மணமுறிவுச் சட்டப் பிரிவு 11 கட்டாயமானது என்றும், குற்றஞ்சாட்டப்பட்ட விபசாரியை இணை–எதிர்வாதியாக சேர்க்காமல் விடுபட நீதிமன்றத்தின் அனுமதி பெறுதல் அவசியம் என்றும் தீர்மானித்துள்ளன.''

6. திருமண உறவில் நம்பிக்கைச் சார்ந்த உறுதிமொழியை பின்பற்ற தவறிய கணவன் அல்லது மனைவியைப் பற்றிய சூழல்கள் எளிதில் நிகழலாம் என்று நம்மால் கற்பனை செய்ய முடியும். அது ஒருமுறை நடந்த தவறாகக் கூட இருக்கலாம். அவர் அல்லது அவள் தற்போதைய நிகழ்வில் ''ஓரிரவு நிலை'' என்று கூறப்படுவது போல நடந்திருக்கலாம். பின்னர், மற்ற துணைவரால் அது கண்டுபிடிக்கப்பட்டி ருக்கலாம். தவறு செய்தவர் தன்னறியாமல் சான்றுகளை விட்டுச்செல்ல வாய்ப்பு உண்டு.

சில நேரங்களில் மனச்சாட்சியின் வேதனையால் குற்றத்தை ஒப்புக்கொள்ளவும் நேரிடலாம். மற்றவர் மன்னிக்காமல் இருந்தால், அவர் அல்லது அவள் இதனை அடிப்படையாகக் கொண்டு திருமணத்தை முறித்துக் கொள்ள முடியும். ஆனால் அப்போதெல்லாம், விபச்சாரம் எவருடன் நடைபெற்றது என்பது மனுதாரருக்கு தெரியாமல் இருக்கலாம். மிகுந்த முயற்சி செய்தாலும் பலன் அளிக்காமல் போகலாம். இத்தகைய சூழலில், விபச்சாரியை இணை–எதிர் வாதியாக சேர்க்க வேண்டும் என வலியுறுத்துவது அநியாயமான முடிவுகளுக்கு வழி வகுக்கும். சட்டம் இயலாததை வற்புறுத்தாது (''Lex non cogit ad impossibilia'') என்ற லத்தீன் சிந்தனை இத்தகைய சூழலுக்குப் பொருந்தும். எனவே, மனுதாரருக்கு குற்றஞ்சாட்டப்பட்ட விபச்சாரியின் விவரங்கள் தெரிந்தால், அவர் அல்லது அவளை இணை–எதிர்வாதியாக சேர்க்க வேண்டும். சேர்க்க தவறினால், மனு உடனடியாக தள்ளுபடி செய்யப்படும். ஆனால் மனுதாரருக்கு குற்றஞ்சாட்டப்பட்ட விபச்சாரியின் பெயர் தெரியாததாக இருந்தால் அல்லது அவர்/அவள் இறந்திருந்தால், இணை–எதிர்வாதியாக சேர்க்க வேண்டிய தேவையிலிருந்து மனுதாரர் விலக்கப்படலாம். ஆனால் இதற்காக மனுதாரர் நீதிமன்றத்திலிருந்து அனுமதி பெற வேண்டும்.

7. குற்றஞ்சாட்டப்பட்ட விபச்சாரியை வழக்கமான சூழ்நிலையில் இணை–எதிர்வாதியாக சேர்க்க வேண்டும் என்று நாங்கள் கருதுவதற்கான முதன்மை காரணம், அது மிகச் சரியானது என்பதே ஆகும். சில நீதிபதிகள், இது மூன்றாம் நபரின் தனியுரிமையை மீறுவதாகும் என்று கருதியுள்ளனர். ஆனால், நாங்கள் அப்படிக் கருதவில்லை. விபசாரத்தின் அடிப்படையில் விவாகரத்துக்காக மனுதாரர் தாக்கல் செய்த மனுவை ஏற்றுக் கொள்வது, பதிலளிப்பவர் விபச்சார உறவில் இருந்ததாகக் கூறப்படும் நபரின் குணநலனில் களங்கம் மற்றும் அவமதிப்பு ஏற்படுத்தும். எனவே, மனுதாரர் முன்வைத்த குற்றச்சாட்டை மறுக்கும் வாய்ப்பை அந்த நபருக்கும் வழங்க வேண்டும். இல்லையேல், அவர் தன்னறியாமல் குற்றவாளியாக்கப் படுவார். இயற்கை நீதியின் கோட்பாடுகள் நிர்வாகச் சட்டத்திற்கே மட்டும் உட்பட்டவை அல்ல; அவை சட்டத்தின் பிற கிளைகளிலும் ஊடுருவுகின்றன. ஒருவரை தண்டிப்பதற்கு முன், அவருக்கு தன்னை விளக்கிக் கொள்ள வாய்ப்பு அளிக்கப்படுவது தான் நீதி மற்றும் நியாயம். குறிப்பாக, நமது பண்பாட்டில், ஒருவரை ''விபச்சாரி'' என்று குற்றஞ் சாட்டப்படுவது கௌரவப் பட்டயம் அல்ல.

8. மேற்கண்ட கருத்தை ஏற்க வேண்டிய மற்றொரு காரணம், பொறுப்பில்லாத குற்றச்சாட்டுகளை முன்வைப்பதைத் தவிர்க்கும் விதமாகும். குற்றஞ்சாட்டப்பட்ட விபச்சாரியை இணை–எதிர்வாதியாக சேர்ப்பது கட்டாயமாக்கப்பட்டால், ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் முன் ஒருவர் இருமுறை யோசிப்பார்.

9. இப்போது, கையில் உள்ள வழக்கின் உண்மைகளைப் பார்ப்போம். மேல்முறையீட்டாளர் மற்றும் பதிலளிப்பவரின் திருமணம் 10.11.1999 அன்று கம்பனூரில் இந்து சடங்குகளின்படி நடைபெற்றது. இந்தத் திருமணத்தில் இரண்டு குழந்தைகள் பிறந்தனர். தம்பதிகளுக்கிடையே திருமண உறவில் விரிசல் ஏற்பட்டது. கணவன் கண்ணன், H.M.O.P No.165/2017 எனும் மனுவை சிவகங்கை குடும்ப நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, விபசாரம் காரணமாக திருமணத்தை ரத்து செய்ய கோரினார். மனைவி மீனாட்சி, H.M.O.P No.166/2017 எனும் மனுவை தாக்கல் செய்து, திருமண வாழ்க்கை உரிமைகளை மீட்க கோரினார்.

10. கண்ணன், PW.1 ஆகத் தன்னை சாட்சியமாக ஆஜர்படுத்தினார். மேலும், அவரின் தரப்பில் இருவர் சாட்சியமளித்தனர். சான்றாவணங்கள் க1 முதல் க5 வரை அவர் தாக்கல் செய்தார். மீனாட்சி RW.1 ஆக தன்னை சாட்சியமாக ஆஜர்படுத்தினார். அவரின் தரப்பில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை.

வழக்கில் உள்ள சான்றுகளைப் பரிசீலித்தபின், சிவகங்கை குடும்ப நீதிமன்றம் 11.08.2018 அன்று H.M.O.P No.165/2017 மனுவை ஏற்று, H.M.O.P No.166/2017 மனுவை தள்ளுபடி செய்தது. இதனால், திருமண உறவு முறிந்ததாக கருதப்பட்டது. இதற்கு எதிராக, மீனாட்சி CMA (MD) Nos.434&435/2019 எனும் மேல்முறையீடு களைத் தாக்கல் செய்தார்.

11. குற்றம் சாட்டப்பட்ட விபச்சாரி, ஜகதீசன் வழக்கில் தரப்பினராகச் சேர்க்கப்படவில்லை. கணவன் தாக்கல் செய்த H.M.O.P No.165/2017 மனுவின் உள்ளடக்கம் விதி 4(a)(vi)யின் தேவை களை பூர்த்தி செய்யவில்லை. குற்றச்சாட்டுகள் தெளிவற்றவையாக இருந்தன. விபசாரி என சொல்லப்பட்டவரின் முகவரி கூட குறிப்பிடப்பட வில்லை. கணவன், திருப்பத்தூர் ''மகளிர் காவல் நிலைய'' ஆய்வாளரிடம் புகார் அளித்தது உண்மை. ஆனால் அங்கும், ''மனைவி ஜகதீசன் என்பவருடன் ஒழுக்கக்கேடான தொடர்பில் உள்ளார்'' என்பதைக் குறிப்பிடுவதற்குப் பிறகான விவரங்கள் சொல்லப்படவில்லை. எதிர் மனுதாரரின் நிலைப்பாடு, குற்றஞ் சாட்டப் பட்ட விபச்சாரி அவருக்குத் தெரியாதவர் என்பது அல்ல. அவர், குறிப்பிட்ட பாதையில் பேருந்து நடத்துனராக வேலை செய்கிறார் என்று விவரிக்கப் பட்டிருந்தார். எதிர்மனுதாரர் குறைந்தபட்சம் முயற்சி செய்திருந்தால், முகவரி விவரங்களை கண்டுபிடிக்க முடிந்திருக்கும். இத்தகைய சூழலில், கீழ்நிலை நீதிமன்றம் விவாகரத்து மனுவை அடிப்படையில் குறைபாடுள்ளதாகக் கருதி, கணவனின் மனுவை உடனடியாக தள்ளுபடி செய்திருக்க வேண்டும்.

12. இச்சூழலில், 11.08.2018 அன்று வழங்கப்பட்ட H.M.O.P.No.165/2017 விவாகரத்தை அனுமதித்த உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. அதேபோல், CMA (MD) No.434/2019 மேல்முறையீடு ஏற்கப்படுகிறது. செலவுகள் எதுவும் இல்லை.

மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை

## “கடல்சார் பல்கலைக்கழக இயக்குனரின் பதவி நீக்கம் செல்லாது” - உயர்நீதிமன்ற தீர்ப்பு

கடல்சார் பல்கலைக்கழகத்தின் இயக்குனர் பதவியில் இருந்து பி. விஜயனை நீக்கியது செல்லாது என்று சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பு அளித்துள்ளது.

சென்னையில் தொடங்கப்பட்ட இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தின் முதல் துணை வேந்தராக 2008ஆம் ஆண்டு பி.விஜயன் என்பவர் நியமிக்கப் பட்டார். இவரது பதவி காலம் 2011ஆம் ஆண்டு நவம்பர் 19ஆம் தேதியுடன் முடிவடைந்தது. இதை யடுத்து, அதே பல்கலைக் கழகத்தில் இயக்குனராக அவர் நியமிக்கப்பட்டார்.

அப்போது, அவர் துணைவேந்தருக்கு உரிய வசதிகளை தொடர்ந்து பயன்படுத்தி ரூ.22.65 கோடி இழப்பு ஏற்படுத்தியதாக குற்றஞ்சாட்டப் பட்டது. இந்த தொகையை திருப்பிச் செலுத்த வேண்டும் என்று பல்கலைக்கழக நிர்வாகம் உத்தரவிட்டது மட்டுமல்லாமல், அவரை பணி நீக்கம் செய்தது.

இதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் அவர் தாக்கல் செய்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி, பணி நீக்கம் செய்த உத்தரவு சட்ட விரோத மானது. ரூ.22.65 கோடியை செலுத்த உத்தர விட்டதும் ஏற்புடையது அல்ல. இது தொடர்பான பல்கலைக்கழகத்தின் உத்தரவை ரத்து செய்கிறேன் என்று 2022ஆம் ஆண்டு உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை எதிர்த்து பல்கலைக் கழகத்தின் செயற்குழு தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப் பட்டது. இந்த வழக்கை நீதிபதிகள் ஜெ.நிஷாபானு, எம்.ஜோதிராமன் ஆகியோர் விசாரித்தனர். பின்னர் நீதிபதிகள் பிறப்பித்த தீர்ப்பில், ‘‘துணைவேந்தர் பதவிக்காலம் முடிந்து பின்னர், அந்தப் பதவிக்கான வசதிகளைப் பயன்படுத்தியதாக குற்றம் சாட்டும் பல்கலைக்கழக நிர்வாகம், அந்த வசதிகளை அப்போதே திரும்பப் பெற்றிருக்க வேண்டும்.

அதை செய்யாமல், அவரை பணி நீக்கம் செய்து அவரிடமிருந்து அந்த தொகையை திரும்ப செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டது. சரியான நடவடிக்கை இல்லை. இது தொடர்பாக பல்கலைக் கழகம் பிறப்பித்த உத்தரவு செல்லாது அதனால், தனி நீதிபதி உத்தரவை உறுதி செய்கிறோம். இந்த மேல்முறையீட்டு வழக்கை தள்ளுபடி செய்கிறோம்'' என்று உத்தரவிட்டனர்.

நன்றி: தினத்தந்தி 21.9.2025

# ஒழுங்குமுறை நடவடிக்கையும் அதற்கான நடைமுறையும்

சென்னை உயர்நீதிமன்றம் – மதுரை நீதியர் ஆயம்
முன்னிலை : நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன்
நீதிபதி பி. வடமலை
நீ.பே.ம.(MD) எண் 932/2021, நீ.பே.ம. (MD) எண் 4238/2021
28.03.2025
**2025 (2) CTC 697**

பொது மேலாளர் சீராய்வு அதிகாரி
கனரா வங்கி, மனித ஆய்வுப் பிரிவு,
தலைமை அலுவலகம்: 112, ஜெ,சி, ரோடு, பெங்களூரு-2.
2. துணைப் பொது மேலாளர்,
மேல்முறையீட்டு அதிகாரி, மனித ஆற்றல் பிரிவு,
தலைமை அலுவலகம், 112, ஜெ.சி.ரோடு, பெங்களூரு
2.3. உதவிப் பொது மேலாளர் ஒழுங்கு முறை அலுவலர்,
வட்ட அலுவலகம், கிழக்கு வேலி தெரு,
மதுரை – 625 001 ...மேல்முறையீட்டாளர்கள்

–எதிர்–

எஸ்.வி. மோதிலால், மேலாளர்,
(சந்தைப்படுத்துதல்) (தற்காலிக பணி நீக்கம்)
கனரா வங்கி, மதுரை-622 001. ...எதிர்வழக்கீட்டாளர்கள்

என்.திலிப்குமார்
மேல்முறையீட்டாளர்களின் வழக்கறிஞர்

எம்.இ.இளங்கோ
எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர்

நீ.பே.ம. வகை செய்யப்பட்டது. செலவுத் தொகையின்றி. ப.ம. முடிக்கப்பட்டது.

**கோரிக்கை** : உரிமைப்பட்டயத்தின் கூறு 15இன்படி நீதிப்பேராணை மேல்முறையீடு, நீ.பே.ம.(MD) எண் 1404/2015, 1.12.2020 தேதியிடப்பட்டதில் பிறப்பிக்கப்பட்ட ஆணையை தள்ளுபடி செய்யக் கோரியும் நீதிப்பேராணை மனுவைத் தள்ளுபடி செய்யத் தீர்ப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டது. 28.11.2024 வெளியிடப்பட்டது 28.3.2025

## தீர்ப்பு

**நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன்**

ஒழுங்குமுறை நடவடிக்கை நேருக்கு நேர் செய்தும் ரெயில் பயணம் போன்று அமைய முடியாது. குற்றச்சாட்டுக் குறிப்பாணை கட்டாய மாக தண்டனை அளிப்பதாக மட்டுமே அமையக் கூடாது. அதேநேரத்தில் கடமை தவறும் பணியாளர் பணியிலிருந்த அனுப்பப் பட வேண்டிய வரும் கூட. நடவடிக்கைகள் நிறைவாக சரியான முறையில் நடத்தப்பட வேண்டும். நிதானமாகவும் நிறுத்து நிலையங்களாகவும் நடவடிக்கை நடத்தப்பட வேண்டும். நிறுத்தங்கள் பயனுள்ளவைகளாக இருத்தல் அவசியம். நடவடிக்கை இதற்காக மிகவும் மந்தமாக நடத்தப்பட வேண்டியதுமில்லை. நடவடிக்கை கள் நியாயமான வேகத்தில் நடத்தப்பட்டு முடிக்கப்படுதல் வேண்டும். நீதிமுறை நன்கு அறியப்பட்டு நியாயமான முறையில் செய்யப் பட்டதாகவும் மற்றும் அதன் முடிவு முன்பே தீர்மானிக்கப்பட்ட ஒன்றல்ல என்பதையும் உணர்த்தும் வகையில் செயற்படுதல் வேண்டும்.

2. ஒழுங்குமுறை அதிகாரிகளால் பிறப்பிக்கப் பட்ட ஆணை அது. மேல்முறை யீட்டாளரால் உறுதி செய்யப்பட்டது மற்றும் சீராய்வு அதிகாரிகள், மேற்சொல்லப்பட்ட நிலையில் எதனை ஓய்வு செய்துள்ளேன். இப்போது நாம் பொருண்மைகள் பற்றி அறிவோம்.

3. நீதிப்பேராணை மனுதாரர் கனரா வங்கி யில் வேளாண்மை நீட்டிப்பு அலுவலராக 1982ஆம் ஆண்டில் பணியில் சேர்ந்தார். ஆண்டுகளாக அவருக்கு பதவி உயர்வு

அளிக்கப்பட்டது. 2007ஆம் ஆண்டில், அவர் பணி தேர்ச்சி பெற்ற மேலாளராகப் பணி புரிந்தார். தரநிலையில் IIIஆம் படி அலுவலராக ஆகஸ்டு ஆம்படி அலுவலராக ஆகஸ்டு 2007 மற்றும் ஜுலை 2009க்கு இடையில் அவர் இணை மேலாளராக செயற்பட்டார். மதுரை புதூரில் கிளை வங்கியில் சொல்லப்பட்ட காலத்தில் மனுதாரர் பல கடன்களை சுய உதவிக்குக் குழு தொடர்பாக பலருக்கும் அளித்துள்ளார். 27.7.2009 அவர் பணியிட மாற்றம் செய்யப்பட்டார். 13.7.2013 மனுதாரருக்கு குற்றச்சாட்டு குறிப்பாணை சார்வு செய்யப்பட்டது. இதில், வெறுப்புகளின்படி குற்றச்சாட்டுகள் செய்யப்பட்டன. குறிப்பாக கூறப்பட்டதாவது, நீதிப்பேராணை மனுதாரர் தரப்பில் ஏற்பட்ட குறைகள் காரணமாக வங்கிக்கு நிதியிழப்பு 1.66 கோடி வரை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

4. இதில் மனுதாரர் அவருடைய விளக்கத்தினை அளிக்கக் கோரப்பட்டது. பதினைந்து நாட்களுக்குள் இதில் மனுதாரரின் விளக்கத்திற்காக காத்திராது 17.7.2013 அன்று விசாரணை தொடங்கப்பட்டது. 18.7.2013 அன்று விசாரணை முடிக்கப்பட்டது. மனுதாரரின் எதிர்ப்பு பணிந்தனுப்பப்பட்ட 20.7.2013 அன்று விசாரணை அலுவலர் அவரது அறிக்கையை 23.7.2013 அன்று பணிந்தளித்தார் அது பின்வரும் கண்டறிதல்களைக் கொண்டிருந்தது.

| வ. எண் | பிரச்சினை/குற்றச்சாட்டுகள் | கண்டறிதல்கள் |
|---|---|---|
| 1. | அ.உ.கு.வினால் – கடன் தொகை பெறப்படவில்லை மற்றும் சு.உ.கு. களுக்கு அவர்களுக்கு அளிக்கப்பட்ட கடன் கண்டறிய அறிவே இல்லை. | குற்றம் |
| 2. | பின்வரும் குழுக்கள் தொடர்பாக. முழு கடன் தொகை, குழுக்களால் பெறப்படவில்லை. குழுக்களால் பகுதித் தொகையை பெறப்பட்டுள்ளது கடன் தொகை நேரடியாக குழுக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவில்லை. ஆனால் அவை சு.அ.நி.மூலம் பகிர்ந்தளிக்கப்பட்டன. | மெய்ப்பிக்கவில்லை |
| 3. | அ.உ.கு. கடன்கள் அதேநாளில் வழங்கப்பட்டதை அதாவது குழு அமைக்கப்பட்ட உடன். இதில் அவை ஆறு மாதங்கள் தொடர்ந்து, குழுக்கள், செயற்பட்டதா என்பதும் உறுதி செய்யப்படவில்லை. மேலும் பின்வரும் கடன்கள் வழங்கப்பட்டதும் சில வேறுபாடுகள் கண்டறியப்பட்டன. | பகுதி – தவறுகள் உள்ளன |
| | (1) குழுக்கள் பதிவேடுகள் வைத்து வரப்படுகின்றனவா என்பது உறுதி செய்யப்படவில்லை. அதாவது மேற்சொல்லப்பட்ட வற்றிற்கு அனைத்திலும் கடன்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்ட நேரத்தில் இவைகளில் பதிவேடுகள் வைத்து வரப்படுவது பற்றி | குற்றம் |
| | (2) உள் நடவடிக்கைகள் பற்றிய உடன்படிக்கை எந்த கிளை அலுவலகத்தாலும் கண்டறியப்படவேயில்லை/சான்றாக்கப் படவில்லை. | பகுதி – குற்றமே |
| | (3) சி.ஆர்.படிகள் சி.ஓ./ஆர்.ஓ.களிடம் பணிந்தளிக்கப்படவில்லை. சீராய்வுக்காக. | பகுதி – குற்றமே |
| | (4) குழுக்களுக்கிடையே சமநிலை கடைப்பிடிக்கப்படவில்லை. | |
| 4. | அ.உ.கு. கடன்கள் – கேஒய்சி பற்றியோ, சேமிப்பு கணக்கு கடன் விகிதாச்சாரம் பற்றிய குறிப்புகள் குழுக்களிடம் பெறப்படவில்லை. வழி காட்டு நெறிகள்பின்பற்றப்படாமல் கடன்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டன. | குற்றம் |

| வ. எண் | பிரச்சினை/குற்றச்சாட்டுகள் | கண்டறிதல்கள் |
|---|---|---|
| 5. | சு.உ.கு. கடன்களில் இருந்து, முகவர்கள் மூலம் வைப்பீட்டுத் தொகையைப் பெறுவதற்கு தாகுத் தொகை செலுத்தப்பட்டது. (குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்ட தொகை தரகாக காட்டப்பட்டது. | குற்றம் மெய்ப்பிக்கப் படவில்லை |
| 6. | சட்டவிரோத கையூட்டு | குற்றமாகாது |
| 7. | பணியாளர்களின் நெருங்கிய சொந்தங்களுக்குக் கடன் | |
| 8. | சிஎஸ்ஓ – 55– அ.உ.கு.க்கு கடன்கள் வழங்கியுள்ளன. அ.அ.நி. மூலமாக மெசர்ஸ் அமைதிக் குழு மூலம் மோசடியாக | பகுதி–குற்றமாகும் |
| 9. | கிளை அலுவலர்களின் முன்பு ஆவணங்கள் பெறப்படவில்லை | குற்றம் |
| 10. | அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுபவர்களிடம் பணம் பெறும் ஆணைக்கான படிவங்கள் அளிக்கப்படவில்லை. | குற்றமாகாது |
| 11. | 2007–2009, 2010–2011 ஆண்டுகளின்போது ஒப்பளிக்கப்பட்ட கடன்கள், சி.எஸ்.ஓ. இதில் செலுத்தப்பட்ட குறிப்புகள் எதுவும் உறுதி செய்யப்படவில்லை. | பகுதி – குற்றமே |
| 12. | திரி இழப்பு | குற்றமே |
| 13. | உண்மை, நேர்மை, பற்று, விவேகம் | குற்றமே |

அதேநாளில், மனுதாரரின் மேலுமான சார்பாற்றங்கள் பெறப்பட்டன. அதன் பின்னர், ஒழுங்குமுறை நடவடிக்கை அலுவலர், 27.7.2013 அன்று ஆணை ஒன்றினை பிறப்பித்துள்ளார். அதில் விசாரணை அலுவலரின் கண்டறிதல்களுடன் உடன்பட்டு மற்றும் இதற்கான தண்டனையாக பணியில் இருந்து பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

5. இதனால் குறையுற்ற மனுதாரர் மேல் முறையீட்டு அதிகாரி முன்பு மேல்முறையீட்டை முன்னிட்டுள்ளார். மேல்முறையீட்டு அதிகாரி, 5.2.2014 தேதியிட்ட விரிவான ஆணை மூலம் மேல்முறையீட்டை தள்ளுபடி செய்துள்ளார். மேல்முறையீட்டாளர், சொல்லப்பட்ட ஆணையை சீராய்வு செய்யக் கோரியுள்ளார். சீராய்வு அதிகாரி 3.9.2014. இதில் இடையீடு செய்ய மறுத்துள்ளார். இந்த ஆணைகளை எதிர்த்து மனுதாரர் நீ.பே.ம. (எம்டி) எண் 1404/2015 இனை முன்னிட்டுள்ளார். தனி நீதிபதி விரிவான ஆணை 1.12.2020 எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட அனைத்து ஆணைகளையும் தள்ளுபடி செய்துள்ளார். தனி நீதிபதியால் பிறப்பிக்கப்பட்ட ஆணையை எதிர்த்து இந்த நீதிப்பேராணை மேல்முறையீடு வங்கி மேலாளரால் முன்னிடப் பட்டுள்ளது.

6. வங்கிக்காக முன்னிலையாகிற வழக்கறிஞர் மீண்டும் வரையுறுத்தியதாவது, மேல்முறை யீட்டின் குறிப்பாணை ஆதாரங்களில் அனைத்து வாதங்களும் கூறப்பட்டுள்ளன. அவர் எழுத்து மூல வாதங்களை முன்னிட்டார் மற்றும் அதன் உள்ளடங்கள் பற்றி கூறினார். வாதங்களின் கருவானது மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர் வீட்டில் ஆய்வு அறிக்கைகளை பார்த்ததில் அறியப்படுவது, மேல்முறையீட்டாளர் ஒப்பளிப்பு நடைமுறையைப் பின்பற்றவில்லை. இதன் காரணம், முறையற்ற, ஒழுங்கற்ற, மோசடி யான முறையில் கடன் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது. இதனால் வங்கிக்கு பெருத்த நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. இத்தகைய சூழ்நிலை களில் மேலாண்மை அவரை தண்டிக்கும்

விதமாக பணி நீக்கம் செய்தது நியாயமானதே. தொகுப்பான முடிவுகளை ஆதாரமாகக் கொண்டு, வங்கியின் வழக்கறிஞர் வாதிட்ட தாவது, இத்தகைய பொருட்பாடுகளில் இடையீடு செய்வதற்கான வீச்சு குறைந்ததே. அவர் நமது கவனத்தை ஈர்த்ததாவது பிசி காக்கர் –எதிர்– UoI, 2003 (4) உச்.நீ.வ. 364. இதில் கூறப்பட்ட தாவது, ஒரு வங்கியின் மேலாளர், அதிக அளவிலான நேர்மையுடன் ஒருமைப்பாடு டனும் இருத்தல் அவசியம். தவறாக பட்சாதாபம் கொண்டு தண்டித்தலாகாது. மேல்முறை யீட்டாளரின் வழக்கறிஞர் வாதிட்டதாவது தனி நீதிபதியால் எடுத்துக் கூறப்பட்ட காரணங்கள் எதுவும் சரியானதாக இல்லை. அவர் குறிப்பாக பணிந்தளித்தது. நீதிப்பேராணை நீதிமன்றம் ஒரு பொருண்மை பற்றிய செயற்பாடுகளை ஊகிக்கக் கூடாது அல்லது தண்டனையின் அளவை தீர்மானிக்க முடியாது. அதாவது அளிக்கப்பட வேண்டியது பற்றி மற்றும் அத்தகைய கண்டறிதல்கள் பணியமர்த்து பவரின் அதிகார வரம்பிற்குள் உள்ளது. அதாவது ஆதாரமான வழக்கின் முடிவு, பி.சி. சதுர்வேதி –எதிர்– இந்திய யூனியன் 1997 (4) LLN 65 (உச்.நீ.) 1995 (6) உச்.நீ.வ. 749. அதில் தொகுப்பான முடிபுகள் இவரது வாதத்துக்கு ஆதாரமாக உள்ளது மற்றும் இந்த நீதிமன்றத்தை, எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட ஆணையை தள்ளுபடி செய்து கோரப்பட்ட வரான உய்தியை அளிக்க கூறியுள்ளது.

7. மாறாக, எதிர்வழக்கீட்டாளரின் வழக்கறிஞர், பணிந்தளித்தது. தனி நீதிபதி, மனுதாரரின் பேரில் விதிக்கப்பட்ட தண்டனை பற்றி இடையீடு செய்தது நியாயமானதே. அவர் இந்த நீதிமன்றத்தை அந்த தண்டனையை மேற் கொண்டு மேல்முறையீட்டை தள்ளுபடி செய்யக் கோரியது.

8. நாம் கவனமாக எதிரெதிர் வாதங்களை கருதுகை செய்துள்ளோம் மற்றும் பதிவேட்டில் காணப்படும் பொருட்பாடுகளைப் படித்த றிந்தோம். இதில் பூசவில்லை. இந்த தவறுகள் ஆகஸ்ட் 2007 மற்றும் ஜுலை 2007க்கு இடையீடு ஏற்பட்டது என்பது. அதாவது மனுதாரரின் தவறுகளால் ஏற்கப்பட்டவாறு, மனுதாரர் புதூர் கிளைக்கு 27.7.2009இல் மாற்றப்பட்டார். எனினும் பின்னர் எந்த அறிக்கையும் அனுப்பப்படவில்லை வேறு சொற்களில், மனுதாரர் விரிவான ஆணை 13.7.2013 தேதியிடப்பட்டது. குற்றம் சுமத்தப்பட்டார். அவர் 27.7.2013 அன்று பணி நீக்கம் செய்யப்பட்டார். இதில் உண்மையாகவே, தேவையான அனைத்து செயற்பாடுகளும் நடைபெற்றன. குற்றச்சாட்டு குறிப்பாணை அளிக்கப்பட்டது. விசாரணை அலுவலர் அமர்த்தப்பட்டார் ஆவணங்கள் குறியீடு செய்யப் பட்டன. சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். இரு தரப்பினர்களிடமிருந்தும் எழுத்து மூல பணிந்த னுப்புதல்கள் பெறப்பட்டன. விசாரணை அறிக்கை பணிந்தளிக்கப்பட்டது. மேலுமான சார்பாற்றம் அதாவது விசாரணை அறிக்கையின் பேரில் பணிந்தளிக்கப்பட்டது. பணி நீக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

9. நாம் நீதிமுறை அறிக்கை என்னும் பொருண்மை பற்றி கூறுவது ஒழுங்குமுறை நடவடிக்கைகள் இத்தன்மையது சாதாரணமாக சில மாதங்களில் நடைபெறும் அதாவது இறுதி நிலைமையை அவசரமாக அளிக்கப்படும் நீதியில் நீதி புதைக்கப்படும் என்பதும் ஒரு கூற்று. இதில் ஏற்க/ஒத்துக் கொள்ள முடியாது ஒன்று. முழு நடவடிக்கைகளும் அதாவது அனைத்து நடவடிக்கைகளும் நியாயமான முறையில் நடைபெற்றதாக என்பது அதுவும் இரண்டு வாரத்திற்குள் குற்றச்சாட்டு குறிப் பாணை 13.7.2013 இவ்வாறு தொடங்குகிறது.

“இதில் செய்யக் கருதப்பட்டது. உங்களுக்கு எதிராக ஒரு விசாரணை நடந்த 1976, கனரா வங்கி அலுவலகப் பணியாளர்கள் (ஒழுங்கு முறை மற்றும் மேல்முறையீட்டு) ஒழுங்குமுறைப் படுத்தும் 6இன்படி குற்றச்சாட்டுகள் தொடர்பாக வும், தவறான நடத்தை காரணமாக விவர உரையில் அடங்கியுள்ள பற்றியும். இதன் மூலம் நீங்கள் உங்கள் விளக்கத்திலான பணிந்தளிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். அதாவது இந்தக் குற்றச்சாட்டு பெறப்பட்ட பதினைந்து நாட் களுக்குள். இதனை எதிர்த்து அளிக்கப்படும் விவர உரை அதில் உங்களது எதிர்ப்பை கூறியும் அதன் காரணங்களை விவரித்தும்

உங்களுக்கு எதிராக ஏன் துறை நடவடிக்கைகள் எடுக்கக் கூடாது என்பது பற்றி.''

வேறு சொற்களில் மனுதாரருக்கும் அவரது விளக்கத்தை அளிக்க 15 நாட்கள் அளிக்கப் பட்டன. பொருண்மையின்படி மேற்சொல்லப் பட்டது காரணங்காட்டுக என்றும் தன்மை யிலானது. தவறு செய்தவரால் அளிக்கப்பட்ட விளக்கம் மனநிறைவளிப்பதாக இருக்கு மானால், மேற்கொண்டான நடவடிக்கைகள் நிறுத்தப்படும். ஆனால், இவரது விளக்கத்திற் காகக் கூடக் காத்திராமல் விசாரணையானது. 17.7.2013 அன்று தொடங்கப்பட்டது. விசாரணை அலுவலர் அமர்த்தப்பட்டார். கூறப்பட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டன. அதாவது ஆகஸ்ட்டு 2007 முதல் ஜுலை 2009 உரையிலானவை மற்றும் மனுதாரர் அந்த ஆவணங்களைக் கூர்ந்தாய்வு செய்யக் கூட போதிய நேரம் கிடைத்திருக்க முடியாது. குற்றச்சாட்டுக் குறிப்பாணையில், சுட்டப்பட்டவைமூன்று ஆவணங்கள் மட்டுமே. இதில் மூன்று சாட்சிகள் விசாரிக்கக் கருதப் பட்டனர். ஆனால் விசாரணையில் 96 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன மற்றும் 17 சாட்சிகள் விசாரிக்கப்பட்டன. இது சரியான இரண்டே நாட்களில் செய்யப்பட்டது. அதாவது 17.7.2013, 18.7.2013. விசாரணை அலுவலர், அவரது அறிக்கையை பணிந்த னுப்பி இருந்தது. அவசர கதியில் அதாவது 23.7.2013 சாதாரணமாக, விசாரணை அறிக்கை ஒழுங்கு நடவடிக்கை அலுவலரிடம் பணிந்தனுப்பப்படும். இதனை அவர் படித்துக் கண்டறிந்து ஒழுங்குமுறை அலுவலர் இந்த கண்டறிதல்களுக்கு உடன் படுவார் அல்லது இவருடன் ஒத்துவராத வற்றை பகுதியாக எதிர்ப்பார். அதாவது விசாரணை அலுவலரின் அறிக்கை, இவ்வாறு நடைபெறாமல், மனு ாரரது பதில் உடனடியாகப் பெறப்பட்டது. இதில் எவ்வாறு விசாரணை அறிக்கை அனுப்பப்பட்டது என்பதும் அறியப் படவில்லை. 27.7.2013 அன்றே, பணி நீக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. உச்சநீதிமன்றம் வழக்கின் முடிவில் அதாவது ஆரிலியானோ பெர்ணான்டஸ் –எதிர்– கோவா மாநிலம் 2023 (6) LLN 432, (உச்.நீ.) 2024 (1) உச்.நீ.வ. 632இல் கூறியதாவது ''சூரைக் காற்றின் வேகத்தி நடவடிக்கைகள். இதில் மொத்த நடைமுறையும் மொத்தமாக 39 நாட்களில் கலந்து கொட்டி அள்ளப்பட்டன. அதாவது விசாரணையை முடிவுக்குக் கொண்டு வர, இது நியாயப் படுத்தப்பட முடியாது. இதில் மேல்முறையீட்டாளரின் உரிமை குறைக்கப்படு கிறது. கையில் உள்ள வழக்கில், மொத்த நடவடிக்கைகளும் முடிவுறுத்தப்பட்டது. இரண்டே வாரங்களில் இந்தச் சொற்றொடர் சூரைக்காட்டு நடவடிக்கைகள் உச்சநீதிமன்றத்தினால் பயன் படுத்தப்பட்டது. சரியாகவே இந்தக் கையில் உள்ள வழக்கிற்கு பொருத்துவதாக அமைகிறது.

10. நிகழ்வுகளின்படி நாம் முடிவு கொள்ள வேண்டியதாவது ஏதோ ஒரு வகையில் மனுதாரருக்கு உறுதி கூறப்பட்டிருக்கும், அவர் ஒத்துழைப்பு அளிப்பாரானால் அவருக்கு குறைந்தபட்ச தண்டனை அளிக்கப்படும் என்று வேறுவகையில், குற்றம் செய்த எவரும், தாமே முன் வந்து விசாரணை நடவடிக்கையில் அதுவும் தனது எதிர்ப்பிற்கான விவர உரையினை பணிந்தனுப்புதவற்கு முன்பே பங்கு பெற மாட்டார். இந்த பொருண்மையாவது இவரது பதில் விசாரணை அலுவலருக்கு, பணிந்தளிக்கப்பட்டது. உடனடியான இதில் அறியப்படுவது ஏதோ ஒரு வகை கட்டாயப் படுத்துதல் செயற்பட்டிருப்பதாக நீதிப்பேராணை மனுதார் ஆடு கசாப்புக் கடைக்கு அழைத்துச் செல்லப்படுவதுபோல், பரிதாப மின்றி அவசர நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். நாம் கொண்டுள்ள கருத்தாவது மறுப்புத் தடை என்னும் நெறிமுறையின் மூலம் இவர்களு டைய நிலை தவறு செய்தவருக்கு எதிராக செயற் படுத்த முடியாது. இதில் நடைமுறையின்படி செயற்படவும் அதில் நியாயமானதாக அமையவும், நாம் பணி அமர்த்துபவர் செயற்படுவார் என்ற எதிர்பார்ப்பு இவர்கள் பணியாளர்கள் இது தேவையற்ற உரிமையை செயற்படுத்த முடியாது. எந்த அளவுக்கு கற்பனையைச் செயற் படுத்தினாலும் இந்த வழக்கின் நடைமுறைகள் நியாயமாக நடத்தப்பட்டிருக்கும் என்று கூற முடியாது. இதில் காணப்படும் காரணங்களின் பேரில் இதனை இடையீடு செய்யதே நியாய மானதாகும்.

11. அதுவன்றி, தனி நீதிபதி குறிப்பிட்டுள்ள தாவது, இதில் காலவரம்பினால் ஏற்படும் தடையும் செயற்படும் என்பது. மேலாண்மை யானது சுற்றறிக்கை 72/2012 10.3.2022 தேதியிட்டதை பிறப்பித்துள்ளது அதாவது பணிபுரிபவர்களின் நிலை பற்றி கூறு 2.14, 5 இவை பின்வருமாறு.

–14 கடன் தவறுதல்கள் கணக்கு பற்றியவை.

கடன் திருப்பிச் செலுத்தத் தவறுகிறபோது சில நேரங்களில் ஏற்படுவதுபோல், இதற்கான காரணத்தை, ஆராய்வது வங்கிக்கு தேவையான தாகிறது மற்றும் அதனைப் பதிவு செய்து அதன் ஞாபகத்தில் வைத்து, அவற்றை எதிர்காலத்தில் தளர்ப்பது அவசியமாகிறது. இத்தகைய தவறுதல்கள் நேரடிச் செய்க அல்லது விருகை பணிபுரிபவர்களின் பேரிலானதாக உள்ளபோது, இதற்கான காரணங்கள் ஆராயப்படும். இதில் பணியாளர்களுக்காக தவறுகள் காரணம் என்று கண்டறியப்படுகிறபோதெல்லாம் அதாவது அவர்களது செயல்கள் அல்லது விடுகைகள் கடன் பெறும் வசதிக்கு எதிராக செயற்படவில்லை என்னும் போது இத்தகைய தவறுகை செயற் படாது.

இதில் நடைமுறை தவறுகள் மட்டுமே பணியாளருக்கு எதிரான நடவடிக்கை மேற் கொள்ள காரணமாக அமையக் கூடாது. ஒரு தொடர்புடைய கணக்கில் தவறுதல் போதிய பெறக் கூடிய பிணையங்கள் கிடைக்கத்தக்க தாயிருந்து/அல்லது கணக்கில் உள்ளபோது அவை முடிக்கப்பட்டு/முழுவதுமாக வசூலிக்கப் படுவது அதற்கானத் திட்டங்கள் தொடர்பானவை. இதில் மோசடி சான்றாக இருந்தாலன்றி தவறான செயற்பாடு தலைதூக்காது.

கையில் உள்ள வழக்கில், நடைமுறைத் தவறுகை மெய்ப்பிக்கப்பட்டது. இதில் உள்ள பதிவேட்டில் மனுதாரர் நியாயமற்ற முறையில் ஆதாயம் பெற்றதாக காட்டப்படவில்லை. பணியாளரின் வழக்கறிஞரின் வாதத்தில் கூறப்பட்டிருப்பது, வங்கியின் மூத்த மேலாளர் சேர்ந்து கையொப்பமிடும் அதிகாரியாக மட்டுமே செயற்பட்டார். அவர் எந்தக் கள ஆய்வும் மேற் கொள்ளவில்லை என்று தொடர்புற்ற காலத்தில், போதிய அழுத்தம் கடன்கள் வழங்க அளிக்கப் பட்டது. அதுவும் சுயஉதவிக் குழுக்களுக்காக, தவறாக செயல்படுபவர்கள் அதை மனுதாரரைப் பிணையாக்கினர். கூறப்பட்ட இரண்டு தேதி களுக்கு நடுவே அதாவது மனுதாரர் புதூர் கிளைக்கு மாற்றப்பட்டதிலிருந்து குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்ட தேதிக்கும் இடை யில் இரண்டு தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டன. நான்கு முழு ஆண்டுகள் முடிவுற்றன. அதாவது இவை ஏற்பட்ட தேதிக்கும் குற்றச்சாட்டு குறிப்பாணை அளிக்கப்பட்ட தேதிகளுக்கும் இடையில் மனுதாரர் 27.7.2013க்கு முன்பு நடைபெற்ற எந்த முறைகேடும் இவருக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கையில் இடம் பெறக் கூடாது. எனவே, தனி நீதிபதி கூறியதாவது மேற்சொல்லப்பட்ட கூறு 5.2 துறை நடவடிக்கை தொடங்குவதற்கு வழியில் இருப்பது. எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்ட ஆணையை இடையீடு செய்ய எந்தக் காரணமும் நாம் காணவில்லை அதாவது நீதிப்பேராணையை அனுமதிக்கவும்.

12. மேல்முறையீட்டு அதிகாரியால் பிறப்பிக்கப் பட்ட ஆணையையும் சீராய்வு அதிகாரியின் ஆணையையும் கண்டறிந்தோம். இரண்டு ஆணைகளும், நீதிப்பேராணை மனுதாரரால் எழுப்பப்பட்ட எதிர்ப்புகளுக்கு குறிப்பிட்ட வாதங்கள் எதுவும் இல்லை. அதனால் தனி நீதிபதி இவற்றை பேசாத ஆணைகள் என வகைப்படுத்தியுள்ளார்.

13. மேற்சொல்லப்பட்ட மூன்று காரணங் களுக்காக நடைமுறை நியாயங்கள் என்னும் நெறிமுறை முற்றிலும் முறியடிக்கப்பட்டுள்ளது. ஒழுங்குமுறை நடவடிக்கை கூறு 5.2 இனால் பாதிக்கப்படுகிறது மற்றும் இந்த ஆணைகளின இது பற்றி பேசப்படாத தன்மை, தனி நீதிபதியின் ஆணையினை நாட்கள் இடையீடு செய்ய விரும்பவில்லை. நீதிப்பேராணை மனு

தள்ளுபடி செலவுத் தொகையின்றி, தொடர்புடைய பல்வகை மனு முடிக்கப்படுகிறது.

**மொழியாக்கம்: ஓ.பா.சாந்தி**

# ஒரு நீதிபதியின் வேறுபட்ட கருத்தை மறைப்பது - நீதித்துறையின் அதிகாரத்தை சிதைக்கும் செயல்

-சுகிர்த் பார்த்தசாரதி

எழுத்துப்பூர்வமான சட்டங்களினால் மட்டுமல்ல, ''நியாயப்படுத்தும் பண்பாடு'' எனும் ஒரு வழக்கத்தினாலும்தான் அரசியலமைப்பு ஜனநாயகங்கள் நிலைத்திருக்கின்றன என்று தென்னாபிரிக்க சட்டப் பேராசிரியர் எத்தியென் முரெய்னிக் (Etienne Mureinik) முதலில் குறிப்பிட்டார். அதாவது, ஒவ்வொரு பொதுச் சாம்ராஜ்யத்தின் பயனீட்டையும் விளக்கி, நியாயப்படுத்த வேண்டும் என்பது அவர் கருத்து. முரெய்னிக் மேலும் தெரிவிக்கையில்: ''அரசின் தலைமையேற்பு, அதன் கையில் உள்ள பலத்தால் மக்கள் பயப்படுவதிலல்ல, அதன் முடிவுகளைத் தற்காப்புச் செய்வதற்கான காரணங்கள் எவ்வளவு வலிமையானவை என்பதில்தான் இருக்கிறது'' என்றார்.

இந்தக் கொள்கையை இந்திய நீதிபதிகள் அடிக்கடி மேற்கோள் காட்டி, அரசிடமிருந்து பொறுப்புணர்வை கோரியுள்ளனர். ஆனால், உச்சநீதிமன்ற நீதிபதி பி.வி. நாகரத்னா அவர்கள், நீதிபதி விபுல் எம். பஞ்சோலி அவர்களை உச்சநீதிமன்றத்திற்கு உயர்த்தும் நீதிபதிகள் தேர்வுக்குழுவின் (கொலிஜியம்) பரிந்துரைக்கு எதிராக தெரிவித்த கருத்து பற்றிய செய்திகள் ஊடகங்களில் வெளிப்பட்டுள்ள நிலையில், இந்த ''நியாயப்படுத்தும் பண்பாடு'' நீதிபதிகள் தேர்வுக்குழுவின் வாசலிலே நிற்பது போலத் தெரிகிறது. நீதிமன்றம் தன் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் விவகாரத்தில், பொதுமக்களுக்கு எதையும் அறியும் உரிமை இல்லை என்பது போல் அந்த செயல் மேற்கொள்ளப்படுகிறது.

**அமைப்பின் மீதான ஒரு குற்றச்சாட்டு**

இத்தகைய வேறுபாடு சாதாரணமாக ஒரு பெரிய கணக்கீடு தருணமாகக் கருதப்படும். ஆனால், நீதிபதிகள் தேர்வுக் குழுமம் மற்றும் அதனைச் சூழ்ந்துள்ள கிட்டத்தட்ட முழுமையான இருள்மறை காரணமாக, இந்த எதிர்ப்புக் கருத்து என்பது பயனற்ற ஒன்றாகவே மாறியுள்ளது. பரிந்துரையை காட்டும் தீர்மானம் உச்சநீதிமன்ற இணையதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ள நிலையில், அது ஒருமனதாக எடுக்கப்பட்டதாகத் தோற்றமளிக்கிறது. எந்த மாறுபட்ட கருத்தையும் அதில் குறிப்பிடப்படவில்லை. நீதிபதி நாகரத்னா அவர்களின் எதிர்ப்பை நாம் ஊடகச் செய்திகளின் மூலம் மட்டுமே அறிந்தோம். அவர் எழுதிய வேறுபட்ட குறிப்புரை மறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவரது சந்தேகங்கள் ''கடுமையானவை'' எனக் கூறப்படுகிறது. அந்த எதிர்ப்புக் குறிப்பு மத்திய அரசிற்காவது பகிரப்பட்டதா என்பது கூட தெளிவாகத் தெரியவில்லை. ஏனெனில் பரிந்துரை மேற்கொள்ளப்பட்ட 48 மணி நேரத்திற்குள் அந்த நியமனம் அறிவிக்கப்பட்டுவிட்டது.

என்ன நடந்தது என்பதும், பொதுமக்கள் அறிய அனுமதிக்கப்பட்டது என்பதற்கிடையேயான இந்த இடைவெளி, நீதிமன்ற நியமன நடைமுறையில் உள்ள குறைகளை வெளிப்படுத்துவதாக அமைகிறது. இந்தியாவின் மிக மூத்த நீதிபதிகளில் ஒருவருக்கு, அந்த உயர்வு நடைபெறக் கூடாது என்று சொல்வதற்கு வலுவான காரணங்கள் இருந்திருக்கலாம். இருந்தும் அவரது காரணங்களும், அதனை ஏற்காததற்கான பெரும்பான்மையினரின் பதில் கருத்தும் வெளித் தெரியாமல் போயிருக்கிறது. ஒரே ஒரு நியமனத்தை மட்டுமே இந்த வேறுபாடு குறித்திருக்கலாம். மற்ற நீதிபதிகள் அதற்கான வலுவான ஆதாரங்களை வைத்திருக்கலாம். ஆனால், பொதுமக்களுக்குச் எதுவும் தெரிவிக்கப்படவில்லை

என்பது தானே நியமன நடைமுறைக்கு எதிரான மிகப்பெரிய குற்றச்சாட்டு – அதாவது வெளிப்படைத்தன்மையின்மை, ஜனநாயகம் என்பது மக்களின் பெயரில் செயல்படும் போது, அதன் மீதான குறைபாடை மக்களுக்குச் சொல்லத் தயங்கும் நிலை நிலவுகிறது.

தொடக்கத்திலிருந்தே மூத்த நீதிபதிகள் தேர்வுக் குழுமம் (கொலீஜியம்) என்பது வெளிப்படைத்தன்மைக்கு எதிராகவே இருந்து வந்துள்ளது. அது நீதிபதிகள் உருவாக்கிய சட்டத்தின் விளைவு. ''இரண்டாவது நீதிபதிகள் வழக்கு'' (1993) மற்றும் ''மூன்றாவது நீதிபதிகள் வழக்கு'' (1998) ஆகியவற்றின் மூலம் உருவாக்கப்பட்டு, உச்சநீதிமன்றத்தின் மூத்த ஐந்து நீதிபதிகளின் கையில் உயர்நிலை நீதிமன்ற நியமன அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் தனிப்பட்ட முறையில் ஆலோசித்து, குறைந்த தகவல்களுடன் முடிவுகளைப் பதிவு செய்கின்றனர். தங்கள் தேர்விற்கான காரணங்களை அரிதாகவே விளக்குகின்றனர்.

நீதிபதி நாகரத்னாவின் கருத்து வேறுபாடு, ரகசியத்தன்மையை விட்டுக்கொடுத்ததற்கான விலையை வெளிப்படுத்துகிறது. உச்ச நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றும் ஒருவரின் ஆட்சேபனை கூட பொதுமக்களுக்கு மிகுந்த கூருணர்வு வாய்ந்ததாகக் கருதப்பட்டால், தேர்வுக் குழுமம் வெறுமனே இருள்மறை நிலையைக் கொண்டுள்ளது என்பது மட்டுமல்லாமல், பொறுப்புக்கூறலை முற்றிலுமாக நிராகரித்ததா என நாம் கேள்வி எழுப்ப வேண்டியுள்ளது.

**பலவீனமான வாதம்**

தனது காரணங்களை ரகசியமாக வைத்திருப்பதற்கான வாதம் எப்போதும் இரண்டு கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டது: வெளிப்படைத்தன்மை தேர்ந்தெடுக்கப்படாத வேட்பாளர்களின் நற்பெயருக்கு தீங்கு விளைவிக்கும், மேலும் அது அமைப்பை அரசியல் ரீதியான அழுத்தங்களுக்கு ஆளாக்கும் என்பவையாகும். ஆனால் நியாயமான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டால், இரண்டு கூற்றுக்களும் நிலைநிற்காமல் சரிந்துவிடும்.

2017 முதல், நீதிபதிகள் தேர்வுக் குழுமம் தன் தீர்மானங்களை வெளியிடத் தொடங்கியது. ஆனால் அவை மிகவும் சுருக்கமாக / மேலோட்டமாக, பெயரளவிலான அறிவிப்புகளாகவே இருந்தன. 2018–இல் சில மாதங்களுக்கு மட்டும், நீதிபதிகள் தேர்வுக் குழுமத்தின் தேர்வுகள் மற்றும் நிராகரிப்புகளுக்கான முழுமையான காரணங்கள் இணையத்தில் பதிவேற்றப்பட்டன. எனினும், இவ்வாறு வெளிப்படுத்துவது தனிநபரின் நற்பெயருக்கு சேதத்தை உண்டாக்கும் என்ற காரணத்தால், அந்த முயற்சி மிகக் குறுகிய காலத்திலேயே நிறுத்தப்பட்டது.

நிறைய வெளிப்படைத்தன்மையுடன் நற்பெயருக்கு நியாயம் வழங்குவது என்பது கவனமாகக் கையாளப்பட வேண்டிய ஒன்று என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், இந்தியாவுடன் ஒப்பிடுகையில் மற்ற ஜனநாயக நாடுகள் இதை சிறப்பாகவே கையாள்கின்றன. உதாரணமாக, பிரிட்டனில் உள்ள நீதித்துறை நியமன ஆணையம், அதன் விதிமுறைகளை வெளிப்படையாக அறிவிக்கிறது. மேலும், வேட்பாளர்கள் எவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்டார்கள் என்பதை விளக்கி அறிக்கைகளையும் வெளியிடுகிறது. தென்னாப்பிரிக்காவில், உயர் நீதித்துறை பதவிக்கான வேட்பாளர்கள், நீதித்துறை சேவை ஆணையத்தால் நேர்காணல் செய்யப்படுகிறார்கள். அங்கு, அவர்களின் தகுதி குறித்து பொது விவாதம் நடைபெறுகிறது. இந்த இரண்டு செயல்பாடுகளிலும் குறைகளற்றவை என சொல்ல முடியாது என்றாலும், வெளிப்படைத்தன்மையில்தான் சட்டபூர்வத்தன்மை உருவாகிறது என்பதை அவை அங்கீகரிக்கின்றன. இதற்கு நேர்மாறாக, இந்தியா, தோ?வுக் குழுமத்தை ஒரு ரகசியக் குழுவாகவே கருதுகிறது. கருத்து வேறுபாடுகள் இருப்பதே ரகசியமாக கசியும் தகவல்கள் மூலம்தான் நமக்குத் தெரிய வருகிறது. நற்பெயருக்குப் பாதிப்பு என்பது உண்மையான கவலையாக இருந்தால், அதைத் தணிக்கும் வகையில் வெளிப்படுத்தலை கவனமாக

அமைப்பதில்தான் தீர்வு இருக்க வேண்டும். நியாயப்படுத்துதலை முற்றிலுமாக மறுப்பது ஒரு தீர்வாகாது. மேலும், அரசியல் அழுத்தம் வரும் என்று பயமாக இருந்தால், ரகசியம் என்பது அதைத் தடுத்து நிறுத்தியதாகத் தெரியவில்லை. ஏனெனில், நிர்வாகம் இன்னமும் தேர்வுக் குழுமத்தின் பரிந்துரைகளை தாமதப்படுத்தவும், தடுத்து நிறுத்தவும் செய்கிறது. அது ஒரு பெயரை மறுபரிசீலனைக்குத் திருப்பி அனுப்பலாம் அல்லது மீண்டும் பரிந்துரைக்கப்பட்டால், கோப்பை அப்படியே நிலுவையில் வைப்பதன் மூலம், ஜனாதிபதி நியமன ஆணையை வழங்குவதை நிறுத்தலாம் என்பதுதான் நிகழ்கிறது.

இங்குள்ள விஷயங்கள், இந்தியாவின் ஜனநாயகத்தின் இதயத்தை தொடுகின்றன. இன்று தேர்ந்தெடுக்கப்படும் நீதிபதிகள், சிவில் உரிமைகள், நிர்வாக அதிகாரத்தின் எல்லைகள் மற்றும் மத்திய, மாநில அரசுகளுக்கு இடையேயான அதிகாரப் பங்கீடு போன்ற இந்தியாவின் மிக அவசரமான அரசியலமைப்பு சார்ந்த கேள்விகளின் விளைவுகளை வடிவமைப்பார்கள். ஒரு நீதிபதி பதவி உயர்வு பெற்றுள்ளார் என்பது மட்டும், அதற்கான காரணங்கள் இல்லாமல் மக்களுக்குத் தெரிவிக்கப் படும்போது, அல்லது உச்ச நீதிமன்றத்தின் ஒரு நீதிபதியின் மாறுபட்ட கருத்து ரகசியத்தால் சூழப்பட்டிருக்கும்போது, நிறுவனத்தின் சட்டபூர்வத்தன்மை வாடிவிடுகிறது. அரசின் மற்ற கிளைகளிடமிருந்து பொறுப்புடைமையை நம் நீதிமன்றங்கள் வலியுறுத்த வேண்டும் என்று நாம் சரியாகவே எதிர்பார்க்கிறோம். ஆனால் அவ்வாறு செய்யும்போது, நீதிமன்றங்கள் தங்களுக்கு மட்டும் விலக்கு கோர முடியுமா? என்ற கேள்வி எழுகிறது.

நீதிபதி நாகரத்னாவின் மாறுபட்ட கருத்து நீதிபதி பஞ்சோலியின் நியமனத்தைத் தடுக்கவில்லை. உண்மையில், தேர்வுக் குழுமத்தின் மற்ற உறுப்பினர்களுக்கு அவரது நியமனத்திற்கு ஆதரவாக நல்ல காரணங்கள் இருந்திருக்கலாம். அவை என்னவென்று நமக்கு ஒருபோதும் தெரியாது. ஆனால் இங்குள்ள பெரிய பிரச்சினை ஒரு தனிப்பட்ட பெயரைத் தாண்டிய நிலையில் உள்ளது. இது, மற்ற அனைத்து அரசு அமைப்புகளிடமும் அது விதிக்க விரும்பும் கொள்கையின்படியே நீதிமன்றம் செயல்படத் தயாராக இருக்கிறதா என்பது பற்றியது: அதாவது, பொது அதிகாரத்தின் ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் ஒரு நியாயம் இருக்க வேண்டும்.

பல ஜனநாயக நாடுகளில், மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத நீதிபதிகள் சட்டங்களை ரத்து செய்வது குறித்த கவலைகள், பெரும்பான்மைக்கு எதிரான ஒரு சிரமமாக கட்டமைக்கப்படுகின்றன. மக்களால் தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் இத்தகைய அதிகாரத்தைப் பயன்படுத்தும்போது ஒரு அமைப்பு எப்படி ஜனநாயகமாக இருக்க முடியும்? முதல் பார்வையில், இந்த கவலை உண்மையானதாகத் தோன்றுகிறது. ஆனால், இது ஜனநாயகம் என்றால் என்ன என்பதைத் தவறாகப் புரிந்துகொள்கிறது. ஜனநாயகம் என்பது வெறும் எண்ணிக்கையின் அடிப்படையில் பெரும்பான்மையினரின் ஆட்சி அல்ல. சரியாகப் புரிந்துகொண்டால், அது அதைவிட மேலானது: குடிமக்களுக்கு இடையே ஒரு கூட்டாண்மை, அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கிறது, மேலும் சுதந்திரத்தையும் சமத்துவத்தை யும் பொது வாழ்க்கையில் உறுதி செய்கிறது. இங்கு, தேர்ந்தெடுக்கப்படாத நீதிபதிகள், சட்டத்திற்கு பொருள் விளக்கம் தருவதன் மூலம், பெரும்பான்மையினரின் அத்துமீறல்கள் என்பதற்கு எதிராக உரிமைகளைப் பாதுகாப்பதில் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறார்கள்.

இந்த காரணத்திற்காகவே, அரசியலமைப்பு, தேர்ந்தெடுக்கப்படாத நீதித்துறைக்கு அசாதாரணமான சிறப்பு அதிகாரத்தை வழங்குகிறது. நீதிபதிகள் சுதந்திரமான நடுவர்களாக செயல்படவும், அரசாங்கத்தை சரிபார்க்கவும், சமன் செய்யவும், அடிப்படை சுதந்திரங்களைப் பாதுகாக்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு செய்வதன் மூலம், அவர்கள் ஜனநாயகத்தை பலவீனப்படுத்த வில்லை. மாறாக அதன் உயர்ந்த லட்சியங்களை மட்டுமே நிறைவேற்றுகிறார்கள்.

**நீதிபதிகள் நியமன குழுமம் (கொலீஜியம்) சீர்திருத்தத்தை ஏற்க வேண்டும்**

இருப்பினும், நீதித்துறை அதன் நிலையைத் தக்க வைத்துக் கொள்ள, நீதிபதிகள் நியமிக்கப்படும் செயல்முறை, என்பதில் பொறுப்புடைமையின் கடுமையான தரநிலைகளை சந்திக்க வேண்டும். மூத்த நீதிபதிகள் நியமன குழுமம் பெரும்பாலும் நியாயப்படுத்துதலை விட ரகசியம் காக்கும் கலாச்சாரத்திற்குள் பின்தங்கியுள்ளது. அது சீர்திருத்தத்தை ஏற்காதவரை, அதன் அதிகாரத்தின் அடிப்படையாக இருக்கும் சட்டபூர்வத்தன்மையைக் குறைக்கும் அபாயம் உள்ளது. கடந்த காலத்தில் மாற்றத்திற்கான பல வாய்ப்புகள் நிராகரிக்கப்பட்டுள்ளன; ஒவ்வொரு முன்னேற்றத்திற்கும் பிறகு இரண்டு அடிகள் பின்னோக்கிச் சென்றுள்ளது. ஒவ்வொரு பின்வாங்கலும், ஜனநாயகம் சார்ந்துள்ள வெளிப்படைத்தன்மை மற்றும் ஒருமைப்பாட்டின் மதிப்புகளை சிறிது சிறிதாக அரித்து சேதப்படுத்தி வருகிறது.

தன்னை மற்றவர்களிடமிருந்து கோரும் வெளிப்படைத்தன்மையின் அதே தரங்களுக்கு உட்படுத்தும் ஒரு நீதித்துறை, அதன் சுயாட்சியை பலவீனப்படுத்தாது. மாறாக, அது மக்களின் நம்பிக்கை மற்றும் நம்பிக்கையில் அதன் சுதந்திரத்தை இன்னும் உறுதியாக நிலைநிறுத்தும்.

**(நன்றி: தி இந்து நாளிதழ். கட்டுரையாளர், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறார்)**

**மொழியாக்கம்: எஸ்.சம்பத், மதுரை**

## தனியார் பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம் அளிக்கும் பரிந்துரையை 12 வாரத்துக்குள் பரிசீலிக்க வேண்டும் அரசுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு

தனியார் பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம் வழங்குவது, ஆரம்பப் பள்ளிகளை தரம் உயர்த்துவது தொடர்பாகவும் கொடுக்கப்பட்ட பரிந்துரைகளை 12 வாரங்களுக்குள் பரிசீலித்து தகுந்த உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கல்வித் துறை செயலாளருக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்றத்தில், அகில இந்திய தனியார் கல்வி நிறுவனங்கள் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் பழனியப்பன் தாக்கல் செய்துள்ள மனுவில், ‘‘தமிழ்நாட்டில் தனியார் பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம் வழங்குவது தொடர்பாகவும், கல்வி உரிமை சட்டத்தை முழுமையாக அமல்படுத்தும் வகையில் ஆரம்ப பள்ளிகளை நடுநிலைப்பள்ளி களாக தரம் உயர்த்துவது தொடர்பாகவும் தனியார் பள்ளிகளின் இயக்குனர் கடந்த மார்ச் மாதம் அரசுக்கு பரிந்துரைகளை பரிசீலிக்க அரசுக்கும், பள்ளிக் கல்வித்துறைக்கும் உத்தரவிட வேண்டும்’’ என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி ஜி.கே. இளந்திரையன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான மூத்த வக்கீல் கே.எம்.விஜயன், ‘‘தனியார் பள்ளிகளுக்கு தற்காலிக அங்கீகாரம் வழங்க வகை செய்யும் சட்டப் பிரிவுகளை எதிர்த்து தொடரப்பட்டுள்ள வழக்குகள் நிலுவையில் உள்ளன.

அதே கோரிக்கையுடன் அளித்த விண்ணப்பத்தை பரிசீலித்த தனியார் பள்ளிகளின் இயக்குனர், நிரந்தர அங்கீகாரம் வழங்க வேண்டும் என்று அரசுக்கு பரிந்துரைத்து உள்ளார். கல்வி உரிமை சட்டத்தின் கீழ் 25 சதவீத இட ஒதுக்கீட்டில் சேர்ந்து ஏழை மாணவர்கள் 5ஆம் வகுப்புக்கு பிறகு வேறு பள்ளிகளில் சேர முடியாத நிலை உள்ளதால் ஆரம்ப பள்ளிகளை நடுநிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தவும் பரிந்துரைத்துள்ளார். இவரது பரிந்துரைகளை பரிசீலித்து தகுந்த உத்தரவைப் பிறப்பிக்க அரசுக்கு உத்தரவிட வேண்டும்’’ என்று வாதிட்டார்.

அரசு தரப்பில், ‘‘இது தொடர்பாக தனியார் பள்ளி களின் இயக்குனர் அளித்துள்ள பரிந்துரைப்படி அந்தந்த பள்ளிகள் நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ளனவா என்பதை கண்டறிந்து அதனடிப் படையில் உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் என்று விளக்கம் அளிக்கப்பட்டது.

இதை ஏற்றுக் கொண்ட நீதிபதி, ‘‘தனியார் பள்ளி களின் இயக்குனர் அளித்துள்ள பரிந்துரைகளை பரிசீலித்து கல்வித் துறைச் செயலாளர் 12 வார காலத்தில் தகுந்த உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டும்’’ என்று உத்தரவிட்டார்.

**நன்றி: தினத்தந்தி 19.9.2025**

# 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவு செய்தல் சட்டம், (தமிழ்நாடு சட்ட எண் 21/2009)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# The Tamil Nadu Registration of Marriages Act, 2009 (Tamil Nadu Act No.21 of 2009)

**(as on 31st October, 2023)**

(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது. 2009ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 5ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத் தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது).

தமிழ்நாடு மாநிலத்தில் திருமணங்கள் அனைத்தையும் கட்டாயமாகப் பதிவு செய்வதற்காகவும் அதனோடு தொடர்புடைய அல்லது அதற்கு இடைவிளைவான பொருட்பாடுளுக்கும் வகை செய்வதற்கான ஒரு சட்டம்.

இந்தியக் குடியரசின் அறுபத்து ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையில் பின்வருமாறு:

**1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்:**

(1) இந்தச் சட்டம் 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவு செய்தல் சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் பரவி நிற்கும்.

(3) இது, மாநில அரசு, அறிவிக்கை வாயிலாகக் குறிக்கக் கூடிய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2. பொருள் வரையறைகள்:** இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி:

(a) ''மாவட்ட பதிவாளர்'' என்பது, பிரிவு 4 உட்பிரிவு (2)இன்படி நியமிக்கப்பட்ட மாவட்ட திருமணப் பதிவாளர் ஒருவர் எனப் பொருள்படும்.

(b) ''அரசு'' என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்.

(c) ''திருமணம்'' என்பது. அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதனின்படியும் அல்லது எந்த வடிவத்திலும் அல்லது முறையிலுமான வழக்கம் அல்லது வழக்காறு எதனின்படியும், எந்த சாதியினரையும் அல்லது சமயத்தினரையும் சார்ந்த நபர்களால் நடத்தப்படும் அனைத்து திருமணங்களையும் உள்ளடக்குவதோடு, மறு திருமணத்தையும் கூட உள்ளடக்கும்.

(d) ''குறிப்பாவணம்'' என்பது பிரிவு 5இல் குறிப்பிடப்பட்ட திருமணம் குறிப்பாவணம் எனப் பொருள்படும்.

(e) ''மதகுரு'' என்பது தற்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதன்படியும் அல்லது பழக்கம் அல்லது வழக்காறு ஆகியவற்றிற்கு ஏற்பத் திருமணம் ஒன்றை நடத்தி வைக்கிற நபர் எவரும் எனப் பொருள்படும்.

(f) ''பதிவாளர்'' என்பது, பிரிவு 4 உட்பிரிவு (3)இன்படி நியமிக்கப்பட்ட திருமணப் பதிவாளர் ஒருவர் எனப் பொருள்படும்.

(g) ''தலைமை பதிவாளர்'' என்பது, பிரிவு 4 உட்பிரிவு (1)இன்படி நியமிக்கப்பட்ட திருமணத் தலைமை பதிவாளர் எனப் பொருள்படும்.

(h) ''மாநிலம்'' என்பது தமிழ்நாடு மாநிலம் எனப் பொருள்படும்.

**3. திருமணங்கள் கட்டாயமாகப் பதிவு செய்யப்படுதல் வேண்டும்**: இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்றும் அது முதற்கொண்டும் செய்யப்படும் ஒவ்வொரு திருமணமும், அத்திருமணம் திருமணத் தரப்பினரின் வேறு இனமுறைச் சட்டங்கள் அல்லது வழக்கம் அல்லது வழக்காறு அல்லது மரபு எதனாலும் ஆளப்படும் திருமணப் பதிவேடுகளில் உண்மையாகவே பதிவு செய்யப்பட்டு இருந்தபோதிலும், இந்தச் சட்டத்தின்படி பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

**4. தலைமைப் பதிவாளரையும் மாவட்டப் பதிவாளரையும் திருமணப் பதிவாளரையும் நியமித்தல்**:

(1) அரசு, அறிவிக்கை வாயிலாகத் தமிழ்நாடு மாநிலத்திற்காகத் திருமணத் தலைமைப் பதிவாளராக நபர் ஒருவர் நியமித்தல்.

(2) அரசு, அறிவிக்கை வாயிலாக இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, மாவட்டம் ஒவ்வொன்றுக்கும் மாவட்டத் திருமணப் பதிவாளராக நபர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(3) அரசு, அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றவதற்காகத் தாம் தேவையெனக் கருதும் அத்தகைய எண்ணிக்கையில், அந்த அறிவிக்கையில் குறிப்பிடப்படும் வட்டாரப் பகுதிகளுக்குத் திருமணப் பதிவாளரை நியமித்தல் வேண்டும் மற்றும் அத்தகைய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்காக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பதிவாளர்கள் நியமிக்கப்படலாம்.

(4) ஒவ்வொரு மாவட்டப் பதிவாளரும் வகுத்துரைக்கப்படும் அதிகாரங்களைச் செலுத்துதலும், கடமைகளைப் புரிதலும் வேண்டும் மற்றும் தலைமைப் பதிவாளரின் பொதுவான கண்காணிப்பின் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் இருத்தல் வேண்டும்.

**5. திருமணக் குறிப்பாவணம்** : (1) திருமணம் ஒன்றின் தரப்பினர்கள், வகுத்துரைக்கப்படும் படிவத்தில் குறிப்பாவணம் ஒன்றை இரட்டைப்படியாகத் தயாரித்துத் திருமணத் தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள், எந்தப் பகுதியில் திருமணம் நடைபெறுகிறதோ, [1][அல்லது திருமணத்தின் ஒரு அல்லது இரு தரப்பினருக்கும் தங்களின் நிரந்தர தங்குமிடத்தைக் கொண்டுள்ள அந்த அதிகார வரம்பிற்குள்] அந்தப் பகுதியின் பதிவாளருக்கு அதனை நேரடியாக [2][***] ஒப்படைத்தல் வேண்டும்.

[3]**[வரம்புரை:** திருமணம் செய்து கொண்டவர்கள் நேரடியாக விவரக் குறிப்பினை அளிக்காமல் இருக்கின்ற நிலையில் பதிவாளர் நேரடியாக விவரக் குறிப்பினை அளிக்க முடியாமல் போனதற்கான சிறப்புச் சூழ்நிலைகளைப் பதிவு செய்த பின்பு வகுத்துரைக்கப்படும் முறையில் விவரக் குறிப்பினை அனுப்பி வைப்பதற்கு அவர்களை அனுமதிக்கலாம்.

**மேலும் வரம்புரை:** மேற்சொன்ன தொண்ணூறு நாட்கள் முடிவடைந்த பின்பு வகுத்துரைக்கப்படும் கூடுதல் கட்டணச் செலுத்தத்துடன் மேலுமான அறுபது நாட்களுக்குள் விவரக் குறிப்பைப் பதிவாளரிடம் நேரடியாகவோ அல்லது வகுத்துரைக்கப்படும் முறையிலோ அளிக்கலாம்.

**மேலும் வரம்புரை:** ஆயிரம் ரூபாய் கூடுதல் கட்டணச் செலுத்தத்துடன் இரண்டாம் வரம்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள அறுபது நாட்கள் முடிவடைந்து பின்பு விவரக் குறிப்பினைப் பதிவாளருக்கு நேரடியாகவோ அல்லது வகுத்துரைக்கப்படும் முறையிலோ அளிக்கலாம்.

(2) உட்பிரிவு (1)இன் வரம்புரையில் உள்ள எதுவும், பிரிவு 14இன் உட்பிரிவு (1)இன்(a) கூறின்படியான பணத் தண்டம் எதற்கும் நபர் ஒருவரின் கடப்பாட்டினைப் பாதிக்காது.

**6. குறிப்பாவணத்தில் கையொப்பமும் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களும்**: பிரிவு 5இல் குறிப்பிடப்பட்ட குறிப்பாவணம் ஒவ்வொன்றும், திருமணத் தரப்பினர்களாலும் சமய குருவாலும் இரண்டு சாட்சிகளாலும் கையொப்பமிடப்படுதல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படும் கட்டணத்துடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

**7. திருமணத்தைப் பதிவு செய்ய மறுப்பதற்கு அதிகாரம்** : (1) எந்தப் பதிவாளர் முன்பு பிரிவு 5இன்படியான குறிப்பாவணமானது வகுத்துரைக்கப்பட்ட முறையில் நேரடியாக அளிக்கப்பட்டதோ அல்லது அனுப்பப்பட்டதோ அந்தப் பதிவாளர், குறிப்பாவணத்துடன் [1][வகுத்துரைக்கப்பட்ட முறையில் நேரடியாக அளிக்கப்பட்டதோ அல்லது அனுப்பப்பட்டதோ] அந்தப் பதிவாளர், குறிப்பாவணத்துடன் முன்னிடப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்ததன்பேரிலோ அல்லது அவரால் கவனிக்கப்பட்ட அல்லது அவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட பிற பொருண்மைகளின்பேரிலோ.

(a) அத்தரப்பினர்களுக்கிடையேயான திருமணமானது அத்தரப்பினர்களின் இனமுறைச் சட்டங்களின்படியோ அல்லது வழக்கம் அல்லது வழக்காறு அல்லது மரபு எதனின்படியோ நடத்தப்படவில்லை என்று அல்லது

(b) தரப்பினர்களின் அடையாளத்தை உறுதிபடுத்துகிற நபர்களின் அடையாளமும் திருமணம் நடந்ததும் நியாயமான ஐயப்பாட்டிற்கு அப்பால் உறுதிபடுத்தப்படவில்லை என்று அல்லது

(c) அவர் முன்பு வைக்கப்பட்ட ஆவணங்கள் தரப்பினர்களின் திருமணத் தகுநிலையினை நிரூபிக்கவில்லை என்று மனநிறைவு அடைகிற நிலையில் அல்லது நம்பக் காரணம் கொண்டிருக்கிற நிலையில், அவர், தரப்பினர்களை விசாரித்து அறிந்த பின்பும், எழுத்து வடிவில் காரணங்களைப் பதிவு செய்த பின்பும், திருமணத்தைப் பதிவு செய்ய மறுக்கலாம் மற்றும்

(i) தரப்பினர்களின் மற்றும் சாட்சிகளின் அடையாளத்தை அல்லது தம்மிடம் முன்னிடப்பட்ட தகவலின் அல்லது ஆவணங்களின் சரியான தன்மையை உறுதிபடுத்துவதற்காகத் தேவையெனக் கருதும் கூடுதல் தகவலை அல்லது ஆவணங்களை தாக்கல் செய்யும்படி தரப்பினர்களைக் கோரலாம் அல்லது.

(ii) தேவையெனக் கருதும் ஆவணங்களைத் தரப்பினர் எந்த வட்டாரக் காவல் நிலையத்தில் அதிகார வரம்புக்குள் குடியிருக்கின்றனரோ, அந்த வட்டாரக் காவல் நிலையத்திற்கு, உறுதி செய்வதற்காகக் குறிப்பிட்ட அனுப்பவும் செய்யலாம்.

(2) உட்பிரிவு (1)இல் வகை செய்யப்பட்ட விதத்தில் மேற்கொண்டு உறுதி செய்வதன்பேரில், அத்திருமணத்தைப் பதிவு செய்வதற்குத் தடை எதுவும் இல்லையென்று பதிவாளர் மனநிறைவடைகிற நிலையில் அவர் அதனைப் பதிவு செய்யலாம். அத்திருமணம் பதிவு செய்வதற்குத் தக்கதல்ல என்று பதிவாளர் கருதுவாரானால், அவர் அதற்கான காரணங்களை பதிவு செய்து எழுத்து வடிவில், மறுப்பு ஆணை ஒன்றைப் பிறப்பிக்கலாம்.

**8. மாவட்டப் பதிவாளருக்கு மேல்முறையீடு**: (1) பிரிவு 7இன்படியான பதிவாளரின் ஆணை யினால், குறையுற்ற நபர் எவரும், அத்தகைய ஆணையைப் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து

முப்பது நாட்கள் கால அளவு ஒன்றுக்குள் வகுத்துரைக்கப்படும் முறையில் மாவட்டப் பதிவாளரிடம் மேல்முறையீடு செய்யலாம்.

**வரம்புரை** : மாவட்டப் பதிவாளர், முதலில் சொல்லப்பட்ட முப்பது நாட்கள் கால அளவு முடிவுற்ற பின்பு முன்னிடப்படும் மேல்முறையீடு ஒன்றை மேல்முறையீட்டாளர் அம்மேல்முறையீட்டினை முதலில் சொல்லப்பட்ட கால அளவுக்குள் முன்னிடாததற்குப் போதிய காரணம் கொண்டிருந்தார் என்று மனநிறைவடைவாரானால், அவர் அந்த மேல்முறையீட்டினை மேலும் முப்பது நாட்கள் கால அளவு ஒன்றுக்குள் அனுமதிக்கலாம்.

(2) மாவட்டப் பதிவாளர், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு கேட்கப்படுவதற்கான வாய்ப்பு ஒன்றை வழங்கிய பின்பும், திருமணத்தைப் பதிவு செய்யும்படி அல்லது பதிவாளரின் ஆணையை உறுதி செய்யும்படி பதிவாளரைப் பணிக்கலாம்.

**9. பிரிவு 8இன்படியான ஆணைக்கு எதிராக மேல்முறையீடு**: பிரிவு 8இன்படியான பிறப்பிக்கப்பட்ட மாவட்டப் பதிவாளரின் ஆணையினால் குறையுற்ற நபர் எவரும், அவ்வாணையைப் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து முப்பது நாட்கள் கால அளவு ஒன்றுக்குள், அத்தகைய ஆணையை எதிர்த்துத் தலைமைப் பதிவாளரிடம் மேல்முறையீடு செய்யலாம். அத்தகைய மேல்முறையீட்டின் மீது தலைமைப் பதிவாளரிடம் மேல்முறையீடு செய்யலாம். அத்தகைய மேல்முறையீட்டின் மீது தலைமைப் பதிவாளரின் முடிவே அறுதியானதாகும். அதன்பின் பதிவாளர், அத்தகைய முடிவிற்கு இணங்க செயல்படுதல் வேண்டும்.

**10. பதிவுச் சான்றிதழை வழங்குதலும் பதிவேட்டினைப் பராமரித்தலும்**: (1) திருமணம் பதிவு செய்யப் பெறுவதன் பேரில், பதிவாளர் வகுத்துரைக்கப்படும் படிவத்தில் தரப்பினர்களுக்குத் திருமணப் பதிவுச் சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு பதிவாளரும், வகுத்துரைக்கப்படும் படிவத்திலும் முறையிலும் திருமணப் பதிவேடு ஒன்றைப் பராமரித்து வருதல் வேண்டும்.

(3) பிரிவு 5இன்படி திருமணக் குறிப்பாவணத்தைப் பெற்றுக் கொண்டதன்பேரில் திருமணப் பதிவேட்டில் கோர்த்து இணைத்தல் வேண்டும்.

**11. திருமணப் பதிவேட்டினைத் தேடுதல் :** (1) கட்டணம் செலுத்துவது தொடர்பான விதிகள் உள்ளிட்ட அரசால் இதன் பொருட்டுச் செய்யப்படும் விதிகள் எவற்றுக்கும் உட்பட்டு நபர் எவரும்.

(a) திருமணப் பதிவேட்டில் உள்ள பதிவு எதையும் பதிவாளரை தேடுதல் செய்ய வைக்கலாம் மற்றும்

(b) அத்தகைய பதிவேட்டிலிருந்து திருமணம் தொடர்பான எடுகுறிப்பு ஒன்றைப் பெறலாம்.

(2) இந்தப் பிரிவின்படி கொடுக்கப்படும் எடுகுறிப்புகள் அனைத்தும் பதிவாளரால் உறுதிச் சான்றளிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அந்தப் பதிவு எந்தத் திருமணம் தொடர்புடையதோ அந்தத் திருமணத்தை நிரூபிப்பதற்கான சான்றை ஏற்றுக் கொள்ளத்தக்கதாதல் வேண்டும்.

**12. பதிவேடு பொதுமக்கள் பார்வையிடுவதற்கு உரியது :** திருமண பதிவேடானது, அனைத்து நியாயமான நேரங்களிலும், பொதுமக்கள் பார்வையிடுவதற்குரியதாகும் மற்றும் அதிலிருந்து உறுதிச் சான்றளிக்கப்பட்ட எடுகுறிப்புகள், விண்ணப்பத்தின் பேரில், வகுத்துரைக்கப்படும் கட்டணத்தைச் செலுத்துவதன்பேரில் விண்ணப்பதாரருக்குப் பதிவாளரால் வழங்கப்படுதல் வேண்டும்.

**13. திருமணப் பதிவுச் சான்றிதழைச் சரிபார்ப்பதற்கு வேலைதருபவர் முதலானோருக்கு உள்ள பொறுப்பு**: வேலை தருபவர் அல்லது ஓர் அரசு அல்லது அரசு சார் நிறுவன அதிகார அமைப்பு

அல்லது நிறுமம் அல்லது பொதுத்துறை நிறுவனம் அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பு எதுவும், மாற்றம் செய்ய அல்லது அதனைப் பதிவு செய்ய விண்ணப்பிக்கும் பணியாளரோ நிகழ்வுக்கேற்ப, விண்ணப்பதாரரோ பிரிவு 10இன்படி வழங்கப்பட்ட திருமணப் பதிவுச் சான்றிதழின் உறுதிச் சான்றளிக்கப்பட்ட படி (நகல்) ஒன்றினைச் சமர்ப்பித்தாலன்றி அவர்களின் அலுவலகப் பதிவுருக்களில் அல்லது அலுவலக ஆவணங்கள் எவற்றிலும், தம் பணியாளர்களின் அல்லது எந்த நபருடனான அல்லது வாடிக்கையாளருடனான அல்லது கட்சிக்காரருடனான தங்கள் நடவடிக்கையில் திருமணம் சார்ந்த நிலையில் மாறுதல் அல்லது நியமனதாரர் மாறுதல் போன்ற மாறுதல் எதனையும் செய்தல் கூடாது.

**14. தண்டங்கள்** : (1) (a) பிரிவு 5இல் கோரப்பட்டவாறு குறிப்பாவணத்தை (வகுத்துரைக்கப்பட்ட முறையில் நேரடியாக அளிக்காமல் அல்லது அனுப்பாமல் விட்டுவிடுகிற அல்லது புறக்கணிக்கல் அல்லது

(b) குறிப்பாவணத்தில் முக்கியமான விவரம் எதுவும் பொய்யானதாக எதுவும் பொய்யானதாக இருக்கிற மற்றும் அவர் பொய்யானதென அறிந்திருக்கிற அல்லது நம்பக் காரணம் கொண்டிருக்கிற அந்த விவரவுரை எதனையும் செய்கிற அல்லது

(c) இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எவற்றையுமோ அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளையோ மீறுகிற

நபர் எவரும், குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டதன்பேரில் ஆயிரம்ரூபாய் வரை நீட்டிக்கப்படக் கூடிய பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(2) பிரிவு 5இன்படி குறிப்பாவணத்தை வேண்டுமென்றே தாக்கல் செய்யத் தவறுகிற பதிவாளர், குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டதன்பேரில், மூன்று மாதங்கள் வரை நீட்டிக்கப்படக் கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனையோ அல்லது ஆயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படக் கூடிய பணத்தண்டமோ அல்லது அவை இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**15. பதிவேட்டினை மறைத்து வைத்திருத்தல், அழித்தல் அல்லது மாற்றுதல் இவற்றிற்குப் பணத்தண்டம்**: திருமணப் பதிவேட்டினை அல்லது அதன் பகுதி அதனையும் மறைத்து வைத்திருக்கிற அழிக்கிற அல்லது நேர்மையற்ற வகையில் அல்லது மோசடியாக மாற்றம் செய்கிற நபர் எவரும், குற்றவாளி தீர்மானிக்கப்பட்டதன்பேரில், இரண்டு ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படக் கூடிய சிறைத் தண்டனையோ அல்லது பத்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படக் கூடிய பணத் தண்டமோ அல்லது அவை இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**16. குற்ற வழக்குத் தொடுப்பதற்கு ஒப்பளிப்பு**: இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கத்தக்க குற்றச் செயல் ஒன்றுக்கான குற்ற வழக்கானது. இதன் பொருட்டு தலைமைப் பதிவாளரால் பொதுவான அல்லது சிறப்பு ஆணை வாயிலாக அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலர் ஒருவரால் தவிர, தொடரப்படுதல் கூடாது.

**17. நிறுமங்களால் செய்யப்படும் குற்றச் செயல்கள்**: (1) இந்தச் சட்டத்தின் கீழ் குற்றச் செயல் ஒன்றை இழைக்கும் நபர் எவரும், ஒரு நிறுமமாக இருந்தால், குற்றச் செயல் இழைக்கப்பட்ட சமயத்தில் நிறுமத்தின் அலுவல்தொழில் நடப்பதற்குப் பொறுப்பிலிருந்த மற்றும் அதற்குப் பொறுப்புடைய ஒவ்வொரு நபரும் அத்துடன் நிறுமமும் அந்தக் குற்றச் செயலைச் செய்ததாகக் கொள்ளப்பட்டு, அதன்படியே அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும் தண்டிக்கப்படுவதற்கும் உள்ளாகுதல் வேண்டும்.

**வரம்புரை**: இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், நபர் எவரையும் அவர் அந்தக் குற்றச் செயல் தம்மை அறியாமலேயே இழைக்கப்பட்டது அல்லது அந்தக் குற்றச் செயல் இழைக்கப்படுவதைத் தடுக்க உரிய முயற்சி அனைத்தையும் செலுத்தினார் என்று நிரூபிப்பாரானால், இந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள தண்டனை எதற்கும் உள்ளாக்காது.

(2) உட்பிரிவு (1)இல் என்ன அடங்கியிருந்த போதிலும், இந்தச் சட்டத்தின் கீழான ஒரு குற்றச் செயல் ஒரு நிறுமத்தினால் இழைக்கப்பட்டிருந்து, அந்தக் குற்றச் செயலானது நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் எவரின் இசைவுடன் அல்லது அவருடைய மறைமுக ஆதரவுடன் இழைக்கப்பட்டிருக்கிறது என்றோ அவர்பாலுள்ள கவனமின்மை எதற்கும் சாட்டத்தக்கதாக இருக்கிறது என்றோ நிரூபிக்கப்படுகிற நிலையில், அத்தகைய இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் கூட அந்தக் குற்றச் செயலைச் செய்தவராகக் கருதப்பட்டு, அதன்படியே எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதல் வேண்டும்.

விளக்கம் இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக

(a) "நிறுமம்" என்பது ஒரு கூட்டுருமக் குழுமம் எனப் பொருள்படுவதோடு ஒரு நிறுவகத்தையும் அல்லது பிற தனி நபர்களின் கழகத்தையும் உள்ளடக்கும்; மற்றும்

(b) இயக்குநர் என்பது, நிறுவகம் ஒன்றைப் பொறுத்தவரை, நிறுவகத்தில் உள்ள ஒரு கூட்டாளியை உள்ளடக்கும்.

**18. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு:** இந்தச் சட்டத்திற்கு அல்லது அதன்படி செய்யப்பட்ட ஒரு விதி அல்லது ஆணைக்கு இணங்க நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்ய கருதப்பட்ட எதற்காகவும் நபர் எவருக்கும் எதிராக உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்டமுறை நடவடிக்கை எதுவும் தொடுக்கப்படுதல் கூடாது.

**19. பதிவாளர் முதலானோர் பொது ஊழியராவர்:** தலைமைப் பதிவாளர், மாவட்டப் பதிவாளர் மற்றும் பதிவாளர் ஒவ்வொருவரும் மற்றும் பிற அலுவலர்கள், இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகளக்க இணங்க செயற்படுகையில் அல்லது செயற்படுவதாகப் புலப்படுகையில் இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் XLV/1860 பிரிவு 21இன் பொருளின்படி ஒரு பொது ஊழியராகக் கருதப்படுதல் வேண்டும்.

**20. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்:** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பதில் இடர்ப்பாடுகள் எவையும் எழுமானால், அரசு, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் ஆணை வாயிலாக அந்த இடர்ப்பாடுகளை அகற்றுவதற்குத் தேவையென அல்லது உகந்தது எனத் தமக்குத் தோன்றுகிறவாறு, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத வகைமுறைகளைச் செய்யலாம்.

**வரம்புரை** : ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுக் கால அளவு ஒன்று முடிவுற்ற பின்பு, செய்யப்படுதல் கூடாது.

**21. பணிப்புரை வழங்குவதற்கு அரசுக்குள்ள அதிகாரம்:** அரசு, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைத் திறம்பட செயல்படுத்துவதற்காகத் தாம் பொருத்தமெனக் கருதுகிறவாறு, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரண்படாத அத்தகைய பணிப்புரைகளை அவ்வப்போது பதிவாளருக்கும் மாவட்டப் பதிவாளருக்கும் தலைமைப் பதிவாளருக்கும் வழங்கலாம். அவர்கள் அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

**22. பிற சட்டங்களின் செயற்பாடு பாதிக்கப்படுதல் கூடாது**: இந்தச் சட்டத்தின் வகைமுறைகள், அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதற்கும் கூடுதலாக இருத்தல் வேண்டுமேயன்றி அதனை குறைவுப்படுத்தல் கூடாது.

**23. பதிவு செய்யாமையானது திருமணத்தை செல்லா நிலையத்தாக்காது**: இந்தச் சட்டம் பொருந்துகிறதான இந்த மாநிலத்தில் செய்யப்படும் திருமணம் எதுவும், அது, இந்தச் சட்டத்தின்படி பதிவு செய்யப்படவில்லை என்ற பொருண்மையின் காரணமாக மட்டுமே செல்லுபடியாகாமல் போவதாகக் கருதக் கூடாது.

**24. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்**

(1) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை ஒரு குறிப்பிட்டதொரு நாளன்று நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி வெளியிடப்படும் அறிவிக்கைகள் அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை ஒரு குறிப்பிட்டதொரு நாளன்று நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்படும் நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது ஆணை அல்லது வெளியிடப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு, வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத் தொடர் அல்லது அதனை அடுத்த கூட்டத் தொடர் முடிவடைவதற்க முன்னர் அத்தகைய விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கை எதிலும் மாறுதல் எதையும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமானால் அல்லது அந்த விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கை செய்யப்படுதலோ அல்லது பிறப்பிக்கப்படுதலோ கூடாது எனச் சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமானால் அதன் பின்பு அந்த விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கையானது அதன் பின்னர் அவ்வாறு மாற்றி அமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நிகழ்விற்கேற்ப நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும் அவ்வாறான மாறுதல் அல்லது நீக்கம் எதுவும். அந்த விதியின்படி, ஆணையின்படி அல்லது அறிவிக்கையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட செயல் ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

**நன்றி : தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம், சென்னை**

## உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் நியமனம் விதிகளில் திருத்தம் செய்வதை எதிர்த்த மனு தள்ளுபடி

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் நியமன விதிகளில் திருத்தம் செய்ததை எதிர்த்து தொடரப் பட்ட வழக்கு வாபஸ் பெறப்பட்டதை அடுத்து, அந்த வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. தமிழகம் அரசின் உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் நியமனம் தொடர்பான விதிகளில் திருத்தம் செய்து கடந்த 2022ஆம் ஆண்டு அரசாணை பிறப்பிக்கப்பட்டது. இதை எதிர்த்து சீனிவாச மாசிலாமணி என்பவர் தாக்கல் செய்த மனுவை விசாரித்து உயர்நீதிமன்றம் அரசாணைக்கு தடை விதித்து உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில், சென்னை உயர்நீதிமன்றத்தில் அதிமுக எம்பி ஐ.எஸ்.இன்பதுரை தாக்கல் செய்த மனுவில், தமிழகத்தில் உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் நியமனத்துக்கு பொது அறிவிப்பு வெளியிடாமல், எழுத்துத் தேர்வு நடத்தாமல் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் ஆதாயம் அடையும் நோக்கில் இந்தப் பணியிடங்களில் திமுகவை சேர்ந்த தகவல் தொழில்நுட்பப் பிரிவினரை நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது. இந்த நியமனத்தை அனுமதித்தால், அரசு வேலைக்காக காத்திருக்கும் தகுதி யானவர்கள் பாதிக்கப்படுவர். எனவே, விதிகளுக்கு முரணாக சட்டவிரோத மாக உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் நியமனத்தை தடுக்க வேண்டும். ஏற்கனவே இது தொடர்பாக சீனிவாச மாசிலாமணி தாக்கல் செய்துள்ள வழக்கில் தன்னையும் ஒரு தரப்பாக சேர்க்க உத்தரவிட வேண்டும் என்று கூறி யிருந்தார்.

இந்த வழக்குகள் நீதிபதி வினோத்குமார் முன் திங்கட்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது சீனிவாச மாசிலாமணி தரப்பில் மனுவை வாபஸ் பெற அனுமதிக்குமாறு கோரிக்கை வைக்கப் பட்டது. ஐ.எஸ்.இன்பதுரை தரப்பில், மனுவை வாபஸ் பெற அனுமதித்தால், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் நியமனத்தில் முறைகேடு நடக்க வாய்ப்புள்ளதாக கூறப்பட்டது. இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் நியமனத்தில் முறைகேடு நடந்தால் நீதிமன்றத்தை நாடலாம் எனக் கூறி இன்பதுரை தரப்பில் தாக்கல் செய்யப் பட்ட மனுவை வைத்து உத்தரவிட்டார். சீனிவாச மாசிலாமணி தரப்பில் மனுவை வாபஸ் பெற அனுமதியளித்து இந்த வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

**நன்றி: தினமணி 23.9.2025**

# 2002ஆம் ஆண்டு புகைப்பிடித்தலையும் எச்சில் உமிழ்வதையும் தடை செய்யும் சட்டம்,
# (தமிழ்நாடு சட்ட எண் 4/2003)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

## The Tamil Nadu Prohibition of Smoking and Spitting Act, 2002
## (Tamil Nadu Act No.4 of 2003)

## (as on 31st October, 2023)

(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது. 2003ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28ஆம் நாளன்று குடியரசுத் தலைவரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத் தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது).

தமிழ்நாடு மாநிலத்தில் பொதுப் பணியிடத்திலோ அல்லது பொதுப் பயன்பாட்டிற்கான இடத்திலோ மற்றும் மக்கள் சேவைக்கான ஊர்தியிலோ, புகைப்பிடித்தலையும் எச்சில் உமிழ்வதையும் தடை செய்வதற்கும் அதனோடு தொடர்புடைய பொருட்பாடுகளுக்கும் வகை செய்வதற்கான ஒரு சட்டம்.

இந்தியக் குடியரசின் ஐம்பத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு:

**1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்:**

(1) இந்தச் சட்டம் 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவு செய்தல் சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் பரவி நிற்கும்.

(3) இது, மாநில அரசு, அறிவிக்கை வாயிலாகக் குறிக்கக் கூடிய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

வரம்புரை இந்தச் சட்டத்தின் வெவ்வோறு வகைமுறைகள் வெவ்வேறு தேதிகளில் நடைமுறைக்கு வரும்படி குறிப்பிடப்படலாம் என்பதோடு, இந்தச் சட்டத்தின் தொடக்கம் என்பதாக வகைமுறை எதிலும் உள்ள குறிப்பு எதுவும், அந்த வகைமுறை நடைமுறைக்கு வருவதைக் குறிக்கின்ற பொருள் எனக் கருதப்படுதல் வேண்டும்.

**2. பொருள் வரையறைகள்:** இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி:

(a) “விளம்பரம்” என்பது, புகைப்பிடித்தலை அல்லது புகையிலை மெல்லுதலை, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஊக்குவிக்கின்ற விளைவை ஏற்படுத்தும் அறிவிப்பு,சுற்றறிக்கை, சுவரொட்டி, துண்டறிக்கை, விளம்பரப் பலகைகள் மீது காட்சிக்கு வைத்தல் அல்லது ஒளி, ஒலி புகை, வாயு ஆகியவற்றால் கண்ணுக்குப் புலப்படக் கூடிய வகையில் அமைக்கப்பட்ட காட்சிப் பொருள் மூலமாகவோ அல்லது வேறுமுறையிலோ காட்சிக்கு வைத்தல் என்பதனை உள்ளடக்கி அவ்வாறே பொருள்படும் மற்றும் விளம்பரம் செய் என்னும் சொற்றொடரானது அவ்வாறே பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

(b) ''அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர்'' என்பது. பிரிவு 10இன்படி அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் ஒருவர் எனப் பொருள்படும்.

(c) ''அரசு'' என்பது. மாநில அரசு எனப் பொருள்படும்.

(d) ''பொதுப்பணியிடம் அல்லது பொதுப் பயன்பாட்டிற்கான இடம்'' என்பது பிரிவு 3இன்படி விளம்பப்பட்ட இடம் எனப் பொருள்படுவதோடு, அரங்கம், மருத்துவமனைக் கட்டடங்கள், பொது சுகாதார நிலையங்கள், திரையரங்கு, கருத்தரங்கு அல்லது மாநாட்டு அரங்குகள், கேளிக்கை மையங்கள், சிற்றுண்டிச் சாலைகள், உணவகங்கள், வணிக அமைப்பிடங்கள், பொது அலுவலகங்கள், நீதிமன்றக் கட்டடங்கள், கல்வி நிலையங்கள், பூங்காக்கள், நூலகங்கள், விளையாட்டு வளாகங்கள், பேருந்து நிலையங்கள், பேருந்து நிறுத்தங்கள், கடற்கரைகள், கடைவீதிகள், உள்ளாட்சி அமைப்புகள், சட்டப்பூர்வமான அமைப்புகள், கூட்டுறவு நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் சமயம் தொடர்பான இடங்கள் மற்றும் பொதுமக்கள் வந்து போகும். இவை போன்ற இடங்கள் ஆகியவனவற்றை உள்ளடக்கும். ஆனால் திறந்த வெளியிடம் எதனையும் உள்ளடக்காது.

(e) ''பொதுமக்கள் சேவைக்கான ஊர்தி'' என்பது 1988ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் (மையச் சட்டம் 59/1988) பிரிவு 2இன் பிரிவின் (35)ஆம் கூறில் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான ஓர் ஊர்தி எனப் பொருள்படும்,

(f) ''சமயம் தொடர்பான இடம்'' என்பது. சமய வழிபாடு செய்யப்படும் பொது இடமாகப் பயன்படுத்தப்படும் கோயில், கிருத்துவ ஆலயம், மசூதி, மடம் அல்லது அது எந்தப் பெயரில் அழைக்கப்பட்டாலும் அத்தகையதோர் இடம் எனப் பொருள்படும்.

(g) ''புகைப்பிடித்தல்'' என்பது, குழல், சுருட்டிய மேலுறை அல்லது பிற கருவி எதன் உதவியுடனும் சிகரெட், சுருட்டு, பீடி அல்லது பிற வடிவத்தில் புகையிலையைப் புகையாகப் பிடித்தல் எனப் பொருள்படும்.

(h) ''எச்சில் உமிழ்தல்'' என்பது புகையிலை, பான்மசாலா, குட்கா, பாக்கு சேர்த்த வெற்றிலை எந்த உருவத்திலும் அல்லது புகையிலைத் தயாரிப்பு அல்லது புகையிலை அடங்கிய பொருள்கள் எதனையும் மென்று பின்னர், தெரிந்தே வாயிலிருந்து எச்சிலை உமிழ்தல் அல்லது மூக்குப் பொடியை உள்ளிழுத்து விட்டு மூக்கு வழியே அதை வெளித்தள்ளுதல் எனப் பொருள்படும்.

**3. பொதுப் பணியிடங்களை அல்லது பொதுப் பயன்பாட்டிற்கான இடங்களை விளம்புதல்**: அரசானது அறிவிக்கையின் வாயிலாகத் தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள பொதுப் பணியிடம் அல்லது பொதுப் பயன்பாட்டிற்கான இடம் எதனையும் இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்கான இடம் என விளம்பலாம்.

**4. பொதுப் பணியிடத்திலும் பொதுப் பயன்பாட்டிற்கான இடத்திலும் புகைப்பிடித்தலும் எச்சில் உமிழ்தலும் தடை செய்யப்படுதல்**: பொதுப் பணியிடம் அல்லது பொதுப் பயன்பாட்டிற்கான இடம் எதிலும் நபர் எவரும் புகைப்பிடித்தலோ எச்சில் உமிழ்தலோ கூடாது.

**5. பொதுமக்கள் சேவைக்கான ஊர்தியில் புகைப்பிடித்தலும் எச்சில் உமிழ்தலும் தடை செய்யப்படுதல்** : 1988ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் (மையச் சட்டம் 59/1988) வகைமுறைகளுக்கு உட்பட்டு, பொதுமக்கள் சேவைக்கான ஊர்தி எதிலும் நபர் எவரும் புகைப்பிடித்தலோ அல்லது எச்சில் உமிழ்தலோ கூடாது.

**6. புகைப்பிடித்தல மற்றும் புகையிலை சுவைத்தல் குறித்த விளம்பரம் தடை செய்யப்படுதல்**: அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதிலும் என்ன அடங்கியிருந்தபோதிலும் பொதுப்பணியிடம் அல்லது அடங்கியிருந்தபோதிலும், பொதுப் பணியிடம் அல்லது பொதுப்பயன்பாட்டிற்கான இடம் எதிலும் மற்றும் பொதுமக்கள் சேவைக்கான ஊர்தி எதிலும் புகைப்பிடித்தலை அல்லது புகையிலை, பான்மசாலா அல்லது குட்கா அல்லது புகையிலைத் தயாரிப்பு எதையும் அல்லது வேறுபெயர் எதனாலும் அது வகைப்படுத்தப்படுமானாலும் கூட, புகையிலை உள்ளடக்கிய தயாரிப்புகள் எவற்றையும் சுவைப்பதை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நுகரத் தூண்டுகின்ற பொருள் எதனையும் நபர் எவரும் விளம்பரப்படுத்துதலோ அல்லது விளம்பரப்படுத்துமாறு செய்வித்தலோ கூடாது.

**7. சிகரெட் முதலானவற்றைச் சேமித்து வைத்தல், விற்பனை செய்தல், பங்கீடு செய்தல் ஆகியன தடை செய்யப்படுதல்** : நபர் எவரும் தாமாகவோ அல்லது அவர்தம் சார்பாக நபர் எவருமோ கல்லூரி, பள்ளி அல்லது பிற கல்வி நிலையங்கள் எவற்றையும் சுற்றியுள்ள நூறு மீட்டர் பரப்பிடம் ஒன்றிற்குள்ளாக சிகரெட்டுகள், பீடிகள், சுருட்டுகள், புகையிலையுடனான சுப்பாரி, ஜர்தா, மூக்குப்பொடி அல்லது அத்தகைய பிற புகையிலை அடங்கியுள்ள புகைக்கும் பொருள் அல்லது சுவைக்கும் பொருள்கள் எவற்றையும் சேமித்து வைத்தலோ விற்றலோ அல்லது பங்கீடு செய்தலோ கூடாது.

**8. அறிவிப்புப் பலகையை நிறுவி காட்சிக்கு வைத்தல்** : பொதுப்பணி இடத்தை அல்லது பொதுப் பயன்பாட்டிற்கான இடத்தைப் பொறுப்பில் கொண்டுள்ள நபர் ஒவ்வொருவரும் அவ்விடத்திற்கு உள்ளோ அல்லது வெளியிலோ கண்ணுக்குத் தெரியும்படி எடுப்பானதோர் இடத்தில், புகைக்கக் கூடாத இடம் எச்சில் உமிழக் கூடாத இடம் மற்றும் புகைப்பதும், எச்சில் உமிழ்வதும் குற்றமாகும் என்பதாக அறிவிக்கும் பலகை ஒன்றை எடுப்பாக நிறுவி காட்சிக்கு வைத்தல் வேண்டும்.

**9. பணத்தன்டம்**:

(i) பிரிவு 4, 5 அல்லது 8இன் வகைமுறைகளை மீறுகிறபோது, நூறு ரூபாய் வரையிலான தண்டத் தொகை விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும் மற்றும் இரண்டாம் அல்லது அதற்கு மேற்பட்ட குற்றச் செயலை பொருத்து இருநூறு ரூபாய்க்கு குறையாத ஆனால் ஐந்நூறு ரூபாய் வரையில் நீட்டிக்கப்படக் கூடிய தண்டத் தொகையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(ii) பிரிவுகள் 6 அல்லது 7இன் வகைமுறைகளை மீறுகிறபோது, ஐந்நூறு ரூபாய் வரையிலான தண்டத் தொகை விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும் மற்றும் இரண்டாம் அல்லது அதற்கு மேற்பட்ட குற்றச் செயலை பொருத்து மூன்று மாதங்கள் நீட்டிக்கக் கூடிய சிறைத்தண்டனையும் அல்லது குறைந்தளவு தண்டத் தொகையான ஐந்நூறு ரூபாயும் விதித்து ஆனால் அத்தண்டத் தொகை ஆயிரம் ரூபாய் வரையில் நீட்டிக்கப்படலாம் அல்லது இவை இரண்டும் விதித்தோ, தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**10. நபர் எவருக்கும் இந்தச் சட்டத்தின்படி செயலாற்றும் அதிகாரமளிக்க அரசுக்கு உள்ள அதிகாரம்**: அரசானது, அறிவிக்கையின் வாயிலாக இந்தச் சட்டத்தின்படிச் செயலாற்றத் தகுதி வாய்ந்த ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு அதிகாரம் அளிக்கலாம்.

**11. பிரிவு 10இன்படி அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் பொது ஊழியராதல் வேண்டும்** : பிரிவு 10இன்படி, அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் ஒவ்வொருவரும், இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் XLV 1860 பிரிவு 21இன் பொருளின்படி ஒரு பொது ஊழியராகக் கருதப்படுதல் வேண்டும்.

**12. மீறுபவர்களை வெளியேற்றும் அதிகாரம் :** அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் எவருமோ அல்லது துணை ஆய்வாளரின் படிநிலைக்குக் குறையாத காவல்துறை அலுவலர் எவருமோ, இந்தச்

சட்டத்தின் வகைமுறைகள் எதனையும், மீறுகிற நபர் எவரையும் பொதுப் பணியிடத்திலிருந்தோ அல்லது பொதுப் பயன்பாட்டிற்கான இடத்திலிருந்தோ வெளியேற்றலாம்; மற்றும் பொதுமக்கள் சேவைக்கான ஊர்தி ஒன்றின் ஓட்டுநர் அல்லது நடத்துநர் எவரும், அப்பொதுமக்கள் சேவைக்கான ஊர்தியில், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதனையும் மீறுகிற நபர் எவரையும் அந்தப் பொதுமக்கள் சேவைக்கான ஊர்தியிலிருந்து வெளியேற்றலாம்.

**13. குற்றச் செயல்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல்**: நீதிமன்றம் எதுவும், பிரிவுகள் 4, 5, 8இன் படியான குற்றச் செயல்களைப் பொறுத்தஅளவில் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரின் எழுத்துருவில் செய்து கொள்ளப்பட்ட முறையீடு ஒன்றின்பேரில் அல்லாமலும் மற்றும் பிரிவுகள் 6, 7இன்படியான குற்றச் செயல்களைப் பொறுத்தவரையில் துணை ஆய்வாளரின் படிநிலைக்குக் கீழல்லாத காவல்துறை அலுவலர் ஒருவரின் எழுத்து வடிவிலான அறிக்கை ஒன்றின்பேரில் அல்லாமலும், சட்டத்தின்படியான குற்றச் செயல் எதனையும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது.

**14. இந்தச் சட்டத்தின்படியான குற்றச் செயல்கள் சுருக்கு முறையில் விசாரணை செய்யப்படுதல் வேண்டும்** : இந்தச் சட்டத்தின்படியான குற்றச் செயல்கள் அனைத்தையும், 1973ஆம் ஆண்டு குற்ற விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டத்தின்படி (மையச் சட்டம் 2/1974) சுருக்கமுறை விசாரணைக்கு வகை செய்யப்பட்ட விதத்தில் சுருக்கமான முறையில் வழக்கு விசாரணை செய்யப்படுதல் வேண்டும்.

**15. அதிகார ஒப்படைவு** : அரசானது, அறிவிக்கையின் வாயிலாக, இந்தச் சட்டத்தின்படி அதனால் செலுத்தப்படக் கூடிய, பிரிவு 18இன் கீழ் விதிகளைச் செய்வதற்கான அதிகாரம் நீங்கலான, அதிகாரம் எதுவும் அதில் குறிப்பிடக்கூடிய அத்தகைய அலுவலரால், அதில் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் எவையெனும் இருப்பின், அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டுச் செலுத்தப்படலாம் எனப் பணிக்கலாம்.

**16. குற்றச் செயல்களை இணக்கமாகத் தீர்த்தல்** : இந்தச் சட்டத்தின்படியாகவோ அல்லது அதன் கீழோ, தண்டிக்கத்தக்க குற்றச் செயல்கள் எவற்றையும் நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு முன்னரோ அல்லது பின்னரோ, அரசு அல்லது அதனால் இதன் பொருட்டு அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் எவரும், இது குறித்த பொது அல்லது தனி ஆணையின் வாயிலாகக் குற்றச் செயல்கள் எவற்றையும் இணக்கமாகத் தீர்த்துக் கொள்ளலாம்.

**17. நிறுமங்களால் செய்யப்படுகின்ற குற்றச் செயல்கள்**: (1) இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றச் செயல் ஒரு நிறுமத்தால் செய்யப்பட்டிருந்து, அக்குற்றச் செயல் செய்யப்பட்ட காலத்தில் அந்நிறுமத்தின் அலுவலை நடத்தி வருவதில் அந்நிறுமத்தைத் தம் பொறுப்பில் கொண்டிருந்தவரும், அதற்குப் பொறுப்பாய் இருந்தவரும் மற்றும் அதோடு கூட அந்த நிறுமமும், அக்குற்றச் செயலைத் செய்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதோடு அதன்படியே மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதலும் வேண்டும்.

**வரம்புரை**: இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், அத்தகைய நபர் எவரும், அக்குற்றச் செயலானது தமக்குத் தெரியாமலேயே செய்யப்பட்டிருக்கின்றது என்றோ அல்லது அக்குற்றச் செயல் செய்யப்படுவதைத் தடுப்பதற்கான உரிய முயற்சி அனைத்தையும் தாம் மேற்கொண்டார் என்றோ அவர் மெய்ப்பிப்பாரானால் இந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள தண்டனை எதற்கும் அவரை உள்ளக்காது.

(2) உட்பிரிவு (1)இல் என்ன அடங்கியிருந்த போதிலும், இந்தச் சட்டத்தின் கீழான ஒரு குற்றச் செயல் ஒரு நிறுமத்தினால் இழைக்கப்பட்டிருந்து, அந்தக் குற்றச் செயலானது நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் எவரின் இசைவுடன் அல்லது அவருடைய மறைமுக

ஆதரவுடன் இழைக்கப்பட்டிருக்கிறது என்றோ அவர்பாலுள்ள கவனமின்மை எதற்கும் சாட்டத்தக்கதாக இருக்கிறது என்றோ நிரூபிக்கப்படுகிற நிலையில், அத்தகைய இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் கூட அந்தக் குற்றச் செயலைச் செய்தவராகக் கருதப்பட்டு, அதன்படியே எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதல் வேண்டும்.

விளக்கம் இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக

(a) “நிறுமம்” என்பது ஒரு கூட்டுருமக் குழுமம் எனப் பொருள்படுவதோடு ஒரு நிறுவகத்தையும் அல்லது பிற தனி நபர்களின் கழகத்தையும் உள்ளடக்கும்; மற்றும்

(b) இயக்குநர் என்பது, நிறுவகம் ஒன்றைப் பொறுத்தவரை, நிறுவகத்தில் உள்ள ஒரு கூட்டாளியை உள்ளடக்கும்.

**18. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம் :** (1) அரசு, அறிவிக்கை வாயிலாக இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையுமோ அல்லது அவற்றில் எதையுமோ நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) (a) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்படும் விதிகள் அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று வெளிப்படையாகச் சொல்லப்பட்டாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்படும் நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்படும் அறிவிக்கைகள் அனைத்தும் அவை குறிப்பிட்ட நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று வெளிப்படையாகச் சொல்லப்பட்டால் அன்றி, அவை வெளியிடப்படும் தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதி ஒவ்வொன்றும் அல்லது பிறப்பிக்கப்படும் அறிவிக்கை ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில், சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத் தொடரோ அதையடுத்து வரும் கூட்டத் தொடரோ முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி அல்லது அறிவிக்கை எதையும் அப்பேரவை மாற்றியமைக்குமாயின் அல்லது அந்த விதியோ அல்லது அறிவிக்கையோ செய்யப்படவோ அல்லது பிறப்பிக்கப்பட்டவோ கூடாது என்று அப்பேரவை முடிவு செய்யுமானால், அதன் பின்பு, அந்த விதியோ அல்லது அறிவிக்கையோ அவ்வாறு மாற்றிய மைக்கப்பட்ட அல்லது நிகழ்விற்கேற்ப, செயல்வடிவம் பெறாது போதல் வேண்டும். எனினும், அத்தகைய மாற்றம் அல்லது அழித்தறவு எதுவும், அந்த விதியின்படியோ அல்லது அறிவிக்கை யின்படியோ முன்னதாகச் செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

நன்றி : தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம், சென்னை

**சட்டக்கதிர் QR CODE ஸ்கேன் செய்து**
**சட்டக்கதிர் ஆண்டு சந்தா செலுத்தலாம்.**
**சட்டக்கதிர் ஆண்டு சந்தா செலுத்தி**
**தடங்கலின்றி இதழ்கள்**
**கிடைக்கப் பெறுவீர்!**

# 7 ஆண்டுகள் ஆகியும் வழிப்பறி செய்யப்பட்ட நகைகள் மீட்கவில்லை

17½ பவுன் தங்கத்தை வழிப்பறி செய்த கொள்ளையர்களை 7 ஆண்டுகள் ஆகியும் கண்டுபிடிகக முடியவில்லை என்பதால் நகையை பறிகொடுத்த மூதாட்டிக்கு ரூ.4 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசிற்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருவள்ளுரைச் சேர்ந்தவர் கிருஷ்ணவேணி (வயது 68). இவர் கடந்த 2018ஆம் ஆண்டு தனது கணவர் பழனியுடன் மருத்துவ பரிசோதனைக்காக சாலையில் நடந்து சென்றுள்ளார். அப்போது அவர்களை அழைத்த ஒரு கும்பல், வழிப்பறி திருடர்கள் இருப்பதால் அணிந்துள்ள தாலிச்சங்கிலி வளையல், மோதிரம் உள்ளிட்ட நகைகளை பத்திரமாக கழற்றி பையில் வைத்துக் கொள்ளுங்கள் என அறிவுரை கூறியுள்ளனர் அவர்களை மாறுவேடத்தில் இருக்கும் போலீசார் என நினைத்த கிருஷ்ணவேணி தனது 17 பவுன் நகைகளை கழற்றி பையில் வைத்தார். அடுத்த நிமிடம் மற்றொரு கும்பல் அந்த நகைகளை வழிப்பறி செய்து தப்பியோடியது. இது குறித்து திருவள்ளூர் போலீசார் வழக்குப் பதிவு செய்தனர். ஆனால், நகைகளை மீட்கவில்லை.

இதையடுத்து, இந்த வழக்கின் புலன் விசாரணையை விரைவாக மேற்கொண்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவும், நகைகளை மீட்டு தன்னிடம் ஒப்படைக்கவும் போலீசாருக்கு உத்தரவிட கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் கிருஷ்ணவேணி வழக்குத் தொடர்ந்தார்.

இந்த மனுவை நீதிபதி டி. பரத சக்ரவர்த்தி விசாரித்தார். போலீஸ் தரப்பில் ஆஜரான குற்றவியல் வழக்கறிஞர் சி.இ.பிரதாப், இந்த வழக்கின் குற்றவாளிகள் யார் என இதுநாள் வரை அடையாளம் காண முடியவில்லை. இது குறித்து திருவள்ளூர் குற்றவியல் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு உள்ளது. ஒருவேளை குற்றவாளிகள் யார் என பின்னர் தெரியவந்தால் இந்த வழக்கு மீண்டும் விசாரிக்கப்படும் என்றார்.

இதையடுத்து நீதிபதி பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது. மூத்த குடிமக்களை குறிவைத்து இது போன்ற திருட்டு, கொள்ளை, வழிப்பறி சம்பவங்கள் ஈவு, இரக்கமற்ற நபர்களால் அடிக்கடி நடத்தப்படுகின்றன. இந்த வழக்கில் வயதான தம்பதியின் கவனத்தை திசை திருப்பி 17 பவுன் தங்க நகைகளை வழிப்பறி செய்துள்ளனர்.

ஆனால் கடந்த 7 ஆண்டுகளாக குற்றவாளிகளை கண்டுபிடிக்க முடியவில்லை என போலீசார் கூறுவது அதிருப்தி அளிக்கிறது போலீசாரின் இந்த நடவடிக்கை மனுதாரருக்கு துயரத்தைத்தான் அதிகரிக்கும். இது போல நகை, பணம் போன்றவற்றை பறிகொடுக்கும் வயதான முதியவர்கள் பொருளாதார ரீதியாக மட்டுமின்றி, மனதளவிலும் கடுமையான பாதிப்புகளை சந்தித்து நோய் வாய்ப்படுகின்றனர்.

100 ரூபாயை இழந்தாலும் அவர்களால் தாங்கிக் கொள்ள முடியாது. அந்த பாதிப்பு முதுமையை விட கொடுமையானது அவர்கள் இடத்தில் இருந்து அவர்களின் வலியை நாம் உணர்ந்து செயல்பட வேண்டும். உச்சநீதிமன்றதீர்ப்பின்படி இது போன்ற குற்ற வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிகபட்சம் ரூ. 1 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும்.

இது குறித்து தமிழ்நாடு அரசும் 2013ஆம் ஆண்டு அரசாணையும் பிறப்பித்துள்ளது. ஆனால் ரூ.1 லட்சம் என்ற இந்த இழப்பீட்டுத் தொகை 12 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டது. அதேநேரம் குற்றவாளிகளை கண்டுபிடிக்க முடியவில்லை என்று போலீசார் கூறுவதால், தற்போதைய சந்தை மதிப்பில் தங்கத்தின் விலையில் 30 சதவீதம் அல்லது ரூ.5 லட்சத்தை இழப்பீடாக வழங்க வேண்டும்.

17 பவுன் தங்கத்தின் மதிப்பு தற்போதுசுமார் ரூ.13.12 லட்சமாக இருப்பதால், அதில் 30 சதவீதமான ரூ. 4 லட்சத்தை இழப்பீடாக மனுதாரருக்கு 12 வாரத்துக்குள் வழங்க வேண்டும். இந்தத் தொகையை அரசிடம் இருந்து மனுதாரர் பெற்றுக் கொள்ள திருவள்ளூர் மாவட்ட சட்டப்பணி ஆணைக் குழு உதவி செய்ய வேண்டும்.

ஒருவேளை தங்க நகை திரும்ப கிடைத்து விட்டால், மனுதாரர் இந்த இழப்பீட்டுத் தொகையை அரசுக்கு திருப்பிக் கொடுக்க வேண்டும். இந்த சிறிய இழப்பீட்டு தொகை மனுதாரருக்கு ஏற்பட்டுள்ளஇழப்பை ஈடுசெய்யும் விதமாக இருக்காது. அதேநேரம், மனதளவில் ஏற்பட்டுள்ள காயத்துக்கு மருந்தாகவும் வாழ்வாதாரத்துக்கான ஆறுதலாகவும் இந்த தொகை அவருக்கு அமையும்.

இந்த சமூகம் நம்மை கவனித்துக் கொள்கிறது என்ற நம்பிக்கையும் ஏற்படும். அதனால் இது போல பாதிக்கப்படும் முதியவர்களுக்க இழப்பீட்டுத் தொகையை அதிகரித்து வழங்கும் வகையில் தமிழ்நாடு அரசு அரசாணை பிறப்பிக்க வேண்டும் என்று நீதிபதி கூறியுள்ளார்.

**நன்றி: தினத்தந்தி 4.9.2025**


THINK AHEAD. STAY AHEAD.
Bharath
UNIVERSITY
30
YEARS OF EXCELLENCE
RATING
AA+
பாரத் பல்கலைக்கழகம்
B.TECH
AERONAUTICAL ENGINEERING
AUTOMOBILE ENGINEERING
BIO-PROCESS ENGINEERING
BIO-INFORMATICS
BIO-MEDICAL ENGINEERING
CHEMICAL ENGINEERING
CIVIL ENGINEERING
COMPUTER SCIENCE AND ENGINEERING
COMPUTER SOFTWARE ENGINEERING
ELECTRICAL AND ELECTRONICS ENGG.
ELECTRONICS AND COMM. ENGINEERING
ELECTRONICS AND CONTROL ENGINEERING
ELECTRONICS AND INSTRUMENTATION ENGG.
ELECTRONICS AND TELECOM ENGINEERING
FOOD PROCESS ENGINEERING
GENETICS ENGINEERING
INDUSTRIAL BIO-TECHNOLOGY
INFORMATION TECHNOLOGY
INSTRUMENTATION AND CONTROL ENGG.
MECHANICAL ENGINEERING
MECHATRONICS
NANO TECHNOLOGY
PRODUCTION TECHNOLOGY
M.TECH
[For Program details, please visit: www.bharathuniv.ac.in]
EVENING PROGRAMME : B.TECH & M.TECH
MECHANICAL ENGINEERING
CIVIL ENGINEERING
COMPUTER SCIENCE AND ENGINEERING
ELECTRICAL AND ELECTRONICS ENGG.
ELECTRONICS AND COMM. ENGINEERING
B.TECH LATERAL ENTRY ALL PROGRAMME
Eligibility : Diploma / B.Sc.
M.S. BY RESEARCH AND Ph.D.
All Disciplines Full time and Part time
INTEGRATED PROGRAMME
B.TECH + MBA - 5 Years and B.TECH + M.TECH - 5 Years
MBA
[Full time and Part time]
MCA
HOTEL MANAGEMENT & CATERING
Courses : Diploma, B.Sc., & MBA
B.ARCH Eligibility : As per Council of Architecture norms
PLACEMENT 100%
1st among the participants from 125 Countries in International competition on Robotics
Job Placements : 100% with the highest salary package of ₹10 L. P.A.
Collaborations with R&D Institutions and Industries like IBM, Nokia, CISCO, SAP, Etc.,
Internationally acclaimed curriculum in tune with global trends.
Scholarships worth ₹12.00 crores to the meritorius students
27 Centers of excellence to promote research and industry aided / driven projects
SCHOLARSHIP (TUITION FEES GRANT) ■ 100%-State Toppers of all Boards ■ 50%-School toppers, participated in National Level Sports Competition / Event ■ 30%-Students having participated in State Level Sports Competition / Event ■ 35%-Students securing 90% above Marks in the Board examinations ■ 25%- "SARVA SIKSHA" Scheme | Scheduled Caste / Scheduled Tribe candidate | Parent being an Ex-servicemen | Physically Handicapped candidate | First Graduate candidate
HOW TO APPLY: Application forms can be obtained: In person or by sending a Demand Draft for ₹ 750/- drawn in favor of "Bharath University", payable at Chennai, to the Dean-Admission, Bharath University. ■ Application forms can also be downloaded from our website and filled in forms should be sent to the University address along with DD of ₹ 750/-. Eligibility : As per UGC/AICTE norms.
BHARATH UNIVERSITY, 173, Agharam Road, Selaiyur Tambaram, Chennai 600 073. Ph 044-22290247
Corp. Off: 1, First Main Road, Kasturibai Nagar, Adyar, Chennai 600 020. Ph 044-42115251 / 91-98410 64199
Apply online : www.bharathuniv.ac.in
ADMISSION HELPLINE
1800-419-1441
Check us out on YouTube www.youtube.com/thebharathuniversity

**Posted at Egmore RMS. Partrika Channel Registered News Magazine Posted on 3rd to 9th of October 2025**
**SATTAKADIR - Tamil Law Journal /Monthly October 2025 / Publication First Week of Every month.**
**Registration of News Papers for India, Reg. No. 62767/92**
**Registration No. TN/CC(S) DN/228/2024-2026 (License to post without prepayment) WPP No. TN/PMG/CCR/WPP 636/2024-2026**




On behalf of SATTAKADIR, Published at 3/2, Swathiram Towers, Jupiter Campus,
3, Durgabai Deshmukh Road, R.A. Puram, Chennai - 600 028. Printed by I. Stephen,
Printed at Canaan Press Pvt. Ltd., 62/1, Peters Road, Royapettah, Chennai - 600 014.
**Editor : Dr. V.R.S. Sampath**